
இந்திரா
சௌந்தர்ராஜன்
பல்லவன்
பாண்டியன்
பாஸ்கரன்

# பல்லவன் பாண்டியன் பாஸ்கரன்

இந்திரா சௌந்தர்ராஜன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண் 16, பழைய எண் [illegible],
வெங்கட்நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 17.
போன் : 434 2899, 432 7696
பேக்ஸ் : 91-44-434 1559

முதற் பதிப்பு : செப்டம்பர் 2001
உரிமை : ஆசிரியருக்கு

விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

**PALLAVAN PONDIYAN BASKARAN**

**by INDIRA SOUNDAR RAJAN**

First Edition : September 2001

Paper Used : 11.6 cream wove
Total No of pages : 328

**Price : Rs. 77/-**

புத்தகம் கிடைக்குமிடம் : திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 600 017.
போன் : 434 2899, 432 7696
பேக்ஸ் : 91-44-4341559

**Available at : Thirumagal Nilayam**
New No 16, Old No 55,
Venketnarayana Road,
T. Nagar, Chennai - 600 017.
Ph : 434 2899, 432 7696
Fax : 91- 44 - 4341559

Typeset at : **Imphala Graphic Ph: 233 6440**
Printed at :

# என்னுரை!

**பல்லவன் பாண்டியன் பாஸ்கரன்'** இந்த பெயர்களை நான் தலைப்பாக வைத்தபோது ஆச்சரியமாக பார்த்தவர்கள் பலர். இது என்ன சரித்திரக் கதையா என்றும் அவர்கள் கேட்டார்கள். சரித்திரம் கலந்த சமூக மர்மக்கதை என்றேன். புதிதாக இருக்கிறதே என்றனர்.

இன்று இப்படி புதிது புதிதாக சிந்தித்தால்தான் கடைத்தேற முடியும் என்பது என் கருத்து. வ.வே.சு.ஐயர் காலத்தில் இருந்துதான் கதைகள் பத்திரிக்கைகளில் வர ஆரம்பித்தன. சிறுகதை, நாவல், குறுநாவல் என்று அதற்கு காரணப் பெயர்கள் மூன்றே மூன்றுதான். இதில் சமூகம், மர்மம், விஞ்ஞானம், சரித்திரம் என்று நான்கு தளங்கள்... இந்த தளங்களில்தான் கதைகள் பிறந்தாக வேண்டும். மூன்று வடிவங்களில் நான்கு தளங்களில் கடந்த 75 ஆண்டுகளில் கிட்டத்தட்ட லட்சம் கதைகளாவது எழுதப்பட்டிருக்கும். ஆனால் எத்தனை கதைகள் இதில் பளிச்சென்று நினைவில் இருக்கிறது?

இன்றைக்கும் நாவல் என்றால் பொன்னியின் செல்வன், சிறுகதை என்றால் புதுமைப்பித்தன், மௌனி, குறுநாவல் என்றால் மகரிஷி என்கிற அளவுக்கு அதன் எல்லை சின்னதாகவே உள்ளது. காரணம் வித்தியாசமின்றி ஒரே பாட்டையில் ஒருவர் தொடர்ந்ததில் மற்றவர் பயணித்ததே காரணம் என்பது என் கருத்து. ஒருவகையில் நானும் அப்படிப் பயணிக்கின்ற ஒருவன் தான். நடுநடுவே இதை உணர்ந்து வித்தியாசமாக எதையாவது செய்தாலென்ன என்று கதை வடிவத்தில் வித்தியாசத்திற்காக யோசிக்கிறேன்.

அப்படி யோசித்தபோதுதான் 'ஐந்துவழி மூன்று வாசல்' என்கிற சரித்திர சமூக நாவல் தோன்றியது. ஆனந்த விகடனில் வெளியாகி அது எனக்கு நல்ல பெயரையும் புகழையும் அளித்தது.

அதன்பின் வடிவத்தில் புதுமையோடு நான் எழுதிய ஒரு நாவல்தான் இந்த பல்லவன் பாண்டியன் பாஸ்கரன்.

குங்குமத்தில் தொடராக வந்தது. ஏற்கனவே குங்குமத்தில் விட்டுவிடு கருப்பாவையும், காற்றாய் வருவேனையும் எழுதியிருந்தேன். இது மூன்றாவது நாவல்.

குங்குமமும் சிறப்பாக வெளியிட்டு ஆதரித்தது. அதற்கு என் நன்றி.

இந்த தொடரில் பல கிளைகள். சில கிளைகள் முழுமை அடையாமல் முடிந்ததுபோல் இருக்கும். காரணம் இது யானையைப் போல பருமனுள்ள ஒரு கரு! இதை நான் பானையில் அடைக்க முயற்சி செய்தேன். ஓரளவு வெற்றியும் பெற்றாலும் ஒரு நிறைவற்ற தன்மை அங்கங்கே தெரியக்கூடும். சில நேரங்களில் சில இடங்களில் குறைபாடுகளும் ஒரு அழகாகிவிடும். அப்படி இதை நான் எடுத்துக் கொண்டேன். மற்றபடி விறுவிறுப்புக்கு பங்கமின்றி தொடர் ஜெட்வேகத்தில் சென்றது என்றால் மிகையே கிடையாது. நீங்களும் படித்து விட்டுச் சொல்லுங்கள். இதை நல்ல வடிவத்தில் வெளியிட்ட திருமகள் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி.

பணிவன்புடன்,
இந்திர சௌந்தர்ராஜன்.

# பல்லவன் பாண்டியன் பாஸ்கரன்

## 1

அந்தப் புரவி ஓடிக் கொண்டேயிருந்தது! எங்கேயும் நிற்கவில்லை. ஓட்டமென்றால் ஓட்டம், அடாத ஓட்டம்...!

நல்ல அஷ்டமங்கல ஜாதிப் புரவி போலும்... காவிரிப் படுக்கையின் ஓரமாய், மண்டி வளர்ந்திருக்கும் கோரைப் புற்களை ஞாபகப்படுத்தும் பிடரியோடும், நெய்பூசிக் குளித்த மாதிரியான ஒருவித மினுமினுப்போடும் ஓடிக் கொண்டே யிருந்தது அது.

சதாரணமாய் ஜாதிப் புரவிகள் ஒரே சமயத்தில் அறுபது காத தூரம்வரை கூட ஓடும். இருந்தாலும், அதை ஆரோகணிப் பவர்கள் இருபது காத தூரத்திற்கு ஒரு முறை அதற்கு இளைப்பாறுதல் தருவார்கள். அவர்களும் உடன் சேர்ந்து இளைப்பாறுவார்கள். அப்படி இளைப்பாறாவிட்டால் புஜங் களும், இடுப்பும் ஒரு பாடுபடுத்திவிடும். பசியும் காதை அடைத்து விடும்.

ஆனால் அந்தப் புரவியோ இல்லை அதன் மேல் ஆரோகணித்திருப்பவனோ, இளைப்பாறுதலைப் பற்றிக் கவலைப்படாதது போலத் தெரிந்தது.

அவன் சேணத்தை இறுகப் பற்றியபடி, ஒருவித ஆவேசத்தோடு அந்தப் புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

வானில் மேற்குப் பக்கமாய்ச் சரிந்து கொண்டிருந்த ஆதித்தனும் அதைப் பார்த்தபடி இருந்தான்.

அவனும்கூட கண்களைக் கூசச் செய்யும் அந்த வான் ஜோதியை அவ்வப்பொழுது பார்த்துக் கொண்டேதான் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

நெடுந்தொலைவில் இருந்தது காஞ்சி. காஞ்சியை விட்டுத்தான் நீங்கியிருந்தான் அவன்.

பல்லவ தேசம் ஒன்றும் அத்தனை பெரியதில்லை. சேர, சோழ, பாண்டிய மண்டலங்களோடு ஒப்பிடும்போது, பல்லவ சாம்ராஜ்யத்தின் நீள, அகலங்கள் அப்படி ஒன்றும் பிரமாதமான யோசனை தூரங்கள் கொண்டவையில்லை. ஒரு பக்கம் ஆரணி, ஒரு பக்கம் மயிலை, ஒரு பக்கம் சமுத்திரம் என்று சில நூறு காதங்கள் தான்...

ஆனாலும் வாதாபியின் வெற்றிக்குப் பிறகு பல்லவ சாம்ராஜ்யத்திற்கு ஒரு தனிப் பெருமை கிட்டியிருப்பதாகவே தோன்றுகிறது. வடக்கில் உஜ்ஜயினி, தக்காணம் வரை இந்த வெற்றியால் மாமன்னர் நரசிம்ம பல்லவ சக்கரவர்த்திக்குப் பெயரும், புகழும் கூடி விட்டதே?

சேர, சோழ, பாண்டியாதிபதிகளும்கூட அவையைக் கூட்டி, வாதாபி யுத்தம் பற்றியும், அதில் நரசிம்ம பல்லவர் காட்டிய வீரதீரம் பற்றியும் வெகுவாக விவாதித்திருக்கிறார்கள்.

நகரங்களில் எப்பொழுதுமே காஞ்சிக்கு ஒரு விசேஷ அந்தஸ்து உண்டு... ஒருபுறம் சைவர்கள் ஏகாம்பரேஸ்வரரைத் தரிசிக்கப் போய்க் கொண்டிருப்பார்கள். மறுபக்கத்தில் அத்திவரதனைத் தரிசிக்க வைணவர்கள் போய் வந்தவண்ணமிருப்பார்கள். இன்னொரு புறம் ஜைனகாஞ்சியில் சமண சந்நியாசிகளின் விகாரங்களும் அவர்களின் துங்கானை மாடங்களும் மலிந்து கிடக்கும். இந்த மூன்று பாதைகளையும் மறுதலித்துவிட்டு, பல்கலைக்கழகத்தில் சுதந்திரமாக நாத்திகவாதம் செய்யும் பிரகிருதிகளும் காஞ்சியில் நிறையவே உண்டு...



எந்த ஒரு அறிஞனாகட்டும், இல்லை புலவனாகட்டும், இல்லை வியாபாரியாகட்டும் காஞ்சிக்கு வந்தால், அவனுக்கு ஏற்படுகின்ற நிறைவே தனியானதுதான். உல்லாசத்துக்கும் அங்கே பஞ்சமேயில்லை. பாலாற்றாங் கரையை ஒட்டியிருக்கும் கணிகையங்காடிகளில் காம சாஸ்திரத்துக்குச் சொல்லைக் கொண்டும், எழுத்தைக் கொண்டும் பாடம் நடத்தாமல், தங்களைக் கொண்டே பாடம் நடத்தும் திலோத்தமைகள் நிறையவே இருந்தனர்.

இத்தனை கேண்மை கொண்ட ஒரு நகரை விட்டுத்தான் அந்தப் புரவி வீரன் நீங்கியிருந்தான். அவனுக்கு ஒரு கட்டளையும் இடப்பட்டிருந்தது.

''உற்சவா... எப்படியாவது இன்று 'மாலைக்குள் கடல் மல்லையை அடைந்துவிடு. அங்கே சிற்பக் கூடத்தை ஒட்டிய ஒரு ஓலைக் குடிசையில் தான் இருக்கிறார் தேவதேவர். தலைசிறந்த அந்தச் சிற்பியை யாழ்ப்பாணத்திற்குப் போக விடாதே.

அவரைத் தடுத்து நிறுத்தி எப்படியாவது காஞ்சிக்கு அழைத்து வா. பொறாமை கொண்ட சிற்பிகள் அவரைப் பற்றி, இல்லாததையும் பொல்லாததையும் கூறி, மாமன்னர் அவரைச் சந்தேகிக்கும்படி செய்து விட்டனர்...

நான் இன்றுதான் மன்னருக்கு உண்மைகளைப் புரிய வைத்தேன். மன்னரும் மிக வருந்தி, அவருடன் நேரில் விவாதிக்கச் சம்மதித்திருக்கிறார். அவர் கூற்றுப்படியே சிற்ப கலாகூடத்தை உருவாக்கவும் உடன்படுவார் என்று நான் நம்புகிறேன்.

தேவதேவர் பொறுமையிழந்து இன்று மாலை யாழ் நோக்கிப் புறப்படும் ஒரு கப்பலில் மல்லை விட்டு நீங்கப் போகிறாராம். எனக்குச் சேதி கிடைத்திருக்கிறது.

இலங்கை அரசன் மானவர்மனைச் சந்தித்து இலங்கைக் கடலோரம் மல்லை போல ஒரு சிற்ப சாம்ராஜ்யத்தை உருவாக்கி, நமது மாமன்னருக்கு ஒரு பதிலை சொல்லில் கூறாமல் செயலில் கூறப் போகிறாராம்...

அது ஆபத்து. தேவதேவர் தேர்ந்த சிற்பி. கல்லைக் கலை யாக்குவதில் மாமேதை. அவரை நாம் இழந்து விடக் கூடாது.''

அமைச்சர் வானாதிராயரின் கட்டளைதான் உற்சவன் என்னும் அந்தப் புரவி வீரனை இயக்கிக் கொண்டிருந்தது.

உற்சவன் ஒரு தேர்ந்த வீரன்.

வாதாபி யுத்தத்தில் தளபதி பரஞ்சோதிக்குப் பக்க துணையாக இருந்தவன்.... புரவி ஏற்றத்தில் புலி... எல்லா வற்றுக்கும் மேலாக மகா ராஜ்ய விசுவாசி.

எள் எனும் முன் எண்ணெய்யாக நிற்பவன்.

எனவே வானாதிராயர் உற்சவனைத் தேர்ந்தெடுத்து தேவ தேவரைத் தடுத்து நிறுத்தி அழைத்து வரவும் பணித்திருந்தார்.

உற்சவனும் அதை நிறைவேற்ற இளைப்பாறலே இன்றி விரைந்து கொண்டிருந்தான்.

கடல் மல்லையின் விரிந்த சமுத்திரத்தில் வீச்சலான அலைகள். உலகின் பிரம்மாண்ட அழகு நான் மட்டுமே என்பது போல, அந்த நிலச் சமுத்திரம் விரிந்தும் பரந்தும், ஓரங்களில் அலைக் கொஞ்சல்களோடும் இருப்பதை ரசிக்க கவிதையுள்ளம் வேண்டும்.

அதனினும் அந்தக் கடல்மேல் நாவாய்களை இயக்கும் பரதவர்களின் செயல்கள் அதி அழகு... அவர்களின் பத்தினியர் கரையில் வலைகளை வளைக்கரங்களோடு ஆய்வது பேரழகு.

தலசயனப் பெருமாள் ஆலயத்தின் முகப்பு மண்டபத்தில் நின்றுகொண்டு இறைந்து கிடக்கும் அந்த அழகுகளை ரசிக்க மாட்டாது ரசித்துக் கொண்டிருந்தார் தேவதேவர். பருத்தி வேட்டியில் கச்சம் கட்டி, பாகையும் தரித்திருந்தார். வெண்



தாடியும் மீசையுமாய் வள்ளுவத்தோற்றம். பார்வையில் மட்டும் எதையோ தொலைத்து விட்டது போன்ற சோகம். கை கட்டி நின்றபடி நெடுநேரமாக சமுத்திர தரிசனம் செய்யும் அவரை, கோவில்பட்டர் நம்பிராஜர் கருவறைவிட்டு வெளி வந்தபோது பார்த்துவிட்டு அவரை நெருங்கினார்...

''வந்தனம் தேவதேவரே...''

தேவதேவர் குரல் கேட்டுத் திரும்பினார். பன்னிரு திருமண் காப்புடன், கருங்குழல் சிகையுடன் நம்பிராஜர் இணக்கமாகச் சிரித்தார்.

''என்ன பட்டரே... எப்படி இருக்கிறார் உங்கள் பெரு மாள்?'' தேவதேவரின் அந்தக் கேள்வி நம்பிராஜரைச் சற்று இடித்ததோ என்னவோ, ''என்ன சிற்பி இது கேள்வி... என் பெருமாளின் நலத்துக்கென்ன குறை? ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் நலமளிப்பவன் அவன்...'' என்று நம்பிராஜர் சற்று சினத்துடன் பதிலளித்தார்.

'அப்படியா... பார்த்துக் கொண்டேயிருங்கள். நலமான உங்கள் பெருமாளை, தவளையைச் சுருட்டி விழுங்கும் தண்ணீர்ப் பாம்புபோல, இந்தச் சமுத்திரம் அள்ளி விழுங்கப் போகிறது...'' தேவதேவர் பதிலுக்குச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

''என்ன உளறுகிறீர்கள்...?''

''உளறவில்லை. சாஸ்திர பங்கத்தால் வரப்போகும் உற் பாதத்தைச் சொன்னேன்...''

''சாஸ்திர பங்கமா?''

''ஆமாம்... இந்தக் கடல் மல்லையில் ஒரு கற்கோயில் கூட ஒழுங்கில்லை. தேரை புகுந்த கற்கள், காந்த சக்தியே துளியு மில்லாத சொத்தைக் கற்கள் என்று கிடைக்கின்ற கற்களை எல்லாம் கொண்டு இங்கே சிற்பக் கூடம் உருவாகி வருகிறது.

இது அவ்வளவும் சாஸ்திர பங்கம்.

இந்தக் கற்களில் தெய்வம் வராது. மந்த்ர சப்தங்களையும் இந்தக் கற்கள் வாங்கித் தாங்காது. மாறாக, அசுரம்தான் புகப்

போகிறது. அசுரம் புகுந்தால் என்னாகும் தெரியுமா? இந்தக் கடலானது அதனால் பொங்கும்! அவ்வளவையும் அள்ளி விழுங்கும். அதனால்தான்அப்படிச் சொன்னேன்.''

''நிஜமாகவா?''

''பார்த்துக்கொண்டே இருங்கள். இந்தப் பாதகத்திற்கு நான் துணை செய்ய விரும்பவில்லை. அதனால் யாழ்ப்பாணம் போய்விடப் போகிறேன். அங்கே பழுதே இல்லாத ஒரு சிற்பக் கூடத்தை உருவாக்கிக் காட்டப் போகிறேன். அதுதான் என் லட்சியக் கனவு...''

தேவதேவர் பேச்சைக் கேட்டு நம்பிராஜர் அதிர்ந்து போனார்.

''ஆமாம், இதைச் சக்கரவர்த்தி அறிவாரா?'' பதட்டத் தோடு கேட்டார்.

''எங்கே அறிய விட்டார்கள். என்னை ஒரு பைத்தியக் காரனாய்ச் சித்தரிக்கத்தான் பல சிற்பிகள் இருக்கிறார்களே. அதிலும் தலைமைச் சிற்பி மகாயோகி சாரங்கரே கூறிவிட்டால் மறுப்பேது? எனவே மாமன்னர் இதை அறிய வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

ஆனால் நான் ஒரு கர்வி; சிற்ப ஞானம் இல்லாத அரை குறை என்று மட்டும் நிறையவே சொல்லப்பட்டிருக்கிறது அவரிடம். ஆகையால், இங்கே பார்வையிட வந்த அவரிடம் பேச முயன்றேன். என்னைத் தவிர்த்து விட்டார் மாமன்னர்.

சரி, நானும் இனி இந்தப் பல்லவர் தேசத்தைத் தவிர்ப்பதே எனக்கு நல்லது என்றுதான் யாழ்ப்பாணம் நோக்கிப் போகவிருக்கிறேன்...''

தேவதேவர் பேசப்பேச நம்பிராஜருக்குள் கலக்கம் கூடிக் கொண்டே போனது. 'இவர் சொல்வதெல்லாம் எந்த அளவு உண்மை? சாஸ்திரம் என்கிறார்... கற்கள் சரியில்லை என்கிறார்... இவர் பேசுவதில் சத்தியம் இருக்கிறதா? இல்லை இவரைப் பற்றி மற்றவர்கள் சொன்னது போல இவர் பைத்தியக்காரரா?'



நம்பிராஜ பட்டர் கேள்விகளோடு மல்லுக்கட்டுகையில் தேவதேவர் அதைப் பார்த்துச் சிரித்தபடியே திரும்பவும் பேச ஆரம்பித்தார்.

''பட்டரே! என்ன சிந்தனை... நான் சொல்வதெல்லாம் உங்களுக்கு உளைச்சலை ஏற்படுத்துகின்றதா... சந்தேகமாக இருக்கின்றதா? ஒரு வேலை நான் பைத்தியமோ என்றும் நினைக்கின்றீர்கள்.. சரிதானே?''

''அ....அ...அது... அப்படி எல்லாமில்லை...?''

''இல்லை பட்டரே. தடுமாறாதீர்கள். அதுதான் உண்மை. இந்த மல்லையில் இன்று என் பேச்சைக் கேட்க ஒருவர் கூட இல்லை. நீங்களாவது இருக்கிறீர்களே என்று தான் புலம்பிக் கொண்டிருக்கிறேன்.

இங்கே சிற்பப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களும், அதன் கலைத்தன்மையறிந்து, இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்க வில்லை.

அவ்வளவு பேரும் பஞ்சம் பிழைக்க வந்த கூலிகள்.

கூலிகளை மண் அள்ளச் சொல்லலாம். மலையைக் கிள்ளச் சொல்லலாமா?

சக்கரவர்த்தி தவறு செய்து கொண்டிருக்கிறார்.

கால காலத்திற்கும் ஒரு தவறான சிதைந்த சரித்திரத்தை இந்த மல்லை உலகுக்கு உணர்த்தப் போகிறது. பார்த்துக் கொண்டேயிருங்கள்.''

''என்ன நீங்கள்... உயிரில்லாத கற்களைக் கொண்டு கலையை எழுதுவதில் கூடவா அபாயம் இருக்க முடியும்?''

''உயிரில்லாத கற்களா... யார் சொன்னது? எந்தக் கல் லானது சிலையாகிறதோ, அப்பொழுதே அதற்குப் பிராணன் வந்துவிடுகிறது. அது நமது ஆத்ம பிராணனைப் போன்றதில்லை.

வெறும் கல் என்றால் உங்கள் பெருமாளை எதற்குச் சேவிக்கிறீர்கள்? எதற்கு அதற்கு நைவேத்யம்?

இதைப்பற்றி எல்லாம் யோசித்தே பார்த்ததில்லையா நீங்கள்...? சரிதான்! பல்லவ சாம்ராஜ்யத்தில் மன்னர் முதல் பட்டர் வரை ஈடுபடும் செயல்களில் அதற்கான ஞானமே துளியும் இல்லாதவர்கள்தான் போலும்?''

தேவதேவர் எக்களிப்போடு சிரித்தார். பின் ''எக்கேடோ கெட்டுப் போங்கள்... நான் வருகிறேன்.'' என்று அங்கிருந்து புறப்பட்டார். நம்பிராஜர் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தார்!

மல்லைக்குள் உற்சவனின் புரவி புகுந்தபோது கடல் வாயில் கதிரவன் கடிபட்டுக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்படும் அந்தச் சிறிய கப்பலும் நங்கூரத்தை உள்வாங்கிக் கொண்டு கிளம்பத் தயாராகி விட்டிருந்தது.

உற்சவன் நேராகக் கடற்கரைக்கு வந்து புரவியை விட்டு இறங்கி, புறப்பட்டுவிட்ட அந்தக் கப்பலை நோக்கிக் கத்தத் தொடங்கினான். ''தேவதேவரே... தேவதேவரே...'' கடற் காற்றில் அந்தக் குரல் தேய்ந்து போனது. கப்பல் வேகமாகக் கண்களைவிட்டு மறைய விரும்புவதுபோல சிறுத்துப் போகத் தொடங்கியது.

உற்சவன் கைகளைக் குத்திப் பிசைந்து கொண்டான்.

ஒரே மூச்சில் தான் எழுதி வரும் சரித்திரத் தொடருக்கான அத்தியாயம் ஒன்றினை எழுதி முடித்த பாஸ்கரன், பேனாவை மூடியபடியே விரல்களைச் சொடுக்கிவிட்டுக் கொண்டு எழுந்தான். பின் தளர்ந்த தன் இடுப்பு லுங்கியையும் இறுக்கிக் கட்டிக் கொண்டான். பக்கமாக அவனது தொடரின் ஓட்டத்திற்குப் பயன்படும் ஆதாரபூர்வமான நூல்கள்!

அவற்றை எடுத்து அடுக்கி ஷெல்ப்பில் வைத்துவிட்டு திரும்பியபோது, அவனது ஃப்ளாட் வாசலில் 'ஹாய்...' என்றது ஒரு பெண் குரல். சல்வார் கம்மீஸில் தழைந்த துப்பட்டாவும், பறந்த கூந்தலுமாய் ஒரு பெண். சாரி, மிகத் தப்பான மதிப்பீடு. தேவதை என்பதுதான் பொருந்தும்.



''நீங்கதானே எழுத்தாளர் பாஸ்கரன்?'' இது அவள்.

''ஆமாம்... வாங்க உள்ளே.''

''தேங்க்யூ... நான் உங்க ரசிகை. பேர் அருள்மொழி...'' அவள் சொல்லிக்கொண்டே இல்லையில்லை, கூவிக் கொண்டே உள்ளே வந்தாள்.

''ஆச்சரியமாயிருக்கே... உக்காருங்க.''

''ஆமா, எதுக்கு ஆச்சரியம்?'' அவள் உட்கார்ந்தபடியே கேட்டாள்.

''அருள்மொழிங்கற பேருக்காக அப்படிச் சொன்னேன். இப்பல்லாம் வர்ஷா, தனா, ப்ரீதா, ப்ரியா இப்படிப் பேர் வெச்சுக்கறதுதானே பேஷன்?''

அவளைச் சீண்டாமல் சீண்டியபடி அவனும் அமர்ந்தான். அவள் அதைக் கேட்டு சற்றுக் குலுங்கிச் சிரித்தாள்.

பணக்கார மார்பகங்கள் அதன் நிமித்தம் சற்றே பொங்கி வழிந்து பின் அடங்கின. பாஸ்கரனும் அதைச் சொற்ப நொடிகள் ரசித்தான்.

ஒரு வாலிபனாக இருந்து கொண்டு, அதிலும் ரசனை மிகுந்த எழுத்தாளனாக இருந்து கொண்டு இதை எல்லாம் ரசிக்காவிட்டால் எப்படி?

'போதும் நீ ரசித்தது' என்கிற மாதிரி கமறியது தொலைபேசி.

''எக்ஸ்க்யூஸ் மீ...'' எழுந்து போய் காதைக் கொடுத்தான். ''பாஸ்கரன் ஸ்பீக்கிங்!''

''சார், சமணப்பட்டிங்கற ஊர்ல இருந்து சக்திவேல்ங்கற உங்க வாசகன் பேசறேன் சார்...''

''சொல்லுங்க சக்திவேல். என்ன விஷயம்?''

''சார், எங்க ஊர்ல பெருமாள்மலைன்னு ஒரு கரடு இருக்கு சார். அங்க நிறைய குகைங்களும் இருக்கு. அதுல உடைஞ்சும், உடையாமலும் நிறையச் சிற்பங்கள்.''

''அதுக்கென்ன சக்திவேல்?''

''அதுக்கென்னவா.. அதுல ஒண்ணு உங்க கதைல வர்ற மாதிரியே பேசிச்சு சார். நான் கேட்டேன்.''

''அப்படியா?'' பாஸ்கரனின் கேள்வியோடு இளக்காரச் சிரிப்பும் சற்று இணை சேர்ந்து கொண்டது. அது அந்த சக்திவேலைச் சீண்டியதோ என்னவோ?

''சார், நான் பொய் சொல்லலை. நான் சொல்றது உண்மை சார்...'' என்றான் பலமாக.

பாஸ்கரனுக்குள் ஒரு வகை 'பகீர்' உணர்வு பரவ ஆரம்பித்தது...!

## 2

அந்தத் தொலைபேசிச் செய்தி பாஸ்கரனைத் திணற விடுவதை அருள்மொழியும் கவனிக்கத் தவறவில்லை.

பாஸ்கரன் சமாளிக்கத் தொடங்கினான்.

''மிஸ்டர் சக்திவேல்... நீங்க சொல்றது உண்மையாவே இருக்கட்டும். அதுக்கு நான் என்ன பண்ணணும்?''

மறுமுனையில் சக்திவேல் என்னும் அவனது வாசகன் பதறத் தொடங்கினான்.

''என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க. உங்க கதைல கற்சிலைகளுக்கு சக்தி உண்டுன்னு நீங்க சொன்னப்போ, நான் அதை நம்பலை. ஆனா அதை அனுபவிச்சு உண்மைன்னு தெரிஞ்சுகிட்டுப் பேசிக்கிட்டிருக்கேன். அதுவும் எஸ்.டி.டி. போட்டு... ரொம்ப கேஷுவலாக் கேக்கறீங்களே சார், நான் என்ன பண்ணணும்னு...?''

''சரி... நான் உங்களோட பிறகு பேசறேன். உங்க போன் நம்பர் இருக்கா?''

''இல்ல சார். நான் ஒரு ஏழை விவசாயி மகன். எங்களுக்கு ஏது சார் டெலிபோன். எங்க ஊர்லயே அது இல்லாததால, நான் ஆத்தூர் வந்து பேசிக்கிட்டிருக்கேன்.''



''சரி... நீங்க எனக்கு உங்க முகவரியோட கடிதம் போடுங்க. நான் உங்க ஊருக்கு நேர்ல வரேன்.''

''நிச்சயமா வரணும் சார். உங்களுக்காகவே நான் காத்திருப்பேன்.''

''ஆமா, இந்த விஷயத்தை வெளியே சொன்னீங்களா?''

''சொல்லாம இருப்பேனா... ஆனா நம்பத்தான் யாரும் தயாரா இல்லை.''

''நல்லது. நான் சந்திக்கிறேன்.''

- பாஸ்கரன் துளிர்த்துவிட்ட வியர்வைகளோடு ரிசீவரை முடக்கி விட்டுத் திரும்பினான்.

அருள்மொழி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரியான துளையிடும் பார்வை. அவனைக்கூட அது என்னவோ செய்தது. இணக்கமாகச் சிரித்தான்.

''யாரது போன்ல. ஏதோ நம்ப முடியாத விஷயம் போலத் தெரியுதே?''

அவளால் க்யூரியாசிட்டியை அடக்க முடியவில்லை.

'ஆமாம்... சிலை பேசிச்சாம். ஒரு வாசகர் கேட்டாராம்! அதான் போன் பண்ணிச் சொல்றார்...''

அவளும் அதைக் கேட்டு உடனே சிரித்தாள். பின், ''போய்ப் பார்க்கப் போறீங்களா. சாரி போய் அது பேசப் போறத கேட்கப் போறீங்களா?'' என்று தோளைக் குலுக்கிக் கொண்டு ஸ்டைலாகக் கேட்டாள். கேட்கும் விதத்திலேயே அதையெல்லாம் நயா பைசாவுக்குக்கூட அவள் நம்பவில்லை என்பது தெரிந்தது!

''அவர் ஏதோ ஒரு எக்ஸைட்மெண்ட்ல போன் பண்ணிப் பேசியிருக்கார். ஐ திங்க் யாராவது அவரை நல்லா ஏமாத்தியிருக்கணும்னு நினைக்கிறேன். எத்தனை தமிழ் சினிமால பார்த்திருப்போம்? சாமி சிலைக்குப் பின்னால ஒளிஞ்சிக்கிட்டு சாமி பேசற மாதிரி நடிக்கறதை...?'' அவன் பதில் கேள்வியோடு அவள் எதிரில் அமர்ந்தான். அவள் பார்வை அவனது அறிவை அளப்பதுபோல் பார்த்தது.

''என்ன பாக்கறீங்க...?''

''இல்ல... ஒரு எழுத்தாளர் அறை எல்லாம் போட்டது போட்டபடி இருக்கும். திரும்பின பக்கமெல்லாம் புத்தகங்கள், சரஸ்வதி சிலை, அது மேல ஒரு காய்ஞ்ச மாலைன்னு நான் ஒரு டைப்பா கற்பனை செய்து வெச்சிருந்தேன். அதான் பாக்கறேன்'' என்றாள் அவள்.

''சரி, என்ன சாப்பிடறீங்க?''

''ஒண்ணும் வேண்டாம். உங்களோட நிறையப் பேசணும். அதுக்கு நீங்க நேரம் ஒதுக்கித் தந்தா அது போதும்.''

''அதுக்கென்ன பேசுவோமே.''

''ஆமா நீங்க ஸ்டில் பேச்சலர் தானா?''

''எதுக்கு கேக்கறீங்க?''

''சும்மாதான்...''

''தமிழ்ல மிக அதிகப் பொருள்தரக் கூடிய ஒரு சொல் எது தெரியுமா?''

''எது?''

''சும்மா.''

-அவள் உடனே சிரித்தாள். ரசிக்கும்படியாக் - ஜலதரங்கச் சப்தத்தை ஞாபகப்படுத்தியது அது!

''சரி, விஷயத்துக்கு வாங்க. உங்க பேரைச் சொன்னீங்க. நீங்க யார், என்ன பண்றீங்கன்னு எதுவும் சொல்லலையே...?''

''யு மீன் யு வான்ட் டு ஆஸ்க் மை பையோடேட்டா...?''

''அதை தமிழ்லேயே கேட்கலாமே. எதுக்கு இந்த ஆங்கில நெருக்கம்?''

''அவள், அவன் மடக்கலால் சற்றுத் தடுமாறினாள். பின் மெலிந்த குரலில் ''அப்படியே பழகிட்டோம்'' என்றாள்.

''டோமா...? டேன்...! பழகிட்டேன்னு சொல்லுங்க. எதுக்கு உங்க தப்புக்கு எல்லாரையும் துணைக்கு இழுத்துக்கறீங்க...?''



- அவன், ஆப்பிள் நறுக்குவது மாதிரி மிருதுவாகச் சிரித்தபடி அவளை நறுக்கினான். அவள் தொடர்ந்து தடுமாறினாள். நிறையப் பேச நினைத்த அவளின் ஆசை, ஒரு கூட்டு நத்தைபோல அடங்கத் தொடங்கியது. ஒருவித மௌனமும், தயக்கமும் வந்து தொற்றிக் கொண்டது.

''என்ன செல்வி அருள்மொழி, பேசுங்க... நிறையப் பேசணும்னீங்க. அதுக்கு முந்தி ஒரு கேள்வி. நீங்க செல்வி அருள்மொழிதானே?''

- அவள் ஆமோதிப்பதாய்த் தலையசைத்தாள்.

''சரி சொல்லுங்க. நீங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?''

''நான் ... நான் ஒரு மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கூடத்துல ஆசிரியையா இருக்கேன்.''

''ஓ... நல்ல பணி. உங்க குடும்பம் பத்தி சொல்லலையே.''

''அப்பா மீனாட்சி சுந்தரம் ஒரு வரலாற்றுப் பேராசிரியர்.''
- பஸ்கரன் அடுத்த நொடி நிமிர்ந்தான்.

''எந்த மீனாட்சி சுந்தரம்? மதுரை தியாகராஜர் கல்லூரில பணியாற்றினவரா?''

''அவரேதான்... அப்பாவைத் தெரிஞ்சிருக்கணுமே உங்களுக்கு?''

''தெரியுமாவா... நான் அவரோட மாணவன், அருள்மொழி...''

''தெரியும். தெரிஞ்சுதான் வந்துருக்கேன்.''

''ஆமாம்... இப்ப அவர் எங்க இருக்காரு?''

''இதே ஊர்லதான்.. அழகப்பன் நகர்ல...!''

''ஓ... ரொம்ப மகிழ்ச்சி. என் ஆசிரியர் மகள் நீங்க. உங்களுக்குச் சாப்பிட ஏதாவது கொடுத்தே தீரணும் நான்.'' பாஸ்கரன் சொல்லிக் கொண்டே எழுந்தான்.

சில கேள்விகளால் அவளைச் சங்கடப்படுத்தித் திணறச் செய்தவன் மிகச் சமீபமாகிவிட்ட மாதிரி அவளும் உணர்ந்தாள்.

அவன் கிச்சனுக்குச் சென்று ஃபிரிட்ஜைத் திறந்து, பிரட்டும் ஜாமும் கொண்டு வந்தான். கூடவே ஒரு கத்தி. அவள் புரிந்து கொண்டாள்.

''என்ன பிரம்மச்சாரி சமையலா?''

''ஆமா...?''

''அம்மா அப்பால்லாம் எங்க?''

''அப்பா சிவலோகவாசியாகிப் பல வருஷமாச்சு. அம்மா, அக்காவோட சென்னைல இருக்காங்க. நான் மட்டும்தான். இப்ப நீங்க இருக்கேன்...''

''நீங்க இங்க இப்படித் தனியா இருக்கத்தான் வேணுமா?''

''தனியா இருக்கேனா.. சரிதான். இங்க ஆயிரக்கணக்கான கேரக்டர்ஸ் இருக்காங்க. உலகத்திலேயே பெரிய குடும்பஸ்தன் நானாகத்தான் இருப்பேன்.''

- பாஸ்கரன் புத்தகங்களைப் பார்த்தபடியே சொன்னான். கைகள் பிரெட்டின்மேல் ஜாமைத் தடவியபடி இருந்தன.

அவள் கைகள் பரபரத்தன.

''நா... நான் பண்ணித்தரேனே...'' அவள் அவனிடம் இருந்து பிரெட் துண்டங்களையும், ஜாம் பாட்டிலையும் தன்பக்கம் இழுத்தாள்.

''நோ... நோ... நீங்க கெஸ்ட்- உக்காருங்க. ஆமா, அப்பா எப்படி இருக்கார்?'' அவன் அவளை விடவில்லை. அவளும் விடவில்லை.

''என்ன கேட்டீங்க. அப்பா எப்படி இருக்கார்ன்னா? இருக்கார். எப்பப்பார் ஆராய்ச்சி. அப்புறம் எதையாவது எழுதறதுன்னு.''

''ஆமாம்.. நான் ஒரு எழுத்தாளனா இருக்கறது அவருக்குத் தெரியுமா?''

''தெரியுமாவா.. உங்க கதைகளைப் பத்திரிகைகள்ல பார்க்கும்போதெல்லாம் சொல்லுவார், 'பாஸ்கரன் என் மாணவன். என்னமா எழுதறான் தெரியுமா'ன்னு... ஒரே பெருமிதம்தான்...!''



- அவள் சொல்வதைக் கேட்டு பாஸ்கரனுக்கு கண்களில் சற்று பனிப்பே ஏற்பட்டுவிட்டது.

இடையில் தபால்காரர் வந்து மரியாதையாக ஒரு கட்டுக் கடிதங்களைக் கொடுத்துவிட்டுப் போனார். அவை அவனுக்கு இருக்கும் பரவலைக் காட்டிச் சிரித்தன.

''எல்லாம் வாசகர் கடிதங்களா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''ஆமா, நீங்க வந்த விஷயத்தைச் சொல்லவே யில்லையே...?'' என்றபடி அவளைப் பார்த்தான். கைகள் பிரெட் துண்டங்களை அவள் எதிரில் நீட்டின.

''நான் உங்க ரசிகை. நீங்க எப்படி எழுதறீங்க, அதை எப்படிப் பத்திரிகைகளுக்கு அனுப்பறீங்கன்னு பிராக்டிகலா பார்க்க ஆசைப்பட்டேன். குறிப்பா, உங்க கதைகள்ல வர்ற வர்ணனைகளை நீங்க எழுதும்போது நான் பாக்கணும்.'' அவள் சின்னக் குழந்தை போல உணர்வைக் காட்டிச் சப்புக் கொட்டினாள். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதே சமயம்..

ஃபிளாட் வாசலில் யாரோ வந்து நின்றாற் போலிருந்தது. திரும்பிப் பார்த்தான். எதிர் ஃப்ளாட்டில் வசிக்கும் துர்கா கைகளில் வாழை இலையால் மூடிய ஒரு தட்டுடன் நின்று கொண்டிருந்தாள்.

''என்ன துர்கா?''

''இன்னிக்கு வீட்ல விசேஷம். அம்மா பலகாரம் கொடுத்து விட்டாங்க.''

''ஐய்யோ. என்னம்மா இது. எதுக்கு இப்படி எல்லாம் தர்மசங்கடப்படுத்தறீங்க?'' உடனேயே அவள், எந்தப் பதிலையும் சொல்லாமல் அவனையும், அருள்மொழியையும் மாறி மாறிப் பார்த்தாள். பின் அந்தத் தட்டை ஒரு ஓரமாக வைத்துவிட்டு. எதுவும் சொல்லாமல் திரும்பி நடந்தாள்.

''இந்தப் பொண்ணு ஒரு பெரிய அன்புத் தொல்லை அருள்மொழி. மூணுவேளையும் இப்படித்தான் எதையாவது கொண்டு வந்து கொடுத்துருது...''

''என் வீட்டுக்கிட்ட நீங்க இருந்தாலும் நான் இப்படித் தான் நடந்துக்குவேன்.'' சட்டென்று பேசிவிட்டாள், அருள் மொழி. பாஸ்கரன் அதைக் கேட்டு அதிர்ந்தான். பின் சிரித்தவனாக...

''நல்லவேளை! நான் உங்க வீட்டுக்கிட்ட இல்லை...'' என்று சிரித்தான்.

ஃபிளாட்டுக்கு வெளியே - கதவுக்குப் பக்கவாட்டில் அந்தப் பெண் துர்கா! உள்ளே அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டபடி இருந்தாள். கைகள் தாவணியில் முடிச்சுப் போட்டும், அவிழ்த்தும், அவள் சற்றுக் கொந்தளிப் போடு இருப்பதைச் சொல்லாமல் சொல்லும் போது, எதிரே அவள் ஃபிளாட்டில் இருந்த ஒரு வயதான பெண்மணி வெளிப்பட்டாள். துர்கா நின்று கொண்டிருப்பதைப் பார்த்து கையை அசைத்து வேகமாக அழைத்தாள்.

''அங்க நின்னு ஒட்டுக் கேட்க ஆரம்பிச்சுட்டியா... வாடி இப்படி...'' - அந்தம்மாவின் அதட்டலில் ஒருவித அமரிக்கை. ரகசியத்தன்மை!

அவளும் தயங்கித் தயங்கி அங்கிருந்து விலகத் தொடங்கினாள். உள்ளே பாஸ்கரனும், அருள்மொழியும் ஏதோ ஒரு ஜோக்கைச் சொல்லி, கலகலப்போடு சிரித்துக் கொண்டிருந்தனர். வெளியேவரை கேட்ட அந்தச் சிரிப்புச் சப்தம், அவளை என்னவோ செய்தது.

''போனா, சட்டுன்னு கொடுத்துட்டு வரவேண்டியது தானே? எதுக்கு அங்க நின்னு ஒட்டுக்கேட்கறே? அந்தத் தம்பி பார்த்தா, என்ன நினைக்கும்.. முதலுக்கே மோசமாயிடாது?''

''இல்லேம்மா உள்ற என்ன மாதிரியே ஒரு பொண்ணு. அதுதான்...''

''யாரா இருந்தா என்ன, பிரபல எழுத்தாளர்ன்னா ஆயிரம்பேர் பார்க்க வருவாங்க. இவ்வளவு பொசசிவா இருக்காதே துர்கா. நாங்கதான் அந்தப் பையனுக்கே உன்னைக் கட்டி வைக்கறோம்ன்னு சொல்லிட்டோமில்ல?''



- அந்தப் பெண்மணி சொன்னபடியே அவளை இழுத்துக் கதவையும் சாற்றிக் கொள்ள...''

கிலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்த பாஸ்கரனைக் 'கொஞ்சம் என்னையும் கவனி' என்பதுபோலக் கூப்பிட்டது தொலைபேசி.

'ஒரு நிமிஷம்' என்றபடி போய் காதைக் கொடுத்தான் பாஸ்கரன்.

''சார் நான் சக்திவேல் பேசறேன்...'' திரும்பவும் அந்த வாசகன்.

''என்ன சக்திவேல்?''

''சார் அந்தக் குகைக் கோயிலுக்குப் போனப்ப ஒரு விஷயத்தைக் கவனிச்சேன். அதச் சொல்லத் தவறிட்டேன்.''

''என்ன சக்திவேல் அது?''

''அந்தக் குகைக்குள்ற நிறைய கல்வெட்டுக்கள் பொறிஞ்சு கிடக்கு. அதுல ஒரு வரியைத் தெளிவாப் படிக்க முடிஞ்சிச்சு. ரொம்ப ஆச்சரியமாப் போயிடிச்சு சார்...''

''அப்படி என்ன படிச்சீங்க?''

''அதுல, என் பேர். உங்க பேர், அப்புறமா அருள்மொழிங்கற ஒரு பெண் பேர்கூட இருக்கு சார்...''

''நிஜமாவா?'' -பாஸ்கரன் பரபரப்பானான்.

## 3

தொலைபேசியை வைத்துவிட்டுத் திரும்பிய பாஸ்கரன் முகத்தில் ஆச்சரிய ரேகைகள்!

அதைப் பார்த்த அருள்மொழியும் சீவினது போலக் கேட்டாள்.

''என்ன சார்... ஏதாவது சர்ப்ரைஸ் நியூஸா?''

''ஆமாம்... முன்ன பேசின அதே வாசக அன்பர்தான்...''

''என்ன சொன்னார்...? நான் தெரிஞ்சுக்கலாமா?''

பாஸ்கரன் அவளைச் சில நொடிகள் உன்னிப்பாகப் பார்த்தான். பின் சிரித்தபடியே வாயைத் திறந்தான்.

''ஒரு வாரம் கழிச்சுச் சொல்றேனே...''

''ஏன் இப்பச் சொன்னா என்ன...?''

''சில விஷயங்களை அலசிப் பார்க்காமப் பேசறது ரொம்பத் தப்பு.''

''எதை அலசிப்பாக்கணும் இப்ப நீங்க...?''

''எல்லாத்துக்கும் விடையை ஒரு வாரம் கழிச்சுக் கேளுங்க. சொல்றேன்.''

''தேங்க்ஸ்...''

''இதுக்கு எதுக்கு தேங்க்ஸ்...?''

''ஒரு வாரம் கழிச்சு என்னைச் சந்தின்னு சொல்லாமச் சொல்றீங்க பாருங்க... அதுக்காக...!''

அவன், அவளின் புத்திசாலித்தனத்தை ரசித்தான்.

முதல் சந்திப்பிலேயே அவள் 'நான் ஒரு சராசரி ரசிகை இல்லை' என்கிற மாதிரி பரிமாணங்களைக் காட்டினாள்.

அவன், ''தொடரும்'' போட்டு முடித்திருந்த அத்தியாயத்தை எட்டியும் பார்த்தாள்.

''புதுக்கதையா?''

''ஆமா...''

''பார்க்கலாமா?''

''அதான் எட்டிப் பார்த்தீங்களே...''

''தப்பு தப்புப் படிக்கலாமா?''

அவன் மறுபேச்சுப் பேசாமல் அந்த அத்தியாயத்தை எடுத்து அவள் எதிரில் நீட்டினான். சின்னக்குழந்தை போல ஒரு குதூகலம் அவளைத் தொற்றிக் கொண்டது.

குளிரிலிருந்து விடுபட நினைக்கின்றவர்கள் போல, கைகளைப் பரபரப்பாக அசைத்துத் தேய்த்துச் சூடாக்கிக் கொண்டு மடிமீது அத்தியாயத்தைப் போட்டுக்கொண்டு படிக்கத் தொடங்கினாள்.



''மன்னிக்கணும்... நான் ஒரு சிகரெட் பிடிச்சுக் கறேனே...?''

அவள் குறைவாகச் சிரித்து, இமையை மட்டும் அசைத்து அனுமதி அளித்தாள். பின் வாசிக்கத் தொடங்கினாள்.

பாஸ்கரன் புகை மேகங்களை உருவாக்கியபடியே அவள் முகத்தை ஊடுருவினான்.

அதில் ஆச்சரியம், அதிர்ச்சி, ஏமாற்றம், ஏளனம், இறுக்கம் என்று எல்லா உணர்வுகளும், ரயில்பெட்டிகள் போல அணிவகுத்துச் செல்லத் தொடங்கின.

சற்றே தலையைக் குனிந்து கொண்டு படித்ததால் அடர்த்தியான அவளது கூந்தலும், கோணலாக அவள் எடுத்த வகிடும் கூடப் பார்க்கும்படி தெரிந்தன. பின்னஞ்சடையில் இரட்டை வாரிதியில் மல்லிகைச் சரம்! அதிலிருந்து வரும் வாசத்தை சிகரெட் புகை சிதைப்பதுபோலத் தோன்றியது. உடனேயே கால்பாகம் கூட முடிந்திராத அதை தரையில் போட்டு நசுக்கினான்.

அவள் படித்துக்கொண்டே அதையும் கவனித்தாள்.

''ஏன் சிகரெட்டை அணைச்சிட்டீங்க?''

அவன் கையைத் தேய்த்துக் கொண்டு சிரித்தான்.

''இதுக்கும் பதிலை அடுத்தவாரம் சொல்றேன்...'' என்றான்.

''எல்லாத்துலையும் சஸ்பென்ஸா?''

''எல்லாத்துலையும்னா...?''

''கதைலதான் சஸ்பென்ஸ்னா, உங்க பேச்சு, செயல் எல்லாமே சஸ்பென்ஸா இருக்கு.''- என்று கண்களைச் சிமிட்டினாள் அவள்.

''சரி, சேப்டர் எப்படி இருக்கு?''

''பொன்னியின் செல்வன் ஞாபகம் வந்தது...''

''அப்புறம்?''

''வித்தியாசமான களம். நடை ரொம்ப நல்லா இருக்கு.''

''அப்புறம்?''

''வேற என்ன... உங்க எழுத்து மோசமாவா இருக்கும்?''

''இந்த 'அல்வா'தானே வேண்டாங்கறது?''

''இல்லை. நான் உண்மையைத்தான் சொல்றேன்.''

''எதை நான் எதிர்பார்த்தேனோ அதை நீங்க பேசலையே.''

''புரியுது... தேவதேவர் சொன்னது போல, சிற்பங்கள் சரியா சாஸ்திரப்படி இல்லாததால்தான், மகாபலிபுரம் கோவில், தெய்வம் இல்லாத சன்னதியா, முழுமை அடையாத கலாலயமா ஆனதுன்னு கொண்டு போய் முடிப்பீங்க அப்படித்தானே?''

''இல்ல... நான் வேறமாதிரி கொண்டு போகப் போறேன்.'' அவள் அதைக் கேட்டு மௌனமாகப் பார்வையால் அவனைத் துளையிட்டாள்.

''எப்படின்னு கேக்கமாட்டீங்களா?''

''மாட்டேன்.''

''ஏன்?''

''அதுக்கும் பதிலை அடுத்தவாரம் சொல்றேன்னு சொல்லிட்டீங்கன்னா?''

அடுத்தநொடி அவன் பெரிதாகச் சிரித்தான். சப்தம் எதிர் ஃபிளாட்டை ஊடுருவி உள்ளே கதவுக்குப் பின்னாலேயே நின்றுகொண்டிருந்த துர்காவின் காதுகள்வரை பாய்ந்தது.

அவள் கை நகங்கள், எரிச்சலோடு பற்களிடையே வதைபடத் தொடங்கின!

**வி**றட்சிக்கு இலக்கணம் எழுதிக் கொண்டிருந்தது சமணப்பட்டி உழுது போடப்பட்டிருந்த நிலங்கள். தண்ணீருக்காக வானம் பார்த்தபடி கிடந்தன.



அங்கும் இங்குமாய்ப் பிழைத்து கிடந்த ஆவாரம் புதர் களையும் கூட ஆடும் மாடும் கரித்து விழுங்கி விட்டிருந்தன.

பெருமாள்மலைமேல் இருந்து பார்த்தபோது, ஊரே செம்பழுப்பு நிறத்தில்தான் தெரிந்தது. துளிகூடப் பசுமை யில்லை. மழை மட்டும் சரியாகப் பெய்திருந்தால், பச்சைக் கம்பளமாய்த் தெரிய வேண்டிய ஊர்.

மலைமேல்கூட விதம்விதமாய் பாறைகள் உருண்டை யாய், தட்டையாய், கர்ப்பிணி வயிறுபோல்... இதில் அங்கங்கே ஒரு குடும்பம் நடத்த முடிந்த அளவுக்கு இடப்பரப்போடு குகைகள் வேறு...!

இவற்றுள் மச்சினிக் குகைக்குள் மட்டும் தரைமேல் படுத்து ஊர்ந்துதான் போகவேண்டும்.

உள்ளே விட்டலாச்சாரியார் படசெட்டுபோல தலை இல்லாத பன்னிருகரக் காளிசிலை, கல் தொட்டி, யாளி, கல்பாவையார்கள் என்று ஒரு குட்டிச் சிற்ப உலகம் அங்கேதான் பூமியில் கழுத்துவரை புதைக்கப்பட்டது போல் தரைமேல் ஒரு மனிதத்தலை மட்டும் தெரிந்தது!

அனேகமாக அது, அந்தக் காளியின் தலையாகத்தான் இருக்க வேண்டும்.

உள்ளே குகைச்சுவரில் கசாமுசாவென்று கல்வெட்டு எழுத்துக்கள். ஒரு வரியைக் கூடப் படிக்க முடியாதபடி 'க ங ச' வை போர்டில் எழுதிப் போட்டதுபோலக் காட்சியளித்தன. அங்கங்கே அவற்றின் மேல் வௌவால்கள் வேறு ஒட்டிக் கொண்டு கிடந்தன.

மச்சினிக் குகைக்கு வெளியே சிரமமில்லாமல் நுழைய முடிந்ததுபோல, ஆவென்ற திறப்போடு, பலவிதமான குகைகள்...

அதில், பாறையிலேயே படுக்கைகள் வெட்டப்பட்டு, தலைப்பாகத்தில் ஒரு அங்குல ஆழத்திற்கு ஒரு மனிதத் தலையின் பின்பாகம் பதியுமளவும் ரேடியஸோடு குழிகள்.

அதில் பெரும்பாலும் தேரைகள் அடைந்து கிடக்கும்.

மலை முதுகில், சுற்றிலும் இப்படிக் குகைகள். நடுவில் ஒரு டென்னிஸ் மைதானம் போல பாறைச் சமதளம். அதன் நடுவில் கொடிமரப் பீடம்போல ஒரு கல்பீடம்.

அன்றும் அந்த மலை முதுகுவரை சிரமப்பட்டு ஏறிவந்ததுபோல மூச்சிரைக்க வந்து நின்றான் சக்திவேல். வேட்டியும் சட்டையுமாய் ஒரு கிராமத்து இளைஞனின் கம்பீரத்தோடு. கூடவே பாவாடை தாவணியில் அவனது முறைப்பெண் மகேஸ்வரி! மாநிறத்தில் மஞ்சள் பூசிய முகத்தோடு!

''ஆத்தி... என்னமா மூச்சிளைத்குது...'' என்று மார்பு மேல் கை வைத்தபடி ஆசுவாசித்தாள். பின் நிதானமாகச் சுற்றிலும் பார்த்தாள்.

''இதான் பெருமாள் மலையா... ஆமா எங்க கோயிலு?'' பெருமூச்சோடு கேட்டாள்.

''கோயில்லாம் கிடையாது. வெறும் குகைங்கதான்.''

''பெருமாள் மலைங்கவும், பெருமாள்சாமி இருக்கும்னு நினைச்சேன்.'' என்றபடியே தொடர்ந்து நோட்டம் விட்டாள்.

காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்தது? அவள் தாவணி கொடியாட்டம் பறந்தது!

உச்சிக்கு வந்தபடி இருந்தான் சூரியன். அங்கங்கே மேகப்பொதிகள் மறைத்ததால் அத்தனை வெப்பமில்லை.

''சரி, சரி வா... நாம மச்சினிக் குகைக்குப் போவோம்.''

''மச்சினி குகையா... பேரே வித்தியாசமா இருக்கு!''

''வந்து பாரேன்...''

''சரி, எதுக்குக் கூட்டிக்கிட்டு வந்தே?''

''சும்மா உனக்குச் சுத்திக்காட்டத் தான்...''

''பொய்யி...!'' அவள் உதட்டைக் கடித்தபடி சொன்னாள். அவன் அதை ரசித்தபடியே அவளை ஊடுருவினான். பின், ''சரி, வா போகலாம்.'' என்றபடி மச்சினிக் குகைவாயில் முன்பு போய் நின்றான்.



''உள்ளார என்ன இருக்கு?''

''வந்து பாத்துட்டுச் சொல்லேன்.''

''எதுவா இருந்தாலும் சரி.... உள்ள போனப்புறம் இதுக்குத்தான் கூட்டிக்கிட்டு வந்தேன்'னு சில்மிஷம் பண்ணக்கூடாது சக்தி.''

திரும்பவும் சிரித்தான் சக்திவேல்.

''சரி, சரி வா...'' சொன்னபடியே தரையில் படுத்து ஒரு ஆள் புக முடிந்த அதன் துவாரத்துக்குள் ஊர்ந்து செல்லத் தொடங்கினான்.

''ஐய்யோ... இப்படிப் படுத்துத்தான் போக முடியுமா?''

''ஆமா... நை நைங்காம என் பின்னாலேயே வா...'' அவன் முன் சொல்ல, அவள் பின்னாலேயே தவழ்ந்து உள்ளே நுழைந்தாள். நிமிர்ந்தாள். எதிரில் தெரிந்த உள்கூட்டைப் பார்த்துவிட்டு வாயையும் பிளந்தாள்!

''ஆத்தி... உள்ளார இவ்வளவு பெரிய இடமா?'' வியப்பை வார்த்தையாக்கியபடி நடந்தாள். தலை இல்லாத காளி சிலை அவளை மிரட்டியது; கல்பாவையர்கள் ஆச்சரிய மூட்டினார்கள்!

''ஆமா... இது காளியாத்தா சிலைதானே?''

''அப்படித்தான் நினைக்கறேன்.''

''ஆமா... எங்கே தலை?''

''தெரியல... ஆனா கீழே ஒரு தலை கிடக்குது. அங்க பார்...'' அவன் காட்டினான். அவள் அதன் அருகே சென்றாள்; மண்டியிட்டு அமர்ந்து ஊன்றிப் பார்த்தாள்.

''மகேஸ்வரி, அதுகிட்டப் பேசேன்.''

''என்ன சக்தி சொல்றே?''

''இல்ல பேசேன்... பேசிப் பாரேன்.''

''உனக்கு என்ன பைத்தியமா? சிலைகிட்டப் போயி பேசுங்கறே... நான் பேசுனா பதிலுக்கு அது பேசுமா என்ன?''

''நீ பேசேன்...''

அவன் விளையாடுகின்றானோ என்று அவளுக்குத் தோன்றியது. ஒரு மாதிரி முறைத்தாள்.

''நகரு... நான் பேசறேன்.''

அவன், அவள் நகரவும் மண்டியிட்டு, அந்த முகத்தை உற்றுப்பார்த்தபடியே ''யார் நீ?'' என்று கேட்டான்.

''மஞ்சினி...!'' ஒரு அழகிய பெண் குரல், அடுத்த நொடி அவன் காதில் கேட்டது!

# 4

அந்தக் குரலைக் கேட்ட நொடி - சிலிர்ப்போடு - விருட்டென்று மகேஸ்வரியை நிமிர்ந்து பார்த்தான் சக்திவேல்!

''மகேஸ்... இப்ப என்ன சொல்றே?''

''என்ன சொல்றேன்னா... என்ன சொல்லணும்ங்கறே?''

''என்ன மகேஸ்... சிலை இப்ப பேசிச்சே, உன் காதுல விழலை?''

''பேசுச்சா... எப்ப?''

''இப்ப...''

''போ அத்தான்... ரொம்பத்தான் கோட்டித்தனம் பண்றே நீ.''

''என்ன புள்ள... அந்தச் சிலை மஞ்சினி'ன்னு சொல்லிச்சு... இரு இன்னொரு தடவை கேட்கறேன்...'' சக்திவேல் உதறிக் கொண்டும் உணர்ச்சி மிகுதியோடும் மீண்டும் குனிந்தான். அந்தத் தலையை மிகச் சமீபித்தான். இமைக்காமல் துளையிடுவதுபோல் பார்த்தபடி

''மஞ்சினி'' என்றழைத்தான்.

''உம்!'' - பதில் குரல்.

''நீ பேசறேங்கறேன்... நம்ப மாட்டேங்கறா, என் முறைப் பொண்ணு. அவ காதுலையும் விழற மாதிரி பலமா பேசேன்...''



அடுத்த நொடி அந்தச் சிலை அவன்வரையில் 'கலகல'வென்று சிரிக்கத் தொடங்கியது. அண்ட சராசரத்தில் கிழக்குக்கும் மேற்குக்கும் மணிச்சரங்களாய்க் கட்டி, அதன் மேல் பெரிய காற்றை வீசச்செய்து, அசைத்து உருவாக்கியது போன்ற மணிச் சப்தமும் கூடவே சேர்ந்து விட்டது.

''ஐய்யோ... எதுக்கு இப்படிச் சிரிக்கறே?''

பதிலுக்குக் கத்தினான் சக்திவேல். மகேஸ்வரி மருள ஆரம்பித்திருந்தாள். அவள் வரையில் எதுவுமே காதில் விழவில்லை. அவன் பேசுவது மட்டும்தான் காதில் விழுந்தது. இவனுக்கு ஏதாவது ஆகிவிட்டதா?''

கேள்வியைப் புருவத்தின் மேல் வைத்துக்கொண்டு ஒரு தினுசாகப் பார்த்தாள்.

''என்ன மகேஸ்வரி பாக்கறே? எப்படிச் சிரிக்குது பார்த்தியா இந்தத் தலை...?''

''சிரிக்குதா... என் காதுக்கு எதுவுமே கேட்கல அத்தான். ஆமா உனக்கு ஸ்க்ரூ கழண்டிடுச்சா... எதுக்கு இப்படியெல்லாம் நடந்துக்கறே?''

''மகேஸ்வரியின் பதில் கேள்வி அவன் முகத்தை அஷ்ட கோணலாக்கியது. பெருமூச்சு உதடு பிளந்தது. கைகள் குத்திக் கொண்டன.

''அத்தான்...'' அவள் திரும்ப அழைத்தாள். நிமிர்ந்தான்.

''விளையாடினது போதும். வா போகலாம். இங்க ரொம்பப் புழுக்கமா இருக்கு.''

அவளை ஒரு மாதிரி பார்த்தான்.

''வாத்தான்...'' சிணுங்கினாள். இனி பேசவோ, கேள்வி கேட்கவோ ஒன்றுமில்லை என்று தோன்றியது.

மகேஸ்வரி சொல்வதிலும் உண்மை இருக்கிற மாதிரி பட்டது. அவளுக்குக் கேட்டிருந்தால் அவளும் தன்னைப் போலவே 'எக்ஸைட்' ஆகியிருப்பாள். இவளுக்குக் கேட்கவில்லை. அதனால்தான் பைத்தியம் போல என்னை நினைக்கிறாள்.

எனக்கு மட்டும் எப்படிக் கேட்கிறது?

யோசனையோடு பார்வை திரும்பவும் அந்தத் தலைச் சிலைமேல் போனது. என்ன நினைத்தானோ, திரும்பவும் குனிந்தான்.

''ஏய் மஞ்சினி... நீ பேசறது என் முறைப்பொண்ணுக்குக் கேக்க மாட்டேங்குதாம். ஆனா, எனக்கு மட்டும் கேட்குது. எதனால இப்படின்னு சொல்ல மாட்டியா?''

திரும்பவும் அந்தத் தலை முகத்தில் ஒரு விதமான சிரிப்புச் சப்தம்...

''சிரிக்காதே... நான் அரண்டு போயிருக்கேன். வெளியே சொன்னா என்னைப் பைத்தியங்கறாங்க... இவளும் ஸ்க்ரூ கழண்டிருச்சான்னு கேக்கறா...''

''ஏன் வெளியே சொல்றே?'' அது பதில் கேள்வி கேட்டது. அவனுக்கு நறுக்கென்று குட்டுப்பட்ட மாதிரி ஆயிற்று.

''ஒரு கல் பேசறது அதிசயமில்லையா?''

அது திரும்பச் சிரித்தது...

''சிரிக்காதே... பதில் சொல்லு.''

''நான் பேசறது ஒண்ணும் அதிசயமே இல்லை. அதைவிட பெரிய அதிசயமெல்லாம் இங்க இருக்கு.''

''எனக்கு நீ பேசுறதே பெரிய அதிசயமா இருக்கு. அதைவிடப் பெரிய அதிசயமெல்லாம் இங்க இருக்குன்னு சொல்லி எனக்குள்ளே கிலி மூட்டியே...?

''ஆமா... கிலிதான்! கிலியா நினைச்சாத்தான் அது கிலி. இல்லேன்னா ஒண்ணுமேயில்லை.''

''சரி, நீ யார்... எப்படிப் பேசறே நீ...?''

''நான் மஞ்சினி... அகலிகை மாதிரி சாபத்தால கல்லாயிட்ட ஒரு ராஜகுமாரி நான்...''

''பொய்... பொய் சொல்றே நீ...?

சக்திவேல் தொடர்ந்து பேசிக்கொண்டே போனான். அவன் கேள்விகள் மட்டும்தான் மகேஸ்வரிக்குக் கேட்டது.



அவனுக்கு சத்தியமாய் ஏதோ சித்தப் பிரமைதான் என்று நினைத்தவள் வெலவெலக்க ஆரம்பித்தாள். இப்படியே போனால் அவன் இன்னும் என்னவெல்லாம் செய்வானோ?

உதறலோடு முதலில் அங்கிருந்து நழுவிக் கீழே போய், முதலில் மாமனையும் அத்தையையும் பார்த்து, இதைப்பற்றி எல்லாம் சொல்ல வேண்டும் என்று நினைத்தவள், அந்த வெலவெலப்போடு அங்கிருந்து நழுவத் தொடங்கினாள்.

சிறிய துவாரத்தின் வழியாக வேகமாக வெளியேற ஆரம்பித்தாள்.

''ஏய் மகேஸ்வரி... நில்லு. எங்க போறே?'' அவனும் எழுந்து அவளைப் பின்தொடர்ந்து வர ஆரம்பித்தான். அவள் வேகமானாள்; படபடப்போடு வெளியே வந்தாள்.

காற்று அவளைத் தூக்கிக் கொண்டு போகத் தயாரானது போல வீசிக் கொண்டிருந்தது.

அவள் ஓடத் தொடங்கினாள். அவனும் வெளியே வந்து பின்னாலேயே அவளைத் பின்தொடரத் தொடங்கினான்!

பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் டி.வி.யில் சன் நியூஸ் பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தார்.

ஒரிஸ்ஸாவில் சந்தன் கண்ணன் புலிகள் சரணாயலத்தில் வரிசையாகப் பன்னிரெண்டு புலிகள் செத்துப்போன செய்தி காட்சியோடு ஓடிக் கொண்டிருந்தது.

அவர், அந்தக் காட்சிகளைப் பார்க்கும் விதத்தில் சாணை பிடித்தாற்போல் ஒரு கூர்மை.

''அப்பா சூப் ரெடி...'' என்றபடி கையில் ஒரு சூப் கப்புடன் குறுக்கிட்டாள் அருள்மொழி.

''உஸ்ஸ் கொஞ்சம் சும்மா இரு!'' என்றபடியே அவர் காட்சியில் கவனமானார். அவளும் டி.வி. பக்கம் திரும்பினாள்.

ஒரு மூங்கில் கழியில், புலியின் சடலத்தைத் தலைகீழாகக் கட்டித் தொடங்கவிட்டபடி சிலர் நடந்தபடி இருந்தனர். வித்தியாசமான காட்சி.

''என்னப்பா, புலியை பிடிச்சு தூக்கிட்டு போறாங்களா?'' கேட்டாள்.

''இல்லம்மா... ஒரு புலிக்கு பன்னெண்டு புலி செத்துப்போச்சு. அநியாயமா செத்துப் போச்சு. எப்படின்னே தெரியலே.''- அவர் பார்வையை விலக்காமலே பதிலளித்தார். சதுர ஸ்பெக்ஸ் கண்ணாடி அணிந்திருந்தார். அதை அழுத்தி விட்டுக் கொண்டார். காட்சி விரிந்து கொண்டே போகிறது.

ஒவ்வொரு புலியாகத் தரையில் கிடத்தப்படுகிறது.

பின் அவை தோல் உரிக்கப் படுகின்றன!

திரையே ரத்தச் சிவப்பாகிறது. மிக வித்யாசமான காட்சி.

புலிகளின் சாவை விவரித்த காட்சி. பிறகு நூற்றுக் கணக்கில் குஜராத்தில் மயில்கள் இறந்த செய்திக்கு மாறுகிறது. பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட தானியங்களை உண்டதால் மயில்கள் இறந்ததாக விவரிக்கப்படுகிறது.

கண்ணைப் பறிக்கும் தோகை மயில்கள் கூட்டம் கூட்ட மாகச் செத்துக்கிடக்கின்றன.

''அப்பா... என்னப்பா இது? பறவைகளுக்கும் மிருகங் களுக்கும் இது போதாத காலமா?'' அருள் மொழி சூப் கப்பை ஒரு ஓரமாக ஒதுக்கியபடியே கேள்வியோடு அவர் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

டி.வி. செய்தியும், பின் அரசியல் செய்திகளுக்கு மாற ஆரம்பித்தது. மீனாட்சிசுந்தரமும் பெருமூச்சோடு அருள் மொழி பக்கம் திரும்பினார்.

''என்ன கேட்டே அருள்மொழி?''

''மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் போதாத கால மான்னு கேட்டேன்.''

''எனக்கென்னவோ இந்தியாவுக்கே போதாத காலம்னு தான் தோணுது.''

''என்னப்பா சொல்றீங்க...?''

''ஆமாம்மா... நம்ம தேசிய விலங்கு புலி. தேசியப் பறவை மயில். இரண்டுமே இப்படிக் கூட்டம் கூட்டமா



சாகறதப் பார்த்தா, இந்த தேசத்துக்கு ஏதோ ஆபத்தோன்னு நினைக்கத் தோணுது.''

மீனாட்சிசுந்தரம் ஒரு புதிய கோணத்தைக் காட்டினார்.

''என்னப்பா சொல்றீங்க...?''' அருள்மொழி ஆச்சரியத் துடன் தாடையில் கையைப் பதித்துக் கொண்டாள்.

அவர் எப்பொழுதுமே இப்படித்தான். எந்த விஷயத்திலுமே அவரது பார்க்கும் கோணம் அலாதியானது.

''எப்படிப்பா?''

''எப்படின்னா என்னத்த சொல்றது... இது சாதாரணச் செய்தியில்லம்மா. சாதாரண ஒரு நிகழ்ச்சியும் இல்லைன்னு தான் நான் நினைக்கிறேன்.

ராஜாக்கள் காலத்துல பட்டத்து யானையும், பட்டத்துக் குதிரையும் செத்தா... அந்த ராஜாவோட அரசாட்சிக்கு ஏதோ கெடுதல் நடக்கப் போகுதுன்னு சொல்வாங்க.

அந்த காலத்துல யானை, குதிரை, இப்போ புலி, மயில் சரிதானே?''

அவர் அப்படிக் கேட்ட மறு நொடி, அருள்மொழி அவரை முறைக்கத் தொடங்கினாள்.

''என்னம்மா... எதுக்கு முறைக்கிறே?''

''முறைக்காம... இப்படி உளறினா முறைக்காம இருக்க முடியுமா? எதை எதோடப்பா முடிச்சு போட்றீங்க! உங்களுக்கு ரொம்பவும் கொடுமையான கற்பனைப்பா.''

அருள்மொழி சலித்தாள். அப்பொழுது காலிங்பெல்லின் அழைப்புச் சப்தம்!

''இனிமே இந்த மாதிரி எல்லாம் உளறாதீங்க. இல்ல உளறித்தான் தீருவேன்னா பாசிடிவ் தாட்டோட உளறுங்க. புலி செத்துப் போச்சு. அதனால நமக்கு வர இருந்த ஆபத்து நீங்கிப்போச்சுன்னு சொல்லுங்க... மயில் செத்துப்போச்சு, அதனால தப்பா நடக்க இருந்த ஒரு விஷயம் மயிலால மாறிப்போச்சுன்னு சொல்லுங்க... நீங்களும் உங்க கணிப்பும்...''

-சடைத்தபடியே நடந்து சென்று வாசல்கதவை திறந்தாள். வெளியில் புன்னகை முகத்தோடு பாஸ்கரன்!

# 5

பாஸ்கரனைப் பார்த்த நொடி அருள்மொழி ஒரு பந்து போலானாள். உற்சாகத்தில் எகிறிக் குதித்தாள்.

''ஹலோ சார்... வாங்க வாங்க!''

''யாரும்மா வெளிய?'' உள்ளிருந்தும் கேள்வி.

''உம்... பாத்துட்டுச் சொல்லுங்க. பார்த்தா அசந்து போயிடுவீங்கப்பா....''

அருள்மொழி கூவிக்கொண்டே திரும்ப, பாஸ்கரனும் புன்னகையோடு பின் தொடர்ந்தான்.

நேராக மீனாட்சிசுந்தரம் எதிரில் போய் கைகட்டிக் கொண்டு நின்றவன் அப்படியே சாஷ்டாங்கமாக, அவர் காலில் விழுந்து வணங்கவும் செய்தான்.

''யாரு பாஸ்கரனா?''

''பாஸ்கரனேதான் சார்... உங்க ஸ்டுடன்ட் பாஸ்கரனே தான்.''

''ஏய்... வாட் எ சர்ப்ரைஸ். அருள் சொன்னது சரிதான். எப்படிப்பா இருக்கே?''

''நல்லா இருக்கேன் சார்.''

''பிரமாதமா இருக்கேன்னும் சொல். எங்கப்பார் உன் பேர்தான். பேப்பர், புஸ்தகம், டி.வி.ன்னு ஜமாய்க்கிறியே...''

''எல்லாம் உங்க ஆசீர்வாதம் சார்.''

''சந்தோஷம். ஆமா நீ மதுரைலயா இருக்கே?''

''ஆமாம் சார்.''

''உன் மாதிரி எழுத்தாளர்களுக்கு மதுரையை விட சென்னைதானே வசதியான ஊர்?''



மீனாட்சிசுந்தரம் உட்காரக்கூடச் சொல்லாமல் பேசிக் கொண்டே போனார்.

''அய்யோ அப்பா! அவரை உட்காரச் சொல்லுங்க.'' என்று நடுவில் புகுந்து பரபரத்தாள், அருள்மொழி.

படுஹோம்லியாக... நைட்டியில் இருந்தாள். அதை உணர்ந்தவள். 'ஐய்யய்யோ' என்று புடவை மாற்ற உள்ளே ஓடிப் போனாள்.

''உக்காரு பாஸ்கரன். ஆமா, இதே ஊர்ல இருக்கற உனக்கு என்னைப் பார்க்க இப்பத்தான் வழி தெரிஞ்சிச்சா?''

''மன்னிக்கணும் சார்... எனக்கு நீங்க இதே ஊர்ல இருக்கிற விஷயம், உங்க பொண்ணு என்னைப் பார்க்க வந்தப்பத்தான் தெரியும். நான் நீங்க சென்னை போய்ட்டதா நினைச்சுகிட்டிருக்கேன்.'' என்றான் பாஸ்கரன்.

''சரி, நீ ஏன் சென்னை போகலை?''

''என்னவோ சார்... என்னால அந்த மண்ணை நேசிக்கவே முடியல. யாரப் பார்... ஓடிக்கிட்டேயிருக்காங்க. யார் வீட்டுக்குப் போனாலும் கைவீசி நடக்க வீட்ல இடமில்லை. ஸ்லாகிச்சு குளிக்கத் தண்ணியில்ல... ஒரு தெருவை கடக்க சராசரியா பதினைஞ்சு நிமிஷம் ஆகுது. அவ்வளவு டிராஃபிக், அப்புறமா புழுதி!''

பாஸ்கரன் சென்னைக்கு ஒரு சிறு குறிப்பு வரைந்தான். மீனாட்சிசுந்தரம் அதை ரசித்தார்.

''நல்லா சொன்னே போ.... மதுரை மட்டும் என்ன வாழுதாம்?'' - திருப்பிக் கேட்டார் மீனாட்சி சுந்தரம்.

''தெரியாத புதுப்பேய்க்கு தெரிஞ்ச பழைய பேய் மேல்னு சொல்வாங்க இல்லையா?'' பதிலுக்கு கண் சிமிட்டினான் பாஸ்கரன்.

''நல்லா சமாளிக்கிறே...''

''இல்ல சார். நான் சொல்றதுதான் உண்மை. ஒரு எழுத்தாளனுக்கு அவனோட தாய்மண்தான் சார் எப்பவும்

பெரிசா இருக்கணும். அதோட தொடர்பை அவன் வசதி வாய்ப்புகளுக்காகப் பணயம் வச்சுடக்கூடாது.''

''இப்ப அப்படி எல்லாம் நினைக்கிற எழுத்தாளங்க இருக்காங்களா என்ன?''

''ஏன் சார் இல்ல... கி.ரா. இருக்காரே, அப்புறம் மேலாண்மை பொன்னுசாமி, மகரிஷி, ராஜேஷ்குமார், ஆர்னிகா நாசர், ஜெய மோகன்னு வரிசையா அடுக்கிக்கிட்டே போகலாமே...?''

பாஸ்கரன் பதிலோடு அந்த வீட்டைப் பார்வையால் அளக்க ஆரம்பித்தான். அப்படி ஒன்றும் பெரிய வீடு இல்லைதான். ஆனாலும் ஓவியப் படுத்தாக்களும் கைவினைப் பொருட்களுமாய் கண்ணைப் பறித்தது.

உடைந்த முட்டைக் கூட்டில் ஒரு பொம்மைக் குஞ்சும், தேங்காய்க் குடுமியில் ஊதுபத்தி ஸ்டாண்டும், பிஸ்கட் டின்னில் மோடாவும் உருவெடுத்திருந்தன!

சிப்பிகளிலும், பாசிமணிகளிலும் திருவாட்சிகள் செய்யப் பட்டு, அவை நிலைக்கால்கள் மேல் சுவரில் பதிந்து கிடந்தன.

'எல்லாம் அருள்மொழியின் கைவண்ணமோ?

ஒரு வீட்டில் மட்டும், ரசனையுள்ள துடிதுடிப்பான ஒரு இளம்பெண் இருந்து விட்டால் போதும். அவள் குடிசையைக் கூட கோவிலாக்கி விடுவாள். அதுவும் கால்காசு செலவில்லா மல் என்று நான் கதைகளில் எழுதியிருப்பதுதான் எத்தனை பெரிய உண்மை?'

''என்ன பாஸ்கரா பாக்கறே... எல்லாம் அருள்மொழி யோட வேலதான்.'' மீனாட்சிசுந்தரம் அவனுக்கு ஒப்புதல் தருவதுபோலப் பேசும் போது, புடவைக்கு மாறிய நிலையில், கையில் ஆவிபறக்கும் சத்துமாவுக் கஞ்சியோடு அங்கே வெளிப்பட்டாள் அருள்மொழி.

அவன் எதிரே நீட்டினாள்.

'என்ன இது புதுசா இருக்கு?''



''சத்துமாவுக் கஞ்சி. காபியும், டீயும் லாகிரிங்கிறது அப்பாவோட கருத்து.''

அவன் அவளையும் அந்தக் கருத்தையும் மிக ரசித்தது போல கஞ்சியைக் குடிக்கத் தொடங்கினான்.

''அப்புறம் பாஸ்கரா. இப்ப என்ன கதை எழுதிக் கிட்டிருக்கே...? அருள்மொழி கூட நீ மகாபலிபுரத்தையும், நரசிம்மபல்லவனையும் வெச்சு ஒரு கதை எழுதிக் கிட்டிருக்கிறதா சொன்னா...?'' மீனாட்சிசுந்தரம் மூக்குக் கண்ணாடியைத் துடைத்தபடியே கேட்டார்.

''ஆமாம் சார்... சமீபமா மகாபலிபுரம் போயிருந்தேன். பிரமிப்பா இருந்தது. கூடவே அதோட முழுமையடையாத தன்மை கொஞ்சம் வருத்தத்தையும் தந்தது. எதனால இப்படி ஆகியிருக்கும்னு ஒரு கேள்வி கேட்டுப் பார்த்தேன். அதற்கான பதிலாகத்தான் அந்தத் தொடரைத் தொடங்கி இருக்கேன்.

''எதனாலன்னு நீ நினைக்கிறே?''

''அதை இப்ப என்னால சொல்ல முடியாது சார். ஏன்னா என் கேள்விக்கான பதில் இன்னும் எனக்கு முழுமையாகக் கிடைக்கல.''

''பாத்து பாஸ்கர். அந்தக் கலைச் செல்வங்களுக்கு பின்னால, ஒரு பெரிய கால ரகசியமே ஒளிஞ்சிருக்கு.''

''என்ன சார் சொல்றீங்க?''

''நானும் இப்ப உங்கிட்ட சில விஷயங்கள்ல முழுவது மாகப் பேசமுடியாத நிலைலதான் இருக்கேன். என் ஆராய்ச்சி முடியட்டும். பிறகு சொல்றேன்.''

''என்ன ஆராய்ச்சி சார்...?''

''இந்த மதுரைக்கு ஒரு இருநூறு வருஷத்துக்குச் சரித்திரமே கிடையாது. அது தெரியுமா உனக்கு?''

''நீங்க களப்பிரர்கள் காலத்தைச் சொல்றீங்களா?''

''ஆமாம். அவங்க பிடியில மதுரை இருந்தப்போ, என்னென்னமோ நடந்துருக்கு. குறிப்பா இப்ப இருக்கற

மீனாட்சி அம்மன் கோவில் மேலேயே எனக்குச் சந்தேகம் உண்டு. இது பூர்வீகக் கோயில்தானான்னு...''

''அப்படின்னா புராதனமான அந்தக் கோயில் என்னாச்சு சார்?''

''அதைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன்...''

''சார், உங்க கருத்தை இப்ப இருக்கிற ஜனங்க ஒத்துக்குவாங்களா?''

''அது நான் காட்டப் போற ஆதாரத்தைப் பொறுத்தது. அப்படி ஆதாரம் காட்டியும் ஒத்துக்கலைன்னா, அதைப்பத்தி எல்லாம் எனக்குக் கவலையில்லை. கலிலியோ உலகம் உருண்டைன்னான். முதல்ல கல்லாலதான் அடிச்சாங்க. பின்னால ஒத்துக்கலையா...? நாம, நம்ம கடமையை இதய சுத்தியோட சரியாச் செய்துடணும். மிச்சத்தை வரலாறு பார்த்துக்கும்.''

மீனாட்சிசுந்தரமும், பாஸ்கரனும் வரலாறே பேசுவது அருள்மொழிக்குப் போரடித்ததோ என்னவோ, இடையில் கத்தரித்தாள்.

''சார், இப்படி சர்ப்ரைஸ் விசிட் கொடுக்கறதுக்கு ரொம்ப சந்தோஷம் எப்பப் பார் கதை. ஆராய்ச்சிதானா... வேற பேச்சே கிடையாதா?''

அவள் கேட்கும்போதே பார்வை ஜன்னல் பக்கமும் போனது. அக்கம் பக்கத்து இளசுகளின் தலைகள் அதில் தெரிந்தன! எல்லாம் பாஸ்கரன் வந்திருப்பதன் எதிரொலி. அருள்மொழிக்கு பெருமிதமாக இருந்தது.

''சார், உங்களுக்கு எங்க தெருவுல ஏகத்துக்கு ரசிகர்கள் இருக்காங்க... பாத்தீங்களா?'' என்று ஜனங்களை நோக்கி கை காட்டினாள்.

''ஹலோ சார்...''

''வணக்கம் சார்...''

''சார்... சார் எங்க வீட்டுக்கு வாங்க சார்.''



ஆளாளுக்கு குரல் கொடுத்தார்கள். அருள்மொழி அவர்களை அதிகம் சோதிக்காமல் போய்க் கதவைத் திறந்தாள். திபுதிபுவென்று உள்ளே வந்தார்கள். ஆசையோடும் பரவசத்தோடும் பார்ப்பது எப்படி என்பதற்கு இலக்கணமே எழுதிக் காட்டினார்கள்!

பாடப்புத்தகம், ரூபாய் நோட்டு என்று கையில் கிடைத்ததை நீட்டி கையெழுத்தும் வாங்கிக் கொண்டார்கள்.

மீனாட்சி சுந்தரத்துக்குப் பெருமிதமாக இருந்தது. அருள்மொழி அதற்குமேலே போனாள்.

''சார், எங்கப்பாவோட ஸ்டூடன்ட். நம்பமாட்டேன்னு சொன்னியே நீ. இப்ப என்ன சொல்றே ரேவதி...?'' - என்று அவர்களில் ஒருத்தியிடம் விகல்பமின்றிக் கேட்டாள். அவளும் பதிலுக்கு அசடு வழிந்தாள்.

நடுவில் மீனாட்சி சுந்தரம் எழுந்து உள்ளே போனார். ஒரு அரதப் பழசான புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தார்.

ஒருவழியாக எல்லோரையும் அனுப்பிக் கதவை தாழிட்டுவிட்டு, அந்தப் புத்தகத்தை பாஸ்கரனிடம் தந்தார்.

''என்ன புத்தகம் சார் இது?''

''புரட்டிப் பார்... பாத்துப் புரட்டணும். பெஸ்கி தமிழ்நாட்டுக்கு வந்து, இரட்சணிய யாத்ரீகம்லாம் அச்சிட்டப்போ அச்சிடப்பட்ட புத்தகம் இது...''

பாஸ்கரனும் ஆவலாகப் புரட்டினான். 'தெட்சிண ரகசியங்கள்' எனும் அதன் தலைப்பே சுவையாக இருந்தது.

''இது ராகுலன்கற ஒரு சமண சன்யாசி எழுதின புத்தகம். நாஸ்டர்டாம் மாதிரி இவர் பல விஷயங்களைச் சொல்லியிருக்கார்.

இந்தப் புத்தகத்தை நான் பிளாட்பாரத்து ஒரு பழைய புத்தகக் கடைல வெறும் 75 பைசாக்கு வாங்கினேன். 'இதைப் போய் வாங்கறீங்களே சார்'ன்னு அந்தப் புத்தகக் கடைக்காரனும் என்னை ஒரு மாதிரி பார்த்தான்.

ஆனா அவனுக்குத் தெரியாது. இதுல 75 கோடிக்கும் மேல வேல்யூ உள்ள ரகசியங்கள் இருக்கறது...''

பாஸ்கரன் பக்கங்களைப் புரட்டப் புரட்ட மீனாட்சி சுந்தரமும் அதற்கான பின்னணியைச் சொல்லிக் கொண்டே வந்தார். ஒரு பக்கத்தில் அச்சிடப்பட்டிருந்த ஒரு மனிதனின் வரைபடம் பாஸ்கரனை ஒரு க்ஷணம் உலுக்கிற்று. அந்த மனிதர், தலைக்கு ஒரு ரஷ்ய பாணியிலான நீண்ட கூம்புக் குல்லாயை தரித்திருந்தார். அவருக்கு ஒரு கால் இல்லை. பதிலுக்கு இருகைகளின் அக்குளில் அண்டக் கொடுத்திருந்த கட்டைக் கால்களோடு நின்று கொண்டிருந்தார். கீழே 'சார்வ பௌமர் ஸ்ரீஸ்ரீ பிரம்ம மித்ரர்' எனும் பெயர்! அவரைப் பற்றிய செய்தி பக்கத்திலேயே அச்சாகியிருந்தது.

'சார்வபௌமர் ஸ்ரீஸ்ரீ பிரம்மமித்ரரெனும் இவர், முன்னாளில் ஒரு மகா சைவர். பரமேஸ்வரனையன்றி வேறு தெய்வங்களை மனத்தாலும் நினையாத வீரசைவர். பின்னாளில் சமணராகி அருகப் பெருமானைத் துதித்து 131 நாட்கள் துளிநீரும் அன்ன ஆகாரமும் இன்றி உபவாசமிருந்து, பின் ஜீவன் முக்தி பெற்றார். இவரது வமிசாவளிகள் ஏழுபேர் வரிசையாக வெளிப்படுவார்கள். அவர்களில் ஆகாய ஜோதியின் பேர் கொண்ட ஒருவன் பெரும்புகழ் கொண்ட எழுத்தச்சனாய் மிளிர்வான். இவனாலே, உலகம் ஒளிந்து பட்ட ரகசியங்களை அறியும். அதிலொன்று கடுங்கோன் பாண்டியனின் சொர்ண மீனாட்சி திருமேனி. அறுபது தோலாச் சொர்ணமிது. மதங்கனிச் சித்தரின் ரசவாதச் சித்தால் அவருக்கு உதவாது போனதாம்.

'உதவாது போனது, உதவப் போவதும் இரண்டதன் பின்னே பூஜ்ஜியம் மூன்று வருமதன் வருடத்தில் என்பேன். சமணப்பட்டி இதைச் சார்ந்துரை செய்யும்.'

அந்தப்பக்கத்தைப் படிக்கப் படிக்க பாஸ்கரனுக்குள் பரபரப்பும் படபடப்பும் போட்டியிட்டன.

''என்ன பாஸ்கர்... ரொம்ப எக்ஸைட் ஆகற மாதிரி தெரியுதே?''



''சார்... இந்தப் படத்துல இருக்கிறவர் என் கொள்ளு தாத்தா சார்...''

''நிஜமாவா?''

''ஆமாம்... சார்... இதே மாதிரி ஒரு படம் எங்க தாத்தா வீட்ல இருந்து நான் பார்த்துருக்கேன்.''

''அப்படியா?''

மீனாட்சி சுந்தரம் புத்தகத்தை வாங்கி அந்தப் பக்கத்தைப் படிக்கத் தொடங்கினார். படித்துவிட்டு ''என்ன ஒரு ஆச்சரியம்! இதுல உன் பேர் கூட ரெஃபர் பண்ணியிருக்கேப்பா...''

''என் பேரா?''

''ஆமாம்... ஆகாயஜோதியின் பேர் கொண்ட ஒருவன்னா, அதற்கு என்ன அர்த்தம்? அந்தச் சூரியனோட பேர் கொண்டவன்தானே? சூரியனுக்கு இன்னொரு பேர்தானே பாஸ்கரன்?''

பாஸ்கரன் அதைக் கேட்ட மறுநொடி மேலும் பரவசமானான்.

மகேஸ்வரி சொல்லச் சொல்ல, தலையிலடித்துக் கொண்டார் மயில்சாமி. பூங்காவனமும் சேர்ந்து தலையிலடித்துக் கொண்டாள். அருகில் கையைக் கட்டிக் கொண்டு இறுக்கமாக நின்று கொண்டிருந்தான் சக்திவேல்.

''அத்தே, சத்யமா இதுக்கு கிறுக்கு தான் பிடிச்சிருக்குது. போய் கோடாங்கி கிட்ட மந்திரிச்சாத்தான் சரிப்பட்டு வரும்...''

''எலேய் கேட்டியா... அந்த கரட்டுப் பக்கம் யாராச்சும் போறாங்களாடா? வெட்டிப் பயலுககூட சீட்டாடச் சுடுக் காட்டுக்குத்தாண்டா போறாங்க... அந்தக் கரட்டுப் பக்கம் போறதில்ல. நீ ஏண்டா போனே?''

''ஏங்க... அங்கன சுத்தற ஒத்தக்கண் சாத்தான் இவனை அடிச்சிருக்குமோ?''

சக்திவேலை சரமாரியாகச் சடைத்துப் போட்டுக் கொண்டிருந்தனர் மூவரும்.

சக்திவேல் வெறுத்துப் போனான். மகேஸ்வரியை ஒரு மாதிரி பார்த்தான். வெறுப்போடு அங்கிருந்து வெளியேறினான்.

கிராமத்து வீதி, சாண வாசத்தோடும், வைக்கோல் துண்டுகளோடும் வரவேற்றது. விருமாயிக் கிழவி ஆடுகளை ஓட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். அவளைத் தாண்டிக் கடந்து தோட்டத்துக் கிணற்றுப் பக்கம் போனான். சரியான இளநீர்க் கேணி. இறங்கிக் குளித்தால் மிகவும் புத்துணர்ச்சியாக இருக்கும். கேணியை ஒட்டி அங்கும் இங்குமாக பட்டியக்கற்கள். யாரும் சமணப்பட்டியில் தரைக்கு சிமெண்டை நம்பியதே இல்லை. கல்லாலேயே சுவர்கள். திண்ணைகள். எங்கு பார்த்தாலும் கல்தான்! பக்கத்திலேயே பெருமாள் மலை இருந்ததாலோ என்னவோ?

அந்தக் கற்களிலும் கூட கண்டபடி எழுத்துக்கள். பெரும்பாலும் அதில் நாகர் படங்கள். அதிலும் படம் எடுத்த நாகத்தின் நிழலிலும், தவம் செய்யும் முனிவர்களின் உருவங்கள்...!

அந்தக் கல்பாம்புகளையும், உருவங்களையும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன மக்கள், இன்று அதில் ஆடு மாடுகளையே கட்டிப் போட்டிருக்கிறார்கள்.

அத்தனை மலிந்து விட்டது. அப்படி ஒரு கல்தூண் ஒன்று கிணற்று மதிலை ஒட்டிக் கிடந்தது. போய் அதன் மேல் உட்கார்ந்து கொண்டு கிணற்றுக்குள் கல் எறிந்து நீர்ப்பரப்பில் வட்டங்களை உருவாக்கத் தொடங்கினான். அப்படியே மனதுக்குள் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

'ஒருவேளை நம் காதில் விழுந்த குரல் என்பது பிரமையோ?'

''இல்லை சக்திவேல்...'' என்றொரு குரல் பக்கவாட்டில் இருந்து உடனேயே கேட்டது!



# 6

குரல் கேட்ட அடுத்த நொடி சக்திவேல் மிரண்டு போனான். 'யார் பேசியது?' என்கிறாற்போல் சுற்றிச்சுற்றிப் பார்த்தான்.

''யாரு...? யார் இப்ப என் கூடப் பேசினது?'' ஒரு வித நடுக்கத்துடன் திருப்பிக் கேட்டான். ஆனால் பதிலில்லை. ஒருவேளை மனப்பிரமையோ? திரும்பவும் அந்தக் கேள்வியில் விழுந்தான். தடுமாறத் தொடங்கினான்.

'தனக்கு ஏதாவது ஆகிவிட்டதோ?' கேள்வியும் குழப்பமும் கொத்திப் பிடுங்கத் தொடங்கியது. அங்கே தொடர்ந்து அமர்ந்திருக்கவே பயமாகிப் போனது.

திரும்பி வீட்டுக்குப் போகலாமென்றால், வீட்டில் தனக்குப் பிரமை பிடித்து விட்டதாகக் கருதிப் பேசிய பேச்சுகள் அந்த எண்ணத்திற்கும் தடை போட்டது.

அந்தக் கிராமத்திலேயே ஹைஸ்கூல் வரை படித்த ஒரே இளைஞன் அவன்தான். அதன் பின் விவாசயத் தொடர்புகள். அதன் நெருக்கடிகள் அவனை மேலே படிக்க விடவில்லை.

'ஆமா, படிச்சுக் கிழிக்கப் போறியாக்கும்...' என்று அவன் அப்பா மயில்சாமியும் ''போய் வயல் காட்டைப் பார்த்துக் கொள்.'' என்று கூறிவிட்டார். எனவே, வேறு மாதிரி போக்கிடமும் இல்லாமல் போய்விட்டது.

இருந்தாலும், அவனது படிக்கும் ஆசைக்கு அந்த ஊரில் அதிசயமாக இருந்துவிட்ட ஒரு சின்னப் பஞ்சாயத்து நூலகம் அவ்வப்போது ஆறுதலளித்து வந்தது.

அதில் பாஸ்கரனின் நிறைய நாவல்கள் இருந்தன. அவற்றைப் படிக்கத் தொடங்கினால் பொழுது போவதே தெரியாது... வாழ்க்கையில் நிலவும் புதிர்களை விஷயமாக எடுத்துக் கொண்டு, பாஸ்கரன் அவற்றை உரித்துப் பார்க்கும் அழகும் ஒரு தனித்தன்மையோடு இருந்ததால், பாஸ்கரன் அவனுக்கு மிகப் பிடித்தமான ஒரு எழுத்தாளனாக

ஆகிவிட்டான். அவ்வப்போது பொழுது போவேனா என்று அடம் பிடிக்கும்போது பாஸ்கரனின் புத்தகங்கள்தான் அவனுக்குத் துணையாக இருந்தன.

இப்பொழுதும், நூலகத்துக்குப் போய் ஏதாவது ஒரு புத்தகம் எடுத்துக் கொஞ்சம் இந்தக் குழப்பங்களை மறப்போம் என்று கிளம்பியவனுக்கு எதிரில் மகேஸ்வரி வந்து கொண்டிருந்தாள்.

ஒருமாதிரி நமுட்டுச் சிரிப்பு சிரித்தபடி வந்த அவளைப் பார்க்கவும் எரிச்சலாகக்கூட இருந்தது.

''இங்க என்ன பண்றே சக்தி?''என்ற கேள்வியோடு வந்த அவள், அவன் அமர்ந்திருந்த அந்தக் கல்தூண் மேலேயே ஏறி நின்றாள்!

எதுவும் பேசாமல், அவளையும் அந்தக் கல்தூணையுமே மாறி மாறிப் பார்த்தான்.

''உன்னத்தான்... ஆமா உனக்கு என்ன ஆச்சு? ஏன் கிறுக்குப் பிடிச்ச மாதிரி பேசறே?'' என்று பேச்சைத் தொடர்ந்தாள் அவள்.

''ஆமா எனக்குக் கிறுக்குத்தான் பிடிச்சிருக்கு. அதான் போய் நல்லாப் போட்டு விட்டுட்டேல்ல.''

அவனிடம் பளிச்சென்று கோபம் வெளிப்பட்டது.

''போட்டுவிட்டேனா... அடப்பாவி மனுஷா! நான் கவலைப்பட்டுக்கிட்டு இருக்கேன். என் கேள்விக்குப் பதில் சொல்லாம, என்னமோ நான் தப்பு பண்ற மாதிரி பேசறியே?''

''வேண்டாம் மகேஸ்... நீ இடத்தைக் காலி பண்ணு. நான் ஏற்கனவே ரொம்பக் குழம்பிப் போய் இருக்கேன். நீ எதையாச்சும் கேட்டு என்னை எரிச்சல் படுத்தாதே. போ... போயிடு முதல்ல.'' - சொல்லும் போதே அவன் கைகள் நடுங்கின; நாக்கு குழறியது. அவன் தடுமாற்றத்தில் இருப்பது துல்லியமாகியது.

''சக்தி...'' அவள் நயந்த குரலோடு அவனை நெருங்கித் தொட்டாள்.



''விடு புள்ள... நான் கிறுக்கன். எனக்குக் கிறுக்குத்தான் பிடிச்சிருக்கு. போ... போயிடு...'' அவன் உதறினான்.

''என்ன சக்தி... நீ இப்படிப் பேசறதக் கேக்கவா நான் லீவுக்கு உங்க வீட்டுக்கு வந்திருக்கேன்?''- அவளிடம் வருத்தம் ஆத்மார்த்தமாக வெளிப்பட்டது. அது அவனைச் சற்று அமைதிப்படுத்தியது. அதே சமயம் யாரோ இரண்டு பேர் ஒரு மோட்டார் பைக்கில் அவர்கள் இருக்கும் கிணற்றையும், தோட்டத்தையும் ஒட்டிய சாலைமேல் வந்து நின்றிருந்தனர்.

கவனம் அவர்கள் பக்கம் திரும்பியது.

அவர்களும் சக்திவேலையும் மகேஸ்வரியையும் பார்த்துவிட்டு அவர்களை நோக்கி வர ஆரம்பித்தனர். இரண்டு பேரிடமுமே நாகரிகமான ஒரு தோற்றம். ஒருவன் பெண் பிள்ளைகள்போல் சடை வளர்த்து அதைச் சேர்த்துக் கட்டி பேண்ட் போட்டிருந்தான். இன்னொருவன் தோளில் காமிரா ஒன்று தொங்கியபடி இருந்தது.

''இங்க பெருமாள்மலைங்கறது இதானே?'' காமிராக் காரன் சக்திவேலைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமா... எதுக்குக் கேக்கறீங்க?''

''ஒண்ணுமில்ல. மேல நிறைய குகைங்க, சிற்பங்கள்லாம் இருக்காம்ல? அதப் படம் எடுக்கணும். ஆமா மேலே ஏறிப் போகப் படிவழி இருக்குதா?''

''அப்படி எல்லாம் எதுவுமில்ல... குறுக்க நெடுக்க பாறைங்களுக்குள்ள பூந்துதான் போகணும். ஆமா எதுக்குப் படம் எடுக்கறீங்க?''

''சும்மாதான்... ஒரு பத்திரிகைல தீபாவளி மலர்ல போடறதுக்கு...'' சொல்லிக்கொண்டே அவர்கள் அப்படியே திரும்பி அந்தக் கரட்டு மலையைப் பார்த்தனர். பின்னர் விறுவிறுவென்று மேலும் பேசாமல் நடக்கத் தொடங்கினர்.

சக்திவேலுக்கு அவர்கள் செயல் நிரடியது. அவனும் அவர்களைத் தொடர விரும்பியதுபோலக் காலெடுத்தான். மகேஸ்வரி தடுத்தாள்.

''நில்லு... எங்க போறே?''

''அவங்க என்ன பண்றாங்கன்னு பாக்கப் போறேன்.''

''பாத்து என்னத்தப் பண்ணப் போறே...? திரும்பவும் அந்தச் சிலைகிட்டப் போய் பேசுவே. அது பேசிச்சும்பே. அவங்களும் மண்டையப் பிச்சுக்குவாங்க. அவங்க என்னவோ பண்ணிக்கட்டும். நீ பேசாம என்கூட வீட்டுக்கு வா.''

மகேஸ்வரி அவனைத் தடுத்தபடி பேசும் அதே சமயம், அவர்கள் அந்தக் கரட்டில் கால்பங்கு தூரம் ஏறியிருந்தார்கள். நடையில் துள்ளலும் வேகமும் இருந்தன.

''பாத்தது போதும் வா...'' அவள் அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள்!

கூவியலாகக் கிடந்த புத்தகக் கூட்டத்துக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டிருந்தான் பாஸ்கரன்.

கைவிரல்கள் 'தெட்சிண ரகசியம்' எனும் அந்தப் பழைய புத்தகத்தையே புரட்டிக் கொண்டிருந்தன.

பக்கத்துக்குப் பக்கம் ரகசிய செய்திகள்தான்...

'சதுர கண்ணாடிகள் சர்வத்தையும் காட்டும் சக்தி பெறும். வானவெளியில் திரியும் இரும்புப் பறவைகள் சதுரக் கண்ணாடிகளுக்கு அந்தச் சக்தியைத் தரும்.' என்று கண்ணில் பட்ட வரிகள் அவனுக்கு டெலிவிஷனை ஞாபகப் படுத்திற்று. 'எவ்வளவு பெரிய உண்மை இது... போன நூற்றாண்டிலேயே எப்படி இந்த ராகுலரால் இதை எல்லாம் யூகித்துச் சொல்ல முடிந்தது?'

ஆச்சரியம் வந்து அவனுக்குள் ஒரு குட்டிக்கரணமே அடித்தது.

'ஒரு ஊரைப் போன்ற மிதவையொன்று, பனிக்கடல் நீருக்குள்ளே மூழ்கிப் போகும்' என்கிற வரிகள் டைட்டானிக்கை ஞாபகப்படுத்தின.



'தெட்சிண முடிவதில் லட்சிய சமணன் உரு, பெருஞ்சிலையாக எழும்பி நிற்கும்' என்னும் வரிகள் குமரிக்கடலில் உருவாகியுள்ள வள்ளுவர்சிலைதான் அது என்றது. கூடவே வள்ளுவர் ஒரு சமணரா என்கிற கேள்விப் பொறியும் சேர்ந்து கிளம்பியது.

இதில் உள்ள வரிகள் பொய்யாகாமல் நிகழுகின்றதாகவே இருப்பதை எண்ணிப் பார்த்தவன், ஒரு சிகரெட்டை எடுத்துச் செருகிக் கொண்டான்.

தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினான்.

திரும்பவும் பிரம்மமித்திரர் பற்றிய தகவலுக்கு வந்தான். ஆச்சரியத்தோடு நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். நடுவில் காதில் கொலுசுச் சப்தம் கேட்டது. நிமிர்ந்தான். எதிரில் துர்கா! அவள் கைகளில் பாயச டம்ளர்!

''என்ன?''

''பாயசம்.''

''வீட்ல விசேஷம்... அம்மா கொடுத்தாங்களாக்கும்?''

''ஆமா...''

''எத்தன தடவை சொல்லியிருக்கேன், இப்படி என்னை தர்மசங்கடப்படுத்தாதீங்கன்னு...''

''இதுல என்ன தர்மசங்கடம். எங்களுக்கு இதுல எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?''

''இல்ல... இதுல எனக்கு சந்தோஷமே இல்லை. எனக்கு ஏதாவது தேவைன்னா, நான் கேட்டு வாங்கிக்கிறேன். அடுத்து இப்ப நான் பாயசம் சாப்பிடற மூட்ல இல்லை. நீ கிளம்பு துர்கா...''

''சாரி... இந்த ஒரு தடவை மட்டும் சாப்பிட்டுங்க.''- அவள் குனிந்து பாயச டம்ளரைக் கீழே வைத்தாள்.

''என்ன துர்கா புரிஞ்சுக்காம...'' சற்று அதிர்ந்த குரலோடு அவன் அந்தப் புத்தகத்தை கீழே வைத்து விட்டு எழுந்திருந்தான். எழுந்த வேகத்தில் கால்பட்டு பருத்த

புத்தகம் ஒன்று பாயச டம்ளரைத் தட்டிவிட்டது. ஒழுகி ஓடிய பாயசம் தெட்சிண ரகசியப் புத்தகத்திலும் பரவியது.

''மைகாட்...!'' குனிந்து அந்தப் புத்தகத்தை எடுத்து உதறினான் பாஸ்கரன். அரதப் பழசான அதன் தாள்கள் தனித்தனியே பாயசக் குழைவோடு உதிர்ந்து கீழே விழுந்தன!

''ஸ்டுப்பிட்... இது எவ்வளவு வேல்யபுள் புத்தகம் தெரியுமா? உன்னால் பார் இப்படியாயிடிச்சு!'' நரம்பு புடைக்கக் கத்தினான். அவள் மருண்டு போனாள். அன்பைக் காட்ட வந்த இடத்தில் அவன் ஆத்திரச் சூடு தாக்கியதில் கண்களிலும் கண்ணீர்ச் சேர்க்கை.

''இடியட்... இடியட்...'' அவன் குனிந்து அந்தத் தாள்களை எடுத்து துடைத்துத் தேற்ற முடியுமா என்று பார்த்தான். அது 'நான் அவ்வளவுதான்' என்பது போல் இத்துக் கிழிந்து கூழாகத் தொடங்கியது.

ஒரே ஒரு பக்கம் மட்டும் மிஞ்சியது. அதில் எந்தப் பழுதும் இல்லை! அது பிரம்மமித்ரர் பற்றி குறிப்புள்ள பக்கம்.

'சமணப்பட்டி இதை சார்ந்துரை செய்யும்' என்பதோடு முடிந்திருந்தது அந்தப் பக்கம்.

உனக்கு இந்தப் பக்கத்தில் மட்டும்தான் வேலை இருக்கிறது என்று காலம் நினைத்தது போல தோன்றியது.

''கெட் லாஸ்ட்...'' அந்தப் பக்கத்தை மட்டும் நீவியபடி அவளைப் பார்த்துக் கத்தினான். அவள் அழுதுகொண்டே வெளியேற ஆரம்பித்தாள்!

மாலை நேரம்!

மாடு, கன்றுகள் மேய்ச்சலிலிருந்து திரும்பி, பட்டிகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. மாட்டை விடுபவன், சக்திவேல் வீட்டு மாடுகளை உள்ளே செலுத்தியபடியே, எதார்த்தமாக பெருமாள் மலைப்பக்கம் பார்த்தான். ஏகத்துக்கும் காக்கை, கழுகுகள் அங்கே ஏதோ விபரீதம் என்பது போலப் பறந்து கொண்டிருந்தன... அதே சமயம் சக்திவேலும் உள்ளிருந்து வெளியே வரவும், ''சக்தி... என்னப்பா இது! கரட்டு மேல இம்புட்டு காக்கா, குருவிங்க?'' - அவன் கை காட்டினான். சக்திவேலுக்குக் கொஞ்சம் சுருக்கென்றது. மலைமேல ஏறிப்போன அந்த இரண்டு பேர் முகமும் உடனேயே ஞாபகத்தில் முண்டியது!



# 7

சக்திவேல் முகம் ஒரு மாதிரி மாறியதையும், அதில் கேள்விகள் புரண்டதையும் கண்ட மாட்டுக்காரன் கச்சிதமாகக் கேட்டான்.

''என்னா சக்தி, ஒரு மாதிரி ஆயிட்டே? மலைல ஏதோ ஒண்ணு செத்துக் கிடக்குதாட்டம் இருக்கு! அதான் இம்புட்டு பட்சிங்க வட்டம் கட்டிப் பறக்குதுங்க பாத்தியா, பொணம் தின்னிக் கழுகுங்களும் வட்டம் கட்டிக்கிட்டிருக்கு...''

மாட்டுக்காரன் சொன்னதும் பகீரென்றது. திரும்பவும் மலைக்கு மேல் ஏறிச்சென்ற அந்த இரண்டு நாகரிகமான இளைஞர்களின் முகங்களும் தான் முண்டியடித்தது.

''சிங்காரம்... வாரியா என்கூட - போய்ப் பாத்துப்போட்டு வரலாம்?'' - ஆவல் தாளாமல் கேட்டான்.

''இருட்டப் போவுது... இப்பப் போய் கூப்பிடுதியே சக்தி. உடு. காலைல பாத்துக்கலாம்.'' என்றான் சிங்காரம் என்னும் மாட்டுக்காரன்.

தனக்கு அங்கெல்லாம் வரத் தைரியமில்லை என்று அவன் சொல்லுகின்ற மாதிரிதான் சக்திவேலுக்குத் தோன்றியது.

''போலே கோட்டி.... உனக்கு அந்தக் காட்டுப்பக்கம் வர அச்சம். அதான் நழுவறே... நான் போய்ப் பாக்கறேன்.''

சக்திவேல் தங்கள் மாட்டை கொட்டடியில் கட்டிவிட்டுக் கிளம்பி விட்டான். சிங்காரத்துக்குக் கொஞ்சம் திகட்டலாகத் தான் இருந்தது.

''பாத்துப் போலே... திகிடுதம்பா ஏதாவது ஆகி வைக்கப் போவுது...''

சக்திவேல் அதை எல்லாம் காதிலேயே வாங்கிக் கொள்ள வில்லை. மேலுக்குச் சட்டை போட்டுக் கொள்ளக்கூடப் பரபரப்பு இடம் தரவில்லை.

பனியன் - வேட்டி என்கிற அந்தக் கோலத்தோடு அப் படியே ஓடினான். வீட்டில் ஒருவரும் இல்லை. மகேஸ்வரி யும், அம்மாவும் பாண்டி கோவிலுக்குப் போயிருந்தார்கள். மயில்சாமியும் டவுன் பக்கம் போயிருந்தார். வசதியாகப் போய்விட்டது. ஊர்க்காரர்களும் அங்கங்கே நின்று கரட்டின் மேல் பறக்கும் பறவைகளைப் பார்த்தபடி இருந்தார்கள்.

தோட்டத்துக் கிணற்றை ஒட்டிய சாலையில் - பைக் நின்று கொண்டிருந்த இடத்தில் - இப்போது அது இல்லை.

அதை உணர்ந்தபடியே சக்திவேல் கரட்டின்மேல் தாவி ஏறினான்.

ஏதோ ஒரு சக்தி 'வா வா' என்று அழைப்பது போல ஒரு உள்ளுணர்வு. வழக்கம் போல, காற்றிடமும் நல்ல வேகம். காதோரமாக 'ஊ ஊ' என்றபடியே அவனைத் தாண்டிப் போனது.

அவன் பிறந்து வளர்ந்தது முதலே பார்த்து வரும் கரட்டு மலைதான். ஆனாலும் சமீபகாலத்தில் அது அவன் வரையில் ஒரு புதிர்க்கோட்டம் ஆகிவிட்டது.

வீட்டிலே ஆடுகளும் வளர்க்கிறார்கள். அதில் ஒன்று அவிழ்த்துக் கொண்டு கரட்டுப் பக்கம் ஓடிவிட்டது. தேடிக் கொண்டு வந்தான். ஊரில் நிலவும் பயத்தையும், எச்சரிக்கை யையும் மீறி, கால்கள் கரட்டை எட்டிவிட்டன. அப்பொழுது தான் குகைகள் அவன் கண்ணில் பட்டன. சமவெளிப்பாறை யும் பீடமும் ஆச்சரியப்படுத்திற்று. ஆடு காணாமல் போன நினைப்பு போய், 'அடடா இங்கே இப்படி எல்லாம் கூட அற்புதங்கள் இருக்கிறதா' என்கிற கோள்வி தோன்றியது.

அதன்பின் யாருக்கும் தெரியாமல் அங்கு வருவதும், பயந்து பயந்து ஒவ்வொரு குகையையும் பார்ப்பதும், பரவசப்படுவதும் வழக்கமாயிற்று.



ஊரில் 'கோனார் தாத்தா' என்று ஒரு கிழடு இருக்கிறது. நூறு வயதைக் கடந்தும் இன்னமும் அதற்குச் சாவு வரவில்லை. அதுதான் வருவோர் போவோரிடமெல்லாம், பெருமாள்மலை பற்றி மிரட்டலாக எதையாவது பேசியபடி இருக்கும். சதா ஒரு மாமரத்தடியில் கயிற்கு கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கும் அதனிடம் போய், மெல்ல பெருமாள்மலை பற்றிப் பேச்சுக் கொடுத்து விஷயங்களைக் கேட்பான் சக்தி.

கிழடு மிரட்டு மிரட்டு என்று மிரட்டி விடும். ''அந்தப்பக்கம் போயிராதே... ஒரு காலத்துல நரபலி கொடுக்கற சாமியாருங்க அங்க ஒளிஞ்சிருந்தாங்க. அப்பால சமண சன்யாசிங்க அங்கனதான் தங்கியிருந்தாங்க. அதுக்கும் அப்பால ஒரு கூட்டம், அவங்கள பத்தி விட்டுட்டு, கன்னிப் பொண்ணுங்களை இழுத்துக்கிட்டுப் போய், பூசை போட்டுப் பலி கொடுத்து கொடுத்து அந்தக் கரட்டு உச்சியையே ரத்தச் சகதியாக்கிட்டாக. செத்துப் போனவக எல்லாம் பேயாச் சுத்திச் சுத்தி வர்ற இடம் அது. இந்தச் சமண பட்டில எத்தினி பொம்பளையாளுகளை - அங்க சுத்திக்கிட்டிருக்கிற மோகினிப் பேயுங்க பிடிச்சிருக்கு தெரியுமா?

அப்படிப் பேய் பிடிச்ச பொட்டச்சிங்க எல்லாம், நேரா ஊருக்குள்ற இருக்கிற கிணத்துல வந்து குதிச்சுத் தற்கொலை யும் பண்ணிக்கிட்டிருக்காங்க. அங்கன போனாலே, போறவங்களுக்குத் தற்கொலை பண்ணிக்கிற நினைப்புத்தான் வரும். என் முறைப் பொண்ணும்கூட அப்படித்தான் செத்தா! அதான் யாரும் போறதில்ல...'' என்று அது தந்த விளக்கத்தைக் கேட்டால் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும். இருந்தும், தனக்கு அப்படி நேராததை நினைக்கும் போது, 'கிழடு சும்மா சரடு விடுகிறதோ? என்ற கேள்வி அவனுக்குள் வரும். மொத்தத்தில் அங்கே விடை தெரியாத ஏதோ ஒன்று இருக்கிறது... என்ன அது?

சக்திவேல் சமீபகாலமாக இந்தக் கேள்வியில் விழுந்தவன் தான். நிறையப் புத்தகம் படிப்பதால் கொஞ்சம் விஞ்ஞானப் புத்தி உண்டு. அதனால் கொஞ்சம் தைரியம் வந்து, அங்கே

போய்ப் போய் நோட்டம் போட்ட போதுதான், ஒரு நாள் சிலை ஒன்று பேசுவது காதில் விழுந்தது.

''பகீர்'' என்றாகிவிட்டது; ஓடியும் வந்துவிட்டான்.

இந்த நிலையில் - குச்சி ஜோசியக்காரி ஒருத்தி ஊருக்குள் வந்து எல்லோருக்கும் ஜோசியம் சொன்னாள். ஒரு ரூபாய்தான் கட்டணம்.

கையை நீட்டிய பலரின் அந்தரங்கத்தை அப்படியே புட்டுப்புட்டு வைத்தாள். பெரிய வீட்டு சங்கரலிங்கம், சின்னவீடு வைத்திருப்பதை எல்லாம் போட்டு உடைக்கவும், அவள் மேல் ஒரு நம்பிக்கை வந்து சக்திவேலும் அவளிடம் கையை நீட்டினான்.

அவன் கையைப் பார்த்தவள், ''ராசா நீ லேசுப்பட்ட ஆள் இல்ல. புதையலே எடுக்கப்போற.... உலகமே உன்னைப் பத்திப் பேசப்போகுது.'' என்று அவள், அவனை ஐஸ்பெட்டியிலேயே தூக்கிப் போட்டுவிட்டாள்.

'ஒரு ரூவா காசுக்காண்டி பொய் புழுகறதப்பாரு' என்று சகாக்கள் கூட அவளைக் கிண்டல் செய்தார்கள்.

''நான் சொல்றது நடந்துட்டா, இந்த ஆத்தாளுக்கு ஒரு பட்டுப் புடவையும், நூத்தி ஒரு ரூவா காசும் மட்டும் தா. நடக்காட்டி நான் ஜோசியம் பாக்கறதையே உட்டுப் புடுறேன்.''- என்று அவளும் பதில் சபதம் செய்தாள்.

அவள் தீவிரமாகச் சொன்ன விதத்தில் ஒரு சத்தியம் இருப்பதுபோல் நம்பிய சக்திவேல், ஒன்றை மட்டும் உறுதியாக நம்பினான். கோனார் தாத்தா சொல்வதுபோல், தனக்கு நிச்சயமாக தப்பாக எதுவும் நடந்து விடப்போவ தில்லை. ஜோசியக்காரி சொன்னதுபோல, தான் புதையல் எடுக்கப் போவது சத்தியம். அப்படி ஒரு புதையல்தான் அந்தக் கரட்டு உச்சியில் இருக்கிறதோ? தான் எடுக்கப் போவதால்தான் தனக்கு எதுவும் ஆகவில்லையோ?' என்றெல்லாம் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அதன்பின் கரட்டுப்பக்கம் போவதில் பயம் அற்றுப் போய்விட்டது. தான் ஒரு ஹீரோ என்கிற நினைப்பு



மனதுக்குள் உருவாகத் தொடங்கிவிட்டது. அதுதான் இப்பொழுதும் துணிச்சலாகக் கரட்டின்மேல் அவனை ஏறவிட்டுக் கொண்டிருந்தது!

மெல்ல மெல்லப் பாறைகள் மேல் தாவித் தாவி ஏறியவன், சமவெளிப் பாகத்தை எட்டும்போது, பறந்து கொண்டிருந்த பறவைகளில் கழுகுகள் மட்டும் அவன் வருவதைப் பார்த்து, அங்கும் இங்குமாகக் கலைந்து பறந்து, அவனுக்குள் லேசாகக் கிலியை மூட்டின.

நிறைய அண்டங்காக்கைகள் இருப்பதும், அது விரைந்து கரைவதில் கேட்டது.

''அப்பாடா...!''

உச்சியை ஒரு வழியாக எட்டியவன் இடுப்பில் கை வைத்தபடி நாலா புறமும் பார்த்தான்.

அப்படிப் பார்த்ததில் ஒரு பாறை மேல் மட்டும் ஏகமாகக் காக்கைகளும், கழுகுகளும் முண்டிக்கொண்டு உட்கார்ந் திருந்தன.

கிட்டே நெருங்கவே பயமாக இருந்தது.

திரும்பிக் கீழே பார்த்தான்.

சமணப்பட்டி, இருக்கும் நான்கைந்து தெருக்களோடும் அங்கும் இங்குமான வைக்கோற் படப்புகளோடும் தெரிய, அனேகம் பேர் ஊரிலிருந்தபடி கரட்டையும் தன்னையுமே பார்ப்பதைக் கண்டான்.

அச்சம் கொஞ்சம் கூடிப்போனது. அவர்களில் யாரோ ஒருவர் ''எலேய் சக்திவேலு... அங்கன என்னடா பண்றே? வந்துடு...'' என்று உரக்கக் கத்துவது காற்றால் மிகவும் வடிகட்டப்பட்டு, ஒரு கிசுகிசுக்குரல் போலத் தேய்ந்து வந்து அவன் காதில் மோதியது.

சப்தமிட்டவரையும், பட்சிகள் அடைந்து கிடந்த பாறையையும் மாறி மாறிப் பார்த்தான். இப்படிப் பார்க்கும் சக்திவேலை மேற்கில் ஒரு ராட்சஸ ஆரஞ்சுப் பழமாட்டம் ரம்மியமாகத் தெரிந்த சூரிய மகாப்பிரபுவும் பார்த்தபடி தகித்துக் கொண்டிருந்தான்.

சக்திவேல் சூரியனைப் பார்த்து அந்தப் பரபரப்பிலும் ரசித்தான். என்ன ஒரு அற்புதமான காட்சி...? என்னையும் பாரேன் என்கிறாற்போல் ஒரு பாஸஞ்சர் ரயில் செவ்வக இரும்புப் பெட்டிகளை இழுத்துக் கொண்டு, சமணப் பட்டிக்குத் தெற்கில் ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

ஒருபக்கம் இப்படி ரசனைக்கு விருந்து போடும் காட்சிகள்... இன்னொரு பக்கத்தில் பறவைகளின் கூச்சலும் சடசடப்பும்!

இத்தனை தூரம் வந்துட்டு அந்தப் பாறைப்பக்கம் போய்ப் பார்க்காமல் போவது அவனுள் நெருடியது.

சட்டென்று துணிச்சல் வந்து அவனை இயக்கத் தொடங்கியது. கைகள் குனிந்து கரட்டில் கிடந்த கற்களை எடுத்தன. பாறைகளை நோக்கி அந்தக் கற்களை வீசி எறிந்தவன், 'ச்சூ.. ச்சூ...' என்றபடியே அந்தப் பாறையைச் சமீபித்தான். பறவைகள் விலகிப் பறந்து வேறு வேறு பாறைகளில் போய் அமர்ந்து கொண்டன. பாறை மேலிருந்தபடி கீழே பார்த்தான். அங்கே ஒரு பெரிய பள்ளம் அதில் சக்திவேல் பகலில் பார்த்த அந்த போனிடைல் குடுமிக்காரன் ரத்த வெள்ளத்தில் சவமாகக் கிடந்தான்!

ஹக்!

சக்திவேலுவுக்குள் இதயம் ஒரு குட்டிக்கரணமே அடித்து நின்றது.

சமணப்பட்டி ஸ்டேஷனில் வேண்டா வெறுப்போடு நின்றது அந்த பாசஞ்சர் ரயில். டிரைவர் ஸ்டீமரைத் திறந்ததில் பக்கவாட்டில் நீராவிப் புகை கடூரமாகச் சப்தமிட்டபடி பிரிந்து ஓடியது.

எஞ்ஜினையே புகைக் கொட்டாரம் ஒரு துணியால் மூடியதுபோல் சுற்றி வளைத்துக் கவ்வியது.

அதன் அழுக்குப் பெட்டிகளில் இருந்து பல பேர் உதிர்ந்தார்கள்.

ஒரு ஹோல்டால் பேக்கோடு பாஸ்கரனும்!



யாரும் முறையாக ஸ்டேஷன் கட்டிடத்தின் வாயில் வழியாக வெளியேறவில்லை. பக்கவாட்டில் ராட்சஸமாக வளர்ந்து கிடக்கும் கருவேல மரங்களின் இடையில் பாம்பாட்டம் நெளிந்தபடி கிடக்கும் ஒற்றையடிப் பாதைகளில் புகுந்து வெளியேறிப் போனார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டரும் கண்டு கொண்டதுபோலத் தெரியவில்லை.

பாஸ்கரன் வந்து டிக்கட்டை நீட்டவும் ஆச்சரியம் காட்டினார்.

அப்படியே நெற்றியில் விழுந்த கோடுகளோடு, அவனை எங்கேயோ பார்த்தது போன்ற பாவனையை முகத்தில் தேக்கி னார். அவனும் அதைப் புரிந்து கொண்டது போலக் கேட்டான்.

''என்ன சார்... என்னை எங்கேயோ பார்த்தது போல இருக்கா...?

''ஆமாம் தம்பி... நீங்க?''

''என் பேர் பாஸ்கரன். நான் ஒரு ரைட்டர்.''

''ஓ... எழுத்தாளர் பாஸ்கரன்!''

''ஆமா நானேதான்!''

''வாங்க சார்... வாங்க... எங்க இந்த அழுக்கு ஊருக்கு? சொந்தக்காரங்க யாராவது இங்கே இருக்காங்களா?''

அவரிடம் கணிசமான பரவசம்.

''அப்படி எல்லாம் யாரும் இல்ல சார். ஒரு ரிசர்ச் மோட்டிவோட வந்திருக்கேன். சக்திவேல்னு என்னோட வாசகர் ஒருத்தர் வேற கூப்பிட்டிருந்தார். அதான் வந்துருக்கேன்...''

''சக்திவேலா... யாரு....?''

ஸ்டேஷன் மாஸ்டர் கேள்வியோடு யோசித்தார். அவருக்கு சற்று கோணல் மூக்கு. அவர் யோசிக்கும்போது மேலும் கோணலாகி, அவரது முகத்தைச் சற்று விகாரமாகக் காட்டிற்று.

''ஆமா... இங்க தங்கறதுக்கு டிராவலர்ஸ் பங்களா, இல்லன்னா ஏதாவது லாட்ஜ்...?''

பாஸ்கரன் ஹோல்டால் பேக்கைக் கீழே இறக்கி வைத்தபடி கேட்டான். அவர் அதற்குப் பதில் சொல்லாமல்,

''இந்த ஊர்ல எனக்குத் தெரிஞ்சு ஒரு சக்திவேல்தான் இருக்கான். அனேகமா மயில்சாமி மகனாத்தான் இருக்கணும்.'' என்றார்.

''அவருக்கும் நான் வந்துருக்கறது தெரியாது. எங்கயாவது தங்கிட்டு, அப்புறமாத்தான் அவரைப் போய் பார்க்கணும்.''

''அதுசரி... எந்த கிராமத்துல தம்பி லாட்ஜெல்லாம் இருக்கு. அதுவும் இந்தச் சமணப்பட்டி ஒரு தண்ணிக்குச் செத்த ஊரு.'' என்றவர், ஓடிப் போய் விசில் கொடுத்து பாசஞ்சரை அனுப்பிவிட்டு வந்தார். பாஸ்கரன் பவ்யமாகக் கேட்டான்.

''இங்க டிராவலர்ஸ் பங்களா இருக்குன்னாங்களே?''

''அது இருக்கு... ஆனா அங்க இப்ப ஒரு பய இருக்கமாட்டான். பக்கத்து ஊர் டென்ட்டு கொட்டாயுல ரஜினியோட பாயும்புலி படம் போட்டுருக்காங்கல்ல... வாட்ச்மேன் படம் பார்க்கப் போயிருப்பான்.''

பாஸ்கரன் அடுத்த நொடி, சற்று அவசரப்பட்டு வந்து மாட்டிக் கொண்டது போலக் கைகளைப் பரபரவென்று தேய்த்துக் கொண்டான்.

''கவலைப்படாதீங்க. இங்க ஸ்டேஷன்ல ஒரு ரெஸ்ட் ரூம் இருக்கு. அங்க நீங்க தங்கிக்கலாம். ஒரு காலத்துல இந்த சமணப்பட்டிக்கு வெள்ளக்காரங்க நிறையப்பேர் வருவாங்க. கொஞ்சத் தொலைவுல ஒரு மிலிட்டரி கேம்ப் இருந்துச்சு. வெள்ளக்காரன் காலத்து கேம்ப். சுத்துபட்டே அங்கே வேல பாத்துச்சு. பாசஞ்சர்லயும் உட்கார இடமிருக்காது. இப்ப அங்க குட்டிச் சுவருங்கதான் இருக்குது. பேருக்கு ஒரு ரயிலும் குட்ஸ் வண்டியும் வந்து போய்க்கிட்டிருக்கு. எனக்கும் ட்ரான்ஸ்பரும் இல்ல, ஒரு எழவுமில்லை.''



அழகாக சரித்திரச் சுருக்கத்தோடு அலுத்துக் கொண்டார். ஸ்டேஷன் மாஸ்டர். அப்படியே சிகப்புப் பச்சைக் கொடிகளை சுருட்டி அக்குளில் வைத்துக் கொண்டபடியே தன் அறை நோக்கி நடந்தார்.

பாஸ்கரன் அவரைப் பின் தொடர்ந்தான்.

அறையில் ஒரே ஒரு ட்யூப் லைட். அதன் குழல் மேல் ஈசல் பூச்சிகளின் படபடப்பு. சுவர்களில் ரயில்வேயின் விளம்பர போஸ்டர்கள். மேஜைமேல் அந்த நாளைய கறுப்பு நிற கோணல் தொலைபேசி. சாணித்தாள் லெட்ஜர்கள், அந்த மான் தேக்கு மேஜை. வாத்தியார் நாற்காலி.

பாஸ்கரன் அந்த மாறாத பழமையை ரசித்தான். போஸ்டர்களைப் படித்தான்.

அதற்குள் ரெஸ்ட் ரூம் சாவியைத் தேடிப் பிடித்த ஸ்டேஷன் மாஸ்டர் ''வாங்க சார் போகலாம்.'' என்றபடி நடக்க ஆரம்பித்தார்.

ரெஸ்ட் ரூமில் கப்பு வாடை வீசியது. ட்யூப் லைட் எரிய மறுத்து, சிமிட்டு சிமிட்டு என்று சிமிட்டியது.

''கதவைத் திறந்தே ஏகப்பட்ட நாளாச்சா... அதான் இந்தப் பாடு படுது...' என்ற ஸ்டேஷன் மாஸ்டர், பளீரென்று லைட் எரியத் தொடங்கியவுடன்தான் நிம்மதியானார். ஒரு இரும்புக் கட்டில், எந்தவிதப் படுக்கையும் இன்றிப் பச்சை நிறத்தோடு கிடக்க, போய் ஜன்னல்களைத் திறந்துவிட்டார்.

திறந்த நொடிப்பொழுதில், வெளியே நேராகக் கருவேல மரக் கூட்டம் அடைப்பின்றி தெரிந்தது. பெருமாள்மலை கரடு.

பறவைக் கூட்டமும் பெருகியிருந்தது.

''என்ன இது... கரட்டுமேல இத்தன காக்கா கழுகுங்க. ஏதாவது விபரீதமா?''

கேட்டபடியே பாஸ்கரன் பக்கம் திரும்பினார். அதே சமயம் ஒரு காகித பந்து ஒன்று, பாஸ்கரன் மேல் எங்கிருந்தோ வந்து விழுந்தது!

# 8

தோள்மேல் விழுந்து அவனது கவனத்தைத் திருப்பியது அந்தக் காகிதப்பந்து. ஆச்சரியத்தோடு பார்த்தபடியே கையிலெடுத்தான், பாஸ்கரன்!

பார்வை வெளியேயும் போயிற்று. ஆனால் யாரும் கண்ணில் படவில்லை.

ஸ்டேஷன் மாஸ்டர் இதைக் கவனித்தார்.

''என்ன சார் கைல ஏதோ காகித மாட்டம் இருக்கே?''

அவர் கேட்கும்போதே பாஸ்கரன் அதை விரித்தான். அதில் 'Welcome to Mr. Baskaran' என்கிற ஆங்கில எழுத்துக்கள்.

அடுத்த நொடி பாஸ்கரனின் நெற்றியில் ஒரு ஆச்சரிய வெட்டு. ஸ்டேஷன் மாஸ்டரும் பார்த்தார்.

''ஆச்சரியமாயிருக்கே... யாரா இருக்கும்?'' என்றபடி வெளியே போய்ப் பார்த்தார்.

ஒரு வால் இல்லாத நாய் மட்டும் பிளாட்ஃபாரத்தில் படுத்திருந்தது. மெல்லிய மாலை வெளிச்சமும் கரைந்து, இருள்சூழத் தொடங்கியிருந்தது.

திரும்ப அவர் உள்ளே வந்தார்.

''நீங்க வந்திருக்கற நேரம் உங்க கதைல வர்ற மாதிரி மர்மமா - நிறைய விஷயங்கள் நடக்க ஆரம்பிச்சிடிச்சு...'' என்றபடியே சிரித்தார்.

''மர்மமாவா...?''

''ஆமா... பாருங்களேன்! நீங்க வந்திருக்கறது தெரிஞ்சு ஒருத்தர் உங்க கதைல வர்ற மாதிரியே காகிதப்பந்தை எறிஞ்சு வரவேற்பு தர்றார். யாருன்னு பாக்கலாம்னா பிளாட்ஃபாரத்துல நாய்தான் படுத்திருக்குது!''



''எனக்கே ஆச்சரியமாத்தான் இருக்கு. ஆமா வெளியே அந்த மலையைப் பார்த்து ஏதோ விபரீதம்னு சொன்னீங்களே... என்ன அது?''

''அது ஒரு விசித்திரமான மலை மிஸ்டர் பாஸ்கரன். மலைகூடக் கிடையாது கரடுதான். அந்த மலைக்கு, ஐ மீன் அந்தக் கரட்டுக்கு யாரும் போகமாட்டாங்க. ஒரு ஆடு மாடு கூட அங்கே மேயப் போகாதுன்னா பாத்துக்கங்களேன்.''

''ஏன்?''

''அங்க போனா, போறவங்களுக்குத் தற்கொலை செய்துக்க தோணுமாம். அப்படி நிறையப்பேர் தற்கொலை பண்ணிக்கிட்டுமிருக்காங்களாம்.''

''இது என்ன பைத்தியக்காரத்தனமான கற்பனை.''

''நீங்க கற்பனைங்கறீங்க. ஆனா ஊர் அதை ஒரு பெரிய உண்மையால்ல நினைக்குது...''

''அப்படி அந்த மலைமேல என்ன இருக்குது?''

''தெரியல சார். நான் போனதில்ல. நான் ஒரு பிள்ள குட்டிக்காரன். ரிஸ்க் எடுக்க விரும்பல...''

''அப்ப இன்னிக்கு அங்க யாராவது தற்கொலை பண்ணிக்கிட்டிருக்காங்களா என்ன?''

''தெரியல... காக்கா, கழுகு பறக்கறதப் பார்த்தா அப்படித்தான் தோணுது... ஒரு நிமிஷம், அடுத்த ஸ்டேஷனுக்கு 9019 வர்றதை ரிஜிஸ்டர் பண்ணிட்டு வந்துட்றேன்...''

அவர் தொழில் புத்தியோடு திரும்ப ஓடினார். அவன் தன் ஹோல்டால் பேக்கைத் திறந்தான். மேலாகத் துண்டு ஒன்று இருந்தது. எடுத்து முகம் துடைத்துக் கொண்டான். அப்படியே நிலைக்கண்ணாடியைத் தேடினான்.

ரசமிழந்த ஒரு கண்ணாடி பாத்ரூம் சுவரில், பல்லி ஒன்று படுத்திருக்க அவனைப் பார்த்தது.

அதில் தன்னைத் தானே அழகு பார்த்துக் கொண்டான். கலங்கலாக முகம் தெரிந்தது.

முதலில் அறையைக் கூட்டிச் சுத்தம் செய்ய வேண்டும். அப்புறம்தான் உட்காரக்கூட முடியும்.

வயிறும் சற்று கடாமுடா செய்தது. சூடாக ஒரு காபியோ, டீயோ குடித்தால்தான் சுறுசுறுப்பாக இருக்கும் போலத் தோன்றியது.

வெளியே வந்தான்.

'ரொய்ய்ங்' எனும் சுவர்க்கோழிகளின் கச்சேரி காதைத் துளைத்தது.

ஸ்டேஷன் மாஸ்டரும் போன் செய்து விட்டு வெளியே வந்தார்.

''என்ன சார்... உள்ள இடம் பிடிச்சிருக்கா?'' கேட்டார்.

''ஓ.கே. ஆமா, இங்க ஏதாவது ஹோட்டல்...?''

''காளப்பன் டீக்கடைன்னு ஊருக்குள்ள ஒரு கடை இருக்கு. கருப்பட்டிக் காப்பி, மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், அப்புறம் இட்லி, தோசை அங்க கிடைக்கும். ஆனா ரொம்பச் சுமாராத்தான் இருக்கும்.''

''அடேயப்பா... இதெல்லாம் இப்ப அமிர்தம் சார்... வரீங்களா போய்ச் சாப்ட்டுட்டு அப்படியே அந்த சக்திவேலையும் பார்த்துட்டு வருவோம்.''

''இல்ல சார்... கூட்ஸ் ஒண்ணு பாஸாகப் போகுது. நான் இருந்தாகணும். நீங்க வேணும்னா கதவைப் பூட்டி சாவி எடுத்துக்கிட்டுப் போய்ட்டு வாங்க...''

''ரொம்ப நன்றி சார்... முன்னபின்ன பழக்கம் இல்லேன்னாலும் பெரிய உதவி செய்திருக்கீங்க...''

''நீங்கதான் எனக்கு செய்திருக்கீங்க.''-அவர் புதிர் போட்டார்.

''நானா...?''

''இல்லையா பின்னே... தனியா இந்த ரூம்ல கொட்டச் கொட்ட உக்காந்துகிட்டிருப்பேன். நீங்க வந்திருக்கறதால இன்னிக்கு நல்லா பொழுது போகும்.''



அவன் அதைக்கேட்டுச் சிரித்தான். சிரித்தபடி திரும்ப அறைக்குச் சென்று புறப்படத் தயாரானான்.

காகிதப்பந்து திரும்பவும் கீழே கிடந்தது. பழைய நிலையில் சுருங்கிப் பந்துபோல்...! அதை விரித்துப் பார்த்ததும், அப்படியே மேஜை மேல் வைத்ததும் ஞாபகத்துக்கு வந்தது.

திரும்ப அது சுருங்கிக் கிடக்கிறதே!?

மனதில் கேள்வியோடு அந்தப் பந்தினைத் திரும்ப விரித்தான் பாஸ்கரன்.

'நல்வரவு திரு.பாஸ்கரன் அவர்களே!'-என்று தமிழில் அதில் வாசகங்கள், சுருக்கென்றது! முன்பு பார்த்தபோது ஆங்கிலத்தில் அல்லவா இருந்தது. இப்பொழுது எப்படி?

பாஸ்கரன் மிரளத் தொடங்கினான்.

கீரட்டிலிருந்து தீப்பந்தமும் கையுமாகச் சிலர் இறங்கிவர, அவர்களில் சக்திவேல் பிரதானமாக இருந்தான்.

ஊர்க்காரர்கள் அக்கறையாகத் திரண்டிருந்தார்கள். ஒரு சால்வையைச் சுத்திக்கொண்டு கையில் தடியோடு கோனார் தாத்தாவும் இருந்தார்.

''என்னலே... யாரு? நம்ம ஊர்க்காரனா... இல்ல அசலூரா?'' அவர்தான் கேட்டார்.

''அசலூர்காரன்தான். மதியம் போல மோட்டார் பைக்குல வந்திருக்குறாங்க... நம்ம சத்திவேல் கூடப் பார்த்திருக்கான். ஒருத்தனுக்கு இரண்டு பேர்...''

''அப்படியா... எலேய் சக்தி, யாருடா அது?''

''தெரியாது தாத்தா. பத்திரிக்கைகாரங்கன்னாங்க. போட்டோ புடிக்கணுமின்னாங்க...''

''நீ போகாதீங்கன்னு சொல்லலியா?''

''சொல்லலை தாத்தா...''

''ஏன்லே... சொல்லியிருந்தா இப்படி ஆகியிருக்குமா? ஆமா இரண்டு பேரும் ஒரே இடத்துல கிடக்கறாங்களா?''

''இல்ல தாத்தா... ஒரு ஆளுதான் செத்துக்கெடக்கான். இன்னொருத்தனைக் காணோம். நான் அப்பவே பாத்தேன். அவுக வந்த மோட்டார் பைக் இங்கன இல்ல.''

''அடி ஆத்தி... என்னடா இது வில்லங்கம்?''-கிழவர் ஆதங்கித்தார்.

''சரி சரி, மேல ஏறிப்போய் பொணம்பாத்த ஆளுங்க உப்ப வாங்கிக்கிட்டு நேரா சாத்தன் கோயிலைப் போய்ச் சுத்தி வாங்க. அப்படியே நேரா ஊட்டுக்குப் போயிடப் போறீங்க...''

ஒரு ஊர்ப் பெருசு நடுவில் சாங்கியம் ஒன்றை ஞாபகப்படுத்தியது. அதற்குத் தோதாக மரக்காலில் ஒருத்தி கல் உப்போடு நின்று கொண்டிருந்தாள்.

அதைக் கைகளில் அள்ளி, ஏறிவிட்டு இறங்கிய தடிதடியான மனிதர்களின் கையில் வைத்தாள்.

சக்திவேலும் மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் கொண்டான்.

''புறப்படுவே... எலேய் கொண்டையா. நீ இங்கனயே கட்டிலு போட்டு உக்காரு. விடிஞ்சு போலீசுக்குச் சொல்லுவோம். ஊடால யாராச்சும் அந்தப் பக்கம் போயிடப் போறாங்க. பாத்துக்கடா...''

இன்னொரு பெருசு அதட்டல் போட்டது.

மலை ஏறி இறங்கியவர்கள் கையில் உப்புடன் அங்கிருந்து சாத்தன் கோயில் நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

ஊரின் ஈசான்யத்தில் நொணா மரம் ஒன்றின் கீழ் இருக்கிறது சாத்தன் கோயில். சின்ன கல் மேடைமேல் சாத்தன் கல்உருவத்தில் சப்பணமிட்டு அமர்ந்து கொண்டிருந்தார். அவருக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு இளம் பெண்கள் சன்யாசி கோலத்தில் அவரைத் திருமணம் செய்து கொள்வதற்காக அமர்ந்து கொண்டிருக்கிறார்களாம். சங்கிணி, மங்கிணி என்பது அவர்கள் திருநாமங்கள்.



சாத்தன் மடிமேல் ஒரு மூங்கில் பிரம்பு. தப்பு செய்பவர்களை மூங்கில் பிரம்பினால்தான் விளாசுவாராம் சாத்தன்சாமி.

ராத்திரி நேரங்களில் அவர் வெளியே உலாத்தக் கிளம்பி விடுவாராம். அதுவும் கையில் பிரம்போடு...

வினைச் சாடல்களுக்கு பதில் சொல்ல வேண்டுமே?

ஊரில் ஒருவன், ஒருவரிடம் வாங்கிய பணத்தை இல்லை என்று சொல்லிவிட்டானாம்... அவர் நேராக ஒரு பிரம்பை வாங்கிக் கொண்டு சாத்தன் கோயிலுக்குத் தான் வந்தார்.

''எஞ்சாமி... நீயே அவனுக்குத் தீர்ப்பெழுது இந்தா பெரம்பு. அவன் பேர்ல தப்பிருந்தா அவன் முதுகுத்தோல் உரியணும். சாத்தா... உன்ன நம்பிட்டேன்... கை உட்றாதே...'' என்று பிரம்பை வைத்த கையோடு அவர் ஒரு தீப்பந்தத்தையும் கொளுத்தி நொணா மரத்தில் சொருகி விட்டுப் போய்விட அன்று இரவு பணத்தை இல்லை என்று சொன்னவன் முதுகுத் தோல் உரிந்துவிட்டதாம். ஒரு மாயப் பிரம்பு சுழன்று சுழன்று அவனை அடித்ததாம். பணத்தோடு ஓடிப்போய், வாங்கியவனிடம் கொடுத்த பிறகுதான் அதன் அடி ஓய்ந்ததாம்.

இதை எத்தனை பேர் நேரில் பார்த்தார்களோ தெரியாது. ஆனால் சாத்தன் என்றால் இந்தப் பிரம்புச் சம்பவம்தான் ஞாபகத்துக்கு வரும்.

ஒருசமயம் ஊர்ப் பெருசு ஒன்று அர்த்தராத்திரிக்கு வரும் ரயிலில் வந்திறங்கி சாத்தன் கோயில் வழியாக வரும்போது அரண்டுவிட்டது.

சாத்தன் தனது இரண்டு பக்கத்திலுள்ள சங்கிணி - மங்கிணியோடு தாயக்கட்டம் ஆடிக்கொண்டிருந்தாராம்.

ஊருக்குள் ஓடிவந்து சொல்லி எல்லோரும் போய்ப் பார்த்தபோது அங்கே யாருமேயில்லை. ஆனால் தாயக் கட்டமும் சோழிகளும் கிடந்தன!

''எலேய், எவனோ திருட்டுப் பய உக்காந்து விளையாடியிருப்பான். இந்தப் பெருசு ஒண்ணு அவனைப் போய் சாத்தன்னு சொல்லிட்டு கலாட்டா பண்ணிடிச்சு'' - என்று கோனார் தாத்தா கூட சொன்னார்.

ஆனால் ராத்திரி அவர் சொப்பனத்தில் 'நான்தான் தாயமாடினேன் எனக்கொரு மண்டபம் கட்டு...' என்று சாத்தன்சாமி வந்து சொன்னதாம்.

அதன் எதிரொலியாகக் கட்டப்பட்ட தாயமண்டபம் ஒன்று நொணா மரத்தை ஒட்டிக் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

அதில் கல்லாலேயே செதுக்கப்பட்டதாய் தாய மேடைச் சதுரங்கள்!

ஆண்டுக்கொரு முறை அதில் திருமணமாகாத சாத்தன் வேடமிட்ட ஒருவரும், சங்கிணி - மங்கிணிகளோடு தாயமாடுவார்கள். அப்படி ஆடினால் அவர்களுக்கு திருமணம் குதிர்ந்து விடுகிறது என்பதும் நம்பிக்கை.

அப்படி ஒரு கோயிலை நோக்கித்தான் மலை ஏறிய ஊர்க்கார இளைஞர்கள் கையில் உப்போடு ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கும் தற்கொலை எண்ணம் வந்து, அவர்கள் தற்கொலை செய்து கொண்டு விடுவார்கள் என்பதால் இப்படி ஒரு சாங்கியம்.

ஓடுகின்றவர்கள் பின்னால் ஊர்ப் பொடிப்பசங்களும் 'ஏய்' என்று கத்தியபடி ஓடிவர, காளப்பன் டீக்கடை வாசலில் டீயை சூப்பிக்கொண்டு நின்று கொண்டிருந்தான் பாஸ்கரன்.

அவனுக்கு இந்தக் காட்சி மிக ஆச்சரியமாக இருந்தது.

ஓடி வருபவர்களில் சக்திவேல், பாஸ்கரனை அடையாளம் கண்டு கொண்டு ''சார்...'' என்றபடி கிட்டே வந்தான்.

''எலேய்... நிக்காதே முதல்ல ஓடு... சாங்கியத்த முடி-அப்பாலே பேசலாம்...'' ஒரு பெருசு அவனைத் துரத்தி விட்டது.



''நான்தான் சார் சக்திவேல்... உங்க வாசகன். இருங்க வந்துட்றேன்...'' என்றபடி தொடர்ந்து ஓடத் தொடங்கினான்... பாஸ்கரனுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது. ஏதோ விசித்திரமான ஒன்று நடப்பதுபோலப் பட்டது. டீ கிளாஸைக் கொடுத்துவிட்டு, அவனும் அவர்களைத் தொடர தொடங்கினான்.

# 9

டீ தம்ளரைக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு, பாஸ்கரனும் பின்தொடரத் தொடங்கினான்.

சாணி வாசம் கமழும் கிராமத்து வீதிகள்... குறுக்கிலும் நெடுக்கிலும் மறிக்குமாறு வீட்டு வாசலில் கட்டப்பட்டிருக்கும் மாடுகள்.

'ஹே' என்று சக்திவேலும் சகாக்களும் ஓடும்பொழுது அவை மிரண்டு ஒதுங்கும் விதம்... ஊடே தெரு விளக்கின் மட்டமான மஞ்சள் வெளிச்சம். அதன் ஊடுருவலினூடே சடசடத்துப் பறக்கும் ஈசல் பூச்சிகள் என்று சமணப்பட்டி - பின்தொடரும் பாஸ்கரனை ரசனையோடு பாதிக்கத் தொடங்கியது.

சின்ன ஊரான போதிலும் மரக்கிளைகள் போல அங்கங்கே பிரியும் தெருக்கள் - அதில் புகுந்து ஓடும் அவர்கள், பின் தொடரும் பாஸ்கரனை சற்று திகைக்க வைத்து விட்டார்கள்.

பெரிதாக மூச்சு வாங்கத் தொடங்கியது.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவரை ஈர்க்குச்சியைச் சீவினமாதிரி ஒரு நேர்த்தியான உடம்பிருந்தது. எழுத்தாளனாகி தினமும் உட்கார்ந்து எழுதத் தொடங்கியதில் வயிற்றில் தொந்தி விழ ஆரம்பித்துவிட்டது.

அதைக்கூட ஒரு ஜோசியர் பார்த்துவிட்டு, 'சரியான அதிர்ஷ்டத் தொந்தி' என்றார். தலையில் விழும் சொட்டையைக் கூடச் சிலர் அதிர்ஷ்டச் சொட்டை என்றார்கள்.

எல்லாம் மனோரீதியாகத் தடவிக் கொடுக்கும் சமாச் சாரங்கள். அதிர்ஷ்டம் என்று சொல்லிவிட்டால் அந்தக் குறைபாட்டின் மேலும் ஒரு நேசம் வந்துவிடுமே...? தனது சிறிய தொந்தியைப் பற்றி ஜோசியர் சொன்னபோது பாஸ்கரன் சிரித்துக் கொண்டான்.

'சாமி ... நான் ஊருக்கே பூ வைக்கிறவன். எனக்கு நீங்க வைக்கிறீங்களா?' என்று அவர் காதில் விழாதபடி மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்பொழுது அந்தச் சிந்தனைகளுக்குக் காரணமான தொந்தியோடு அந்த ராத்திரியில் ஓடுவது சிரமமாகத்தான் இருந்தது.

அளவாகச் சாப்பிட்டு யோகாசனம் என்னும் அற்புதத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட வேண்டும் என்றெல்லாம் அந்த நொடிகளில் நினைத்துக் கொண்டான்.

சாத்தன் கோவிலில் பூசாரி காத்துக் கொண்டிருந்தார். அவரோடு சேர்ந்து ஊர்ப்பெரிசுகளும இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு பவ்யமாக நின்று கொண்டிருந்தார்கள்.

கோவில் முகப்பில் சக்கைகளை அள்ளிப்போட்டுத் தீ மூட்டி கொண்டிருந்தான் ஒருவன்.

''நல்லா பெரிய சுள்ளிங்களாப் போட்டுப் பத்த வைங்கடா... நமநமன்னு எரிஞ்சா உப்பும் மிளகாயும் நம்மக் கண்ணத்தான் சவட்டும்...'' பெரிசு ஒன்று அதட்டியதோடு, அருகில் கிடந்த வேலிகாத்தான் முள் ஒன்றை எடுத்து எரியும் நெருப்பில் போட்டுச் சிமிட்டி விட்டது...

தீ நாக்கும் நாட்டியப் பெண்ணைப்போல வளைந்து நிமிரவும், சக்திவேலுவும் மற்றவர்களும் அங்கு ஓட்டத்துடன் நுழையவும் சரியாக இருந்தது.

'ஒதுங்குவே... ஒதுங்குவே... பாவிமாருங்க வந்துட்டாங்க.'' என்று ஒருவர் அதட்ட, சுற்றி நிற்பவர்கள் கோவில் முகப்பில் ஒரு ஓரமாக எரியும் நெருப்பிற்கு எதிர்த்திசையில் ஒதுங்கி முட்டிக்கொண்டார்கள். சக்திவேலோடு வந்த அவன் சகாக்கள், அவர்களுக்கு நேர் எதிர்நிலையில் நின்று கொண்டார்கள்.



ஒன்றாக மூச்சிளைத்தார்கள்.

பூசாரி அவர்களை ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். பின்னர் அதுவரை தோள்மேல் போர்த்திக் கொண்டிருந்த கறுப்புத் துண்டை எடுத்து உருமால் போலக் கட்டிக் கொண்டார்.

மற்றபடி பெரிதாக, காவிவேட்டி, துண்டு, கச்சம், மணிக்கட்டு என்கிற தர்பார்கள் அவரிடம் இல்லை. இடுப்புக்குக் கீழே ஒருமுழத் துண்டு மட்டும் போதும் என்கிற மாதிரி கட்டிக் கொண்டிருந்தார்.

தலையில் கறுப்புத் தலைப்பாவும், இடுப்பில் துண்டுமாக அவரைப் பார்ப்பது, எகிப்திய சிலை ஒன்றைப் பார்க்கிற உணர்ச்சியைத்தான் தந்தது.

''எல்லோரும் வந்தாச்சா...?''

''வந்தாச்சு சாத்தரே...'' (அவரை இனி அப்படித்தான் அழைப்பார்கள்.)

''அப்ப, அம்புட்டுப் பேரும் கை உப்பை எரியற நெருப்புல போட்டுவிட்டு வந்து கால்ல விழுவுங்க.'' அவரிட்ட கட்டளை.

அதைத் தொடர்ந்து, ஒவ்வொருவராக உப்பை, எரியும் நெருப்பில் வீசிவிட்டு பூசாரி எதிரில் போய் நின்றனர்.

தகதக நெருப்பொளியில், மேனிமேல் கூடுதலும் குறைதலுமாக ஒரு மினுமினுப்பு, அங்கங்கே அவர்கள்மேல் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. சக்திவேல் தீ ஜ்வாலைக்கு மிகச் சமீபத்தில் வெப்பக் காந்தலோடு நின்று கொண்டிருந்தான்.

''மண்டியிடுவே...'' இது பூசாரி.

மண்டியிட்டான் முதலாமவன். பூசாரி கைப்பிரம்பை ஒருமுறை வீசிப்பார்த்துக் கொண்டார்.

'ஃப்பைங்ங்... ஃப்பைங்ங்...!' சப்தம் காதில் பயமூட்டியது. மார்பு முடிகளெல்லாம்கூட குத்துகின்ற மாதிரி விடைத்து கொண்டன.

''பாதம்பிடி...'' இது அவரது அடுத்தக் கட்டளை. பயத்துடன் முதலாமவன் குனிந்து பூசாரி காலைப் பிடித்தான்.

முதுகு அவர் பார்க்க பளிச்சென்று தெரிந்தது,

''சாத்தா சர்வோத்தமா... சகமாளும் ராசா, சக்திசஞ்சாரா, காக்க வா என் காருண்யப் பிரபுவே...!

சண்டமுண்டக் காட்டேரி... சண்ட பிண்ட சாக்காட்டி, ரத்தக்குடி கோணிவாயி, கொண்டப் பிசாசுக் கூட்டம் தொட்ட எங்க மக்கள் ஏதுமறியா அப்பாவிகளய்யா...

அவுகளை பிடிச்ச அத்தினி சாக்காடும் சாத்தா உன் பிரம்படியாலே ஓடிடணும்...! ஓடிடணும்! ஓடிடணும்...!''

என்று மளமளவென்று சந்தமும் சத்தமுமாகக் குரல் கொடுத்த பூசாரி, கைப்பிரம்பால் முதுகில் மூன்று வீறு வீற, குனிந்தவன் அப்படியே வலி தாளாமல் பக்கவாட்டில் விழுந்தான்!

அடுத்தவன் பூசாரியை மிரட்சியோடு பார்த்தபடியே குனியத் தொடங்கினான்.

சக்திவேல் ஆறாவதாக நின்று கொண்டிருந்தான்

அவன் பார்வை பூசாரியின் பிரம்படிமேல் ஒரு பார்வையும், கூட்டத்தின்மேல் மறுபார்வையுமாக இருந்தது.

'டீக்கடை வாசலில் பார்த்த பாஸ்கரன் என்னவானார்?'

'இப்படி எதிர்பாராத நிலையில் காட்சியளித்து இன்ப அதிர்ச்சியை அளித்து விட்டாரே...?' நெற்றிமேல் கேள்வி நமநமத்தது.

சக்திவேலின் தேடலுக்குப் பாஸ்கரனும் அதிக இடம் தரவில்லை. அங்கு பெருமூச்சோடு பிரசன்னமாகத் தொடங்கினான்.



''சார்...'' என்று எல்லோரும் பார்க்கும்படி கூப்பிட்டு கவனத்தை திருபினான் சக்திவேல். எல்லோரும் பாஸ்கரனைப் பார்த்தார்கள்.

பெர்முடாஸ் ட்ரவுசர், டீ ஷர்ட் என்கிற வித்தியாசத் தோற்றம், பார்க்கும்போதே கண்ணாடியை கழட்டி இரண்டாய் மடித்து பாக்கெட்டில் போட்டுக் கொள்ளும் லாவகம், காலில் தெரிந்த அந்த முரட்டு கான்வாசின் கம்பீரம் - எல்லாமாய் மொத்தக் கூட்டத்திற்கும் அவன் ஒரு அன்னியன் என்று சொல்லாமல் சொல்லும்போது-

''ஏய்ய்... சாமிமுன்ன என்ன சப்தம்... மண்டிப்போட்டுப் பிரசாதத்தை வாங்குவே...'' என்று ஒருவர் சக்திவேலை-அவன் சார்ர் என்றதற்காக அதட்டினார். வாங்கப் போகும் பிரம்படியைப் பிரசாதம் என்றார். அதைக் கேட்ட சக்திவேல் சற்றுத் தடுமாற்றத்துடன் பூசாரியின் பக்கம் திரும்பினான் நான்காமவன் விழுந்த நிலையில் முதுகில் பிரம்பு விளையாடிக் கொண்டிருந்தது!

ஐந்தாமவன் நடுங்கிக் கொண்டிருந்தான்.

பிரம்படி வாங்கியவர்கள் சாத்தன் சிலை முன் போய் மண்டி போட்டு அமர்ந்திருந்தார்கள்.

பாஸ்கரனுக்கு அங்கு நடப்பவை எல்லாமே வித்தியாச மாக இருந்தன. விறுவிறுப்பாகத் தெரிந்தன. சட்டென்று 'எல்லாமே முட்டாள்தனமான ஐதீகம்' என்றும் தோன்றியது. இருந்தும் அக்கறையோடு பார்க்கத் தொடங்கினான்.

சக்திவேல் தன் கண்களாலேயே 'எப்ப சார் வந்தீங்க?'-என்று கேட்டபடி பார்த்தான்!

'எல்லாம் அப்புறம்... முதல்ல ஐதீகம்...' என்று பதில் பார்வை பார்த்தான் பாஸ்கரன்.

சக்திவேலின் முறையும் வந்து, பிரம்படியும் விழுந்து முடிந்தது. அடுத்து சாத்தன் சிலைமுன் மண்டியிட்டு அமர்ந் திருந்த அவர்களுக்கு மயிற்பீலியால் வருடல் நடந்தது! பின் விபூதி போட்டு நெற்றியில் கட்டை விரலை அழுத்தித்

தேய்த்த பூசாரி ''அப்படியே திரும்பிப் பார்க்காமப் போய்க் குளத்துல விழுந்தெழுந்துட்டு ஊட்டுக்குப் போங்க. இனி கரட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கக் கூடாது.'' என்று சட்டளையிட, சக்திவேல் அங்கிருந்து பாஸ்கரனைப் பார்த்தபடியே நெருங்கி வந்தான்.

''எப்ப சார் வந்தீங்க?''

''ஈவினிங் பாசஞ்சர்லதான் வந்தேன். எல்லா விஷயத்தையும் கேள்விப்பட்டேன். வெரி இன்ட்ரஸ்ட்டிங்!''

''உங்க கூட நிறையப் பேசணும் சார். இருங்க குளிச்சிட்டு வந்துடறேன். ஆமா எங்க தங்கியிருக்கீங்க?''

''ரயில்வே ஸ்டேஷன்ல இருக்கிற ரெஸ்ட் ரூம்ல...''

''நல்லது... நீங்க போய்க் காத்திருங்க சார். - வந்துடறேன்.'' அவன் பாஸ்கரனுடன் பேசுவதைப் பலரும் பல மாதிரியாகப் பார்த்தார்கள்.

வராகன் என்பவன் மட்டும் நெருங்கி வந்து உரிமையோடு கேட்டான். அவன் சமவயதுத் தோழன். ஊரில் எண்ணெய்ச் செக்காட்டுபவன்.

''யாரு சக்தி... உறவுமுறையா... இல்ல தோஸ்தா?''

''சார் பெரிய எழுத்தாளர் வராகா. நம்ம ஊர் லைப்ரரில கூட சாரோட பொஸ்தகமெல்லாம் நிறைய இருக்குது...''

''அப்படியா.... வணக்கம் சார்! எங்க சார் இந்த ஊர் பக்கம். நாங்க உதை வாங்கறதைப் பாக்கணுமின்னே வந்தீகளா?'' - வராகனிடம் மெலிதான நகைச்சுவையும் இணக்கமும் அந்த நொடியே வெளிப்பட்டன.

''எப்படி வேணா வெச்சுக்கலாம்...'' என்று கைகளைத் தேய்த்துக்கொண்டு சிரித்த பாஸ்கரனை, இருவரும் தள்ளிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

''சரி சார்... வாங்க இங்க நின்னா பூசாரியும் கோனார்க் கிழவனும் நோண்டி நோண்டி நொங்கு எடுப்பாங்க. எங்க சமணப்பட்டி ஒரு டைப்பான ஊரு.''- என்ற வராகனிடம் பாஸ்கரனின் கவனம், முழுவதுமாகப் படியத் தொடங்கியது.



''ஒரு டைப்பான ஊருன்னா...?''

''என்னத்த சொல்ல... பாத்தீங்கல்ல? அந்தப் பூசாரி முதுகுத் தோலை உரிச்சிப்பிட்டான். இதுல போய் தலைல எண்ணெய் வெச்சுக் குளிக்கணும். இதெல்லாம் செய்யாட்டி தற்கொலை பண்ணிக்கிடுவோமாம்.

நானெல்லாம் துபாய், குவைத்துன்னு போய் ஓடியாடி வேலை பார்த்து, நாலு காசு சம்பாதிக்கணும்னு நினைக்கிறேன். நானா தற்கொலை செய்துக்குவேன்? சொன்னா கேக்க மாட்டாக...

இப்படிச் சொன்ன ரொம்பப் பேர் செத்து போயிருக்காக- வாயை மூடிக்கிட்டு சாங்கியபடி நட'ன்னு சொல்வாக. முடியாதுன்னு சொன்னா நம்ம ஊட்லையே யாரும் கேக்க மாட்டாங்க.

இப்பத்தான் எனக்கு கல்யாணம் வேற ஆச்சு. ரதி மாதிரி பொஞ்சாதி. அவளை விட்டுட்டு சாவ மனசு வருமா சார்? நீங்களே சொல்லுங்க பார்ப்போம்...''

-வராகன் தடதடவென்று பேசினான். அது அவன் சுபாவம் என்பது பாஸ்கரனுக்கு புரிந்து போயிற்று.

''மலைமேல் பொணம் கிடந்தா போய்ப் பாக்கக் கூடாதா சார்? போய்ப் பாத்ததுக்கே இந்தப் பாடு... என்னவோ சார்! எங்க ஊர்ல நிறைய விஷயங்கள் புரியவே மாட்டேங்குது... இதுல சக்தி வேற ஒரு சிலை பேசுதுன்னு அடிக்கடி பூச்சி காட்றான். இது ஊர்ப் பெருசுகளுக்கு அவ்வளவாகத் தெரியாது. தெரிஞ்சா அதுக்கு வேறே கோவில்ல நிக்கவெச்சு பிரம்பால அடிப்பாங்க.''

மத்திமமான இருளில் நடந்தபடியே பேசும் அவன் பேச்சில் அவன் நம்பிக்கைக்கும், நம்பிக்கை இன்மைக்கும் நடுவில் - எந்தப் பக்கம் போவது என்பது தெரியாத தத்தளிப்பில் இருப்பது, பாஸ்கரனுக்குள் அர்த்தமாகும்போது - எதிரில் புயல் காற்று போல வந்து கொண்டிருந்தாள் மகேஸ்வரி!

# 10

மகேஸ்வரியைப் பார்த்ததும் சக்திவேல் மிடறு கூட்டினான்.

''ஐய்யோடா... கோவிலுக்குப் போயிருந்த அம்மாவும் மகேஸ்வரியும் வந்துட்டாங்க போல... மகேஸ்வரி வர்ற வேகத்தைப் பார்த்தாலே பயமா இருக்கே?''

அவன் புலம்பி முடிக்குமுன் மகேஸ்வரி அவனை நெருங்கி நின்றாள். பக்கத்துத் திட்டி வீடுகளிலிருந்தும் பார்வைகள். நெருங்கி விட்ட மகேஸ்வரியிடம் பெருமூச்சு.

''சக்தி... சக்தி... மலைல ஏதோ பொணம் கிடக்குதாமே? நீ கூடப் போய்ப் பார்த்தியாமே... ஊட்ல ஆத்தா அழுதுக் கிட்டு இருக்குது. சாங்கியத்தை முடிச்சிப்பிட்டியா?''

பாஸ்கருக்கு அந்தப் பெண்ணின் மூச்சிளைத்த வியப்பு ஆச்சரியத்தைத் தர, சக்திவேல் சமாளிக்கத் தொடங்கினான்.

''ஆமா... இதுக்காக என்னைத் தேடிக்கிட்டே வந்துட்டி யாக்கும்? கூவே... போ வரேன்.''

''அது சரி, இது யாரு... புதுசா?''

''சரிதான்... சாரை உனக்குத் தெரியலியாக்கும். நீயெல் லாம் எதுக்கு டவுன்ல இருக்கே?''

சக்திவேல் கொஞ்சம் இடித்தான். அவள் பாஸ்கரனைச் சற்று ஊன்றிப் பார்த்தாள். மனசுக்குள் அறிமுகமாகியும் ஆகாமலும் இருந்த அவன் உருவம், அவளைச் சற்றுத் திணறச் செய்தது.

''என்ன சக்திவேல் இது... நான் என்ன சினிமா ஸ்டாரா பார்த்த உடனே தெரிஞ்சிக்க...?''

பாஸ்கரனும் சற்றுக் குழைந்தான்.

''ஆங்... ஞாபகம் வந்துடிச்சி... சார் எழுத்தாளர் பாஸ்கரன்தானே?''

பாஸ்கரனுக்கு நெற்றி பெரிதானது.



''பரவால்லையே கண்டுபிடிச்சிட்டாங்களே... ஆமா யார் சக்திவேல் இவங்க...?''

''என் முறைப் பொண்ணு சார்...''

''வணக்கம் சார்...''

''வணக்கம்மா...''

''சார்... சக்திக்கு உங்க எழுத்துன்னா ரொம்ப இஷ்டம். எப்பப் பார், உங்க கதையையே கட்டிக்கிட்டு அழும்.''

''ஐய்யோ, நான் அழுறமாதிரியெல்லாம் எழுதறதே யில்லையேம்மா...''

அவர்கள் அந்தச் சின்ன மண்வீதியில், சகஜப்பட்டுப் பரஸ்பரம் பரிமாற்றங்களில் நுழைய, வராகன் கத்தரித்துக் கொள்ளத் தொடங்கினான்.

''சக்தி, நான் புறப்படுறேன். சார் அப்ப நான் கிளம்பறேன் சார்...'' என்றான் வராகன்.

''நல்லது நீ போ... சார், வாங்க சார் வீட்டுக்குப் போகலாம். நீ நட புள்ளே...''

சக்திவேலும் அங்கிருந்து பாஸ்கரனை இழுத்துக் கொண்டு கிளம்பினான்.

பாஸ்கரனுக்குக் கொஞ்சம் நெருடியது.

''சக்திவேல் நீங்க போங்க... போய் உங்க வேலையை முடிச்சிட்டு வாங்க. நான் ஸ்டேஷன்ல வெயிட் பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''சரி சார்... அதுவும் சரிதான் வீட்ல எங்க அப்பா, அம்மா எதிர்க்க உங்களோடு மனசுவிட்டே பேசமுடியாது. நீங்க காத்திருங்க. நான் ஒரு அரை மணி நேரத்துல குளிச்சிட்டு ஓடி வந்துடுறேன்...''

சக்திவேல் மகேஸ்வரியோடு சேர்ந்து கொண்டு புறப்பட்டான்.

பாஸ்கரனும் அங்கிருந்து பிரிந்து ஸ்டேஷன் நோக்கி நடக்கத் தொடங்கினான்!

சக்திவேலின் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள், அவன் அம்மா பூங்காவனம். கையில் செம்பு நிறையத் தண்ணீர்!

சக்திவேலும் மகேஸ்வரியும் வருவதைப் பார்த்து, பிலுபிலுவெனப் பிடித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

''எலேய்... ஏண்டா இப்படி எங்க உசிரை வாங்கறே? கரட்டு மேல ஏறி, பொணத்தப் பாத்தியாம... ஏன் நல்லா இருக்கறது உனக்குப் பிடிக்கலியா....? ஏண்டா இப்படி எடக்குமொடக்கா - எதையாவது பண்ணி, என் வயித்துல நெருப்ப அள்ளிக் கொட்றே?''

''அத்தே... ஊட்டுக்குள்ளே போய் உன் கச்சேரியை வெச்சுக்க. தெருவே பாக்குது பார்...'' என்றாள் மகேஸ்வரி.

''பார்க்கட்டும். நல்லாவே பார்க்கட்டும்... எதைச் செய்யக் கூடாதோ, அதைச் செய்வேன்னா என்னாடி அர்த்தம்?''

சொல்லிக் கொண்டே அவன் காலில், கழுவிக்கொள்ளத் தண்ணீரை விட்டாள்.

அவளுக்குப் பதில் சொல்லாமல் நேராக வீட்டுக்குள் நுழையப் பார்த்தவனை, ''எலேய்... கொல்லைக்குப் போய் தலைமுழுக்குப் போட்டுட்டு அப்புறமா வீட்டுக்குள்ளே வாடா... இன்னிக்கு உங்கப்பாரு வரட்டும். வெச்சிக் கறேன்...'' என்றாள்.

''பூங்காவனம் எதுக்கு இரையறே? வயசு பசங்கன்னா அப்படித்தான் - அதான் சாங்கியம் முடிஞ்சுப்போச்சுல்ல, அப்பால எதுக்குக் கவலைப்பட்டுக் கத்தறே?'' எதிர் வீட்டுக்காரியின் குரல் வீதியின் மெல்லிருட்டில் ஊடுருவி அவள் காதில் வந்து மோதியது.

சக்திவேல் எதையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கொல்லைப்புறம் போய், கிணற்றுத் தண்ணீரை இழுத்துத் தலையில் கொட்டிக் கொண்டு திரும்பினான்.



ஒரு குற்றாலத் துண்டுடன் எதிரில் நின்றாள் மகேஸ்வரி. அவன் அதை வாங்கித் துவட்டிக் கொள்ளும்போது கேட்டாள்.

''ஆமா, இப்ப நீ அந்த எழுத்தாளரைப் போய்ப் பார்க்கப் போறியா...?''

''ஆமாம்... எதுக்குக் கேக்கறே...?''

''நீ ஊட்ட விட்டு வெளியே போகமுடியாது. உன் ஆத்தா கத்தறது காதுல விழுந்துச்சா?''

''அதுக்குப் பொழப்பென்ன... எவ்வளவு பெரிய மனுஷர் என்னியப் பாக்க வந்துருக்காரு...?''

''அதுசரி... நீதான் வரச் சொன்னியா...?''

''ஆமா... இல்லாட்டி இந்த அழுக்குப்பய ஊர்ல அவருக்கென்ன வேலை...?

''நினைச்சேன்... அவருக்கிட்ட ஐயா என்ன ... இந்த ஊர் கரட்டைப் பத்திப் பேசப் போகுதீகளோ...?''

''மொள்ளப் பேசு. ஆத்தா ஏற்கனவே தண்ணி அடிச்ச கணக்கா உளறிக்கிட்டிருக்கு. அப்பால தேள் கொட்டுன கணக்கா குதிக்க ஆரம்பிச்சிடும்.''

''பாப்போம்... நீ எப்படிப் போறேன்னு... ஆமா, எதுக்கு இப்படி வேலில போற ஓணானை எடுத்து மேலே விட்டுக் குறே சக்தி. சும்மா இருக்கவே உன்னால முடியாதா?''

''வாயை மூடு... மூசை... உன் கிட்ட ஒண்ணும் நான் கேக்கல?''

''பொடலங்கா. எடக்கு மொடக்கா எதுனாலும் ஆனா, என்னா பண்ணுவே? பாவம் அந்த எழுத்தாளரு... உன் பேச்சக் கேட்டுக்கிட்டு வேலைய உட்டுட்டு இந்த ஊருக்கு வந்து சேர்ந்திருக்கு. அது கதி என்னாகப் போகுதோ?''

மகேஸ்வரி எச்சரிக்கை கலந்த கேலியில் இழைந்தாள்.

''வாயை மூடுங்கறேன்ல...'' கத்தியபடி இடுப்பு ஈர வேட்டியை அவிழ்த்து கிணற்றுத் திட்டில் போட்டான்.

''அது சரி... இப்படி வேட்டிய அவுத்துப் போட்டா, யார் பிழிஞ்சு காயப் போடுவாக?'' அவள் திரும்பவும் இழைந்தாள்.

''எதுக்கு லீவுக்கு வந்திருக்கே...? கட்டிக்க போறவனுக்கு இதை எல்லாம் செய்யத்தான். ஞாபகம் வெச்சுக்க...''

அவன் சொல்லிக்கொண்டே துண்டைச் சுற்றிக் கொண்டு, கொல்லை வாசல் வழியாக உள்ளே நுழைந்தான்.

உள்ளே மயில்வாகனம் வந்திருந்தார். வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும் சுருக்கென்றது.

''என்னவே பாக்கறே?'' மட்டரகமான கோலி பல்ப் வெளிச்சத்தில் ஏறிட்டபடியே கேட்டார்.

''ஒண்ணுமில்ல...''

''என்னா ஒண்ணுமில்ல.. ஊருக்கு முந்தி கரட்டு மேல ஏறி நின்னு வித்தை காட்னதா கேள்விபட்டேன்.''

''வித்தையா?''

''பின்ன... குரங்குமாதிரி தாவி தாவி ஏறி, அங்க நின்னுக்கிட்டு கண்ட எழவைப் பாக்கறதுக்கு பேர் என்ன உங்க அகராதில...?''

அவன் அவர் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனமாக நின்றான்.

''நீங்க ஒண்ணு.... இனிமேப்பட்டு அந்தப்பக்கம் போனா முதுகு தோலை உரிச்சிப்பிடுவேன்னு காட்டாமாகப் பேசாம, கேள்வி கேட்டுக்கிட்டு...'' பூங்காவனம் குறுக்கில் நுழைந்து ஊதி விட்டாள்.

''இப்ப நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்னு இந்தக் கத்து கத்தறே?''

''தப்பா...? ஏலே, அந்தக் கரட்டு மேல உனக்கு என்னாடா வேலை? ஆ ஊன்னா... எதுக்குடா அங்க போறே? அதுதான் ஒரு எழவெடுத்த இடம்னு தெரியும்ல...?''



''அதெல்லாம் ஒண்ணுமில்ல. இந்த ஊருக்குத்தான் அறிவில்லை. சாங்கியம் - பாங்கியம்னு உசுரை எடுத்துக் கிட்டு இருக்காங்க... படிச்சிருந்தா நல்ல யோசிச்சுப் பாப்பீங்க...''

''ஏலேய், நீ என்ன பெரிய கலெக்டர் படிப்பா படிச்சிருக்கே. தப்புப் பண்ணிப் போட்டு, உங்க ஆத்தாகிட்ட எதிர்த்துப் பேசிக்கிட்டிருக்கே...?'' மயில்சாமி தன் பங்குக்குப் பாய்ந்தார்.

''பின்னே என்னப்பா... ஊருல ஒண்ணு நடந்தா வாயை மூடிக்கிட்டு இருக்கணுமா? நாளைக்குத் திருட்டுப் பசங்க வந்து எல்லாத்தையும் வாரி வழிச்சுட்டுப் போனாலும் கண்டுக்காம ஊட்டுக்குள்ற மொடங்கிக் கிடக்கணுமா?''

''எதுக்கு எதைடா முடிச்சுப் போடுறே... இதோ பாருடா தம்பி. உன்னைப்போல எனக்கு இரண்டரை பங்கு வயசாவுது. நானும் வாலிப பிராயம் தாண்டுனவன்தான். அந்தக் கரட்டுச் சமாச்சாரம் ரொம்ப மோசமான ஒண்ணு.

விடிஞ்சு வெளிய போகையிலே அதப் பாத்தாலே அன்னிக்குப் பொழுது உருப்படாதுன்னு சொல்லுவாங்க. உனக்குச் சில விஷயமெல்லாம் சொன்னாப் புரியாது. அனுபவிச்சாத்தான் தெரியும்.''

''இதோ பாருங்கப்பா... உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, நான் பல வட்டம் அந்தக் கரட்டுக்குப் போய் வந்துருக்கேன். எனக்கு ஒண்ணும் ஆகல... எல்லாம் வெட்டிப் பிரமை.''

''சரி இவ்வளவுதானா இன்னும் இருக்குதா?''

''என்ன நீங்க... நான் சொல்றதையும் கொஞ்சம் புரிஞ்சுக்குங்க. எனக்கும் வயசாயிடிச்சு. நல்லது கெட்டது எனக்கும் தெரியும்...''

சக்திவேல் பொரிந்து தள்ளினான். மரப்பெட்டியில் இருந்து ஒரு வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டான். அப்படியே சட்டையையும் மாட்டிக்கொண்டு வெளியே செல்லக் காலெடுத்தான்.

''எங்கடா... அதுக்குள்ற கிளம்பிட்ட...?''

''அது... அது... என் சினேகிதனைப் பாக்கறதுக்காக...''

''எல்லாம் காலைல பாத்துக்கலாம். சோத்தைத் தின்னுவிட்டுப் படு...''

''அப்பா...''

''இதோ பாரு இனி பேசுனே என் வாய் பேசாது. என் பெல்ட் தான் பேசும்...''

சக்திவேலால் அதற்கு மேல் போராட முடியவில்லை. ஓரம்கட்டி நின்று கொண்டிருந்த மகேஸ்வரி அவனைப் பார்த்துக் கொஞ்சம் ரசனையோடு சிரித்தாள். அதனால் அவனுக்கு எரிச்சலாக வந்தது.

கிட்டத்தட்ட இதே ரகளைதான் வராகன் வீட்டிலும். எல்லா ஏச்சும் பேச்சும் கேட்டு முடிந்த நிலையில், வீட்டு வாசலில் உள்ள வேப்பமரத்தடியில் கட்டிலை எடுத்துப் போட்டுக் கொண்டு படுக்கையில் விழ ஆரம்பித்தான், வராகன்.

''ணொட்... ணொட்...'' என்று குச்சிச் சலங்கைச் சப்தம் காதில் கேட்டது!

''ஆருவே?'' - என்று பார்வை- கழுத்தை வளைத்துப் பார்த்தது.

ஊர் மொத்தமும் அடங்கி, வண்டுக் கூட்டம் மட்டும் ஆரம்பிக்கலாம் கச்சேரியை என்று ரப்ச்சர் பண்ணும் அந்த ராவில், 'ணொட் ணொட்...' என்ற சப்தம் தெளிவாகவே காதில் விழுந்தது.

''ஆருவே அது? ணொட்டு, ணொட்டுன்னுக்கிட்டு...?!''

-குரலை அனுப்பினான்.

''ஆரா எவன்டாவன் என்னியக் கேள்வி கேக்கறவன்...'' பதில் வந்தது. அந்தக் குரலே, அது கோனார்த் தாத்தாதான் என்று சொல்லாமல் சொன்னது.



''என்னா தாத்தா எங்கே இந்த ராவுல கிளம்பிட்டீக...?''

''தோட்டத்துக்குத்தான்...''

''ஆமா... அங்க வெள்ளாமை தள்ளிக்கிட்டு நிக்குது. திருடன் வந்துடப் போறான் பாருங்க... போய் ஊட்ல படுப்பீகளா...?''

-கேலிக்குரல் கொடுத்தபடி கட்டிலில் புரண்டு படுத்தான் வராகன். தாத்தா சிரித்தபடியே போய்விட்டார்.

வீசிய மரத்துக்காற்றில் வேப்பம்பூவின் வாசப்பெருக்கு. இழுத்துச் சுவாசித்துக் கொண்டே கண்களை மூடப் போனவன் காதில், மெலிதான கொலுசுச் சப்தம் கேட்க ஆரம்பித்தது!

மிக ரம்மியமான சப்தம்...

ஜில்... ஜில்... ஜில்ஸ்...

கட்டிலில் எழுந்து அமர்ந்தான் வராகன்...

''வா வராகா... ஏன் இன்னும் உக்காந்துக்கிட்டிருக்கே?''

ஒரு இதமான பெண்குரல் அவனுக்கு மட்டும் கேட்டது; சுண்டி இழுத்தது!

''வா... உம் எழுந்திரி...''

எழுந்தான்... மிரள மிரளப் பார்த்தபடி நடக்கத் தொடங்கினான்.

கால்மாட்டுப் பஞ்சாரத்துக் கோழிகள் 'கொக் கொக் என்றபடி முழித்துக் கொண்டிருந்தன. 'போகாதே வராகா...' என்று சொல்ல ஆசைப்பட்ட மாதிரி வேகமாகக் கத்தின!

ஆனால், வராகன் தொடர்ந்து இழுக்கப்பட்டான். அற்புதமான மல்லிகைப் பூவாசம் வேறு இப்போது காற்றில் கலந்து மிதந்து வந்து அவனைக் கிறக்கத் தொடங்கியது.

# 11

அந்த நிமிஷம் வராகனுக்குத் தன்னை மறந்து, தான் செல்வது கூடத் தெரியவில்லை. 'யார் அது?' என்கிற கேள்வியும், தேன்பாகு, சர்க்கரை, வெல்லம், கற்கண்டு என்று எல்லாம் கலந்த மாதிரியான அந்தக் குரலின் இழுவையும்தான், அவனிடம் பிரதானமாக இருந்தது.

கண்ணைக் கரிக்கும் இருட்டிலும் கால் பழகினதுபோல நடக்கத் தொடங்கியது.

ஊருக்கு வெளியே ரயில்வே லயினை ஒட்டி வாத்துப் பட்டி வைத்திருக்கிறான் மொண்ணையன். அவற்றின் காவலுக்காக, சாப்பிட்டுவிட்டு ஒரு குண்டாந்தடி சகிதம், பத்துமணிக்கு மேலாகக் கிளம்பிப் போவது அவனுக்கு வழக்கம். அப்படிப் போகையிலே ஏதாவது ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டு போவான்.

ஒழுங்கான பாதையிலும் போக மாட்டான். குறுக்கு சந்துகளில் புகுந்து மன்னார் வீட்டு கொல்லை வழியாகப் பின்கட்டு வயலைப் பிடித்து, அதன் பாத்திகளில் திமுதிமுக்க நடந்து போவான்.

அப்படிப் போகின்றவன் கண்ணில் வராகன் படவும் மொண்ணையனுக்குக் கொஞ்சம் கமறியது.

''ஆருவே அது. இந்த ராவுல வயக்காட்டுப் பக்கம்...?'' மொண்ணையன் குரல் வராகன் காதில் விழுந்தது போலவே தெரியவில்லை. அவன் நடை தொடர்ந்து கொண்டே யிருந்தது.

''என்னடா இது... காதுல விழாதவனாட்டம் போய்க் கிட்டிருக்கான்! ஏய்ய் யாருப்பே... ஒத்தையாளா எங்கப்பே போறே?''

- மொண்ணையன் தீவிரமாகக் கத்தத் தொடங்கினான். எங்கோ சாம்பலுக்காக வேண்டி சாணி மூட்டம் போட்டி ருந்தார்கள். சமீபகாலமாக ராவானால் தவறாமல் மூட்டம்



போடுவதும், அதன் புகை வயல்வெளிகளிலும், பெருமாள் கரட்டு அடிவாரத்திலும், ஒரு பேயைப் போலத் திரிவதும் சகஜமாகிவிட்டது.

அதில் வராகன் நுழைவது வரை தெரிந்தது.

கமறலுடன் அதன் உள்ளே நுழைந்த மொண்ணை யணனுக்குக் கொஞ்சம் நெஞ்சைக் கட்டியது.

''ஆத்தாடியோய்... என்னடா இது மாயம்? எங்க போனான்....? யார் அவன்...?''

கேள்வி நமைச்சலோடு தடுமாறியபடியே வாத்துப் பட்டியை நோக்கி நடையைத் தொடங்கினான்.

சுவர்க்கோழிகள் ஒருமித்துக் கத்தத் தொடங்கிவிட்டன. காதோரமாய் சிறிய ஹேண்ட் டிரில்லிங் மெஷினில் ஒரு நெற்றிப் பொட்டு அளவுக்குத் துவாரம் போடுவது போல் இருந்தது - அதன் சள்ளையான ஒரு சப்தம்.

பாஸ்கரனுக்கு அந்த ஒய்வறையில் தூக்கமே பிடிக்க வில்லை. புரண்டு புரண்டு படுத்தான். வருவதாகச் சொல்லிச் சென்ற சக்திவேலும் வரவில்லை. ஸ்டேஷன் மாஸ்டருக்கும் திடீரென்று வீசிங் ஏற்பட்டு 'நை நை...' என்று மூச்சுக் காற்றில் ஒரே இழுவை! எனவே 'சாரி' சொல்லிவிட்டு ஒரு மஃப்ளரைச் சுற்றிக்கொண்டு படுக்கப் போய் விட்டார்.

புதிய இடம்... புதிய சூழ்நிலை... தூக்கம் வருவேனா என்றது. அந்த நிலையிலும் அருள்மொழி ஞாபகம் தாழி வெண்ணையாட்டம் திரண்டெழுந்து தளும்பிற்று. கூடவே, 'பிறப்பிலேயே பெண் பிறப்புதான் உன்னதமானது' என்கிற ஒரு எண்ணம் வேறு குதித்துக் கொண்டு வந்தது.

அருள்மொழியிடம் எல்லா விஷயத்திலும் ஒரு கச்சிதம் இருப்பதாக தோன்றியது. ஒன்றோடொன்று ஒட்டாத அடர்த்தியான அதே சமயம் நெடுஞ்சாலையின் ஆபத் தில்லாத வளைவைப் போன்ற அவளது தலைமுடி, மாராப்பை இழுத்து இழுத்து விட்டுக் கொள்ளும்போது - வளையல் வட்டங்கள் போடும் சப்தமுடன் தெரிந்த அந்த நீண்ட நீண்ட பளபள நகங்கள்...

குத்துவது போன்ற அவளது பார்வை, மூடிமூடித் திறந்த இமை முடிகள்கூட, அரண்மனை மதில் கதவின் வேல் வரிசையை ஞாபகப்படுத்திற்று.

உட்காரச் சொன்னபோது, தரைமேல் ஒருமாதிரி ஒருக்களித்துத்தான் உட்கார்ந்தாள். அப்பொழுது இடுப்பில் மடிந்து விழுந்து தெரிந்த அந்த ஒடுக்கும் சத்தியமாக நட்சத்திரம்தான் எனும்படியாகத் தெரிந்த தொப்புளும், பாஸ்கரன் நினைப்பில் கிளர்ந்தெழுந்து, ஒரு பாடு படுத்த ஆரம்பிக்கின்றன.

போதாதற்கு மார்பின் தழைவு வேறு! ஊடுருவிப் பார்க்க முடிந்த சன்னமான புடவைகளை நெய்தவர்கள், ஆயிர மாண்டுகள் வாழட்டும் என்று மனது உற்சாகத்துடன் வாழ்த்திற்று!

புடவை மறைப்பை மீறித் தெரிந்த அந்த ரவிக்கைப் பந்தும், மேலேறும் சந்தன வண்ணக் கழுத்து வளைவும், அதில் பரவிக் கிடந்த சன்னமான ஒரிழைத் தங்கச் சங்கிலியும், பாஸ்கரனின் ரசனைக்குள் கள்ளை வாரி வாரிக் கொட்டத் தொடங்கிவிட்டன.

'உணர்வே ஒடுங்கிப்போ... இப்படி விமானம் போல் மேல் எழும்பாதே... கண்ணியம் என்பது ஒரு ஆண்மகனுக்கு அத்யாவசியமான ஒன்று. அதைக் கண்ணாடியைப் போல உடைத்து நொறுக்காதே... ஒடுங்கு... ஒடுங்கு...' - அன்று சிறுத்தையைப் பிடித்துக் கூண்டில் அடைக்கிற மாதிரி மனதை அடக்கப் பட்டபாடும், இன்று அதே சிறுத்தையை அடக்கினால் தெரியும் சேதி என்று வெளியே உலவத் தொடங்கிவிட்டதையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்துச் சிரித்தான்.

எதனால் காதல் வருகிறது என்பது மெல்ல அர்த்தமாகத் தொடங்கியது.

இப்படிப் பெண்கள் மனதை நிமிண்டும்போது, எந்த ஆண்மை துப்பட்டியை எடுத்துப் போர்த்திக் கொள்ளும்?



அவனுக்குள்ளே அருள்மொழி விதவிதமான கேள்வி களை எழுப்பத் தொடங்கிவிட்டாள். புதிய இடத்தின் தூக்க மற்ற நிலைப்பாட்டுக்கு அவள் மருந்தாக மாறிவிட்டாள்.

அவள் வந்து சந்தித்ததில் இருந்து, வாழ்க்கை ஒரு கொண்டை ஊசி வளைவுபோல வளைந்து திரும்பி விட்டதாகவே தோன்றியது.

அவள் அழகுப் புயலாக மனசில் வீசினாள்; அவளது அப்பாவும் தன் ஆசிரியருமான மீனாட்சிசுந்தரம் ஆச்சரியப் புயலாக அவனுக்குள் வீசியதை எல்லாம் மனது இப்பொழுது அசைபோட்டுப் பார்க்கிறது. அவர் எடுத்துக் கொடுத்த அந்த 'தட்சிண ரகஸ்யம்' எனும் புத்தகம் அதில் அச்சாகியிருந்த தன் கொள்ளுத் தாத்தாவின் படம் எல்லாமே, மிகத் தற்செயலான ஒன்றா... இல்லை காலம் மனிதர்களை வைத்துக் கொண்டு விளையாடும் விளையாட்டா?

கேள்வி...

கேள்வி...

அதன் போக்கு - இப்படி ஒரு ரயில்வே ஸ்டேஷன் ஓய்வறை வரை வந்து - தன்னைப் படுக்க போட்டிருப்பதை நினைத்தபோது கொஞ்சம் வியப்பாகவும் இருந்தது.

அப்படியே டீ குடித்துவிட்டு வரலாம் என்று போன இடத்தில், சக்திவேலைப் பார்த்ததையும், அவன் சாத்தன் கோவில் சடங்கில் பிரம்படி பட்டதையும் கூட எண்ணிப் பார்த்தான் பாஸ்கரன்.

இதெல்லாம் என்ன?

இனி அடுத்து என்ன நடக்கும்...?

மல்லாந்து படுத்துக் கொண்டு அந்த அறையின் விட்டத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

'Welcome Mr. Baskaran' என்று வரவேற்ற காகிதப் பந்தும் அந்த வரவேற்பும் கூட நினைப்பை மரங்கொத்தியாட்டம் கொத்திற்று.

யாராக இருக்கும்?

ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னதுபோல, எந்த வாசகராவது தனது மர்மக் கதையைப் போலவே மர்மமாக விளையாடு கிறாரோ?

அருள்மொழியிடம் உற்சாகமாக ஆரம்பித்த நினைப்பு காகிதப் பந்தின் மேல் வந்து நிற்கும்போது 'டொக் டொக்' என்று ஒரு சப்தம்.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் அது!

ஸ்டேஷன் மாஸ்டர்தான் திரும்ப வந்துவிட்டாரோ? லைட்டைப் போட்டுவிட்டு எழுந்துபோய்க் கதவைத் திறந்தான்.

சக்திவேல் நின்றுகொண்டிருந்தான்!

''சார் தூங்கிட்டீங்களோ...?'' கேட்டபடி உள்ளே வந்தான்.

''இல்லையில்லை. எங்கே உங்களைக் காணோமேன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நல்ல வேளை வந்துட்டீங்க.''

பாஸ்கரன் பதில் சொன்ன போது சக்திவேல் பார்வை அந்த அறையை அளந்து கொண்டிருந்தது.

''என்ன சக்திவேல்... எதை அப்படிப் பாக்கறீங்க?''

''ஒண்ணுமில்லை சார்... இந்த ஸ்டேஷன்ல இப்படி ஒரு ரூமான்னு பாக்கறேன்.''

''ஏன் இதுக்கு முந்தி பார்த்ததில்லையா?''

''எங்க சார்... எப்பப் பார் பூட்டித்தான் இருக்கும்.''

''நல்லது. முதல்ல உக்காருங்க...''

''இருக்கட்டும் சார். வீட்டுக்குத் தெரியாமக் கிளம்பி வரதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு.''

''எதுக்காகத் தெரியாமக் கிளம்பி வரணும்? தெரிஞ்சே வரலாமே...?''

''அதை ஏன் சார் கேக்கறீங்க... இங்க நடக்கிறதை எல்லாம் கேட்டா உங்களால நம்பவே முடியாது.''



''கிராமம்னாலே எப்பவும் அப்படித்தான். பழமைல பலமான நம்பிக்கை. புதுமைகளோட ஒருவித மோதல் போக்கு - இதெல்லாம் ரொம்ப சகஜம்.''

''சகஜம்தான் சார்... ஆனால், இங்க நடக்கற சில விஷயங்கள் ரொம்பவும்தான் என் மண்டையைப் பிச்சுக்க வைக்குது. உங்களை எப்பப் பாப்போம், எப்ப மனசை விட்டுப் பேசுவோம்னு துடிச்சுக்கிட்டிருந்தேன். நல்ல வேளை! நீங்க வந்துட்டீங்க. ரொம்ப தேங்க்ஸ் சார்...''

''அதெல்லாம் இருக்கட்டும்... வீட்டுக்கு தெரியாம வந்தேன்னீங்களே, உங்க வீட்ல தேடமாட்டாங்க?''

''விடியறதுக்குள்ளே போய் நல்ல பிள்ளை மாதிரி படுத்துக்கிட்டு சமாளிச்சிடுவேன்.''

''அதுக்கு காலைலயே வந்து என்னப் பாக்கலாமே சக்தி...''

''இல்ல சார்... இப்பப் பார்த்தாத்தான்! விடிஞ்சா, போலீசு அது இதுன்னு வந்து ஒரே ரப்சரா இருக்கும். பத்தாததுக்கு, நான் வேற கரட்டுல அந்தப் பொணத்தைப் பாத்துட்டேன். போலீஸ் வந்தா என்னை நோண்டுவாங்கன்னு எங்கப்பா என்னை வீட்டைவிட்டு வெளியே அனுப்ப மாட்டாரு...?''

''ஆமாம். யார் அது...? ஏதாவது கொலையா?''

''என்னத்த சார் சொல்ல... ஒரு எழவும் புரிய மாட்டேங்குது. செத்துக்கிடந்த அந்த ஆளை நான் நேத்து மதியம் போலப் பாத்தேன். பாக்க வாட்ட சாட்டமா - 'விடிஞ்சா கல்யாணம்' படத்துல வர்ற சத்யராஜ் மாதிரி - நல்லா உயரமா, பொம்பளைப் புள்ள மாதிரி சடையெல்லாம் வளத்துருந்தான். சாயங்காலமாப் பாத்தா செத்துக்கிடக் கறான். கூட வந்தவனையும் காணோம்...''

''சரி, எதுக்கு அந்தக் கரட்டுக்கு வந்தாங்க அவங்க...''

''அங்கேதான் ஏகத்துக்கும் குகைங்களும் சிலைங்களும் இருக்குதே? அதை எல்லாம் போட்டோ எடுத்து, தீபாவளி மலர்ல போடணும்னு சொன்னான் ஒருத்தன்.''

''அப்ப அவங்க பத்திரிகைக்காரங்களா?''

''அப்படித்தான் சொன்னாங்க. ஆனா, பாத்தா அப்படித் தெரியல...''

-பாஸ்கரன், சக்திவேல் பேச்சில் தாடையைத் தடவத் தொடங்கினான்.

''என்ன சார் யோசிக்கிறீங்க...? பாடி இப்பக்கூட கரட்டுலதான் இருக்கு. வரீங்களா காட்றேன்...''

- சக்திவேல் தைரியமாகக் கேட்டது பாஸ்கரனுக்கு வியப்பாக இருந்தது.

''ஆமா, உங்களுக்கு பயமா இல்லையா சக்தி...?''

''அதான் நீங்க இருக்கீங்களே...?''

''ஏன், நான் பயப்படக் கூடாதா?''

''இல்ல சார்... நீங்க பயமுறுத்துவீங்க. ஆனா பயப்பட மாட்டீங்க. எனக்கும் பெரிசா பயமெல்லாம் ஒண்ணு மில்லை. எல்லாத்துக்கும் மேலா. அந்தக் கரட்டுக்கு இப்பப் போனாத்தான். நாளைக்கு போலீஸ் வந்து பாடியை எடுத்துட்டுப் போன பிறகு. அந்த கரட்டுப் பக்கம் யாரையும் போக விட மாட்டாங்க. காவல் போட்டாலும் போட்டுடுவாங்க. அப்புறம் நீங்களும் நானும் எப்படி அங்கே போக முடியும்? அதான் இப்பவே கிளம்பி வந்தேன்...''

''அதுசரி... அங்க சிலை பேசினதாச் சொன்னீங்களே? நிஜமாவா?''

''என்ன சார்... நீங்களும் சந்தேகமாக் கேக்கறீங்க. ஒரு தடவை இல்ல சார்... ஒம்போது தடவை பேசிட்டேன். அதுவும் பேசினிச்சு...''

- சக்திவேல் சொன்ன விதமே 'நம்புங்கள்' என்று கெஞ்சுகிற மாதிரி இருந்தது. பாஸ்கரன் முகத்தில் சன்னப் புன்னகை!

''என்ன சார் சிரிக்கறீங்க... கல் பேசாதுன்னு எனக்கும் தெரியும் சார். ஆனா பேசாத ஒரு விஷயம் பேசினா அது அதிசயம் இல்லையா?''



''சரி... என்ன பேசினிச்சு?''

''மஞ்சினின்னு ஒரு சிலை சார்... அதான் பேசிச்சு... அது அகலிகை மாதிரி சாபம் வாங்குன ஒரு ராஜகுமாரியாம். அதான் இப்படிச் சிலையா மாறிடிச்சாம்.

அதிசயமாய் இருக்கேன்னேன். இது என்ன அதிசயம். இதைவிடப் பெரிய அதிசயமெல்லாம் இங்க இருக்குன்னு சொன்னிச்சு.

ஆனா ஒரு விஷயம் சார்...''

''என்ன?''

''அது பேசறது எனக்கு மட்டும்தான் கேட்குது. என் முறைப் பொண்ணு மகேஸ்வரியைக் கூட கூட்டிக்கிட்டுப் போய் நிறுத்துனேன். ஒண்ணுமே காதுல விழலை. நீ பொய் புளுகறே - நீ பைத்தியம்ன்னு சொல்லிட்டா.''

பாஸ்கரன் . அடுத்த நொடி பெரிதாகவே சிரிக்கத் தொடங்கினான்.

''சார் சார், எதுக்கு இப்படிச் சிரிக்கறீங்க?''

''இல்ல சக்திவேல். இப்படி ஏதாவது இருக்கும்னு நான் நினைச்சேன். அது சரியாப் போச்சு. ரைட்டர் சுஜாதா எழுதின மாதிரி - இந்த மாதிரி அனுபவங்கள் மட்டும் - தனி மனுஷ அனுபவமாவே எப்பவும் இருக்கு. இப்ப நான் அங்க வந்தாலும் - நானும் உங்க முறைப் பொண்ணு மாதிரிதான் ரீ ஆக்ட் பண்ணுவேன். அந்தச் சிலை என்கிட்ட பேசினாத்தானே இன்ட்ரஸ்ட்?''

- பாஸ்கரனின் பதிலால் சக்திவேலுக்கு சுருதி இறங்கத் தொடங்கியது.

''அப்ப நீங்க நம்பமாட்டீங்களா சார்...?'' - அழாத குறையாகக் கேட்டான்.

''அதை அங்க வந்து பாத்துட்டு முடிவு பண்ணுவோம். கிளம்பலாமா?''

-அவன் கேட்ட விதமும், டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்ட விதமும், கன ஜோராக இருந்தது.

''இங்கே ஏகப்பட்ட வேலை எனக்கு இருக்குன்னு நினைக்கறேன்...'' சொல்லிக் கொண்டே அறைக் கதவைப் பூட்டினான் பாஸ்கரன்.

# 12

இருவரும் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வரவும், 'ஹோ'வென்று கிடந்த ரயில்வே ஸ்டேஷன் ஓரிரண்டு ட்யூப்லைட் வெளிச்சத்தில் வெறிச்சோடிப் போய்த் தெரிந்தது.

ஸ்டேஷன் மாஸ்டர் அவரது அறையில் உட்கார்ந்த நிலையில் கண்ணயர்ந்திருந்தார். மூச்சுக்காற்றில் விசிலை விழுங்கிய சப்தம். அவரிடம் சொல்லிக் கொள்ளலாம் என்கிற எண்ணமுடன், அவரது அறைக்குள் நுழையப் பார்த்த பாஸ்கரனை, சக்திவேல் தோளைப் பற்றி இழுத்துத் தடுத்தான்.

கிசுகிசுக் குரலில், ''பேசாம வாங்க... சாருக்குத் தெரிஞ்சா நம்மைப் போக விடமாட்டார்.''- என்றான்.

பாஸ்கரனும் அதற்கு மேல் எந்த முனைப்பும் காட்டவில்லை.

எதுவும் பேசாமல் சக்திவேலைத் தொடரத் தொடங்கினான்.

கருவேலங்காட்டு ஒற்றையடிப் பாதையில், டார்ச் லைட்டின் ஒளிவட்டம் விழ நடக்க ஆரம்பித்தார்கள். கொஞ்சத் தூரத்திலேயே பனிபோல புகைமூட்டம் ஊரைச்சுற்றி வளைத்திருப்பதைப் பார்க்க முடிந்தது. மூச்சு விடுவதிலும் கொஞ்சம் கமறல் ஏற்பட்டது.

''என்ன புகை இது, சக்திவேல்?'' பாஸ்கரன் கமறியபடியே கேட்டான்.

''ஒரு செங்கச் சூளை ஒண்ணு இருக்கு சார்.... ராத்திரியானா, அதை பத்த வெச்சுடுவாங்க. அப்படியே



சாம்பலுக்காக வயல் குப்பைகளையும் போட்டு கொளுத்துவாங்க. ராத்திரியானா இந்தப் புகைமூட்டத்தோட பெரிய லொள்ளு...'' என்றபடியே இருமினான் சக்திவேல்.

இருமுவதில் கூட எச்சரிக்கை தெரிந்தது. சப்தத்தைத் தொண்டைக் குழிக்குள்ளேயே அடக்கிக் கொண்டான். பார்வை வேறு சுற்றிலும் ஒரு வட்டம் போட்டது.

பாஸ்கரன் கைக் கெடிகாரத்தைப் பார்த்தான். அது மணி பன்னிரண்டைத் தாண்டியிருந்தது.

புரொபசர் மீனாட்சி சுந்தரமும் கைக் கெடிகாரத்தைப் பார்த்துவிட்டு கையை உதறிக்கொண்டார். மதுரையின் எல்லையில் உள்ள யானை மலையின் முதுகுப் பக்கத்தில், காற்று வீச்சுக்கு நடுவே நின்று கொண்டிருந்தார்.

அங்கிருந்து மதுரை- திருச்சி சாலையை ஊடுருவ முடிந்தது. வெளிச்சப் புள்ளிகளை உருட்டிக் கொண்டு லாரி களும், பஸ்களும் விரைந்து கொண்டிருக்க, ஒரு பக்கமாக விவசாயக் கல்லூரியும், இன்னொரு பக்கமாக ஒத்தக்கடை கிராமமும், விளக்குக் கம்பங்களின் வெளிச்சத்தோடு சுமாராகப் பார்க்க முடிந்தது போலத் தெரிந்தன.

டார்ச் லைட்டைத் தட்டிவிடவும் வெளிச்சப்பந்து உருண்டு, அந்த மலை பரப்பின் சூழலைக் காட்டத் தொடங்கிற்று.

அப்படியே அண்ணாந்து வானத்தைப் பார்த்தபோது, வெளிச்சக் குப்பைகளாய் நட்சத்திரங்கள்!

தோளில் ஹேண்ட் பேக் ஒன்று தொங்கியபடி இருந்தது. அதனுள் கைகளை நுழைத்ததில், ஒரு கைக்கடக்கமான பெல்ஜியம் மேட் டெலஸ்கோப் ஒன்று வசப்பட்டது.

அதை கொண்டு வானத்தில் பார்வையை நுணுக்கிய போது - கேட்டை நட்சத்திரக் கூட்டமும், ரோகிணி நட்சத்திரக் கூட்டமும், நடனக்காரர்களின் கூட்டணியைப் போலத் தெரிந்தன.

அவ்வளவாக மேகப் பொதிகள் இல்லாத வானம். ஒரு ஓரத்தில் நிலாப் பிறை, அதிலும் அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் பிறை - இப்படி ஒரு பிறைநாளில் சுமாரான ஒரு மலை உச்சியில் நின்று கொண்டு, வானத்தைப் பார்த்து, சில கணக்குகளைப் போட்டுப் பார்க்கையில், ராமானுஜாச்சாரி என்பவர் ஞாபகமும் மனதில் முந்திக் கொண்டு வந்தது.

ராமானுஜாச்சாரி, மதுரைப் பல்கலைக் கழகத்தில் சோதிடப் பிரிவில் பேராசிரியராக இருந்தவர். பஞ்சகச்சம் உடுத்திக்கொண்டு - திருமண் இட்டுக் கொண்டு - வைதீகப் பழமாகத்தான் பல்கலைக் கழகத்திற்கே வருவார்.

மீனாட்சிசுந்தரத்திடம் நல்ல நட்புக் கொண்டிருந்த அவர், சில விஷயங்களைப் போகிற போக்கில் சொல்லுவார்.

''மீனாட்சி... இன்னிக்குச் சீக்கரமா வீட்டுக்குப் போங்க... சாயங்காலமா ஒரு பேய் மழை இருக்கு. மூணு மணி நேரத்துக்கு மதுரையை உலுக்கி எடுக்கப் போகுது...'' என்பார்.

அப்படிச் சொல்லும்போது - வானம் கழுவிவிட்டது போல அவ்வளவு நிர்மலமாக இருக்கும்.

ஆனால், சொன்ன மாதிரியே மழையானது வந்து, ஒரு ஆட்டு ஆட்டி விட்டுப் போய்விடும்.

மறுநாள் மீனாட்சிசுந்தரம் அவரைப் பார்த்தால் ஞாபகமாகக் கேட்பார்.

''ராமானுஜம் எப்படிய்யா அவ்வளவு சரியா மழை வரும்னு சொன்னீர்?'' மனிதரிடம் ஒரு மர்மச் சிரிப்புத்தான் பதிலாக வரும்.

''இப்படிச் சிரிச்சா எப்படி... சொல்லுமய்யா... நானும் அந்த ரகசியத்தைத் தெரிஞ்சிக்கிறேனே...'' என்பார்.

''எல்லாம் ஒரு கூட்டல் கழித்தல்தான். அதை எல்லாம் தெரிஞ்சுக்கறதுக்கு முந்தி, வானம் நமக்கு வசப்படணும்... நட்சத்திரங்களை எல்லாம் என்னன்னு நினைச்சீர்...? நமக்கு



ரகசியங்களைச் சொல்ற தேவர்களய்யா அவாள்ளாம்...'' என்பார் ராமானுஜாச்சாரி.

ஏதோ உளறுகிறார் என்று ஓரம் கட்டுவதும், அதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று நோண்டிப் பார்ப்பதும் அவரவர் நம்பிக்கையைச் சார்ந்தது. ஆனால் மீனாட்சிசுந்தரம் நம்பத் தொடங்கினார். அதே சமயம் வரலாற்றுப் பிரிவில் ஒரு புத்தகம், யானை மலை பற்றி ஒரு அதிமுக்கிய விஷயத்தையும் சொல்லியிருந்தது.

அந்த மலையின் முதுகில் - நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்களை, களப்பிரர்கள் தூக்கிலிட்டிருந்தார்களாம்!

ஒரு மூன்றாம் பிறை நாளில்தான் இது நடந்தேறியது. எல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த கொடுமைகள்.

அங்கே போய் நின்று கொண்டு, அவர்களைப் பற்றிய எண்ணங்களோடு வானத்தைப் பார்த்தால், நட்சத்திரமாகி விட்ட அவர்களை ஒரு கூட்டமாகப் பார்க்க முடியும்.

அதே வேளையில் ஒன்றிரண்டு நட்சத்திரப் பொறிகள் அந்த மலை மீது விழுவதையும் பார்க்கலாம். என்று தான் படிக்க நேர்ந்த ஒரு விஷயம்தான். அவரை இந்த நள்ளிரவில் மலைக்கு பிடித்து இழுத்து வந்திருக்கிறது.

இப்படிக் கிளம்பி வந்திருப்பது அருள்மொழிக்குத் தெரியாது. இரவானால் ஆரியபவனுக்குப் பக்கத்தில் இருக்கும் மசாலா பால் கடையில் பால் குடிக்க வந்துவிட்டு, அங்கே கண்ணில் படும் நண்பர்கள் சிலருடன் அரட்டை யடித்துவிட்டு, பன்னிரண்டு மணியைப் போல் வீடு திரும்பி படுத்துக் கொள்வது என்பது அவர் வரையில் ஒரு வாடிக்கையான விஷயம்.

அப்படிக் கிளம்பி வந்தபோது தான் யானைமலை பற்றிப் படித்த விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

அந்த மலையில் ஒரு வராகி கோயிலும் சரபேஸ்வரர் கோயிலும் இருந்ததாகவும், அதை வழிட்டவர்களுக்கு

தோல்வியே எதிலும் ஏற்பட்டதில்லை என்றும் அந்த ஆய்வாளர் எழுதியிருந்தார். கடுங்கோன் பாண்டியன் என்னும் பாண்டிய வம்சாவளியில் வந்த பாண்டிய அரசன், இரவுப் பொழுதுகளில் அந்த மலைக்குச் சென்று வராகி முன் நெய்விளக்கேற்றி, விடிய விடியத் தியானமும் செய்து விட்டுத் திரும்புவானாம்.

அதனால் புதிய பலம் பெற்ற அவன், களப்பிரர்கள் கையில் இருந்த மதுரையை மீண்டும் மீட்டு, திரும்ப பாண்டியர்கள் ஆட்சியை மதுரையில் உருவாக்கினானாம்...!

கட்டுரையில் படித்த விஷயங்கள் எந்த அளவு உண்மையானவை?

மீனாட்சி சுந்தரம், ராமானுஜாச்சாரியைப் பார்த்துக் கேட்கவும், 'எதுக்குச் சந்தேகம். அந்த மலைக்கே ஒரு மூணாம் பிறை ராவுல போய் பாத்துட வேண்டியதுதானே?' என்று அவர் திருப்பிக் கேட்டிருந்தார்.

எல்லாம் சேர்ந்து கொண்டது.

பால் குடிக்க வந்தவர், அப்படியே தனது மொபட்டில் யானை மலைக்குக் கிளம்பிவிட்டார்.

மதுரைக்கு பத்துக் கிலோ மீட்டர் வெளியில் - ஒத்தக்கடையை ஒட்டியிருக்கும் அந்த மலையடிவாரத்தை அடைந்தபோது மணி பதினொன்று...

உச்சியை எட்டி பைனாகுலர் வழியாக வானத்தைப் பார்க்கும் பொழுது மணி பன்னிரண்டரை...

மனதில் இனம் புரியாத உணர்ச்சிகள்...

'மனிதனுக்குத்தான் அற்ப ஆயுள்.... ஆனால், மலையாகிய நான் ஆயுள் பிடியில் இல்லாதவன். உன்னைப் போல எத்தனை மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன் தெரியுமா?' என்று அது கேட்கிற மாதிரி எல்லாம் எண்ணங்கள்...

இந்த மலையில்...

இதே மலையில் இந்த இடத்தில் தான் களப்பன் தமிழ்க் கூட்டத்தையே கொன்று குவித்தான்.



மதுரை என்றாலே தமிழ்!

தமிழ் என்றாலே மதுரை...

இந்த மண்ணில்தான் எத்தனை எத்தனை ரத்தக் களறிகள்... வரலாற்றுக் காயங்கள்! புலவர் பெருமக்களே... நீங்கள் வாழ்ந்ததும் மடிந்ததும் உண்மையா?

வானில் இன்றும் நட்சத்திரக் கூட்டமாக இருந்து கொண்டு - ஓடிக் கொண்டிருக்கும் காலப் பெருவெளியில் உழன்று கொண்டிருக்கும் - எங்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?

இல்லை, எல்லாமே என்னைப் போல தமிழ் படித்த சிலர் போகிற போக்கில் சொன்ன பொய்களா? இல்லை யூகங்களா?

'நான் பென்ஷன் வாங்கிக் கொண்டு டி.வி. பார்த்துவிட்டு படுத்துத் தூங்க விரும்பும் ஒரு சராசரித் தமிழனில்லை.

எனக்குள்ளே ஒரு தேடல் இருக்கிறது.

அதனால்தான் இங்கே வந்திருக்கிறேன். எனக்கு உண்மை தெரியவேண்டும் - தெரியுமா?

-மீனாட்சி சுந்தரம் தனக்குத் தானே கேள்விகள் கேட்டுக் கொண்டு, அதறல் பதறலோடு வானத்தையே பார்த்தபடி இருந்தபோது தான் - அந்த அதிசயம் நடக்கத் தொடங்கியது.

பளிச்சென்று அவர் பார்க்கும்படியாக - சில நட்சத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக, யானை மலைமேல் அவருக்குச் சொற்ப தொலைவிலேயே விழுந்து - அவர் படித்த விஷயங்கள் உண்மைதான் என்று சொல்லாமல் சொல்லி மறைந்தன.

மீனாட்சிசுந்தரத்திடம் மகிழ்ச்சி அலைமோதத் தொடங்கியது. அடுத்த வினாடியே அவரது பார்வை, அங்கு வராகி கோயில் எங்கே இருக்கிறது என்று தேடத் தொடங்கி விட்டது.

பெருமாள் மலை கரட்டின் உச்சியை பாஸ்கரனும் சக்திவேலும் ஏறி முடித்திருந்தனர்.

அடிவாரத்தில் காவலுக்கு இருந்த கொண்டையன்- அதிகத் தொந்தரவு தரப் பிரியமில்லாதவன் போல் - நல்ல தூக்கத்தில் இருந்தது வசதியாகப் போய்விட்டது.

பாஸ்கரன் டார்ச் வெளிச்சத்தில் மேலேயுள்ள குகைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனான்.

''வாவ்... என்னம்மா இருக்கு...!

''வெளிய இருந்து பார்த்ததுக்கே இப்படிச் சொல்றீங்களே, உள்ளே போய்ப் பார்த்தா மிரண்டு போயிடுவீங்க...''

''என்ன சக்தி இப்படி, நைட்ல போய்க் கூட்டிக்கிட்டு வந்துட்டீங்களே...''

''என்ன சார் பண்றது... நீங்க வந்துருக்கற நேரம் இப்படி ஆயிடிச்சு...''

''ஆமா, அந்தப் பொணம் எங்க கிடக்கு?''

''அது அந்தப் பக்கம் வாரீங்களா பாக்கலாம்...''

''பரவால்ல சக்தி, நல்ல தைரியம் உங்களுக்கு...''

''இல்லாட்டி இந்த ஊர்ல குப்பை கொட்ட முடியாது சார்... பார்த்து வாங்க...''

- வட்ட வெளிச்சம் வழிகாட்ட, தாவியும் குதித்தும் பிணம் கிடக்கும் பாறைப் பக்கமாக இருவரும் செல்லத் தொடங்கினர்.

சட்டென்று பாஸ்கரனுக்குள் ஒரு எண்ணம் - முதலில் அந்தப் பேசும் சிலையைப் பார்த்து முடி - என்றது.

''ஒரு நிமிஷம் சக்தி...''

''என்ன சார்?''

''இந்த டெட் பாடியை அப்புறமாக்கூடப் பாத்துக்கலாம். முதல்ல என்னை அந்தப் பேசுற சிலைகிட்ட கூட்டிக்கிட்டுப் போறீங்களா...?''

''போலாம் சார்... வாங்க!''



-சக்திவேல் திரும்பி அந்தக் குகை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வானத்து நட்சத்திரப் புள்ளிகளும், மூன்றாம் பிறையும் வேடிக்கை பார்க்க, அள்ளிக் கொண்டு போகும் காற்று வீச்சோடு கை கோர்த்து நடந்து, கொஞ்சம் தட்டுத் தடுமாறி, குகை வாயிலையும் எட்டியபோது மணி ஒன்றுக்குப் பக்கமாக ஆகிவிட்டது.

பாஸ்கரனிடம் பரபரப்பு, தீயைப் போல பற்றிக்கொண்டு விட்டிருந்தது.

''சார், குனிஞ்சும், தவழ்ந்தும்தான் உள்ளே போகணும். டார்ச் லைட்டை தாங்க. முதல்ல நான் உள்ள போய்ட்டு உங்களுக்கு லைட் அடிக்கறேன் - அப்புறமா நீங்க பின்னாலேயே வாங்க.''

-என்றபடி, டார்ச்லைட்டை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைய ஆரம்பித்தான் சக்திவேல்!

# 13

உள்ளே புகுந்துவிட்ட சக்திவேலை இருட்டு கண்ணைக் கசக்க விட்டது. டார்ச் லைட்டின் ஒளி பாஸ்கரன் வருவதற்கு வழிகாட்டிக் கொண்டிருந்தது.

பாஸ்கரனும் மெல்ல பல்லிபோல் படுத்து உள்ளே நுழைந்தான். பின் நிமிர்ந்து நின்றான். வ்வவால்கள் உள்ளே அடைப்பட்டிருப்பதை ஒருவித கசட்டு வாசம் காட்டிக் கொடுத்தது; மூக்கில் நிரடி வயிற்றில் குமட்டல் உருவானது.

''என்ன சக்தி, நிறைய வவ்வால்கள் இருக்குதா உள்ளே?'' - கேள்வி மிகத் துல்லியமாக எதிரொலித்தது.

'நிசப்தத்துக்குள் விழும் சப்தம் என்பது தரை மேல் விழும் பந்தைப் போல் ' என்று ஏதோ ஒரு கதையில் எழுதியது ஞாபகமாய் ஞாபகத்தில் வந்தது.

''வவ்வால் மட்டுமா சார்... எது வேணா இருக்கும். பார்த்து வாங்க. பகலா இருந்தா பளிச்சுன்னு பாக்கலாம். ராத்திரியில் இருட்டு மிரட்டுது'' - என்ற சக்திவேல் டார்ச் லைட்டைச் சுழலவிட்டான்.

குகையின் உள் பாகம் கரளை கரளையாகக் கண்ணில் பட்டது. அங்கங்கே வவ்வால்களின் சிரசாசனத் தோற்றம் வேறு.

பாஸ்கரனுக்குக் கொஞ்சம் பிரமிப்பாகத்தான் இருந்தது.

''எங்கே அந்த டார்ச்சை என்கிட்டக் கொடுங்க பாக்கலாம்...'' - கேட்டு வாங்கிக் கொண்டான். ஒரு சுழற்று சுழற்றினான்... வட்டம் கட்டிக்கொண்டு வெளிச்சச் சக்கரம் உருண்டதில், அந்தத் தலை இல்லாத காளிசிலை பளிச்சிட்டது.

''சார் சார்... நிறுத்துங்க. அதான் சார் தலை இல்லாத காளி சிலை. டார்ச்சை அப்படியே கீழ இறக்குங்க.தலை கீழே இருக்கும் பாருங்க.''

-சக்திவேல் பாஸ்கரனுக்கு எடுத்துக் கொடுக்க, டார்ச் லைட்டின் வட்ட ஒளிச்சக்கரம் கீழிறங்கியது...

''என் கூட அந்தத் தலைதான் சார் பேசிச்சு...''

''எங்க சக்தி... எதையும் காணோமே?''

''இருக்கும் சார்... நல்லா பாருங்க...''

''எங்க...?'' தரைமுழுக்க வெளிச்சம் உருண்டும் அந்தத் தலையைப் பார்க்க முடியவில்லை.

''இருந்துச்சே சார்...'' சக்திவேல் குரல் பதறியது. பதறிக் கொண்டு டார்ச் லைட்டை தான் வாங்கி ஒரு முறை தேடினான். கல் யாழிகளும், தொட்டிகளும் காளியின் வாகனமான சிம்மமும் தான் தட்டுப்பட்டது.

அந்தத் தலை மட்டும் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை.

''என்ன சார் அதிசயம்?''



''ஒரு அதிசயமும் இல்ல. நீங்க கனவு கண்டிருப்பீங்க.''

''இல்ல சார், பார்த்தேன் சார்... அது பேசினது நிஜம்.''

''சரி சரி ...எக்ஸைட் ஆகாதீங்க. ஆமா ஏதோ என் பேர், உங்க பேர், அப்புறம் அருள்மொழிங்கற பேர்லாம் கல்வெட்டுல இருக்குன்னு சொன்னீங்களே... அது எங்க?''

''வாங்க காட்டறேன்...'' இருளில் பாஸ்கரனின் கையை இழுத்துப் பிடித்தவன், அந்தக் குகையின் பக்கவாட்டுச் சுவர்ப்பக்கம் திரும்பினான்.

சுவரில் வெளிச்சம் பட்ட நொடியில் கல்வெட்டு எழுத்துக்கள் கண்ணில் படத் தொடங்கின.

அவ்வளவும் பாலி மொழி எழுத்துக்கள். ஜிலேபி ஜிலேபியாகச் சுழித்துக் கொண்டும், சங்கிலிக் கண்ணிகளைப் போலவும் பட்டது.

''இதெல்லாம் பாலி, பிரம்ததேய லிபிகள்...''

''அப்படின்னா...?''

''நம்ம தமிழ் மொழி மாதிரி இதுவும் ஒரு பாஷை... பெரும்பாலான பௌத்தர்களும், சமணர்களும் இதைத்தான் பேசினாங்க...''

''தமிழ்நாட்லையா?''

''தமிழ் நாடுங்கறது நம்ம அண்ணா வெச்ச பேர்... வரலாற்றுல இதுக்கு தட்சிண பூமின்னுதான் பேர்...''

-சொல்லிக்கொண்டே எழுத்துக்கள் மேல் ஒளிப்பந்தை உருட்டியபோது, கொஞ்சம் தமிழ் எழுத்துக்களும் கண்ணில் பட்டன.

''சார் அங்கதான் சார்... அங்க தான்!''

-பாஸ்கரனின் இமை இரண்டும் அதிகபட்சம் விரிந்து கொள்ள, அந்த எழுத்துக்களை வாசிக்க ஆரம்பித்தான்...

'சார் பிலவ சமண வாஷயிதில் ஊர்
மிளை மகள் நாதினியின் துறவு சால்
காலமதில் மாமதுரை அடிகள் மாணாக்கர்

பாஸ்கரனும் சக்திவேலும் சார்ந்துடன்
அருள்மொழியும் மேவியிங்கு நோன்பிருக்க
ஜீவிதமும் பிறவி கொள்ளா... கொண்டாலும்
கொண்டாருள்
ஒருங்கிணைவும் அவர் பாலாய்
அடங்கியவை அணிசேரும் தச்ச நச்சன்
நவமர் நிலை கண்டுணர்ந்த சேதியிதும்
காலமதாம் காலமதாம் காலமதாமே...'

- சற்றே சிரமப்பட்டாலும் அதைப் படித்து முடித்த பாஸ்கரனிடம் ஆச்சரியத்தோடு மௌனமும் வந்து அப்பிக் கொண்டது.

''சார்...'' கத்தரித்தது சக்திவேலின் குரல்.

''உம்...''

''பாத்தீங்களா...''

''பாத்தேன்...''

''ஆச்சரியமாயில்லையா...?''

''யோசிக்கணும் சக்திவேல்...''

''இந்தப் பாட்டு என்ன சார் சொல்லுது...''

''ஒரு காலத்துல இங்க சமணத் துறவிங்க தங்கி நோன்பிருந்திருக்காங்க. அதுல சிலர் வான சாஸ்திரம் படிச்சிருக்கணும். அவங்க கணிப்புப்படி 'நாதினி'ங்கற பொண்ணோட பாஸ்கரன், சக்திவேல், அருள்மொழிங்கற மூணுபேர் துறவியாகியிருக்காங்க.

அப்படி துறவியானவங்களுக்கு மறுபிறப்பு கிடை யாதுங்கறது நம்பிக்கை. ஆனாலும் திரும்பப் பிறந்து இவங்க ஒண்ணா சேருவாங்க. அப்படிச் சேரும்போது 'அடங்கியவை அணிசேரும்'னு சொல்லுது.

எது அடங்கியிருக்கு... அது அணி சேரும்னா என்னன்னுல்லாம் நிறைய யோசிக்கணும்...''

''இதை யார் சார் செதுக்கினது... எதுக்குச் செதுக்கி யிருக்காங்க?''



''தச்சநச்சன்கறவர் இதைச் சொல்லியிருக்கார். சரி... இங்க இவ்வளவுதானா... இன்னும் பார்க்க வேண்டியது ஏதாவது இருக்கா?''

''இவ்வளவுதான் சார்.... வெளிய நிறையக் குகைங்க இருக்கு. ஆனா அங்கெல்லாம் ஒண்ணுமில்லை.''

''அது சரி... இங்க உங்க ஊர்க்காரங்க யாரும் வந்து போறதில்லையா?''

''இல்ல சார்... இந்த மலைக்கு வந்தாலே தற்கொலை செய்துக்கற எண்ணம் வரும்னு சொல்லும்போது யார் சார் வருவாங்க...''

''அப்படின்னா தற்கொலை செய்துக்க நினைக்கறவங்க வரலாமே?''

''வரலாம்தான்... ஆனா யாரும் வரதில்லை...''

''சரி... இந்த இருட்டுல நின்னு பேசினது போதும். வெளிய போவோமா?''

''போலாம் சார்... இந்தத் தலைதான் எங்க போச்சுன்னு தெரியல...''

''ஒரு வேளை ரக்கை முளைச்சு பறந்து போயிடுச்சோ?''

''கேலி பண்ணாதீங்க சார்... நான் பாத்ததும் பேசினதும் சத்தியம்...''

''சரி... நடங்க... பார்த்து...''

-எதிரொலிகளுக்கு நடுவே பேசியபடி திரும்பவும் அந்தத் துவாரம் வழியாக வெளியே வந்தார்கள்.

மலைக் குளுமை காத்திருந்து கவ்வியது.

''நிச்சயம் பகல் பொழுதுல கேமராவோட வந்து பாக்கணும்.''

''இப்போதைக்கு வரமுடியாது சார்...''

-சக்திவேலின் நம்பிக்கையைக் கேட்டுச் சிரித்தான்.

''ஆமா... யாரும் வராத இந்த இடத்துக்கு நீங்க மட்டும் எப்படி வந்து இதை எல்லாம் பாத்தீங்க...?''

''எங்க ஆடு மாடுல ஒண்ணு தெரியாம இந்தக் கரட்டுல ஏறிடிச்சு. நானும் ஏதோ நினைப்புல ஏறிவந்து தேடினேன். அப்படியே இந்த குகைங்கள பார்த்து எட்டியும் பார்த்தேன். ஆரம்பத்துல பயமாத்தான் இருந்துச்சு. சிலை பேசினதைக் கேட்ட உடனே ரொம்பவும் பயமாயிடிச்சு. அப்புறம் ஒரு மாதிரி சமாளிச்சுக்கிட்டேன்.''

''சரி நீங்க ஏன் தற்கொலை பண்ணிக்கிட்டு சாகலை?''

''சார்...''

''அட என்ன நீங்க.. நீங்கதானே இங்க வந்தா அந்த நினைப்பு வரும்னு சொன்னீங்க...''

''ஊர் நம்பிக்கை சார்... ஆனா எனக்கு வாழணும்கற ஆசைதான் அதிகமாயிருக்கு. இந்த மலைல ஏதோ ஒரு புதையல் இருக்கு சார். இதுல எனக்குச் சந்தேகமில்லை...''

அங்கு இங்கு தொட்டு 'புதையல்' என்று வந்து அவன் நிற்கவும் பாஸ்கரனுக்கு பக்கென்றது!

''புதையலா?''

''ஆமாம் சார்... குச்சி ஜோசியக்காரி சொல்லி யிருக்காளே...''

''என்னன்னு...''

''வேணாம் சார்... அதை எல்லாம் சொன்னா உங்களுக்கு இன்னும் சிரிப்பு வரும். ஆனா எனக்கு நம்பிக்கை இருக்கு.''

''அப்ப இங்க ஏதோ இருக்குன்னு நம்பறீங்களா?''

''இல்லாமலா சார். அந்தக் கல்வெட்டுப் பாட்டுப்படி நாம இரண்டு பேரும் ஒண்ணு சேர்ந்துருக்கோம். ஆமாம் இந்த அருள்மொழிங்கறது யாரா சார் இருக்கும்?''

அந்தக் கரட்டின் மேல் இருளில் இருவரும் பேசும் பேச்சில் அருள்மொழியைப் பிடித்து சக்திவேல் இழுக்கவும், பாஸ்கரனுக்கு இதமாக இருந்தது. சில வினாடி அவள் நினைப்பில் மௌனித்தான்.



''அவங்களும் வந்து சேர்ந்துட்டா ஜோரா இருக்கும். எனக்கென்னவோ அவங்களும் வந்து சேர்ந்துடுவாங்கன்னு தான் தோணுது.''

''அப்படியா?''

''ஆமாம் சார்... நீங்க வேணா பாருங்க... அது நடக்கத் தான் போகுது. நீங்ககூட ஒரு கதைல எழுதியிருந்தீங்களே, மனசார ஒருத்தர் ஒண்ணை நினைக்கும்போது, அது ஒரு அலையா மாறி உரியவங்களைப் போய்ச் சேர்ந்து இழுத்துக்கிட்டு வரும்னு...''

''டெலிபதி சைன்ஸ் பத்திச் சொல்றீங்களா?''

''அது டெலிபதி சைன்ஸா...? மாயமெல்லாம் ஒண்ணுமில்லையா?''

''இந்த உலகத்துல எதுவுமே மாயமில்லை சக்தி. எல்லாத்துக்கும் பின்னாலையும் ஒரு விஞ்ஞானம் இருக்கு. சரி மணி என்னாகுதுன்னு பார்ப்போமா?''

பார்த்தான்.

ஒண்ணரையாகியிருந்தது.

''நேரமாச்சு... கிளம்புவோமா?''

''சார்... அந்த டெட்பாடி...''

''பாக்கணுமா அதை...''

''ஏன் சார் பயமா இருக்கா?''

''இல்ல சக்திவேல்... அது கொலையா இருந்தா நாளைக்கு இங்க நாய் வரலாம். அப்படி வந்த நாய் நாம எட்டிப் பாத்ததாலேயே நம்மளைத் தேடிக்கிட்டும் வரலாம் இல்லையா?''

''அடி ஆத்தி... அப்படி ஒரு சிக்கல் இருக்குல்ல... சரி சரி, எதுக்கு வம்பு கிளம்புங்க. நேரா ஸ்டேஷனுக்கு போவோம்.''

-சக்திவேல் சுதாரித்துக்கொண்டு கீழிறங்க ஆரம்பித்தான்.

''சார் இந்தப் பக்கமா வாங்க... பாத்து அந்தப் பக்கத்துல கொண்டையன் காவலுக்கு இருப்பான்.''

-டார்ச் லைட்டை அணைத்துவிட்டு ஒருவித அனுமானத்தோடு நடந்து சரிவுகளில் இறங்கி நடக்கத் தொடங்குகையில் ஒரு இடத்தில் யார் வயிற்றிலோ மிதிப்பது போலத் தோன்றியது.

சட்டென்று கை டார்ச் ஒளியை அங்கே பாய்ச்சியபோது ஒரு நொடி உதறல் எடுத்தது.

அங்கே தலை சிதறிய நிலையில் ரத்தச் சகதிக்கு நடுவில் வெறித்த பார்வையுடன் கிடந்தது வராகனின் சடலம்.

# 14

வராகனின் சடலத்தைப் பார்த்த அடுத்த நொடி, ''சார்ர்ர்... பொணம்!'' என்கிற கத்தலோடு எகிறிக் குதித்தான் சக்திவேல்.

''எங்க சக்திவேல்?''

''அதோ... கீழ பாருங்க... அய்யோ வராகன்!'' சொல்லிக் கொண்டே டார்ச் வெளிச்சத்தை திரும்ப உருட்டினான். வராகனும் சடலமாகப் பளிச்சிட்டான்.

பாஸ்கரனுக்குள் எலும்பில் ஊசி ஏறின மாதிரி ஒரு வலி.

''சக்தி... ஒரு ஒன்பது மணி வாக்குல நாம பார்த்த நண்பர்தானே?''

''ஆமாம் சார்... என்னைப் பார்த்து தற்கொலை செய்துக்கற மாதிரியா தெரியுதுன்னுகூடக் கேட்டானே சார் பாவிப்பய... இப்படிப் பண்ணிக்கிட்டானே?''

சக்திவேல் குரல் நடுங்கியது.

''ஏய் யாரப்பேய் அங்க...?'' காட்டின் சரிவில் அடிவாரத்தில் இருந்து ஒரு குரல் வேறு குறுக்கில் புகுந்தது.



''சார் கொண்டயன்தான் கத்தறான். பாவிப்பய முழிச்சு கிட்டிருக்கற மாதிரி தெரியுது. வாங்க சார் போயிடலாம். நம்பள பார்த்தா ஆபத்து சார்...''

சக்திவேல் பாஸ்கரனின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு அங்கிருந்து அசுரப் பாய்ச்சல் எடுக்கத் தொடங்கினான்.

''சக்தி நில்லுங்க... என்ன இப்போ கேட்டா சொல்லுவோம்.''- என்று பாஸ்கரும் சொல்லிக் கொண்டே பின்னால் ஓடினான்.

''சரிதான். பனமரத்தடியில நின்னு பாலையே குடிச் சாலும் கள்ளுன்னுதான் சொல்வாங்க. வாங்க சார்.'' -ஓடும்போதே ஒரு ஒழுங்கான பதிலையும் சொல்லத் தெரிந்திருந்தது அவனுக்கு...

''ஏய் யாரது...? நில்லு... நில்லு...'' கொண்டையன் குரலும் நெடுந்தூரம் வரை காதில் கேட்டது.

ரயில்வே ஸ்டேஷன்.

ஓய்வறையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த இருவரின் மார்பிலும் மூச்சுக்காற்றின் சடுகுடு! ஒரு ஐந்து நிமிடத்துக்கு ஒருவருக்கொருவர் எதையும் பேசிக்கொள்ள வில்லை. பேச முடியவில்லை!

''அப்படா...'' இளைப்பாறி முடிந்தவனாக மெல்ல ஆரம்பித்தான் சக்திவேல்.

''என்ன சக்திவேல் ஒரு திருடன் மாதிரி இப்படி ஓட வெச்சுட்டீங்களே...''

''என்ன சார் பண்ணட்டும்? வராகன் செத்துக் கிடப்பான்னு கண்டோமா- இல்லை கொண்டையன்தான் முழிச்சுக்கிட்டிருப்பான்னு கண்டோமா?''

''உண்மைல எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருக்கு. இது எப்படி சாத்யங்கறது புரியலியே...''

''என்ன சார்? நீங்க-எவ்வளவு கதை எழுதியிருக்கீங்க. கூட்டிக் கழிச்சா புரிஞ்சுட்டுப் போகுது...''

''எதைக் கூட்ட? எதைக் கழிக்க?''

''வராகன் தற்கொலைதான் சார் பண்ணிக்கிட்டிருக்கான். கடைசில ஊர் பயந்த மாதிரியே ஆயிடிச்சே சார்...''

''இல்ல சக்தி... அவருக்கு வாழ்க்கை மேல நிறைய நம்பிக்கையும், வாழணும்கற ஆசையும் நிறைய இருந்துச்சு. அவர் தற்கொலை செய்துகிட்டிருக்க வாய்ப்பே இல்லை.''

''அப்ப யாராவது கொலை செய்திருக்கணுமா சார்...''

''நிச்சயமா...''

''அப்படின்னா நாமளும்தான் காட்டுல இருந்தோம். யாராவது வந்திருந்தா கண்ணுல பட்டிருப்பாங்களே...''

''அங்கதான் எனக்கும் இடிக்குது. இருந்தாலும் கொலை செய்ய நினைக்கறவங்களுக்கு, ஒளிஞ்சுக்கிட்டு செய்யறது ஒண்ணும் பெரிய விஷயமில்ல சக்தி...''

''அப்படிங்கறீங்களா...?''

''அப்படித்தான்... விடியட்டும், போலீஸ் வரட்டும். என்ன சொல்லுதுன்னு பார்ப்போம். ஆமா, இதுக்கு முந்தி இந்த மாதிரி ஆகியிருக்கா?''

''எனக்குத் தெரிஞ்சு இல்ல சார்... இப்பத்தான் சார்.''

''அப்படியா?'' பாஸ்கரன் கேட்ட விதத்தில் 'யா'வில் மட்டும் விசேஷ அழுத்தம்.

''எல்லாமே பெரிய புதிரா இருக்கு சார்... என்கூட பேசுன அந்தச் சிலையோட தலையை வேற காணலை.''-பாஸ்கரன் அந்த இறுக்கத்திலும் அதற்காகச் சிரித்தான். சக்திவேல் அதைப் பார்க்கும் முன் சிரிப்பை அழைத்துக் கொண்டு ''ஆமா அதுலயும் ஏதோ ஒரு மர்மம் இருக்கு...'' என்றான்.

''சார்... நீங்க இருப்பீங்கள்ள...?''

''இல்ல சக்திவேல். எனக்கு நிறைய வேலை இருக்கு. ஒருநாள் புரொக்ராம்லதான் இங்க வந்தேன்.''

''ஐய்யோ சார்... அப்ப நீங்க நாளைக்குப் போய்டுவீங்களா?''



''போயாகணும். அதனால என்ன? தேவையைப் பொறுத்து நான் இங்க வருவேன். போவேன்!''

பாஸ்கரன் சொல்லச் சொல்ல காற்றுப் போன பலூனைப் போல ஆனது சக்திவேலின் முகம்.

''சரி நீங்க கிளம்புங்க... விடியும் போது நீங்க இல்லைன்னா உங்க வீட்ல தேடுவாங்கல்ல...''

''கட்டாயமா...''

''கிளம்புங்க... கிளம்புங்க...''

''சார் நாளைக்கு என்னப் பார்த்த பிறகுதான் நீங்க போகணும். வந்தேன், பார்த்தேன், போனேன்னு இருக்கக் கூடாது சார்... இங்க நீங்களும் நானும் சேர்ந்து ஆராய வேண்டிய விஷயம் நிறைய இருக்கு. கண்டுபிடிக்க வேண்டியதும் நிறைய இருக்கு.''

-சக்தி சொல்லிக்கொண்டே வாசல் கதவைத் தாண்டினான்.

பிளாட்ஃபாரம் ஆளரவமற்று நிசப்தத்தில் ஒரு திரைச்சீலை ஓவியம் போலத் தெரிய, அதில் அவன் நடந்து மறைவது மட்டும் ஒரு திரைப்படக் காட்சிபோலத் தெரிந்து, பின்பு மறைந்தும் போனது.

பாஸ்கரன் அதைப் பார்த்தபடியே கதவைத் தாழிட்டான்.

பயணக்களைப்பு, கண் விழிப்பு எல்லாம் சேர்ந்து கொட்டாவியைக் கிளப்பிற்று.

கட்டிலில் வந்து விழுந்தான். படுக்க காலை நீட்டியபோது கட்டில் மேல் ஒரு காகிதப் பந்து.

கூர்மையான பார்வையோடு அதை எடுத்து விரித்தான்.

''எழுத்தாளரே... எனக்கு உதவுவீர்களா?'' விரித்த காகிதத்தில் சற்றே கிறுக்கலான எழுத்துக்கள்.

மெலிதான அதிர்ச்சி அவனுக்குள் பரவ ஆரம்பித்தது. பக்கத்தில் அவனது ஹோல்டால் பேக் திறந்திருக்க, அதிலிருந்த அவனது பேனா எழுதவதற்காகத் திறந்த நிலையில் திரும்ப மூடாமல் பக்கத்தில் கிடந்தது.

அதிகமாகவே அதிர்ந்தான். பாஸ்கரன்!

"டொக்... டொக்!"

சப்தம் கேட்டுக் கதவைத் திறந்தாள் அருள்மொழி வெளியில் மஃப்ளரைச் சுற்றிக்கொண்டு புரொபசர் மீனாட்சிசுந்தரம்.

வெறுப்போடு அவரை முறைத்தாள் அருள்மொழி.

உள்ளே நுழைந்த மீனாட்சிசுந்தரம் கொட்டாவியோடு கதவைச் சாத்தத் தொடங்கினார்.

"சாரியம்மா... கொஞ்சம் லேட்டாயிடுச்சு..." என்றார் பலமில்லாத குரலில்.

"எங்கே ஒழிஞ்சு போனீங்க?" அருள்மொழி சீற ஆரம்பித்தாள்.

"இதோ பார்... சத்தம் போடாதே! விடியற்காலைங்கறது ஒரு அற்புதமான வேளை. அப்ப கோபப்பட்டா உடம்புக்கு அது ரொம்பவும் கெடுதல்."

"மண்ணாங்கட்டி... இப்படி திருடன் மாதிரி எங்கப்பா போயிட்டு வர்றீங்க..."

"மொள்ள... மொள்ள பேசு. ஒரு ரிசர்ச்சுக்காக யானைமலை வரை போய்ட்டு வந்தேன்."

"யானைமலை... என்ன சொல்றீங்க - அங்க எதுக்குப் போனீங்க?"

"கத்தாதம்மா... போய்ப்படு. விடியட்டும் விளக்கமா சொல்றேன்."

"இல்ல... இப்பவே சொல்லுங்க. நான் இங்க தனியா இருக்கறதப் பத்தி எல்லாம் உங்களுக்குக் கொஞ்சமும் பயமோ கவலையோ இல்லையாப்பா?"

"அம்மாடி... வெரி சாரிடா! பால் குடிக்கப் போனப்பதான் இன்னிக்கு மூணாம்பிறைங்கறதே தெரிய வந்தது அதனாலதான்..."



"அதுக்கும் வெளிய போனதுக்கும் என்னப்பா சம்பந்தம்?"

"நிறைய இருக்கு... நான் இப்ப பெரிய பெரிய விஷயங்களையெல்லாம் கண்டுபிடிச்சுட்டு வந்திருக்கேன். தொணதொணன்னு பேசி என்னை மூட்அவுட் பண்ணாதே ப்ளீஸ்ஸ்..."

அவள் தொடர்ந்து அவரை முறைத்தாள்.

அவரோ விறுவிறுவென்று பெட்ரூமுக்குள் நுழைந்து கொண்டு கதவையும் தாழிட்டுக் கொண்டார்.

அருள்மொழியிடம் எரிச்சல் கொப்பளித்தது. வீதியிலும் பால்காரன் வந்துவிட்ட 'அம்மா பால்...' குரல்! கெடிகாரத்தைப் பார்த்தாள். ஐந்தைத் தாண்டிவிட்டிருந்தது. சமையல்கட்டுக்குள் சென்று பால் பாத்திரத்தைக் கையில் எடுத்தாள்.

அவனாக வந்து அழைக்கும் முன் கதவைத் திறந்துகொண்டு வாசலில் போய் நின்றாள்.

தெருவிளக்குகள் வெளிச்சம் துப்பிக் கொண்டிருந்தன. அதில் ஒன்றின் கீழ் பைக்கின் மேல் ஒருவன் அமர்ந்து கொண்டு, அந்த நேரத்தில் யாரோடோ செல்ஃபோனில் பேசிக்கொண்டிருந்தான்.

ஆச்சரியமாக இருந்தது.

அருள்மொழிக்கு முதுகைக் காட்டியபடி அவள் வந்து நிற்பது தெரியாமல் அவன் பேசிக் கொண்டிருந்தான். அவன் பேசுவதும்கூட அந்த அமைதியில் நன்றாகவே கேட்டது.

"இப்பதான் புரொபசர் வந்தார். ஆமாம்... இப்பதான். ஜஸ்ட் நெள!"

அவன் பேச்சு அருள்மொழிக்குள் நெளிசலெடுக்கத் தொடங்கியது. பால்காரன்கூட அவன் பேசுவதைக் கேட்டபடியே அருள்மொழியைச் சமீபித்தான்.

"என்னம்மா, இன்னிக்கு நான் வர்றதுக்கு முந்தியே வந்து நிக்கறீங்க?"

அவன் குரல் அந்த பைக் மனிதனைத் திரும்பிப் பார்க்க வைத்தது. அருள்மொழி பார்வையும் அவன் மேலேயே இருந்தது.

அவன் இனி நிற்பது சரியில்லை என்பதுபோல் கிக்கரை உதைத்தான். வீதியில் ஓடி மறையத் தொடங்கினான்.

''என்னம்மா பாக்கறீங்க... இவனை நான் அடிக்கடி பாப்பேன். யாருன்னு தெரியல. இந்த செல்ஃபோன் வந்தாலும் வந்திச்சு, நேரமில்ல காலமில்லன்னு பேசிக்கிட்டிருங்காங்க. ஹூம்!''

பால்காரன் சலித்துக் கொண்டு அவளைத் தன்பக்கம் திருப்பினான்.

பாலை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள் அருள்மொழி. மீனாட்சிசுந்தரம் அறையில் விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

அவர் தீவிரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

அருள்மொழிக்குள் பயமும் குழப்பமும் கொடிபிடிக்க ஆரம்பித்தது.

சமணப்பட்டியில் ஏகத்துக்கும் பரபரப்பு.

கரட்டு அடிவாரத்தில் வராகனின் மனைவியும் உறவினர்களும் கட்டுப்படுத்த முடியாதபடி அழுது கொண்டிருக்க, போலீஸ் நுழைந்திருந்தது. கோனார் தாத்தா, இன்ஸ்பெக்டர் ரத்தினத்திடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''சொன்னா யார் கேக்கறாங்க. சிவனேன்னு இருக்கிற ஊர். பல வருஷத்துக்குப் பிறகு இப்படி தப்புப் பண்ணி செத்து வெச்சு, ஊரோட நிம்மதியையே கெடுக்கப் பார்க்கறாங்க.''

இன்ஸ்பெக்டர் ரத்தினமும் அதைக் கேட்டுவிட்டு தாடையைச் சொறிந்து கொண்டார்.

''சார் பார்த்து... பொணத்தை எடுத்துக்கிட்டு, திரும்பிப் பாக்காம போங்க சார். போகையில சாத்தன் கோவில்ல போய் ஆளுக்கொரு விடலைக்காய் போட்டுட்டு அப்படியே



உப்பையும் அள்ளிப் போட்டுட்டுப் போங்க. இல்லாட்டி உங்காளுங்களுக்கும் தற்கொலை பண்ணிக்கற நினைப்பு வந்துடப் போகுது.''

''ஏன் அப்படி?'' ரத்தினம் முகத்தை ஒருமாதிரி வைத்துக் கொண்டு கேட்டார்.

''என்னன்னு சொல்ல... ஒரு காலத்துல நூத்துக்கணக்கான சமண சாமியாருங்க இங்க இருந்திருக்காங்க. எல்லாரையும் அப்ப இருந்த ஒரு ராசா தூக்குல போட்டுட்டானாம். அப்ப இருந்தே இந்த சிக்கல்தான். அவங்கள தூக்குல போட்ட ராசா, மலைல ஒரு காளி கோயில் கட்டிக் கும்புட ஆசைப் பட்டிருக்கான்.

ஆனா, மலைல ஏறின ராசாவும் அவங்க ஆட்களும், புத்தி பேதலிச்ச மாதிரி மேல இருந்து கீழ குதிச்சு, தற்கொலை செய்துக்கிட்டாங்களாம். எல்லாத்துக்கும் காரணம் அங்க தூக்குல போட்ட சமண சன்னியாசிங்களோட ஆவிதான்னும், அதுதான் மலை ஏர்றவங்க மனசுல பூந்து, தற்கொலை செய்துக்க வைக்குதுன்னும் பின்னால தெரிய வந்துச்சாம்.

இருந்தும், ஒரு மந்திரவாதி 'நான் போய் எல்லாத்தையும் சரி பண்றேன்'னு சொல்லி மேலே போய் ஒரு காளி சிலையை வெச்சு பூசை பண்ணினானாம். ஒரு கட்டத்துல அவனும் சன்னியாசிங்க தொல்லை தாங்காம, தற்கொலை பண்ணிக்கிட்டானாம்.

அதுக்குப் பிறகு யாரும் அந்தக் கரட்டுப் பக்கம் போறதே இல்லை. போனா இப்படித்தான்.''

கோனார் தாத்தா, தனக்குத் தெரிந்த ஒரு கதையைச் சொல்லிவிட்டு ரத்தினத்தைப் பார்த்தார். பதிலுக்கு ரத்தினம் சிரித்தபடி தாத்தாவைப் பார்த்தார்.

''நம்பாம சிரிக்கறீங்களாய்யா?''

''பின்ன... சொல்ற கதையைக் கொஞ்சம் பொருந்தச் சொல்லணும். சமணசன்யாசிங்க ஈ, எறும்புக்குக்கூட துரோகம் செய்ய மாட்டங்க. அவங்க ஆவி இப்படி எல்லாம் பண்ணுதுங்கறத நம்ப முடியல.

அதோட, இந்த ஆவி சமாச்சாரமெல்லாம் பயங்கர ஹம்பக் வேலைங்கறது என் கருத்து.

உங்க கருத்துப்படியே இருக்கறதா வெச்சுப்போம். நேத்து கரட்டுக்கு பலர் போய் பார்த்துருக்காங்க. ஆனா, செத்துருக்கறது ஒருத்தர்தான். மத்தவங்களுக்கு ஏன் தற்கொலை நெனைப்பு வரலை?''

ரத்தினம் மடக்கினார். ஆனால், கோனார் தாத்தா அசரவில்லை.

''சாங்கியம்னு ஒண்ணு இருக்கு சாரே... எங்களை எல்லாம் காப்பாத்த சாத்தன்னு ஒரு சாமியும் இருக்கு. செத்துட்ட வராகன் அந்த சாங்கியத்த பேருக்குப் பண்ணி இருப்பான். 'அதான் செத்து வெச்சிருக்கான்.

பெரிய கோட்டை வாசல் கதவை இழுத்து மூடினாலும் சின்னதா உள்ள போக ஒரு திட்டிக் கதவு இருக்கும் தெரியுங்களா?

அப்படித்தான் எங்க சாத்தன்சாமி எங்களக் காப்பாத்தற சமாச்சாரமும்... ஏதோ எனக்குத் தெரிஞ்சத சொன்னேன். சாத்தன் சாமி கருணை இல்லாட்டி மேல போறவன் மீளவே முடியாது. இது என் அனுபவம்?''

''அப்படியா?'' கேட்டுவிட்டு துணிச்சலாகக் கரட்டின்மேல் ஏற ஆரம்பித்தார் ரத்தினம்!

# 15

ரத்னம் மலை ஏற முற்பட்ட அந்த வினாடிகளில் பாஸ்கரன் அங்கு பிரவேசிக்கத் தொடங்கியிருந்தான். கூடி நிற்பவர்களில் பலர் அவனைப் பார்த்தார்கள். கோனார்த் தாத்தாவும் பார்த்தார்.

ரத்னமோ கரட்டின் பாறைகளில் தாவிக்குதித்து ஏறத்தொடங்கியிருந்தார். சில எட்டுகள் போட்டுவிட்டுத் திரும்பி தன் சக போலீஸ்காரர்களைப் பார்த்தார்.



அவர்கள் அவர் திரும்பிப் பார்க்கவும் அவரைத் தொடரத் தயாரான மாதிரி காலெடுத்தனர்.

கோனார்த் தாத்தா கத்தினார்.

''ஐய்யா வேணாங்க... சாங்கியம் பண்ணிக்கறதா இருந்தா போங்க. இல்லாட்டி வேண்டாம்.''

கோனாரின் குரலுக்கு துளியும் மதிப்பில்லை. இன்ஸ்பெக்டர் ரத்னம் கிட்டத்தட்ட பாதி கரட்டை எட்டி விட்டிருந்தார்.

பாஸ்கரன் கூட்டத்தில் சக்திவேலைத் தேடினான். ஆனால் அவன் கண்ணில் படவேயில்லை. மகேஸ்வரி மட்டும் சில பெண்களோடு ஒரு மூலையில் நின்றுகொண்டு நடப்பதைப் பார்த்தபடி இருந்தாள். அப்படியே பாஸ்கரனையும் ஒரு பார்வை பார்த்தாள்.

கூட்டத்தினர் கவளி போல் 'ப்ச்ச்... ப்ச்ச்...' என்று செருமினார்கள். கோனார்த்தாத்தா புலம்பத் தொடங்கி விட்டார்.

''ஏலேய்... இனிமேட்டும் சிக்கல்தாண்டா! ராணுவத்துக் காரன் ஒருத்தன் இப்படித்தான் நாப்பது வருஷம் முந்தி சொல்லச் சொல்லக் கேக்காம கரட்டு மேல ஏறிப்போனான். அப்பால ராணுவ கேம்ப்புல இருக்கற வேப்பமரத்துல தூக்குல தொங்குனான். இந்த ஆள் திரும்ப வந்து எங்க தொங்கப்போறானோ?''

கோனார்த்தாத்தாவின் புலம்பலுக்கு பக்கத்தில் இருந்து வக்காலத்து வேறு...

''தாத்தா... நீங்க எதுக்கு கத்தறீங்க... தலை எழுத்த எழுதுனது அவன். அதை நீங்களும் நானும் மாத்த முடியுமா என்ன?''

பாஸ்கரனுக்கு மேலேறும் இன்ஸ்பெக்டரின் தீர்க்கம் மிகப் பிடித்திருந்தது. அதேசமயம் தாத்தா புலம்புவதில் செயற்கையாக ஏதோ இருப்பது போலத் தோன்றியது. மெல்ல நடந்து அவரைச் சமீபித்து நிற்கத் தொடங்கினான்.

தாத்தா கண்ணுக்கு கைக்கூரை கொடுத்து இன்ஸ்பெக்டர் போவதையே பார்த்தபடி இருந்தார்.

''எக்ஸ்யூஸ் மீ''-கவனத்தை தன் பக்கம் திருப்பினான் பாஸ்கரன்.

''யார் தம்பி நீ... ஊருக்குப் புதுசா-யார் ஊட்டுக்கு வந்துருக்கே?''

''நான்... நான் ஒரு எழுத்தாளன். இந்த கரட்டைப் பத்தி கேள்விப்பட்டுத்தான் இந்த ஊருக்கு வந்துருக்கேன். நீங்கதான் இந்த ஊரோட சீனியர் பர்சனா?''

''என்னாது...?''

''மன்னிக்கணும்... நீங்கதான் இந்த ஊரோட மூத்த குடிமகனான்னு கேட்டேன்.''

''ஆமா... அதுக்கென்ன இப்போ?''

''இந்த கரட்டு விஷயம் ஒரு பெரிய மர்மமா இருக்குதே - எப்படி?''

''எப்படின்னா... என்னாத்த சொல்ல... நான் இங்க அந்த போலீஸ்காரன் சாவப் போறான்னு நினைச்சு மருகிக்கிட்டி ருக்கேன். நீ கதை கேக்கறியே தம்பி.''

-தாத்தா கொஞ்சம் சடைத்துக் கொண்டவராக திரும்ப கரட்டு உச்சியைப் பார்க்கத் தொடங்கினார்.

-முகத்தில் நிஜமாலுமே பதட்டத்தின் அலைகள்.

''அப்ப அவர் கட்டாயம் செத்துடுவார்ங்கறது உங்க அபிப்ராயமா?''

''எங்க சாத்தன்கிட்ட வந்து அவர் சாங்கியம் பண்ணிக் கிலேன்னு வை. அவர் சாவுறது நிச்சயம் எழுதிக்க...''

அப்பொழுது பாஸ்கரனின் கையில் யாரோ எதையோ கொண்டு உரசுவது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தபோது மகேஸ்வரி அரை இளிப்போடு அவனைப் பார்த்தாள்.

பாஸ்கரனின் பார்வையே என்ன என்று கேட்டது!



''சக்தி உங்கள ஸ்டேஷன்ல உச்சிவேளைல சந்திக்கறேன்னு சொல்லச் சொன்னிச்சு.''

''அது சரி... இங்க இந்தக் கூத்தை எல்லாம் பார்க்க வரலையா?''

''எங்க மாமா வெளிய உட்டாதான... போட்டு அமுக்கிப்பிட்டாரு.''

-பாஸ்கரன் அவள் பதிலை - அதில் தொனித்த உணர்ச்சியை அந்த நிலையிலும் ரசித்தான்.

அப்படியே மேலே பார்வையை விட்டான்.

இன்ஸ்பெக்டர் ரத்னம் உச்சியை எட்டியிருந்தார். மேலே தெரிந்த அந்த பாறைச் சமதளம் நெற்றியைப் புடைக்க விட்டிருந்தது.

கூடவே இரண்டு கான்ஸ்டபிள்கள் பெருமூச்சோடு அவரைப் பார்க்க, ''என்னய்யா இது... இந்த கரட்டு மேல இப்படி ஒரு பிளைன் கிரவுண்டு...''

''ஆமாம் சார்... அங்க பாருங்க சார் எத்தினி குகைங்க?''

''டேங்கப்பா... ஒரு காலத்துல இங்க ஒரு கூட்டமே இருந்துருக்காங்க போலருக்குதே...''

''ஆமாம் சார்... குடிக்க தண்ணி வசதிக்கு தோதா அங்க பாருங்க ஒரு பாறைத் தொட்டி. பெய்யற மழை பூரா ஒழுகி ஓடி அங்க தேங்கற மாதிரி என்னா ஒரு செட்டப்பு...''

-கிட்டே நெருங்கி அந்தப் பாறைத் தொட்டியைப் பார்க்கவும், பாசம் பிடித்த தண்ணீரில் உச்சிக்கு வரப்போகிற சூரியன் பளிச்சென்று தெரிந்தான். 'ஜலைங்'கென்று ஒரு சப்பைத் தவளை ஊடே நீந்தி பாசங்களின் உள்புகுந்து மறைந்தும் போனது.

ரத்தினத்தின் பார்வை நாலாபுறமும் சுழன்றது. கழுகுபோல, கண்கள் இடுங்கின பார்வை...

ஒவ்வொரு குகையும் ஒரு சமணவாடி வகுப்பறை என்பதை உணராதபடி பார்த்துக் கொண்டே வந்தவர்

தரைமேலெல்லாம் பார்வையை விட்டார். எங்காவது ஏதாவது தடயங்கள் அகப்படுகின்றதா என்கிற துழாவல் நிரம்பிய பார்வை.

பார்வை அந்தத் துவாரக் குகையிடம் முற்றுப் பெற்றது. அருகே சென்று உள்ளே தலையை நுழைத்துப் பார்க்கவும் பிரமிப்பு தட்டியது.

ஊர்ந்து உள்ளே புகுந்து மிரள மிரளப் பார்த்தார். முண்டகக்காளியின் தலை எங்கே போயிற்று? தேடினார். கீழே ஒரு ஓரமாக - உருண்டு விழுந்து கிடக்கும் ஒரு செம்பைப் போல் அது இருந்தது.

உள் பாகத்துச் சுவரை எல்லாமும் பார்த்தார். பின் தொடர்ந்து உள் நுழைந்தனர் கான்ஸ்டபிள்கள்.

''என்ன எழுதியிருக்குதுன்னே தெரியலியே சார்...''

''அதான் நானும் பாக்கேன். எப்படி நம்ம ஆர்கியாலஜில இந்தக் கோவிலைக் கண்டுக்காம விட்டு வெச்சிருக்காங்கன்னு தெரியலியே.''

''நல்லா படிகட்டி மேல ஒரு உழவர் சந்தையையே நடத்தலாம்.'' - எதிரொலிகள் முட்டி மோதிக் கொள்ள - போலீஸ்காரர்கள் பேசிக்கொள்ள - அங்கும் பார்வை ஊடுருவியது. எதை எதையோ துழாவியது.

''சாதாரணமா இந்த மாதிரி இடங்கள்ள கேப்மாரிப் பசங்க உக்காந்துகிட்டு சீட்டு ஆடுவானுங்க. இல்லாட்டி மாமாப் பசங்க யாரையாச்சும் தள்ளிக்கிட்டு வந்து தொழில் நடத்து வாங்க. ஆனா இங்க என்னன்னா ஈ, காக்கா இல்ல. ஊருக் குள்ள என்னடான்னா ஒரு கிழவன் ஓரேடியா மிரட்றானே...''

''அவன் கிடக்கான் சார்... நாம ஆர்கியாலஜிக்கு சொல்வோம். எப்படிய்யா இந்த மலைப்பக்கம் இன்னும் எட்டிப் பாக்காம இருக்கீங்கன்னு கேப்போம்...''

-பேச்சோடு பேச்சாக பிணம் கிடந்த இடத்தை எல்லாம் பார்த்து விட்டுக் கீழே இறங்கினார்கள்.

சமணப்பட்டிவாசிகள் யாரும் அங்கிருந்து நகர்ந்திருக்க வில்லை. கோனார்த்தாத்தா மௌனமாக வெறித்தார்.



இரண்டு பிணங்களும் ஆம்புலன்ஸ் வேனில் ஏற்றப்பட்டு புறப்படத் தயாராக இருந்தது.

இன்ஸ்பெக்டர் ரத்னம் புறப்படும் எண்ணத்தோடு ஜீப்பில் ஏறி அமர்ந்தார். கோனார்த் தாத்தாவையும் திரும்பிப் பார்த்தார். அப்பொழுது பாஸ்கரனும் கண்ணில் பட்டான்.

பரிச்சயமான அவன் முகம் அவர் நெற்றியைச் சொறியவிட்டது.

பாஸ்கரனே கிட்டே நெருங்கி அவர் நமைச்சலைச் சரி செய்தான்.

''ஹலோ சார்... நான் எழுத்தாளன் பாஸ்கரன்.''

''ஓ... ரைட்டர் பாஸ்கரன். கிரேட் ரைட்டர் பாஸ்கரன் இங்க என்ன சார் பண்றீங்க... இந்த ஊர்லையா இருக்கீங்க?''

''இல்ல சார்... கரட்டப் பற்றி கேள்விப்பட்டு பார்க்க வந்தேன். தைரியமா மேலே போய் ட்யூட்டியை சின்சியரா செஞ்ச உங்களை ரொம்ப பாராட்றேன்.''

''ஓ... தேங்க்யூ! ஆமாம் எங்க தங்கியிருக்கீங்க?''

''இப்போதைக்கு ரயில்வே ஸ்டேஷன் ரெஸ்ட் ரூம்லதான் தங்கியிருக்கேன். இன்னிக்கு கிளம்பிடுவேன்...''

அப்ப கரட்டுமேல ஏறி அந்தக் குகைகளை எல்லாம் பாக்கலையா.... ரொமப் பிரமாதமா இருக்கு பாஸ்கரன். நீங்க பார்த்தா இந்தக் கரட்டை வெச்சே ஒரு கதை எழுதிடுவீங்க.''

''எழுதுவேன் சார்... ஆமா பாடியைப் பார்த்தீங்ளா...?''

''உம்... அதுக்குத்தானே வந்துருக்கேன்?''

''இல்ல... பார்க்க எப்படி இருந்தது. இது கொலையா? இல்லை ஊர் நம்பற மாதிரி தற்கொலையான்னு...''

இன்ஸ்பெக்டர் ரத்னம் உடனே வாய்விட்டுச் சிரித்தார்.

''எதுக்கு சிரிக்கறீங்க?''

''பின்ன என்ன பாஸ்கரன்... நீங்களே இப்படிக் கேட்டா நான் என்னத்த சொல்லட்டும். நாம் எந்த காலகட்டத்துல

வாழறோம், எங்க போய்க்கிட்டிருக்கோம்கறதை எல்லாம் நினைச்சுப் பார்த்தா இப்படிக் கேட்கத் தோணாது.''

''அப்ப நடந்தது கொலைகள்னு சொல்றீங்க?''

''அத நான் இப்ப சொல்ல முடியுமா... போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வரட்டும். தெரிஞ்சுடும். பை தபை மேல ஒரு காளி சிலை எக்ஸ்டராட்னரியா இருக்கு. அதோட தலையை யாரோ உடைச்சு கீழ போட்டுருக்காங்க. ஆர்க்கியாலஜில வந்து பார்த்தா அசந்து போயிடுவாங்க...''

ரத்னம் பேச்சோடு பேச்சாக காளி தலை கீழே கிடப்பதாகச் சொல்லவும், பாஸ்கரன் கொஞ்சம் விக்கித்துப் போனான்.

''தலை தனியா கீழ கிடக்கா?'' அழுத்தமாகக் கேட்டான். ஆச்சரியமும் அதிர்ச்சியும் குரலில் அலை மோதின.

''ஆமாம். உங்களுக்குத் தைரியம் இருந்தா போய்ப் பாருங்க...'' ரத்னம் ஊக்கப்படுத்தும் போதே கூட வந்த கான்ஸ்டபிள்கள் மூவரும் ஊரக்காரர்கள் தரும் உப்பை வாங்கிக் கொண்டு சாங்கியம் செய்யத் தயாராகி விட்டிருந்தனர்.

ரத்னத்திற்கு எரிச்சலாக வந்தது.

''அடக் கண்றாவியே ஏய்யா... எதுக்குய்யா இவ்வளவு பயமிருக்கற நீங்கள்ளாம் டிபார்ட்மென்ட்ல இருக்கீங்க?''

கத்தினார்.... அவர்கள் வெட்கப்பார்வை பார்த்தனர்.

''சரி சரி, போய் என்ன செய்யனுமோ செஞ்சிட்டு வாங்க. அப்புறமா என்னைப் பார்த்து வழியலாம். எரிச்சலுடன் கத்தினார். பாஸ்கரன் இடை நறுக்கினான்.

''உங்களுக்குக் கொஞ்சம்கூட பயமில்லியா இன்ஸ்பெக்டர் சார்...''

''என்ன சார் நீங்க... எதுக்கு நான் பயப்படணும். நாலு வயசுல நல்ல பாம்பைப் பிடிச்சு விளையாண்டவன் சார் நான்...''

இன்ஸ்பெக்டர் ரத்தினம் பேச்சில் கித்தாப்புக் கொடிக் கட்டிப் பறந்தது. பாஸ்கரன் அதற்காக ஒரு சன்னப் புன்னகை பூத்தான்.



''அப்ப நான் புறப்பட்றேன். மத்த ஃபார்மலிட்டீஸ்லாம் நிறைய இருக்குது. எசகுபிசகா ரிப்போர்ட் எதுவும் வந்தா கரட்டுக்கே ஒரு பூட்டுப் போட்டு கண்காணிக்க வேண்டியதுதான்.''

சொன்னபடி ஜீப்பில் ஏறி அமர அது சீறத் தொடங்கியது. எல்லோரும் ஒரு மாதிரி வெறித்தனர்.

ரயில்வே ஸ்டேஷன்.

ரெஸ்ட் ரூமுக்குள் நுழைந்த பாஸ்கரனைப் பார்த்துவிட்டு பின்னாலேயே வந்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

''என்ன எழுத்தாளரே... வந்த அன்னிக்கே ஏக பரபரப்பா விஷயங்கள் கிடைச்சிருக்கற மாதிரி தெரியுதே?''

கையில் வரப்போகும் கூட்ஸ் ட்ரெயினை வரவேற்பதற்கான பச்சைக் கொடி.

''ஆமாம் சார்... அந்தக் கரடு என் வரையில ஒரு பெரிய புதிராத் தான் இந்த நிமிஷம் இருக்கு...''

''அப்ப ஒரு நாவல் உண்டுன்னு சொல்லுங்க''

''அது அப்புறம்... உங்ககிட்ட ஒண்ணு கேட்கணுமே?''

''என்ன சார்...?''

''இங்க உங்களைத் தவிர யாருமே இல்லையா?''

''ஏன் இல்லாம என்னோட ரிலீவர் ரங்கராஜன் இருக்காரே...''

''ஐ ஆம் சாரி... உங்க பேரை கேக்கவே இல்ல பாருங்க...''

''மன்னிக்கணும். நானும் சொல்லத் தவறிட்டேன். என் பேர் நரசிம்மன். அது சரி ஏதோ கேட்கணும்னு சொன்னீங்களே...''

''ராத்திரி நான் கொஞ்சம் வெளிய போய்ட்டு வந்தேன்.''

''சரி. அதுக்கென்ன...?''

''இல்ல, உள்ற வந்து பார்த்தா பூட்டின என் ரூமுக்குள்ள திரும்பவும் ஒரு காகிதப் பந்து. அதுல, எழுத்தாளரே எனக்கு உதவுவீர்களா?'ன்னு ஒரு கேள்வி வேற...

யாரோ என்கிட்ட கண்ணாமூச்சி விளையாட்டு விளையாட்றாங்கன்னு நினைக்கறேன். அவங்க யாருன்னு தெரியணும்.''

பாஸ்கரன் சொன்ன மறுநொடி ஸ்டேஷன் மாஸ்டர் முகம் கறுத்துப் போனது. அப்படியே ''மிஸ்டர் பாஸ்கரன் அது வேற யாரோ இல்ல. என் மகள் வைஷ்ணவிதான்.'' என்றார் நிதானமாக.

'வைஷ்ணவியா, எங்க இப்ப அவங்க?'' பாஸ்கரன் ஆவலாகக் கேட்க நரசிம்மன் கைகளை வானத்தை நோக்கிக் காட்டியபடியே சொன்னார்.

''அவ செத்து ஆறு மாசமாச்சு பாஸ்கரன்!''

- பாஸ்கரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

# 16

அதிர்ச்சி பரவிய முகத்தோடு ஸ்டேஷன் மாஸ்டர் நரசிம்மனை ஏறிட்டான் பாஸ்கரன்.

நரசிம்மன் முகம் சுட்ட கத்தரிக்காய்போல ஆகிவிட்டது.

''என்ன சார் நம்ப முடியலையா...?''

ரயில்வே லைனைப் பார்த்தபடியே திரும்பினார்.

''யெஸ் நம்பத்தான் முடியல...!''

''நீங்க நம்ப மாட்டீங்கன்னுதான் நானும் முதல்ல இதைச் சொல்லல...''

நரசிம்மன் சொல்லிவிட்டு திரும்பவும் ரயில்வே லைன் பக்கம் திரும்பினார்.

''நீங்க எப்பச் சொன்னாலும் என் கருத்து நம்ப முடியாதுங்கறதுதான்...''

பாஸ்கரன் குரலில் தீவிரம் தொனிக்கத் தொடங்கியது. நரசிம்மன் மளாரென்று திரும்பி பாஸ்கரனைப் பார்த்தார்.



பார்வை இல்லை அது... ஊசி போல் துளைக்கும் ஏதோ ஒன்று. இருந்தும் பாஸ்கரன் அசராமல் அவரை வெறித்தான்.

''அப்ப நான் சொல்றதுல உங்களுக்கும் நம்பிக்கை இல்லை. அப்படித்தானே?''

''ஆமா...''

''அப்ப பூட்டின அறைக்குள்ள அந்தக் காகிதப்பந்துங்க எப்படி வந்திருக்க முடியும் மிஸ்டர் பாஸ்கரன்?''

''ஏன் நீங்களே போட்டுட்டு என்னை ஆழம் பார்க்கக் கூடாது...''

''அவசியமென்ன?''

''அது போகப் போகத் தெரியலாம்...''

''எழுத்தாளரில்லையா... எதையும் அனுபவிக்காம நம்ப மாட்டீங்க...''

''சரி... உங்க வைஷ்ணவி...அதாவது ஆவி வைஷ்ணவி எனக்கு கடிதம் எழுதி எனக்கு உதவுவீங்களான்னு எதுக்காக கேக்கறாங்க? ஒரு ஆவிக்கு நான் என்ன உதவியைச் செய்துட முடியும்?''

''முறைப்படி ஒரு தர்ப்பணம் பண்ணனாக்கூட போதுமே... ஆத்ம சாந்தி கிடைச்சிடுமே...?''

''அப்பா நீங்க செய்தாலும் கிடைக்குமே அது. ஒரு மூணாம் மனுஷனைவிட உரிமையும் உறவும் உங்களுக்குத் தானே அதிகம்?''

''உண்மைதான் ஆனா, என்னை விட்டு எவனோடையோ ஓடிப்போன ஒருத்திக்கு நான் எதையும் செய்யத் தயாரில்லை பாஸ்கரன்.''

நரசிம்மன் சொல்லும்போது தொலைவில் கூட்ஸ் எஞ்ஜினின் மூக்குத் தெரிந்தது.

உடனே கொடியை எடுத்துக் கொண்டு பிளாட்ஃபார மேடைமேல் போய் நிற்கத் தொடங்கினார்.

ஜிகுஜிகுவென்று நிற்காமல் தாண்டத் தொடங்கின. நீண்ட செவ்வகமான அந்த உலோகப் பெட்டிகள். நரசிம்மன் கொடியை ஆட்ட பாய்ன்ட்டர் வெகுதொலைவில் சாவியைத் தந்து வாங்கியபடி இருந்தான். அந்த இடைவெளியில் பாஸ்கரன் பார்வை ஓய்வறைப் பக்கம் சென்றது... அதன் திறந்து கிடந்த ஜன்னல்கள் லேசாக காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

மனதிலும் நரசிம்மன் பற்றிய ஆட்டம்.

'இந்த மனிதர் சொல்வது எந்த அளவு உண்மை? தனது நம்பிக்கையை என்மேல் திணிக்கிறாரா- இல்லை என்னைப் பயமுறுத்துவது இவர் நோக்கமா...?''

கேள்விகளோடு திரும்பினான். கூட்ஸ் வண்டி பிளாட்ஃபார்ம் கடந்து விட்டிருந்தது.

நரசிம்மனும் திரும்பி வரத் தொடங்கினார்.

பாஸ்கரன் அவரை ஒருவிதச் சிரிப்போடு பார்த்தான்.

''சிரிக்காதீங்க பாஸ்கரன்... அதேசமயம் என்னைச் சந்தேகமும் படாதீங்க. நான் ஒண்ணும் என் நம்பிக்கைகளை உங்க மேல திணிக்கல. உங்களைப் பயமுறுத்தறதும் என் நோக்கம் இல்ல.

என் மகள் அந்த அறைல தூக்குப் போட்டுக்கிட்ட தனாலதான் அந்த அறை பூட்டியே கிடக்குது. ஒருநாள் ஒருத்தர் உங்களைப் போலவே அகால நேரத்துல வந்தார். தங்க இடம் கொடுத்தேன். அவருக்கும் இதே அனுபவம் ஏற்பட்டது.

ஆனா, அப்ப நான் இதை நம்பலை.

ஒருநாள் நான் தங்கினப்ப அவளோட நடமாட்டத்தை உணர்ந்தேன். என்கிட்ட மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எல்லாம் எழுதினா.

ஆவி கடிதம் எழுதுமான்னு திருப்பி எல்லாம் கேக்காதீங்க. என் மகள் கையெழுத்து எனக்குத் தெரியும். ஆனா, அவளை மன்னிக்க என்னால முடியலை. அதுக்குப் பிறகு அந்த அறையை நான் திறக்கவே இல்லை.



நீங்க வந்தப்பத்தான் திறந்தேன். உங்களுக்கு என்ன நடக்குதுன்னும் பார்க்க ஆசைப்பட்டேன். என் மகளோட ஆவி உங்களையும் விடலைங்கறது இப்ப தெரியுது. இனி அந்த அறையை எந்தக் காலத்துலயும் யாருக்காகவும் திறக்க மாட்டேன்.

ஒரு எழுத்தாளரான நீங்க இதை நம்பினாலும் சரி, நம்பலேன்னாலும் சரி, ஐ டோன்ட் கேர்.

ஆனா நம்பிக்கை வெச்சு தப்பித் தவறியும் அவளுக்கு எந்த உதவியும் செய்ய மட்டும் ஆசைப்பட்டுடாதீங்க. அவ என் குடும்ப மானத்தையே வாங்கினவ... அவ இப்படி அல்லாடறதுதான் அவளுக்குச் சரியான தண்டனை.''

நரசிம்மனின் விளக்கத்தைத் தொடர்ந்து பாஸ்கரன் எதுவும் பேசாமல் அந்த அறையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

உள்ளே சென்றவன் அந்தக் காகிதப் பந்துகளை எடுத்துத் திரும்பப் பார்த்தான்.

வியப்பாக இருந்தது. ஜன்னல் திறப்பில் காற்று திருடனைப் போலப் புகுந்து முகத்தில் கொஞ்சவும் இழுத்து மூச்சு விட்டான்.

சக்திவேல் வந்து கொண்டிருப்பதும் ஜன்னல் வழியே தெரிந்தது.

ஒருவர் இப்பொழுதுதான் ஒரு குண்டைப் போட்டுவிட்டு போயிருக்கிறார்.

அடுத்தது இவன்...

இவன் என்ன சொல்லப் போகிறான்?

''சார்ர்...''

''வாங்க சக்தி.''

''என்ன சார்... நீங்களும் அடிவாரத்துக்குப் போயிருந்தீங்க போல இருக்குதே?''

''ஆமாம் என்ன நடக்குதுன்னு பார்க்கப் போயிருந்தேன்.''

''என்னை எங்க அப்பா வெளியவே விடலை. அடுத்து நாய் கீய் வந்து எகிறிப் பிடிச்சுட்டா என்ன பண்றதுங்கற பயம் வேற...''

- பாஸ்கரன் சிரித்தான். சக்திவேலிடம் கிராமத்து வெகுளித்தனமும் வெள்ளந்தியும் அங்குலத்துக்கு அங்குலம் தெரிந்தது.

''அப்புறம் சார்... இதையெல்லாம் பத்தி என்ன சார் நினைக்கறீங்க?''

பாஸ்கரனிடம் சிரிப்பு தொடர்ந்தது.

''நீங்க சிரிக்கறதைப் பார்த்தா உங்களுக்கு கொஞ்சம்கூட பயமோ ஆச்சரியமோ இல்லைங்கற மாதிரி தெரியுதே...''

''இருக்கு சக்திவேல்... நிறையவே ஆச்சரியங்கள் இருக்கு. எனக்கு இங்க நிறைய வேலைகளும் இருக்கு.''

''அதைத்தான் சார் நானும் சொல்ல வந்தேன். நீங்க இங்கேயே இருந்தா நாம நிறைய விஷயங்களைக் கண்டுபிடிக்கலாம்.''

''கண்டுபிடிப்போம்... கண்டு பிடிப்போம்...''

''பாவம் சார் வராகன்... அவன் வீட்ல எல்லாரும் அப்படியே நிலைகுலைஞ்சு போயிட்டாங்க. நானும் எங்க தற்கொலை பண்ணிக்குவேனோன்னு என் வீட்லையும் எல்லாருக்கும் பயம்... ஆமா உங்களுக்கு ஏதும் பயப்பட்றா மாதிரி...''

சக்திவேல் கேட்க வந்தது புரிந்து பாஸ்கரன் மறுப்பாக பதில் சொன்னான்.

''நான் பயப்படற ஆள் இல்ல சக்தி. பயமுறுத்தப் போற ஆள்.''

அதைக் கேட்ட நொடி சக்திவேல் முகத்திலும் லேசாகப் புன்னகை பரவத் தொடங்கியது.

''உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும் சக்தி.''

''என்ன சார்?''



''நான் தங்கி இருக்கற இந்த ரூம்ல யாராவது தற்கொலை செய்துக்கிட்டாங்களா?''

-சக்திவேல் அந்தக் கேள்விக்கு மட்டும் சட்டென்று பதில் சொல்லாமல் ஒரு மாதிரி பார்த்தான்.

''என்ன சக்தி... தெரியும், தெரியாதுன்னு வாயைத் திறந்து சொல்லுங்க...''

''ஆமாம் சார்... ஸ்டேஷன் மாஸ்டர் சார் பொண்ணு ஒண்ணு தூக்குப் போட்டுக்கிச்சு...''

''இதை ஏன் நீங்க என்கிட்ட சொல்லலை...?''

''அதுக்கு இப்ப என்ன அவசியம்னுதான்...''

''அப்படியா...? சரி சக்தி. நான் அடுத்த டிரெய்ன்லையே கிளம்பறேன். ஊருக்குப் போய்ட்டு திரும்ப வர்றேன். ஏதாவது முக்கியமான விஷயம்னா போன் பண்ணுங்க.''

பாஸ்கரன் சீவின மாதிரி கேள்வி கேட்டு முடிவுக்கு வந்தது சக்திவேலை நிரடியது.

ஒரு மாதிரி பார்த்தான்.

பாஸ்கரன் பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளத் தொடங்கினான். தன் அறை வாசலில் இருந்தபடி ஸ்டேஷன் மாஸ்டரும் பார்த்துக் கொண்டிருந்தார்.

யானைமலை அடிவாரம்.

கார் ஒன்று ஆளரவமில்லாத இடத்தில் வந்து நிற்கவும் உள்ளிருந்து ஒரு பெண்மணி இறங்கத் தொடங்கினாள்.

பட்டுச் சேலையும் தங்க நகைகளுமாய் பணக்காரத் தனத்தை நிறையவே காட்டினாள்.

இறங்கிய அவள் கையில் ஒரு வயர்க்கூடை இருந்தது. அதில் தேங்காய், பழம் என்று ஏகத்துக்கும் பூஜை பொருட்கள்.

அதற்கு நடுவில் நல்ல பளபளப்பான கட்டாரிக் கத்தி ஒன்று.

# 17

அந்த நீளமான கத்தியுடன் மிகப் பழகியது போல அந்த பெண் அந்த மலைத் தளத்தில் நடந்து செல்லத் தொடங்கினாள்.

அங்கும் இங்குமாக ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. காய்ச்சலெடுத்த நிலத்திற்கேயுரிய பிரண்டை, இலந்தை, நெருஞ்சி, ஊமத்தைச் செடிகளும் அதற்கு நடுவில் வலம் வரும் ஓணான் மற்றும் அரணைகளும், அவள் சேலை சரசரக்க நடந்து வருவதைப் பார்த்து மிரண்டு போயின.

அவள் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடியே நடந்தாள். பொதுவில் அந்த நேரத்தில் யாரும் அங்கே நடமாடுவதில்லை என்பது அவளுக்குத் தெரியுமோ என்னவோ?

யானை மலையில் துண்டுப்பாறைகள் என்று ஒன்றும் பிரமாதமாகக் கிடையாது. அதிலும் மேல்பாகத்தில் யாராவது நடந்து சொன்றால் பார்க்க பளிச்சென்று தெரியும்.

டிரைவர் தொலைவில் நின்று கொண்டு அவள் போவதைப் பார்த்தபடியே இருந்தான். அவள் கைக்கடிகாரத்தையும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள். நடையில் வேகத்தைக் கூட்டத் தொடங்கினாள்.

மலையின் பக்கவாட்டில் நரசிம்ம மூர்த்தியின் ஆலயம் தெரிந்தது. அதைப் பார்த்தபடியே கண்களை மூடி சில நொடி தியானித்தாள்.

பல்லவனை வெற்றி கொள்வதற்காகப் பெரிய யாகம் நடத்தி, அதன் பின் அங்கே நரசிம்மப் பிரதிஷ்டை செய்த பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் கோவில் அது.

ஆயிரம் வருடங்களைக் கடந்து விட்டது.

தொடர்ந்து நடந்த அந்தப் பெண்மணியின் கண்களில் ஒரு ஆவாரந்தழைப் புதர் மலைப்பாறையின் பக்கவாட்டுச் சரிவை ஒட்டி மண்டிக் கிடக்கத் தெரிந்தது.



அங்கே நின்ற அந்தப் பெண் திரும்பவும் சுற்று முற்றும் பார்த்தாள். பின் கொண்டு வந்த கத்தியை எடுத்து அந்தப் புதரை தானே வெட்டிச் சுத்தம் செய்ய முயன்றாள்.

எல்லாமே பார்ப்பதற்கு மிக ஆச்சரியமான ஒன்றாக இருந்தது.

புதர் சுத்தப்பட சுத்தப்பட ஒரு பெரிய கல்மேடை ஒன்று மலைப் பாறையின் பக்கவாட்டுச் சரிவை ஒட்டி தெரியத் தொடங்கியது.

ஒரு பத்து நிமிடப் போராட்டத்திற்கு பின் அங்கே முழுமையாக ஒரு சரபேஸ்வரர் விக்கிரகம் தெரியத் தொடங்கியது.

ஒற்றைக் கல்லில் ஆன விக்கிரகம். சிங்கத்தலை, பறவைச் சிறகு கொண்டு இரு மிருகக் கால்களோடு அது எழுந்து நிற்கும் காட்சி பார்க்க பயமூட்டக் கூடியதாக இருந்தது.

அந்தப் பெண்மணியோ கண்ணில்பட்ட சரபேஸ்வர மூர்த்தியைப் பார்த்து கண்களில் பரவசத்தைக் காட்டினாள்.

வயர்க் கூடையில் கொண்டு வந்திருந்த தேங்காய் பழங் களை வெளியே எடுத்து வைத்து பூஜிக்கவும் தொடங்கினாள்.

கூடையில் ஒரு புத்தகமும் இருந்தது.

அது பாஸ்கரன் எழுதிய ஒரு சரித்திர நாவல்! தேங்காய் பழம் வைத்து ஒருபதினைந்து நிமிடம் வரை பூஜை செய்தவள் கண்களை மூடிக் கொண்டு தியானமும் செய்தாள். அப்போது அவளது உதடு ஏதோ ஒரு குறிப்பிட்ட மந்திரத்தைத் திரும்பத் திரும்ப ஜெபித்தது.

அவள் அங்கே அப்படிச் செயல்படுவதை இறுதிவரை யாரும் பார்த்த மாதிரி தெரியவில்லை. கார் டிரைவர் கூட காரை விட்டு விலகி, அவள் என்ன செய்கிறாள் என்று பார்க்க ஆசைப்படவில்லை.

ஆச்சரியம்தான்!

ஹோல்டால் பேக்கை கீழே வைத்துவிட்டு வீட்டுக் கதவை திறக்கத் தொடங்கியபோது, ''வந்துட்டீங்களா?'' என்று ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தான்.

எதிர் ஃப்ளாட் துர்கா!

அவன் 'உம்' என்று ஒரு சின்ன சப்தத்தை அவளுக்குப் பதிலாக வைத்துவிட்டு கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையத் தொடங்கினான். அவளும் பின்னாலேயே தொடர்ந்தாள். அவள் கைகளில் தபால்காரர் கொண்டு வந்து தந்திருந்த கடிதங்கள், புத்தகங்கள் என்று ஏகத்துக்கு இருந்தன.

''ஆமா எங்கே போய்ட்டீங்க...அம்மாவைப் பாக்கவா?'' - அவள் கடிதங்களை வைத்தபடியே கேட்டாள்.

அவன் பதில் சொல்லாமல் அவள் டேபிள் மேல் வைத்த கடிதங்களில் பார்வையைச் செலுத்தினான். அவளுக்கு எரிச்சலாக வந்தது. இருந்தும் அடக்கிக் கொண்டாள்.

''கேக்கறேன்ல'' என்றாள் சற்றுச் சிணுங்கலாக. சிருட்டென்று அவளைப் பார்த்தான். பார்வை அவளைக் குத்தியது. அவள் புரிந்து கொண்டாள். கூந்தலின் குஞ்சரத்தை ஆள்காட்டி விரலால் சுழற்றிக் கொண்டிருந்தவள், அதை நிறுத்திவிட்டு பதிலுக்கு அவனை மிரள மிரளப் பார்த்தாள்.

''துர்கா... நீ ஒண்ணும் எம் பொண்டாட்டி இல்ல. நீ கேக்கற கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்றதுக்கு. நான் உள்ள வந்து இன்னும் உக்காரக்கூட இல்லை, அதுக்குள்ற 'நைநை'ன்னா என்ன அர்த்தம்?''

- அவன் பதிலில் அவளிடம் மிரட்சி பெருகத் தொடங்கியது.

'பொண்டாட்டி இல்லைன்னு யார் சொன்னது...?' - மனசுக்குள் கேட்டுக் கொண்டாள். அந்த நொடிப் போதில் கண்களில் ஈரம் கூடு கட்டி விட்டது. அவன் அதைப் பார்த்து உடனே பெருமூச்சு விட்டான். பெருமூச்சோடு ''சரிம்மா.. நீ கிளம்பு- நான் ஏற்கனவே குழப்பத்துல இருக்கேன். நானே



உன்னை வந்து அப்புறமா பார்த்துப் பேசறேன். கிளம்பு... கிளம்பு.'' என்று துரிதப்படுத்தினான். அவள் கிளம்பக் காலெடுத்தவள் நின்றாள்.

''என்னம்மா...?''

''ஒண்ணுமில்ல. ப்ரொபசர் மீனாட்சிசுந்தரம்னு ஒருத்தர் உங்களைப் பார்க்க வந்தார்...''

''எப்போ...?''

''இப்பதான் ஒரு மணி நேரம் இருக்கும்.''

''அவர் மட்டும்தான் வந்தாரா... இல்ல கூட யாராவது?''

''அவர் மட்டும்தான் வந்தார். காபி கூட போட்டுக் கொடுத்தேன்.''

''அப்படியா. தேங்க்யூ... தேங்க்யூ ஸோ மச். அவர் என்னோட காலேஜ் புரொபசர்...''

''தெரியும்...''

''எப்படி?''

''அவரே சொன்னாரே.''

''ஓ... சரி நீ கிளம்பு...''

''இன்னும் சில விஷயங்கள் பாக்கி இருக்கு.''

''என்ன...?''

''சந்திரப்பிரகாஷ்னு ஒருத்தர். ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட்ல ஒர்க் பண்றாராம். அவரும் பார்க்க வந்திருந்தார்.''

''சரி... அப்புறம்...?''

''அப்புறமா ஒரு ஜைன சாமியார்... வாய் மூக்குக்கெல்லாம் துணியைக் கட்டிக்கிட்டு வந்திருந்தார்...''

''ஜைனச் சாமியாரா...!''

''ஆமா... சந்திரப்பிரபாங்கறது அவங்க பேராம்.''

''லேடியா...?''

''ஆமாம்...!''

''சரி அவ்வளவுதானா... இல்ல இன்னும் இருக்கா...?''

''இன்னும் ஒண்ணே ஒண்ணு...''

''என்ன... சீக்கிரம் சொல்லு...''

''கிளி ஜோசியம் தெரியும்தானே...?''

''அதுக்கென்ன இப்போ...?''

''கத்தாதீங்க... ஒரு கிளி ஜோசியக்காரன் கிட்ட உங்களுக்காக ஜோசியம் பார்த்தேன்.''

''வேண்டாத வேலை... எனக்காக நீ பார்க்கறதுங்கறது வேண்டவே வேண்டாத வேலை. சரி இப்ப அதுக்கு என்ன...?''

''உங்களுக்கு காளி சிலை படத்துல வந்துச்சு. நீங்க ஜாக்கிரதையா இருக்கணுமாம். இல்லேன்னா...'' துர்கா தயங்கித் தயங்கிச் சொல்வதில் பாஸ்கரன் எரிச்சலின் உச்சத்துக்கே போனான்.

''இல்லேன்னா...?''

''உங்க உயிருக்கே ஆபத்து வரலாம்னு சொன்னான்.'' துர்கா முடிக்கும் போது அவள் குரலில் உயிரே இல்லை.

''சரி... நான் ஜாக்கிரதையா இருந்துக்கறேன். எனக்கு நிறைய வேலை இருக்கு. நீ கிளம்புறியா?''

சாதாரணமாக அவளுக்கு பதிலைச் சொல்லிவிட்டு, திரும்பவும் கடிதங்களைப் பார்க்கத் தொடங்கினான்.

ஓரப்பார்வை வழியாக அவள் போய்விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு முதல் காரியமாகப் போய் கதவைச் சாத்தித் தாழிட்டான்.

அப்படியே போய் கட்டிலில் அமர்ந்தான்.

லேசாக தலையைச் சுற்றியது.

மீனாட்சி சுந்தரம், சந்திரபிரகாஷ், ஜைனத் துறவி என்று யார் யாரோ வந்து போயிருக்கிறார்கள். கொத்துக் கொத்தாக வாசகர் கடிதங்கள் வேறு டேபிள் மேல்.



நடுவில் சமணப்பட்டியின் ஆச்சரியமூட்டும் சம்பவங்களின் அணிவரிசை.

எல்லாமாச் சேர்ந்து 'பாஸ்கரன், உனக்கு நிறைய வேலை இருக்கிறது' என்று சொல்லாமல் சொல்கிற மாதிரி தோன்றியது.

நடுவில் தொலைபேசி வேறு சிணுங்கி அவனை அழைத்தது.

இது யாராக இருக்கும்?

போய் காதைக் கொடுத்தான்.

மறுமுனையில் இருந்து மீனாட்சி சுந்தரம்தான் பேசினார்.

''பாஸ்கரன் எங்க போய்ட்டே நீ...?''

''நமஸ்காரம் சார்... கொஞ்சம் வெளியூர் போய்ட்டேன். வீட்டுக்கு வந்திருந்தீங்க போல இருக்கே?''

''ஆமாம். உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசத்தான் வந்தேன்.''

''அப்படி என்ன சார் முக்கியமான விஷயம்?''

''அதை போன்லல்லாம் பேச முடியாது பாஸ்கரா... நீ இப்ப ஃப்ரீயா இருக்கியா - நான் வரேன்.''

''சார்.. வெரி சாரி- நீங்க வரவேண்டாம். நான் உங்களைப் பார்க்க வரேன். நானும் உங்ககிட்ட நிறைய பேசணும்.''

''இங்க வேண்டாம்.. நானே வரேனே...''

''சரி சார் வாங்க.''

''ஒரு ஒன் அவர்ல வந்துட்றேன். ஓ.கே.!''

''வாங்க சார்.''

-ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பியவனை ''டொக் டொக்'' எனும் கதவைத் தட்டும் சப்தம் தன் பக்கம் இழுத்தது.

எரிச்சல் பீறிட்டது.

திரும்பவும் துர்காவோ...? 'அறிவு கெட்டவள்' முணுமுணுப்போடு போய்க் கதவைத் திறந்தவன் எதிரில்...

# 18

திறந்து கொண்ட கதவுக்கு அப்பால் வாட்டசாட்டமாக ஒரு மனிதர்!

அவரை வெறித்த பாஸ்கரனுக்கு அவர் அதிகம் சிரமம் தரவில்லை. ''ஹலோ மிஸ்டர் பாஸ்கர் - நான் சந்திர பிரகாஷ். ஆர்க்கியாலஜில சீனியர் ஆபீசரா இருக்கேன்.'' என்றபடி உள்ளே வந்தார்.

ஒரு நாற்காலியைக் காட்டி அதில் அவரை உட்காரச் சொன்னான் பாஸ்கரன்.

அவரும் உட்கார்ந்தபடி அவனைப் பார்த்தார். முகத்தில் மிதமான புன்னகை. ம.பொ.சி. மீசை.

''நீங்க வந்த விஷயம்?''

''சொல்றேன். உங்களப் பத்தி நிறைய கேள்விப் பட்டிருக்கேன். ஆனா இன்னிக்குத்தான் பார்க்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கு.''

''மதுரை ஆர்க்கியாலஜி டிவிஷன்ல நான் உங்களைப் பார்த்ததில்லையே...''

''நான் தஞ்சாவூர் டிவிஷன்.''

''சரி என்ன விஷயம் சொல்லுங்க.''

''சமீபமா சமணப்பட்டிக்குப் போயிருந்தீங்களா?''

''ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இன்ஸ்பெக்டர் ரத்னம் போன் பண்ணி சொன்னார்.''

''ஓ... மலைக்கு இன்வெஸ்டிகேஷனுக்கு வந்த அந்த மனுஷரா. ரொம்ப போல்டான ஆள்தான்!''

''எனனோட கிளாஸ்மெட்டும் கூட. எப்பவுமே ரத்னம் ரொம்ப தைரியசாலி. முற்போக்கா சிந்திக்கிறவரும்கூட.'' - சந்திரபிரகாஷ் சொல்லி முடித்துவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார்.



''சரி.. சமணப்பட்டிக்குப் போனதப் பத்தி கேட்டீங்க... எதுக்குன்னு தெரிஞ்சுக்கலாமா?'' - பாஸ்கரனும் பதில் கேள்வியோடு தன் பங்குக்கு புகைவிடத் தொடங்கினான்.

''பாஸ்கரன் நீங்க ரொம்ப பிரபலமான ஒரு எழுத்தாளர். கற்பனையா சரித்திரக் கதைகளை எழுதற பல எழுத்தாளர் களுக்கு நடுவுல ஆதாரபூர்வமா கதை எழுதற ஒரே எழுத்தாளர்.

அந்த நம்பிக்கைல உங்களைப் பார்த்து ஒரு கேள்வி. சமணப்பட்டி பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?''

-சந்திரபிரகாஷ் கேட்ட விதத்தில் ஒருவித கூர்மை. கூடவே நீளமாய் ஒரு புகைக் குழாய்.

''இப்போதைக்கு அந்த கிராமத்தைப் பத்தி என்னால எதுவும் சொல்ல முடியாது மிஸ்டர் சந்திரபிரகாஷ். அங்க சம்திங் ஏதோ இருக்குன்னுதான் நினைக்கிறேன்.''

-பாஸ்கரன் பதிலோடு சிகரெட் புகையில் ஆவி உருவங்களை உருவாக்கி வெளியில் விட்டான்.

''சம்திங் ஏதோன்னா.. மித் ஏதாவது இருக்குங்கறது உங்க கருத்தா?''

''மித்தா... நோ - நோ.. எங்கேயும் மித்துன்னு ஒண்ணும் தனியா இருக்க வாய்ப்பே இல்லை மிஸ்டர் சந்திரபிரகாஷ்...'' ஆச்சரியமளித்தது அவன் பதில்.

''என்ன சொல்றீங்க பாஸ்கரன்?''

''மித்துன்னு ஒண்ணு கிடையவே கிடையாதுன்னு சொல்ல வரேன்...''

''ஒரு சரித்திரக் கதை எழுத்தாளரா எவ்வளவோ மித்தை வெச்சு அமானுஷ்யமா நாவல்கள் பண்ணின நீங்களா இப்படிச் சொல்றீங்க?''

''நாவல் வேற - ரியல் லைஃப் வேற மிஸ்டர் சந்திரபிரகாஷ். சுவாரஸ்யத்துக்காகவும் சுவைக்காவும் சொல்றது எப்படி உண்மையாக முடியும்?''

''அப்ப ஆதாரபூர்வமா நீங்க எழுதறதெல்லாம்...''

"ஆதாரபூர்வமா அதேசமயம் கற்பனையோடன்னு கொஞ்சம் சேர்த்துக்குங்க..."

- பாஸ்கரனின் பதில் அந்த சந்திரபிரகாஷை நிறையவே சவட்டியது. முகம் மாறிப் போனது.

"இந்தப் பதிலை நீங்க எதிர்பார்க்கலை இல்ல...?"

"ஆமாம்... இன்ஸ்பெக்டர் ரத்னமும் உங்கள மாதிரிதான் பேசினார்."

"சரி விஷயத்துக்கு வாங்க. உங்க டிபார்ட்மென்ட் அங்க எந்த ஆய்வையும் ஏன் இதுநாள் வரைல பண்ணல?"

- பாஸ்கரன் கேட்க நினைத்த கேள்வியைக் கேட்டுவிட்டு பயணக் களைப்பு நீங்கியிராதபடி ஒரு பெரிய கொட்டாவியை வேறு விட்டான்.

"யாருக்கும் தைரியமில்ல பாஸ்கரன்..." சந்திரபிரகாஷ் அத்தனை நேராக ஒரு உண்மையைச் சொல்வார் என்று பாஸ்கரன் எதிர்பார்க்கவில்லை.

"உங்களப்போல மித்தெல்லாம் எதுவுமில்லைன்னு நம்பி அங்க போய் ஆராய நினைச்ச சிலர் உயிரோடயும் இல்ல...!"

அடுத்து சந்திரபிரகாஷ் சொன்னதில் அவனிடம் பூச்சி பறந்தது. கூடவே கொஞ்சம் போல சிரிப்பும் பிறந்தது.

"நம்ப முடியலையா பாஸ்கரன்?"

"ஆமாம்... அவங்க சாவுக்குப் பின்னால வேற காரணங்கள் இருக்கணும் மிஸ்டர் சந்திரபிரகாஷ்..."

"இப்படி நாங்களும் யோசிச்சுப் பார்த்தோம் பாஸ்கரன். ஆனா அங்க போன யாருமே உயிரோட இல்லாத போயிட்டதால எங்க யாருக்கும் அங்கே போக துணிச்சல் இல்லாம போயிடிச்சு."

"அப்ப அங்க போய் உயிரோட இருக்கிற யாரையாவது பார்த்தா உங்களுக்கு நம்பிக்கை வருமா?"

"நிச்சயமா.. ஆனா ஒரு விஷயம்."

"என்ன?"



"அந்த மலைல நிறைய கல்வெட்டுச் செய்திகள் இருக்குதாம். அந்தச் செய்திப்படி ஐந்து பேர் மட்டும் அங்க போய் வரலாம். அவங்கள மட்டும் அந்த மலையோட மர்மம் எதுவும் செய்யாது. மத்த யாரா இருந்தாலும் அவங்க அங்க அலையற சமண சன்யாசிகளின் சாபத்துக்கும் தாக்கத்துக்கும் உள்ளாகி தற்கொலை செய்துகிட்டுதான் தீருவாங்கங்கறது தான் எங்க டிபார்ட்மென்ட் இப்ப நம்பற விஷயமா இருக்கு."

- அங்கே இங்கே என்று சாதாரணமாகப் பேசிக்கொண்டு வந்த சந்திரபிரகாஷ் கல்வெட்டுச் செய்தியை சொல்லி ஒரு அசத்து அசத்தவும் பாஸ்கரன் அவரையே கூர்மையாகப் பார்த்தான்.

"என்ன பாக்கறீங்க?"

"இல்ல.. அங்க கல்வெட்டுகள் இருக்கறது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

- அடுத்த நொடி சந்திரபிரகாஷ் தான் கொண்டு வந்த ஹேண்ட் பேக்கைத் திறந்து அதிலிருந்து சில புகைப்படங் களை எடுத்துப் போட்டார்.

அவை பாஸ்கரன் அங்கு பார்த்த அதே கல்வெட்டுகள் தான். குறிப்பாக அவன் பெயரும் சக்திவேல் பெயரும் அருள்மொழி பெயரும் இருக்கும் அந்தக் கல்வெட்டுப் பாடல் அவனை நெற்றியைத் தேய்க்கவிட்டது.

"இது எப்படி உங்ககிட்ட?"

"அங்க நிலவற நம்பிக்கையைப் பொருட்படுத்தாம மலை ஏறிப் போய் இதைப் புகைப்படம் எடுத்த மிஸ்டர் குணாளன் மூலமா இது எனக்குக் கிடைச்சது."

"அப்ப அந்த குணாளன்?"

"அவரும் சரி... அவரோட சேர்ந்து அந்தக் கரட்டு மலைக்குப் போன லாரன்சும் சரி இப்ப உயிரோட இல்லை மிஸ்டர் பாஸ்கரன்!"

- சந்திரபிரகாஷ் பலத்த அதிர்ச்சியைச் சாதாரணமாகப் பேசி பாஸ்கரனுக்குள் உருவாக்கிவிட்டு தொடர்ந்து அவனைக் கூர்மையாகப் பார்த்தார். பாஸ்கரன் வெறித்தான்.

''பை த பை... நீங்க சமணப்பட்டிக்குப் போனப்போ அங்க மலைல கிடந்த பிணம் தான் லாரன்ஸ். தப்பிச்சா போதும்னு அங்கிருந்து வந்து என்னைச் சந்திச்ச குணாளன்...''

''குணாளன்?''

''நேற்று ராத்திரி வீட்டுல எலெக்ட்ரிக் ஷாக் அடிச்சு கருகிப் பிணமாயிட்டார். இவங்க இரண்டு பேருமே பத்திரிகையாளர்களும் கூட.... ஆமா நீங்க பேப்பர் பார்க்கலையா?''

- சந்திரபிரகாஷ் அடுக்கடுக்காக அதிர்ச்சிகளை அவனுக்குள் பாறைக்கு அடியில் வைக்கும் டைனமைட்டைப் போல வைத்துக் கொண்டே வந்தார்.

டேபிள் மேல் கடிதங்களோடு பேப்பரும் மடித்த நிலையில் இருந்தது. எழுந்து சென்று அதைப் பிரித்து செய்தி உள்ள பக்கத்தை பாஸ்கரன் எதிரில் காட்டினார்.

பாஸ்கரனிடம் பொட்டுப் பொட்டாக வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது.

''நீங்க பேப்பர் பார்க்கலையா பாஸ்கரன்?''

''ஆமாம்... பார்க்கல. நான் இப்பதான் சமணப்பட்டியில் இருந்து வந்தேன். எனக்கு வந்த கடிதங்களைக் கூட பார்த்து முடிக்கல. அதுக்குள்ள நீங்க வந்துருக்கீங்க... எல்லாமே பயங்கர ஆச்சரியமா இருக்கு.''

''ஆமாம் பாஸ்கரன்... நான் உங்களை மெயினா பார்க்க வந்ததே இதைப்பத்தி எல்லாம் பேசத்தான். அப்படியே இந்தப் பாடல் படி உள்ள ஐந்து பேர்ல நீங்களும் ஒருத்தர்னு புரிஞ்சுகிட்டுதான் வந்துருக்கேன்.''

''ஸோ...?''

''அந்த மலைப் புதிரை உங்களாலதான் விடுவிக்க முடியும். அது மட்டுமில்ல..''

- சந்திரபிரகாஷ் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வந்தது போல முக்கியமான இடத்தில் இடைவெளி விட்டுவிட்டு பாஸ்கரனின் முகத்தில் லயித்தார்.



அவன் முகத்தில் ஏகப்பட்ட மாறுதல்கள். எதையுமே அறிவு பூர்வமாக மட்டுமே அணுகிப் பார்த்த அவன் மனதில் ஏராள அதிர்வும் கூட...

அவனாக அடுத்த கேள்வி கேட்கட்டும் என்கிற மாதிரி அவனை மௌனமாக வெறித்த சந்திரபிரகாஷை பாஸ்கரனும் தொடர்ந்து வெறித்தான். பின் ''அது மட்டுமில்லன்னு ஏதோ சொல்ல வந்தீங்களே?'' என்று ஈன சுரத்தில் கேட்டான்.

''சொல்றேன்.. ஆனா அதுக்கு முந்தி அங்க இருக்கற மித்த நீங்க நம்பணுமே...''

''லுக் மிஸ்டர் சந்திரபிரகாஷ். நம்ம அறிவைக் கொண்டு உணர முடியாத சில விஷயங்களும் இந்த உலகத்துல உண்டு. இந்த உலகம் நாம பிறக்கறதுக்கு முந்தியும் இருந்தது. நாம இறந்த பிறகும் இருக்கும். இதுல நாமளை இருக்கப்போற நாள் ரொம்ப ரொம்ப சொற்பம்தான். அந்த குறைந்த அளவு நாளுக்குள்ள இந்த உலகத்தை மொத்தமா புரிஞ்சுக்க நம்மால முடியாதுங்கறதுதான் எதார்த்தம்...''

''சுருக்கமா சொல்லுங்க.. என்ன சொல்ல வர்றீங்க...?''

''எதை எல்லாம் நம்மால சரியா புரிஞ்சுக்க முடியலையோ அதை மித்துன்னு சொல்லியே பழகிட்டோம். என் வரைல அமானுஷ்யம்கறது ஒரு கஷ்டமான கணக்கு - அவ்வளவுதான். மற்றபடி அதை ஆகாசத்துல வெச்சுப் பாக்கவோ இல்லை அதைப் பார்த்து பயந்து அதோட கால்ல விழுவோ நான் தயாரில்ல...''

''எழுத்தாளர் இல்லையா. அதான் கஷ்டப்பட்டு பெரிய பெரிய வார்த்தைகளப் போட்டு எதை எதையோ பேசறீங்க... மிஸ்டர் பாஸ்கரன், இவ்வளவு சொல்றீங்களே, அங்க போறவங்க எதுக்காக தற்கொலை செய்துக்கறாங்கங்கறதப் பத்தி யோசிச்சுப் பார்த்தீங்களா?''

''அது தற்கொலைதானாங்கறதுலையே எனக்கு சந்தேகம் இருக்கும்போது என்னத்த சொல்ல...?''

''அப்படின்னா...?''

''கொஞ்சம் பொறுங்க சந்திரபிரகாஷ். இதுக்கு விடையை இன்ஸ்பெக்டர் ரத்தினம் உங்களுக்கும் எனக்கும் சொல்லிடுவார். எனக்காவது எழுத்தாளன்கற பொதுவான சமூகக் கடமை மட்டும்தான். ஆனா ரத்தினத்துக்கு அப்படி இல்லை. அவரோட டூட்டியே தற்கொலைன்னு நீங்க நம்பற விஷயங்களைத் தோலுரிச்சுப் பாக்கறது தான்...''

- பாஸ்கரன் சளைக்காமல் சந்திரபிரகாஷிற்கு பதில் சொன்னான்.

''ஒருவேளை அந்த ரத்தினமும் தற்கொலை செய்துகிட்டா நான் சொல்றதைக் கேப்பீங்களா?''

- சந்திரபிரகாஷின் கேள்வி கொஞ்சம் குத்தினாலும் ''அப்படி எதைச் சொல்ல விரும்பறீங்க சந்திரபிரகாஷ்''- என்று அவன் கேட்டபோது, ''அந்தக் கரட்டுல புதைஞ்சு இருக்கற தங்க புத்தர் சிலையைப் பத்தித் தான்''- என்ற சந்திரபிரகாஷின் பதில் ஒரு க்ஷணம் பாஸ்கரனின் நெஞ்சையடைத்தது.

''சார் அங்க புதையல் இருக்கு சார்... அத நாம எடுக்கப்போறோம் சார்...'' என்று வெள்ளந்தியாகப் பேசிய சக்திவேலின் குரலும் ஒரு க்ஷணம் உள்ளுக்குள் எதிரொலித்தது.

நடுவில் தொலைபேசியின் சிணுங்கல். போய் காதைக் கொடுத்தான்.

மறு முனையிலிருந்து சக்திவேல் தான் பேசினான்.

''சார் நான் சக்திவேல் பேசறேன். ஒரு முக்கியமான விஷயம் சார். இன்ஸ்பெக்டர் ரத்தினம் தன் துப்பாக்கியால தானே சுட்டுக்கிட்டு தற்கொலை செய்துகிட்டாராம் சார். இங்க ஊரே ஒரே பரபரப்பா இருக்குதுங்க சார்!''

- பாஸ்கரனிடம் இருந்து ரிசீவர் நழுவியது.



# 19

ரிசீவர் ஒருபுறம் நழுவ மறுபுறம் பாஸ்கரன் தடுமாறியபடி நாற்காலியைத் தேடிப்பிடித்து விழுந்தான்.

''என்ன பாஸ்கரன்... ஏதாவது பேட் நியூஸா?'' - சந்திரபிரகாஷ் கச்சிதமாகக் கேட்டார்.

''ஆமாம் சார். இட் ஈஸ் எ வெரி பேட் நியூஸ்...''

''தெரிஞ்சுக்கலாமா?''

''கட்டாயமா... உங்க நண்பர் இன்ஸ்பெக்டர் ரத்னம் தற்கொலை செய்துகிட்டாராம்...!''

''மைகாட்...'' ஸ்பிரிங்கைப் போல எகிறிக் கொண்டு எழுந்தார் சந்திரபிரகாஷ்.

- முகம் க்ஷணத்தில் பேயறைந்த மாதிரி மாறிவிட்டது. பாஸ்கரன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். நடுவில் துர்கா தலைவேறு தெரியத் தொடங்கியது. வந்தது முதல் அவன் பதட்டத்தோடேயே இருக்கிறான்.

''தலை வலிக்குதா... இரண்டு பேருக்கும் காபிபோட்டுக் கொண்டு வரட்டுமா?''- அக்கறையாகக் கேட்டாள். அவனுக்கு காபி தேவைப்பட்டது.

''உம்!'' - என்றான். மிக சந்தோஷமாகத் திரும்பிப் போனாள்.

''பாஸ்கரன் நான் இப்பவே கிளம்பறேன். எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல.''

''எனக்கும்தான்!''

''மித்துனு ஒண்ணு தனியா கிடையாது. புரிஞ்சுக்க கஷ்டமான ஒரு கணக்கு அதுன்னு சொன்னீங்களே. ரத்னத்தோட தற்கொலையைப் பத்திக் கேள்விப்பட்ட பிறகும் அதே கருத்தானா உங்களுக்கு?''

சந்திரபிரகாஷ் கொஞ்சம் அழுத்தமாகவே கேட்டார். பாஸ்கரனால் பதில் சொல்ல முடியவில்லை.

''பாஸ்கரன்... நீங்க பெரிய எழுத்தாளர். நான் மறுக்கல. ஆனா எல்லா விஷயத்தையும் அறிவுப் பார்வை பார்த்தே புரிஞ்சுக்க முடியாது.

சில புதர்களைப் புரிஞ்சுக்க இதுல இறங்கணும்.

இந்த தர்ம சங்கடமான நிலையிலயும் உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்பறேன். சமணப்பட்டி கரட்டு மலைல நிறைய மர்மங்கள் புரிஞ்சுக்க முடியாதபடி இருக்கு.

அதை நீங்க மனசு வெச்சா புரிஞ்சுக்க முடியும். அதன் மூலமா தங்க புத்தர் சிலை மட்டுமில்ல, பல அதிசயங்களைக் கண்டறிய முடியும்.

அப்படி நீங்க கண்டறிஞ்சுட்டா இது இந்தியன் ஆர்க்கியாலஜிக்கு நீங்க பண்ற பெரிய சர்வீஸா இருக்கும். ஒரு எழுத்தாளரா நீங்க இருக்கறதால மட்டும் நான் இதை சொல்லலை.

இதை எல்லாம் கடந்து அந்த கரட்டுக்கும் உங்களுக்கும் அமானுஷ்யமான ஒரு தொடர்பு இருக்கு.

இல்லேன்னா உங்கபேர் அந்த கல்வெட்டுப் பாடல்ல இருக்க வேண்டிய அவசியம் இல்ல.

ஆகையால அவசியம் நீங்க இந்த மர்மங்களைக் கண்டறிஞ்சு உலகத்துக்குத் தெரியப்படுத்தணும்னு கேட்டுக்கறேன். அதுக்கு உங்களுக்கு எல்லாவித உதவியையும் செய்ய நான் தயாரா இருக்கேன்.

இப்ப நான் புறப்பட்றேன்.''

- சந்திரபிரகாஷ் தூசுதட்டியபடி கிளம்பினார். எதிரில் காபியோடு வந்தாள் துர்கா.

''சாப்ட்டுட்டு போங்கோ...''

''பரவால்ல... தேங்க்ஸ்... ஆங்... நீங்க சாருக்கு என்ன வேணும்?''

துர்கா உடனே நேராக பாஸ்கரனைப் பார்த்தாள். அவள் உதடு ஏதேதோ சொல்லத் துடித்தது. பாஸ்கரன் முந்திக் கொண்டான்.



''அவங்க என் நைபர் மிஸ்டர் சந்திரப்ரகாஷ்.''

''அப்படியா... ரொம்ப அஃபெக்ஷனோட இருக்காங்களே... வெரிகுட்.'' -நாசூக்காக வியப்பை வெளிப்படுத்திக் கொண்டு சந்திரபிரகாஷ் வெளியேறத் தொடங்கினார்.

துர்கா முகத்தில் ஏமாற்றம் கும்மியடித்தது.

அவனை நெருங்கிச் சென்று காபியை நீட்டினாள்.

அவன் அவளை அளந்தபடியே காபியை வாங்கிக் கொண்டான்.

''ஆமா... உங்களை ஒண்ணு கேட்கலாமா?''

''உம்...''

''நான் இன்னும் நைபர் தானா?''

- அவள் அப்படிக் கேட்பாள் என்று தெரிந்தோ என்னவோ, ''வேற நீ யாராம்?'' அழுத்தமாய் கேட்டான். அவள் கண்கள் அடுத்த க்ஷணம் ஈரமானது. முத்து உருளத் தொடங்கியது. அவனுக்குப் புரிந்து போனது. காபியை ஒரு ஓரமாக வைத்தான்.

ஒரு முற்றும் முடிவுமான பதிலை அவளுக்குச் சொல்லியே தீருவது என்பது போல் ஏறிட்டான்.

''இதோ பார் துர்கா, நான் ஒரு ரைட்டர். மனிதர்களை ஊடுருவ முடிஞ்சவங்களாலதான் வெற்றிகரமான எழுத்தாளராக முடியும். அந்த வகைல உன் எண்ணம் எனக்குத் தெரியாம இல்லை.

நீ என்னை விரும்பறது எனக்கு நல்லா தெரியும்.

ஆனா என்னால ஒரே சமயத்துல இரண்டு பெண்களை நேசிக்க முடியாது. அத நீ புரிஞ்சுக்கணும்.''

துர்கா சரேலென்று குத்துவது போலப் பார்த்தாள். கண்ணீர் முத்துக்களிலும் எண்ணிக்கை கூடத் தொடங்கியது.

''அழறதுல அர்த்தமில்ல... நான் அருள்மொழிங்கற பெண்ணை நேசிச்சுகிட்டிருக்கேன். ஐ ஆம் சாரி. உன் எண்ணத்தை மாத்திக்கோ. அதுக்காக உடனே உன்னை நீ என்

தங்கை மாதிரின்னு சொல்ல மாட்டேன். அப்படி சினிமால வேணா சொல்லலாம். என் வரைல நீ என் நல்ல ஃப்ரெண்ட்.

உன் அன்பை நீ நட்பா காட்டலாம். ஈவன் வாடா போடான்னு கூட கூப்பிடு. ரொம்ப சந்தோஷப்படுவேன்.

புரிஞ்சுக்கோ. புரிஞ்சுப்பேன்னும் நம்பறேன்.'' சொன்ன படியே வெளியே பார்த்தான். மீனாட்சிசுந்தரம் வந்து கொண்டிருந்தார்.

துர்கா சிலையாகி விட்டிருந்தாள்.

கண்ணீர் அருவியாக மாறியிருந்தது.

''துர்கா... என் புரொபசர் வரார். நீ இப்படி நிக்கறத பார்த்தா என்னை தப்பா நினைப்பார். முதல்ல கண்ணைத் துடைச்சுக்கோ... கிளம்பு.''

- அவன் பேச்சில் படபடப்பு தொனிக்கத் தொடங்கியது. அவளும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். வேகமாக அங்கிருந்து கிளம்பவும் ஆரம்பித்தாள்.

மீனாட்சிசுந்தரத்தைப் பார்த்துக் கொண்டே தாண்டிப் போனாள்.

''வாங்க சார். வாங்க!''

''என்ன பாஸ்கரா.. யார் அந்தப் பொண்ணு. ஏன் ஒரு மாதிரி இருக்கா...?''

''அது... அது... ஒண்ணுமில்ல சார். ஒரு நாவல்' படிக்கக் கேட்டா- போய் பாடத்தை ஒழுங்கா படின்னேன் அதான்...''

-பாஸ்கரன் செயற்கையாகச் சமாளிப்பதை அவர் உணர்ந்த போதிலும் அதற்குமேல் துர்காவைப்பற்றி அவர் எதுவும் பேசவில்லை. நாற்காலியில் போய் அமர்ந்தார். கொஞ்சம் பெருமூச்சு விட்டார்.

''காபி இருக்கு... சாப்பிட்றீங்களா?''

''இருக்கட்டும்ப்பா.. ஆமா உனக்கு ஒண்ணும் டைட் ஷெட்யூல் இல்லையே?''

''வழக்கம் போலதான்... என்ன சார் விஷயம்?''



''நிறைய பேசணும் பாஸ்கரன் எல்லாமே ரொம்ப அப்நார்மல் எக்ஸ்பீரியன்ஸ்.''

''கிட்டத்தட்ட என் அனுபவங்களும் அப்படித்தான் சார்...''

''அப்ப உன் அனுபவத்தை முதல்ல சொல்லேன்..''

மீனாட்சிசுந்தரம் தூண்டவும் பாஸ்கரன் தன் சமணப்பட்டி அனுபவங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

சமணப்பட்டி...

கோனார்த் தாத்தாவைச் சுற்றி ஊரே திரண்டிருந்தது. சக்திவேலும் அங்கே இருந்தான்.

தாத்தா ஏக வருத்தத்தில் இருந்தார்.

''ஹூம்... நான் படிச்சுப்படிச்சு சொன்னேன். அந்த இனிசுபெக்டரு கேக்கல. இப்ப செத்து சவமாகிக் கிடக்கான். வீம்பு பேசினாலே இப்படித்தான்...''- என்றபடி தாத்தா ஒரு சிட்டிகை பொடியை மூக்கில் ஏற்றிக் கொண்டார்.

''கொஞ்சநாளா நிம்மதியா இருந்தோம். அப்பப்ப கண்ணு பட்ட மாதிரி இப்படி ஆயிடுது. இனியாச்சும் பயந்து நடந்துகிட்டா சரி...''- என்றது ஒரு பெரிசு.

கோனார்த் தாத்தா அதை ஆமோதித்தபடியே சக்திவேலைப் பார்த்தார். அவன் மிடறு காட்டினான்.

''என்னடா மயில்சாமி மவனே... நீ தான் இதுக்கெல்லாம் ஆரம்பம்னு நினைக்கேன்...'' தாத்தா ஒரு மாதிரி இழுக்கவும் சக்திவேலுக்கு உறுத்தியது.

''என்ன தாத்தா சொல்றீங்க?'' என்றான் கொஞ்சம் கமறியபடி...

''என்ன சொல்லுறேனா... சுரைக்காய்க்கு உப்பு இல்ல, சுண்ட வத்த கஞ்சில உவப்பில்லேங்கறேன். வெளக் கெண்ணை. எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சிட்டியா நீ...?''

''தாத்தா...''

''என்ன தாத்தா... பொச கெட்ட பயலே- ஆமா, அது யாருடா அது. புதுசா ஒரு ஆள் வந்து செத்துப் போன இன்ஸ்பெக்டராண்ட கூட கித்தாப்பா பேசிக்கிட்டிருந்தது...?''

''அவரு.. ஒரு எழுத்தாளர் தாத்தா.''

''அவரு எப்படி இங்க வந்தாரு?''

சக்திவேல் மௌனமாக தாத்தாவைப் பார்த்தான்.

''கேக்கேன்ல... நீதானே வரச் சொன்னே?''

அவன் மௌனம் ஆமோதித்தது.

''இப்படி ஊமக்கோட்டானா நின்னா எப்படி? ஊர் நிம்மதியா இருக்கறது உனக்குப் பிடிக்கலையாக்கும். பாத்தில்ல... இனிமேலாச்சும் அந்த கரட்டைப் பத்தி நினைக்காம உருப்பட்ற வழியப்பாரு.

ஏதோ சாத்தாஞ்சாமி இருக்கவும் தப்பு பண்ணாலும் பொழச்சிக் கிடக்கீங்க.

இனி ஒரு பய இந்த ஊர்ப்பக்கம் வரக்கூடாது.

எதுக்கும் இருக்கட்டும்னு ஒரு சாங்கியம் பண்ணி சாந்தி பண்ணப்போறேன்.

இல்லாட்டி என் கண் எதிர்லயே இந்த ஊர்ல ஒருத்தரும் உசுரோட இல்லாம போயிடுவீங்கடா நாயுங்களா...''

- தாத்தா உச்சகட்ட சலிப்போடு அங்கிருந்து ஊன்றுகோலோடு விலக ஆரம்பித்தார். சக்திவேலுக்கு என்ன பேசுவது, எதைப் பேசுவது என்றே தெரியவில்லை.

சோர்வோடு வீட்டுக்கு வந்த போது மகேஸ்வரி ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். கூட்டிக் கொண்டு போக மாமாவும் ஊரிலிருந்து வந்திருந்தார்.

''மாப்ள... அப்ப நாங்க கிளம்பறோம்.''

''என்ன மாமா அவசரம்?''

''சரிதான்... லீவு முடிஞ்சு போச்சுல்ல. இது படிக்கப் போக வேண்டாமா?''



- சக்திவேல் மகேஸ்வரியை நிமிர்ந்து பார்த்தான் மகேஸ்வரி ஜாடை காட்டி தனியே அழைத்தாள். போனான்.

''சக்தி... நான் போறேன். நீ இங்க ஜாக்கிரதையா இருந்துக்க.''

''சரி புள்ள...''

''என்கிட்ட சரின்னு சொல்லிட்டு அப்புறமா புதையல் ஆசைல அந்த கரட்டுப் பக்கம் போயிடாதே.''

''இப்பத்தான் கோனார்க் கெழடு ஒரு போடு போட்டு முடிச்சிச்சு. இப்ப நீயா..''

''யார் சொன்னா என்ன... நல்லதுக்குத்தானே. நீ இப்படி வில்லங்கம் பண்றது தெரிஞ்சு அப்பா அத்தைகிடட வருத்தப்பட்டிச்சு.

'உன் பையன உருப்பட்ற வழிய பாக்கச் சொல்லு. இப்படியே இருந்த என் மகள நான் கட்டிக் கொடுக்கறத பத்தி யோசிக்க வேண்டி வரும்'னிச்சு...''

- அந்த பதில் சக்திவேலை கொஞ்சம் குத்தியது. கலக்கத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

அவள் தொடர்ந்தாள்.

''இதோ பாரு சக்தி.. என் மனசு பூரா நீதான் இருக்கே. நீ வீணாயிடக் கூடாதுன்னுதான் இதைச் சொன்னேன். நாலு காசு சம்பாதிக்கிறவங்களதான் யாரும் விரும்புவாங்க. இல்லாட்டி பெரிசா எதையாவது சாதிச்சுக் காட்டணும். இரண்டுல ஏதாச்சும் ஒண்ணு பண்ணு.

உனக்காக நான் காத்துக்கிட்டே இருப்பேன்.

நான் காத்துக்கிட்டிருக்கறதை மனசுல வெச்சுக்கிட்டு ஜாக்ரதையா பொறுப்பா நடந்துக்கோ...''

- மகேஸ்வரி அற்புதமாக அவனுக்கு தன்னைப் பற்றிச் சொல்லிவிட்டு கொஞ்சம் கலங்கிய விழிகளோடு புறப்பட்டாள்.

சக்திவேல் வெளியே வந்தான்.

இவர்கள் எச்சரிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதா இல்லை தனது அனுபவத்தை கணக்கில் எடுத்துக் கொள்வதா- சிலை பேசியதும் - அதைத் தொடர்ந்து நடந்ததும் சாதாரண விஷயங்களா?

அது பயந்து ஒதுங்குவதற்காகவா? வியந்து புரிந்து கொள்வதற்காகவா?

- மண்டையைப் பிராண்டிய கேள்விகளோடு கரட்டைப் பார்த்தான். பாஸ்கரன் இருந்தால் சரியான பதிலைச் சொல்வான் என்று தோன்றிற்று. இப்பொழுதுதான் வந்துவிட்டுப் போயிருக்கிறான். எனவே நாமே போய்ப் பார்த்தால்...?

மதுரைக்குப் போவதுதான் சரியென்று பட்டது. எதைச் சாக்கு வைத்துப் புறப்படலாம்? தாடையைத் தேய்க்கத் தொடங்கி விட்டன சக்திவேலின் கரங்கள்.

பாஸ்கரன் அவ்வளவையும் சொல்லி முடித்திருந்தான். மீ.சு. கைகளைப் பிசைந்துகொள்ள ஆரம்பித்தார்.

''என்ன சார்... கல் பேசும்கறத பற்றிய உங்க கருத்து என்ன?'' பாஸ்கரன் சாரத்துக்கு வந்தான்.

''உன் கருத்து என்ன... கல்லெல்லாம் பேசாது - எல்லாம் பொய், யாரோ மைக்ரோசிப் லெவல்ல கம்ப்யூட்டர்தனமா ஏதோ பண்றாங்கன்னு நினைக்கறியா?''

''ஆமாம்!''

''அப்ப தற்கொலைகளைப் பத்தி என்ன சொல்றே?''

''எந்த ஒரு மரணத்தையும் நான் பாக்கலை. சொல்றதத்தான் கேக்கறேன்...''

''அப்ப அது கொலைங்கறது உன் கருத்தா?''

''ஆமா...''

''அப்ப இதை எதுக்கு பண்றாங்க?''

''என்னை பயமுத்த... இல்லை என்னை வியப்பில் ஆழ்த்த... இல்லை என்கிட்ட எதையோ எதிர்பார்த்து.''



''ஸோ... டொட்டலி எல்லாம் மனுஷச் செயல். அங்க எந்த அமானுஷ்யமும் கிடையாதுங்கறே?''

''டெஃபனிட்டா...''

''சரி என் அனுபவத்த சொல்றேன். நீ பேசற ஒரு கல்ல பத்தி கேட்டே. வழிபாட்டுக்குரிய ஒரு சிற்பம் இருக்கு. சரபேஸ்பரங்கறது அதுக்கு பேரு.

அதை வழிபட ஒரு முறை இருக்கு. அதுக்குன்னு பிரத்யேக மந்திரம் இருக்கும். இதைச் சொல்லி ஒரு பெண் தன் எதிரிகளை எல்லாம் ஜெயிச்சு வெற்றிகரமா வலம் வந்துகிட்டிருக்காங்க.

அது மட்டுமில்ல...

அமானஷ்யமா ஒரு பெரிய அனுபவம் எனக்கு யானைமலைல ஏற்பட்டது.

நமக்கும் வானத்துல இருக்கிற நட்சத்திரங்களுக்கும் ஒரு பெரிய தொடர்பு இருக்குன்னு கேள்விப்பட்ட நான் அதை ஆராய்ச்சி செய்தேன். அது உண்மைன்னு தெரிய வந்தது.''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க சார்?''

''நீ தெட்சிண ரகசியம் புத்தகத்தையே மறந்துட்டு பேசறே. அதோட தொடர்ச்சிதான் நீ. ஆமா எங்க அந்த புத்தகம்?''

- மீனாட்சிசுந்தரம் கேட்கவும் பாஸ்கரனுக்கு கொஞ்சம் சுருக்கென்றது.

அதுதான் பாயசம் பட்டு நைந்து வீணாகி விட்டதே!

தயக்கத்தோடு ''சார், அது ஸ்பாயில் ஆயிடிச்சு சார்'' என்றான்.

மீனாட்சிசுந்தரத்துக்கு பகீர் என்றது!

# 20

'தொட்சிண ரகசியம்' பற்றி கேட்ட மீனாட்சிசுந்தரத்தை பாஸ்கரனும் ஒருவித கவலையுடன் பார்த்தான்.

''என்ன பாஸ்கர் அது எப்பேர்பட்ட புத்தகம் தெரியுமா? அது போய் அழிஞ்சு போச்சுன்னு சொல்றியே- எப்படிப்பா?'' மீனாட்சிசுந்தரம் எகிறினார்.

''சார் நான் அதை பத்ரமாதான் சார் வைத்திருந்தேன். ஆனா கை தவறி பாயசம் அது மேல கொட்டி...'' பாஸ்கர் நடந்ததைச் சொல்லி முடித்தான்.

''இல்லை பாஸ்கரன். என்னால இதை ஜீரணிக்கவே முடியல. இந்த ரூம்ல எங்க வந்தது பாயசம்?''

''நீங்க வரும்போது பார்த்தீங்களே ஒரு பொண்ணு, துர்கா அவளோட கை வண்ணம்தான் சார் அது.''

''யாரா இருந்தா என்னப்பா. அது எவ்வளவு வேல்யபுளான விஷயம் தெரியுமா?''

''ஆனா அதுல சமணப்பட்டி பற்றிய குறிப்பு உள்ள பக்கத்துக்கு எந்த பாதகமும் இல்லை சார். அது அப்படியே இருக்கு.''

''அது சரி, நீ சமணப்பட்டிக்குப் போயிருந்தியே, இந்தக் குறிப்புகளுக்கும் அந்த ஊருக்கும் ஏதாவது தொடர்பு இருந்ததா?''

''நிறையவே இருந்தது சார். நீங்க உங்க விஷயத்தைச் சொல்லுங்க.''

''பாஸ்கரா... நான் அபூர்வமான பல விஷயங்களைக் கண்டுபிடிச்சிருக்கேன். என் கண்டுபிடிப்புக்கும் சமணப்பட்டிக்கும்கூட தொடர்பு இருக்கு.''

''என்ன சார்?''

''மதுரை மேலூர் சாலைல ஒத்தக்கடை பாக்கத்துல யானை மலை தெரியுமில்லையா உனக்கு?''



''சொல்லுங்க...''

'' அந்த மலையைப் பற்றி நான் பல வருஷமா ஆய்வுகள் செய்துகிட்டு வரேன். அங்க நூத்துக்கணக்கான தமிழ்ப் புலவர்களைத் தூக்குல போட்டுக் கொன்னுருக்காங்க.''

''களப்பிரர்கள் காலத்துலையா?''

''ஆமாம். களப்பிரன் புத்த, சமண மதத்தோட விசுவாசியா இருந்திருக்கான். இந்த மதுரைல ஒரு இருநூறு வருஷத்துக்கு தமிழை அடக்கியாண்டிருக்கான். பாண்டிய சாம்ராஜ்யமே அடங்கி ஒடுங்கி உருத் தெரியாம போயிருக்கு.

அப்படி ஒரு காலத்துலதான் தமிழ்ப் புலவர்களைத் தூக்குல போட்ட கொடுமையும் நடந்தது. அப்படி தூக்குல போட்டுக் கொலை செய்தவர்களை தாழிக்குள்ள வெச்சு அந்த மலைல புதைச்சிட்டான் களப்பன்.

இப்பவும் அங்க போய் ஆய்வு செய்தா அந்தத் தாழிகள் கிடைக்கும்கறது என் அனுமானம். அப்படி இறந்த புலவர்கள் வானில் நட்சத்திரமாயிட்டதா பாடல் ஒன்று சொல்லுது.

இப்பவும் அந்த நட்சத்திரத்துல இருந்து ஒளித் துகள்கள் அந்த மலை மேல விழறதாகவும் குறிப்புகளைப் படிச்சேன். அதை ஆராயறதுக்காக நடுராத்திரி அந்த மலைக்குப் போனேன். அப்ப நட்சத்திரங்கள் விழுந்ததப் பார்த்தேன்.''

பாஸ்கரன், மீனாட்சிசுந்தரம் சொல்லிச் செல்வதை சுவாரஸ்யமே இல்லாதபடி எதிர்கொண்டான்.

மீனாட்சிசுந்தரம் இதைப் புரிந்து கொண்டாரோ என்னவோ, ''என்ன பாஸ்கரா, ரொம்ப போரடிக்கிறேனா?'' நைச்சியமாகக் கேட்டார்.

''ஆமாம் சார்.. நீங்க புதுசா எதையும் சொல்லல. சராசரி மனுஷங்களைப் போல ஒரு வியப்பு உங்ககிட்ட...! நட்சத்திரம் விழறதெல்லாம் ரொம்ப ரொம்ப சாதாரணமான ஒண்ணு. அதுக்கு ஒரு பெரிய முக்கியத்துவம் தர்றது எனக்கு பெரிய ஆச்சரியமா இருக்கு.''

- பாஸ்கரனின் தீர்மானம் அவரை கொஞ்சம் மாங்கொட்டை மூஞ்சியாக்கியது.

''இல்ல பாஸ்கரா.. நான் சொல்றது அசாதாரணமான ஒண்ணுதான். அந்த மலைல தமிழ்ப் புலவர்கள் தாழி இருக்கற மாதிரியே வேற பல விஷயங்களும் இருக்கு.''

''என்ன சார்?''

''குறிப்பா இந்து தெய்வங்களை எல்லாம் களப்பிரன் தூக்கி எறிஞ்சான். கோயில்களை எல்லாம் இழுத்து மூடினான். இன்னிக்கு ரொம்ப பிரபலமா இருக்கிற மீனாட்சி அம்மன் கோயில் சன்னதி வரலாற்றுல இந்தக் காலக் கட்டத்துல பூட்டப்பட்டு தானியக்கிடங்கா இருந்திருக்குன்னா நம்புவியா நீ...''

''சரி சார்.. என்கிட்ட நீங்க எதை எதிர்பார்க்கறீங்க?''

''பாஸ்கரா.. நீ என்னோட ஒத்துழைச்சா அப்படி அன்னிக்கு களப்பிரன் தூக்கி எறிஞ்ச எல்லா தெய்வ விக்கிரகங்களையும் நாம கண்டு பிடிக்கலாம். குறிப்பா மதங்கனிச் சித்தர் தன் ரசவாத சாமர்த்தியத்தால் செய்து பூஜித்த சொர்ண மீனாட்சியை...''

''உங்க ஆய்வை ஆர்க்கியாலஜிக்கு சப்மிட் பண்ணா அவங்க கண்டு பிடிச்சுட்டுப் போறாங்க. இதுல நான் எதுக்கு?''

''இல்ல பாஸ்கரன். நான் ஆர்க்கியாலஜியை நம்பத் தயாரில்ல. அவங்க தாங்க கண்டுபிடிக்கிற எல்லா விஷயத் தையும் வெளி உலகத்துக்கு தெரியப்படுத்தறதில்லை.

சமீபத்துலகூட மதுரைல கோவலன் பொட்டல்ங்கற இடத்துல ஒரு பானை நிறைய பொற்காசு எடுத்துருக்காங்க. ஆனா அதை அரசாங்கத்துகிட்டே ஒப்படைக்காம அவங்களே பங்கு போட்டுக்கிட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்.''

''உங்களுக்கு யார் சார் சொன்னது.?''

''கேள்விப்பட்டேன்.''

''கேள்விப்பட்டதெல்லாம் உண்மையாபிடாது சார். ஆமாம் இவ்வளவுதானா - இல்ல இன்னும் இருக்கா?''



''நீ கேட்கற தொனியே சரியில்லையே பாஸ்கரா..''

''உங்க விஷயமெல்லாம் ரொம்ப சாதாரணமாகதான் சார் எனக்கு படுது. இங்க நீங்க களப்பிரர்கள் காலத்துல அவன் தூக்கி எறிஞ்ச சிலையைக் கண்டுபிடிக்கலாம்னு சொல்றீங்க. சமணப் பட்டில தங்க புத்தர் சிலை இருக்காம். அதை எடுக்கலாம்கறது சிலரோட ஆசை...''

''அது தங்க புத்தர் இல்ல. தங்க புத்தரான தங்க மீனாட்சி.''

''இது என்ன புதுக்கதை...?''

''புதுக்கதை இல்ல. மதங்கனிச் சித்தர் செய்த பாண்டியன் காலத்து தங்க மீனாட்சி சிலையை களப்பிரர்கள் அழிச்சு புத்தர் சிலையா செய்தாங்க. அந்தச் சிலையைத் தான் சமணப்பட்டிக்குக் கொண்டுகிட்டு போய் அந்தக் கரட்டுல உள்ள சமணவாடில வெச்சாங்களாம்.

''சமணவாடிக்கும் புத்தருக்கும் என்ன சார் சம்பந்தம். பௌத்தம் வேற, சமணம் வேறயாச்சே?''

''இருந்தாலும் இருவர் கிட்டேயும் ஒருவித ஒத்துமை இருந்தது. இந்துக்களுக்கு எதிரா சிந்திக்கிறதுல இரண்டு பேரும் ஒத்துப் போனாங்களாம். சமணப் பட்டி சமணவாடில நிறைய பௌத்தர்களும் இருந்துருக்காங்க...''

''இதுக்கெல்லாம் என்ன சார் ஆதாரம்?''

''நீயே ஒரு ஆதாரம் தானே பாஸ்கரன்..''

'' நானா.. எப்படி சார்...?''

''பாஸ்கரனான நீ உன் பூர்வ பிறப்புல ஒரு பாண்டியன். அதுக்கும் முந்தி நீ ஒரு பல்லவன்...''

''என்னசார் இது புதுக்கதை?''

''கதையா இல்லை நிஜமாங்கறது தான் இப்ப என் முன்னாலயும் இருக்கற கேள்வி பாஸ்கரன்.''

''சார் நீங்க ஒரு பேராசிரியர். எந்த மாதிரி விஷங்களை நம்பணும் எதை நம்பக்கூடாதுன்னு இருக்கு சார். ஒருநூறு சதவிகித கற்பனையை உண்மையாகூட இருக்கலாம்னு ஒரு

பக்கம் நம்பத் தொடங்கறீங்களே அதுதான் சார் எனக்கு ஆச்சரியமாயிருக்கு.''

''கற்பனை இல்ல பாஸ்கரன். என் அனுபவங்கள் உனக்கு ஏற்பட்டா நீ இப்படிப் பேசமாட்டே...''

''என்ன சார் பொல்லாத அனுபவம்?''

''பொல்லாத அனுபவம் தான். இந்த ஏட்டுக் கட்டை படி... அப்புறமா நான் மத்த விஷயங்களைச் சொல்றேன்.''

''என்ன சார் இதுல இருக்கு?''

''படி... பிறகு சொல்றேன்.''

''சாரி சார்.. நான் ரொம்ப டயர்டா இருக்கேன். பயணக்களைப்பு, மனக் களைப்பு எல்லாம் என்னை அமுக்கிட்டிருக்கு. கொடுத்துட்டுப் போங்க. படிச்சுட்டு நானே உங்களுக்கு போன் பண்றேன்.''

''நல்லது... நான் கிளம்பறேன். இந்த ஏட்டுக்கட்டு ரொம்ப புராதனமானது. பத்திரம். தெட்சிண ரகசியத்தை பாயசம் விழுங்கிட்ட மாதிரி இதை ஏதாவது விழுங்கிடப் போகுது.'' - மீனாட்சிசுந்தரம் சொல்லிக் கொண்டே புறப்பட்டார்.

''சாரி சார்...''

''எதுக்கு?''

''உங்க நம்பிக்கைக்குத் தோதா பேசாததற்கு!''

''பேசுவே.. போகப்போகப் பேசுவே. நாம நிறைய சாதிக்க வேண்டியிருக்கு பாஸ்கரன். வரட்டுமா?'' மீனாட்சிசுந்தரம் வெளியேறத் தொடங்கினார். துர்கா பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெளியே போன அவரை வீதியில் மோட்டார் பைக்கில் ஒருவன் கவனித்துக் கொண்டிருந்தான். ஜோல்னாப் பையும் கையுமாக வீதியில் நடக்கும் அவரைப் பார்த்து செல்ஃபோனை காதுக்குக் கொடுத்தான்.

யாரோடோ பேசினான். ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த துர்காவுக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது.



மதுரை பெரியார் பேருந்து நிலையம். இரவு நேரம். ஜன சந்தடியில் திணறிக் கொண்டிருந்தது. ஒரு பஸ்ஸில் இருந்து உதிர்ந்த சக்திவேலிடம் அப்பட்டமான ஒரு கிராமத்து அப்பாவித்தனம்.

அதைக் கணக்கு செய்தபடியே ஒருத்தி வந்து ''வர்றியா போலாமா?'' என்றுகேட்டாள்.

''எங்க?''

''சந்தோஷமா இருக்கத்தான்.''

''அதுக்கு நான் எதுக்கு உன் கூட வரணும்?''

''வந்து பார் அப்புறம் தெரியும்.''

- அவள் சொன்னபடியே சிரித்தாள். மாராப்பையும் தாராளமாக விலக்கிக் காட்டினாள்.

ஐய்யோடா...! சக்திவேல் புரிந்து கொண்டு ஒதுங்குவதற்குள் பெரும் பாடாகிவிட்டது.

கண்ணகி எரித்த மதுரையிலா இப்படி?

மூச்சிரைத்தது. சமாளித்து பஸ் பிடித்து பாஸ்கரன் வீட்டுக் கதவை அவன் தட்டிய போது மணி பத்து.

டொம்... டொம்... டொம்...

- காலிங் பெல் இருக்கும்போது அதை அழுத்தத் தோன்றாமல் கதவைத் தட்டினான்.

கண்களைக் கசக்கிக் கொண்டு கதவைத் திறந்த பாஸ்கரனுக்குக் கொஞ்சம் தூக்கிவாரிப் போட்டது.

''சக்திவேல் நீங்களா!''

''ஆமாம் சார்...''

''என்ன இந்த நேரத்துல...?''

''சொல்றேன் சார். முதல்ல உள்ள வான்னு சொல்லுங்க.''

''வாங்க... வாங்க...''

- கொட்டாவி பிரிய அவனை உள்ளே அழைத்து கதவையும் தாழிடப் போனான்.

அந்த நேரத்திலும் எதிரில் துர்கா. அவள் வீட்டு வாயிலில் ஒரு பதுமையைப் போல.

''என்ன துர்கா தூங்கலையா?''

''தூக்கம் வரலை. ஆமா நீங்க சாப்பிடவே இல்லை போல இருக்கே?''

''அ...அது உனக்கு எப்படி...?''

''ஆறு மணிக்கு உங்க புரொபசர் புறப்பட்டுப் போகும் போது படுத்தவர் தான். இப்பதான் எழுந்திருக்கீங்க...''

''அது... அது... பசியில்ல.. ஓ.கே. குட்நைட்!''

- தர்மசங்கடத்தோடு கதவைத் தாழிட்டான்.

துர்காவுக்கு வலித்தது. அவள் அம்மா வந்து எட்டிப் பார்த்தாள். தலையிலடித்துக் கொண்டாள்.

''போடி போய்ப் படுடி... யாராவது பார்த்தா சிரிக்கப் போறாங்க.''

துர்கா அதற்கெல்லாம் அசரவேயில்லை. மூடிய கதவைப் பார்த்தபடியே உள்ளே போனாள்.

உள்ளே...

''என்ன சக்தி... என்ன விஷயம்... நேத்துதானே பாத்துக்கிட்டோம்?''

'சார்.. ஊரில் நடக்கற எதுவும் எனக்கு சரியாப்படலை சார். அந்த இன்ஸ்பெக்டர் செத்துப்போனது அவ்வளவு பேரையும் ஒரு ஆட்டு ஆட்டிருச்சி. கோனார்த்தாத்தா கூப்ட்டு கரட்டுப் பக்கமே யாரும் தலை வெச்சுப் படுக்கக்கூடாதுன்னுட்டார். குறிப்பா என்னக் கூப்ட்டு வாங்கு வாங்குன்னு வாங்கிட்டார்.

- சக்திவேல் சொன்னபடியே நின்றான்.

''முதல்ல உக்காருங்க.'' என்ற பாஸ்கரன் தாடையை வருடினான்.

''எல்லாமே பயங்கர புதிரா இருக்கு. என் புரொபசர் அதை கிளியர் பண்ணுவார்னு பார்த்தேன். அவரோ அதிகம் குழப்பறார்.''



- பாஸ்கரன் முணுமுணுத்தான்.

''சரி இப்ப உங்க திட்டம் என்ன?''

''தெரியல சார். ஊர்ல எனக்கு பெருசா வேலை எதுவும் இல்ல. அதான் மாமா வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு கிளம்பி வந்துட்டேன். இந்த விஷயத்தை மட்டும் அப்படியே விட்டுடக்கூடாதுன்னு உள் மனசு சொல்லிக்கிட்டிருக்கு சார்.''

- சக்திவேல் சொன்னபடியே டேபிள் மேல் இருந்த ஏட்டுக் கட்டைப் பார்த்தான்.

''என்ன சார் இது கட்டு...''

- அவன் கேட்கவும்தான் திரும்பவும் அதன் ஞாபகம் வந்தது.

''அது ஒரு பெரிய கதை. இதை வேற நான் படிக்கணும்.'' சொன்னபடியே எடுத்துப் பிரித்தான்.

''பாஸ்கர விலாசம்...'' என்கிற பெயரே ஒரு மிரட்டு மிரட்டிற்று.

# 21

பாஸ்கர விலாசம் எனும் அந்தப் பெயரின் மிரட்டலில் பாஸ்கரன் திகைத்துப் போக சக்திவேலும் எட்டிப் பார்த்து விட்டுக் கேட்டான்.

''என்ன சார்... என்ன ஏடு இது?''

''ஏதோ பழைய சமாச்சாரம். புரொபசர் மீனாட்சி சுந்தரம் கொடுத்து படிச்சுப்பாருன்னாரு.''

''பாஸ்கர விலாசம்னு போட்டுருக்கு.. உங்க பேர் மாதிரி தெரியுதே.''

''என்ன சக்தி இந்த உலகத்துல நான் ஒருத்தன்தானா பாஸ்கரன். லட்சக்கணக்கான பாஸ்கரன்கள் உள்ள நாடு இது.''

''எதுக்கும் படிச்சுப் பாருங்க சார். என்ன போட்டிருக்குன்னு பார்ப்போம்.''

''இன்னிக்கு வந்ததுல இருந்தே ஒண்ணும் சரியில்ல. டென்ஷனுக்கு மேல டென்ஷன்னு ஏறிகிட்டே போகுது. ஆமா உங்க திட்டம் என்ன?''

''உங்க திட்டம் தான் சார் என் திட்டம்.''

''அப்ப அந்த பெருமாள்மலையை ஆராய்ஞ்சு முடிச்ச பிறகு தான் உங்களுக்கு நல்ல தூக்கமே வரும். அப்படித்தானே?''

- சக்திவேல் அதற்கு மௌனத்தில் பதில் சொன்னான். பாஸ்கரனும் புரிந்து கொண்டான்.

''ஒரு விதத்துல நானே இதை வேண்டாத வேலைன்னு நினைக்கறேன் சக்திவேல். ஆனா நீங்க இதை ஒரு லைஃப் அசைன்மென்ட்டா நினைக்கறது எனக்கு பெரிய ஆச்சரியமா இருக்கு.''

''ஆமாம் சார்.. எங்க ஊர் மலைப்புதிரை விடுவிச்சே தீரணும்.''

- சக்திவேல் தீர்மானமாகச் சொன்னான்.

''சரி நீங்க போய் படுங்க.. காலைல பேசிப்போம்.''

''சரி சார்... நான் இங்க தங்கறதுல உங்களுக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையே?''

''இருக்குன்னா இந்த ராத்திரியில வெளிய போயிடு வீங்களா... இல்ல உங்கள நான் போகச் சொன்னா அது நல்லா இருக்குமா?''

- பாஸ்கரனிடம் மெலிதாகக் கோபம் இழையோடியது. சக்திவேலுக்கும் அது புரிந்தது.

''சரி போய் படுங்க. விடியட்டும் பேசலாம்.'' சொன்னபடி அவனுக்கு ஒரு பாயையும் தலையணையையும் எடுத்துக் கொடுத்தான்.

பின் பாத்ரூமுக்குப் போய் குளித்துவிட்டு வந்தான்.



சக்திவேல் பாஸ்கரனின் ஒரு நாவலைப் படித்துக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்தபடியே ஃபிரிட்ஜைத் திறந்து பிரட்டையும், சீஸையும் வெளியே எடுத்தான். பின் ஃப்ரை பாட்டில பிரெட்டை பொன்னிறத்தில் சுட்டு எடுத்து, சீஸைத் தடவி ஒரு செட்டை சக்திவேலுக்கும், ஒரு செட்டை தனக்குமாக்கி விழுங்கி முடித்தான்.

அறையின் கைதான் ஃபேன் சரக் சரக் என்று சுவர்க்கோழி போல சப்தம் போட்டபடி சுழன்று கொண்டிருந்தது. டேபிள் மேல் அதன் மெலிதான காற்றுபட்டு அந்த பாஸ்கர விலாசம் அவன் படிக்க வேண்டி காத்துக் கொண்டிருந்தது.

பசியாறிய கையோடு அதை எடுத்து மெல்லத் திறந்தான். புத்தகத்தில் ஊர்ந்து கொண்டிருந்த சக்திவேலும் அதை ஓரப்பார்வை பார்க்கத் தொடங்கினான்.

ஏட்டின் முதல் பக்கத்தில் ஆதிசிவன் துணை எனும் நெருக்கலான எழுத்துக்கள்.

அடுத்த பக்கம் கடவுள் வாழ்த்தைக் கொண்டு கண்ணில் ஏறியது.

> "பூமியிது பெருங்கோளம் கோளமதில் கோடி உயிர்
> கோடியதும் கோள் விளங்க இலங்குவதே...
> இலங்குவதை இயக்குமந்த ஈசனடி போற்றி
> துலக்குவேன் பாஸ்கர விலாசமிதை
> காளப்ப பாணன் யான் பாங்குடனே..."

- படித்து முடித்த பாஸ்கரனுக்கு அந்த பாடல் தமிழ் சுலபமாகவே புரிந்தது. காளப்ப பாணன் என்பவர் அதை எழுதியவர் என்பதும் துல்லியமாகப் புரிந்தது.

விரலால் அடுத்த ஏட்டிற்குச் சென்றான். மிகவும் பொடிப் பொடியான சங்கிலி போலப் பிணைந்த எழுத்துக்கள். வார்த்தைகளும் பிடிபடாமல் சங்கடப்படுத்திற்று.

''என்ன சார் சொல்லுது...?'' - சக்திவேலின் குரல் பக்கவாட்டில இருந்து ஒலித்தது.

''ஒண்ணும் புரியல. லென்ஸ் வெச்சுதான் படிக்கணும் போல இருக்கு.''

''படிங்க சார்.. நிச்சயமா அதுல ஏதாவது நமக்கு உதவி செய்யற குறிப்புகள் இருக்கும்.''- சக்திவேல் அதிகபட்சமாகத் தூண்டிவிட்டான்.

நடுவில் தொலைபேசியின் அமட்டல் வேறு...

இந்த நேரத்தில் யாராக இருக்கும்?

எழுந்து சென்று காதைக் கொடுத்தான்.

''என்ன பாஸ்கரா... நான் மீனாட்சிசுந்தரம்தான் பேசறேன்.''

''சொல்லுங்க சார்... என்ன இந்த நேரத்துல?''

''அந்த ஏட்டுக் கட்டை படிச்சிட்டியா?''

''இப்பதான் சார் பிரிச்சேன்... லென்ஸ் இல்லாம படிக்க முடியாது போல இருக்கே...''

''எப்படியாவது படிச்சு முடி...''

''அதுக்காகவா போன் பண்றீங்க.''

''ஆமாம் மைடியர் பல்லவன் பாண்டியன் பாஸ்கரன்.''

''என்ன சார் எதுக்கு இப்படியெல்லாம் கூப்பிட்றீங்க?''

''நீ படிச்சு முடி... அது அசாதாரண ஏடு. செய்திகளும் அசாதாரணமானது. படிச்சா உனக்கே புரியும்.''

''நான் படிக்கறது இருக்கட்டும். நீங்கதான் படிச்சுட்டீங் களே... நீங்களே முழு விஷயத்தையும் சொல்லக் கூடாதா?''

''அவ்வளவு கூடவா உனக்கு பொறுமை இல்ல.. படி பாஸ்கரா...''

''இல்ல சார்.. இப்ப எனக்கு படிக்கிற அளவு பொறுமை இல்ல. நான் முதல்ல தூங்கணும். காலைல எழுந்து படிச்சதுக்குப் பிறகு உங்களோட தொடர்பு வெச்சுக்கறேன்.''

- பாஸ்கரன் சலிப்போடு சொல்லிவிட்டுத் திரும்பினான். சக்திவேல் வெறித்தபடி இருந்தான். விரிந்து கிடந்த ஏட்டுக் கட்டை எடுத்தான். கொஞ்சம் பொடிப்பொடியாகப் பார்த்தது



அது. பெரிதாக அதற்காகக் கவலைப்படாமல் அப்படியே தூக்கி மேஜை மேல் வைத்துவிட்டு விளக்கையும் அணைத்தான்.

டெலிபோன் ரிசீவரை வைத்துவிட்டுக் கவலையோடு திரும்பிய மீனாட்சிசுந்தரத்தை அருள்மொழியும் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா நீ தூங்கலையா?''

''நீங்க தூங்கலையாப்பா...?''

''தூக்கம் வரலைம்மா...''

''நீங்க இப்படி இருக்கும்போது எனக்கு மட்டும் எப்படிப்பா தூக்கம் வரும்?''

பதிலுக்கு அவளை மீனாட்சிசுந்தரம் ஒருமாதிரி பார்த்தார்.

''ஆமாம், யாருக்குப்பா போன் பண்ணீங்க?''

''பாஸ்கரனுக்குத்தான்.''

''என்னப்பா ஏதாவது முக்கியமான விஷயமா?''

''ஆமாம்மா... இது முக்கியமான விஷயம் தான்...''

''நான் தெரிஞ்சுக்கலாமா?''

- அருள்மொழி கேட்டுவிட்டு அவரை ஊடுருவினாள். மீனாட்சிசுந்தரமும் கொஞ்சம் போல மிடறு கட்டிவிட்டு ''சொல்றேம்மா...'' என்றார். ஆனால் சொல்லாமல் அவருக்கு அருகில் கிடக்கும் திண்டு திண்டான புத்தகங்களை நோக்கிச் சென்றது அவர் பார்வை.

''என்னப்பா சொல்றேன்னு சொல்லிட்டு புத்தகத்தைப் பார்க்கறீங்க?''

''இந்த புத்தகங்களாலதாம்மா எல்லா போராட்டங் களுமே...''

''போராட்டமா?''

''ஆமாம்... கற்பனையா நிஜமாங்கற குழப்பங்கள். உயிரையே உலுக்கற ரகசியங்கள்.''

''பீடிகை போதும். விஷயத்துக்கு வாங்கப்பா...''

''வரேன்... பாஸ்கரனைப் பத்தி நீ என்ன நினைக்கறே?''

''ஒரு பிரபல எழுத்தாளர். நல்ல மனிதர்... எதுக்குப்பா இப்ப அவரைப் பத்தி கேக்கறீங்க...?''

''இத்தனை நாளா இல்லாம இப்பபோய் காலம் என்னையும் அவனையும் இணைச்சு விளையாட ஆரம்பிச்சிடுச்சும்மா. அதை நான் என்னன்னு சொல்வேன்?''

''கொஞ்சம் புரியும்படி சொல்றீங்களா?''

''அதுக்கு முந்தி கொஞ்சம் என்கூட இப்ப வெளிய வரயா?''

''எங்கப்பா...'

''யானைமலைக்கு...''

''யானைமலைக்கு- இந்த ராத்திரியிலயா?''

''ஆமாம். ராத்திரி நேரம்தான் அங்க நான் போக சரியான நேரம்.''

''என்னப்பா இது.. பாஸ்கரனைப் பத்தி கேட்டுட்டு இப்ப யானைமலைக்குக் கூப்பிட்றீங்க. உங்களுக்கு ஏதாவது பைத்தியமா?''

''எனக்கு சில விஷயங்கள் பிடிபடலைன்னா பைத்தியம் பிடிச்சாலும் பிடிச்சுடும்மா...''

- மீனாட்சிசுந்தரத்துக்கு சொல்லும்போதே கொஞ்சம் வியர்த்தது.

''அப்பா... என்னப்பா ஏன் ஒரு மாதிரி ஆறீங்க..''

''காரணம் இருக்கு அருள்மொழி. இப்ப நானும் நீயும் காலம் உருட்டி விளையாட நினைக்கிற சோழிகள்..''

''எனக்கு ஒண்ணுமே புரியலைப்பா..''

''புரிய வைக்கறேன்.. கொஞ்சம் என் கூட வா.''

''பகல்ல பாஸ்கரனையும் கூட்டிகிட்டு போகலாமே...''

''இல்லம்மா... இரவுதான் பாதுகாப்பானது. தைரியமா கிளம்பு.''



''அங்க போய் என்னப்பா பண்ணப் போறோம்?''

''வாம்மா சொல்றேன்.''

- மீனாட்சி சுந்தரம் குரலில் கெஞ்சலும் கொஞ்சலும் வழிந்தது.

அரைமனதாகத் தலையை ஆட்டினாள்.

**ச**மணப்பட்டி...

வழக்கம்போல புகைமூட்டம் ஒரு பிசாசு போல ஊரை வளைய வரத் தொடங்கியிருந்தது.

அந்த நடு ராத்திரியில் சமணப்பட்டி ரயில்வே ஸ்டேஷனில் கூட்ஸ் ஒன்று மரபட்டைபோல இழுக்க மாட்டாதபடி இழுத்து வந்த பெட்டிகளோடு கொஞ்சம் ஓய்வெடுக்க ஆரம்பித்தது. ஸ்டேஷன் மாஸ்டர் நரசிம்மன் கொடியைத் தூக்கி கொண்டு பிளாட்பாரத்துக்கு வந்தார்.

ஸ்டேஷனில் ஆளரவமே இல்லை.

மட்டமான கோலிபல்ப் வெளிச்சத்தில் ஈசலின் படபடப்பு மட்டும் அங்கங்கே தெரியும்போது கூட்ஸ் பெட்டிகளில் ஒன்று அவர் எதிரில் திறந்து கொள்ள உள்ளிருந்து நான்கு பேர் இருபக்கமும் பார்த்தபடி பிளாட்ஃபாரத்திற்குள் காலை வைத்தனர்.

''ஒண்ணும் ப்ராப்ளம் இல்லையே?''

- ஒருவன் நரசிம்மனைப் பார்த்துக் கேட்டான்.

''இல்ல நீங்க போகலாம்.'' - அவரும் காற்றுக் குரலில் சொன்னார். சொன்னபடியே விசிலை ஊதி கொடியை அசைத்தார்.

அவர்கள் அங்கிருந்து உடனேயே நழுவத் தொடங்கினார்கள்.

அருகாமை கருவேல மரக் காட்டு ஒற்றையடிப் பாதைக்குள் நுழைந்தார்கள்.

இரவின் கருமையில் அவர்கள் கரைந்தது போல் இருந்தது. கூட்ஸ் ரயிலும் குப்குப்பென்று இழுபட ஆரம்பித்திருந்தது!

யானை மலை.

கையில் டார்ச்சோடு நடக்கும் மீனாட்சிசுந்தரத்தை பயத்தோடு தொடர்ந்து கொண்டிருந்தாள் அருள்மொழி. காட்டுச் செடிகள் புடவையை மாட்டி இழுக்க, சள்ளைப் பூச்சிகளின் ரீங்காரம் காதில் குடைச்சலை உருவாக்க மீனாட்சிசுந்தரம் பார்த்துப் பார்த்து நடந்தபடி இருந்தார்.

அந்த இரவில் யானை மலையின் பக்கவாடு ஒரு அரண்மனை மதில் சுவர் போல மறித்தபடி இருக்க அதன்மேல் ஏறும் சரிவு கண்ணில் தட்டுப்பட்டது.

''பாத்து வாம்மா. இது வழியாதான் மேல போகணும்.''

''மேலபோய் என்னப்பா பண்ணப் போறோம்?''

''வா... வந்து பார்.. அப்புறம் தெரியும்.''

- அவர் அவளை சஸ்பென்ஸில் புரளவிட்டபடியே நடையைத் தொடர்ந்தார்.

பூதங்களின் தலைபோல சில இடங்கள் கண்ணில் பட்டு பயம் கரைத்தன.

'பம்'மென்று காதை அழுத்தும் ஒருவித நிசப்தத்தை குகை போன்ற ஒரு இடத்தைக் கடக்கும்போது உணர முடிந்தது.

''அப்பா பயமாக இருக்குப்பா...''

''இது ஒண்ணும் சுடுகாடு இல்ல. பயப்படாம வா.''

''நீங்க மோசம்ப்பா.. எந்த அப்பாவும் இப்படி ஒரு அபாயகரமான ஆராய்ச்சிக்கு தன் மகளை உட்படுத்த மாட்டார்.''

''எல்லாக் கருத்தையும் நான் ஒரு விஷயத்தைக் காட்டின பிறகு சொல்லு...''

''என்னப்பா ஏதாவது புதையலா?''

''வா.. அதோ அந்த இடம்தான்... வா. பாத்து வா... அங்க வந்து பார்த்துட்டு சொல்லு...''

- சொன்னபடி ஒரு பாறைச்சரிவில் இறங்கியவர் அங்கே பொசுபொசுவென்று வளர்ந்து கிடக்கும் காட்டுச் செடிகளின் அருகே போய் நின்றார். டார்ச்சைச் சுழலவிட்டார். அதன் ஒளிவட்டம் அங்கே சரபேஸ்வர ஸ்வாமியைக் காட்டிற்று. முன்னால் ஒரு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.



''சரிதான். சிவகாமி இன்னிக்கு இங்க வந்துட்டு போயிருக்கா போல இருக்கு.'' என்றது உதடு.

''யாருப்பா அது சிவகாமி...?''

''சொல்றேன்... அதுக்கு முந்தி அதோ பார்...''

- அவர் டார்ச்சைத் திருப்பிக் காட்டி வெளிச்சத்தைப் பரப்பிய இடத்தில் செடி கொடி புதர்களுக்கு நடுவில் இரண்டு தாழிகள் தெரிந்தன.

''என்னப்பா அது?''

''பார்த்தா தெரியல. மண் தாழி. நான் இங்க தோண்டி எடுத்து பதுக்கி வெச்சிருக்கிற தாழி...''

''அதுல தையல் இருக்கா?''

''போய் எட்டிப்பார்... பயந்துடாதே...'' சொன்னவர் அவள் வசம் டார்ச்சைத் தந்தார்.

''வேண்டாம் நீங்களே வந்து என்னன்னு காட்டுங்க.''

''சரி வா...'' அதை நெருங்கியவர் தாழியின் உள்ளே டார்ச் வெளிச்சத்தை அடித்தபடி சொன்னார்.

''உள்ள நீ இருக்கேம்மா.'' என்றார். அருள்மொழியும் எட்டிப் பார்த்தாள். பார்த்தவள் ஒரு க்ஷணம் உறைந்து விட்டாள்.

## 22

எட்டிப்பார்த்த அருள் மொழிக்கு குப்பென்று வியர்த்தது. உள்ளே எலும்புக் கூடு ஒன்று நொறுங்கலாய்க் கிடந்தது.

அருள்மொழி அதைப் பார்த்துவிட்டு அச்சத்தோடு திரும்பினாள். சில வினாடிகள் ஏதும் பேச முடியவில்லை.

''என்னம்மா... பயந்துட்டியா - பயப்படாதே. அது வேற யாரோ இல்ல நீ தான்.''

- அந்த தீற்றலான இரவில் மீனாட்சிசுந்தரம் சொன்னது அவளை மேலும் அதிரவிட்டது.

''என்னப்பா சொல்றீங்க... நான் உயிரோட இருக்கும்போது எப்படிப்பா இந்த எலும்புக்கூட்டைப் போய் நான்னு சொல்றீங்க?'' மென்று விழுங்கியபடி கேட்டாள்.

''நீதான்... நீதான்கறதுதான் என் தீர்மானம். இங்க இந்த மாதிரி பல தாழிகள் புதைஞ்சு கிடக்குது. அதில் எல்லாமும் இதே போல கூடுகள். ஒவ்வொரு கூடும் ஒவ்வொரு தமிழ்ப் புலவரோட கூடு.

களப்பிரர்களால தூக்குல போடப்பட்ட சடலங்கள் காலத்தால அடைஞ்ச மாற்றம்..''

''இதெல்லாம் உண்மையா... எதை வெச்சு சொல்றீங்க?''

''எல்லாத்தையும் விளக்கமா சொல்றேன் அருள்மொழி. அதுக்கு முந்தி நான் காட்டப்போற சில விஷயங்களைப் பார்...''

''பயமா இருக்குப்பா... நீங்க பேசறது எதுவும் எனக்குப் புரியல.''

''இப்ப அப்படித்தான் இருக்கும். போகப் போக எல்லாமே உனக்குப் புரியவரும். நான் இந்த அர்த்த ராத்திரியில காரணமில்லாம உன்னைக் கூட்டிகிட்டு வரலை...''

''அப்பா முதல்ல இங்க இருந்து கிளம்புவோம்பா...''

''போகலாம்.. அவசரப்படாதே. வரலாற்று ஆய்வுங்கறது ஒண்ணும் லேசுப்பட்ட விஷயமில்ல. நான் கண்டுபிடிச்சிருக்கிற இந்த விஷயங்கள் ஒரு பெரிய சரித்திரத்தையே நாளைய உலகுக்கு சொல்லப் போகுது. கொஞ்சம் இப்படி வா...''

- அவர் சொல்லியபடி அவளை கையைப் பிடித்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து நகர ஆரம்பித்தார். சிறிது தொலை வந்தவர் திரும்பிப் போய் தாழியை திரும்ப அங்கே கிடந்த இலை தழைகளால் மூடினார்.



அருள்மொழி அந்த இடைவெளியில் சுற்றும் முற்றும் பார்வையை விட்டாள்.

வானிலிருந்து நட்சத்திரக் கூட்டம் மட்டும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தன. கொஞ்சம் காது மடலை விடைக்க வைக்கும் சுமாரான குளிர் காற்று வேறு...

அவள் பார்வை மலைப்பாறை சுவரை ஒட்டியிருக்கும் சரபேஸ்வரர் பக்கம் திரும்பியது. என்ணெய் பூசப்பட்ட கருகருவென்ற தேகம். எரியும் சுடர் விளக்கின் ஒளியில் ஒரு கறுப்பு உருவம் கோர முகத்தோடு அவளைப் பார்க்கின்ற மாதிரி இருந்தது.

மீனாட்சிசுந்தரம் திரும்பி வந்தார்.

''இது என்ன தெரியுமா?'' - கேட்டார். அவள் மௌனத்தில் தலையை மட்டும் அசைத்தாள்.

''சரபேஸ்வர மூர்த்தி விக்ரகம் இது. அந்தக் காலத்துல எதிரிகளை வெற்றி கொள்ள நினைத்த பாண்டிய மன்னர்கள் வணங்கி வழிபட்ட திருஉருவம். ரொம்ப சக்தி வாய்ந்த மூர்த்தின்னு புராணக் கதைகள் சொல்லுது.

இன்னிக்கும் இதுக்கு சக்தி இருக்கு. அது தெரிஞ்சு ஒரு பெண் இங்க வந்து தவறாம வழிபட்டுகிட்டு இருக்கா. அவ வந்துட்டப் போனதுக்கான அடையாளம்தான் இந்த எரியற விளக்கு...''

''இதெல்லாம் உங்களுக்கு எப்படி?''

''வா சொல்றேன்... முதல்ல விழப் போற நட்சத்திரங்களைப் பார்...''

- சொன்னபடி ஆகாசத்தைப் பார்த்தார். அருள்மொழிக்கு அவர் ஒரு பைத்தியக்காரராக மாறிவிட்ட மாதிரி தான் தோன்றியது.

ஆராய்ச்சி அது இது என்று அலைந்ததில் மூளை குழம்பிவிட்டதாகவும் கூடத் தோன்றியது.

அவரோ வான மண்டலத்தில் வைத்த பார்வையை எடுக்கவில்லை.

''அப்பா.''

''உம்!''

''போதும்பா.. போகலாம்.''

''போகலாம். அதுக்கு முந்தி இந்த இடத்துக்கு வந்த உனக்கு ஏதாவது தோணுதாங்கறத பத்தி கொஞ்சம் சொல்லு...''

''என்ன தோணணும்?''

''இங்க இதுக்கு முந்தி நீ வந்த மாதிரி ஏதாவது நினைவுகள்...?''

''இல்ல.. எனக்கு இங்க இருந்து போனாப் போதும்னுதான் தோணுது.''

''அருள் மொழி.. நல்லா பாரு.. இந்த மலை ஒண்ணும் சாதாரண மலை இல்ல. ஒரு வரலாற்றுச் சின்னம். பல ஆயிரம் ஆண்டுகளா பலப்பல நடப்புகளைப் பார்த்து தனக்குள்ள இது மறைச்சு வெச்சுகிட்டிருக்கு...

நீ இந்த மலைல தான் தூக்குல போடப்பட்டே... உன்னை தாழியில போட்டுப் புதைச்சதும் இங்கதான்.

களப்பிரர்களுக்கு பயந்து நீயும் உன் காதலனும் இந்த மலைலதான் ஒளிஞ்சிருந்தீங்க.''

''உளறினது போதும்பா... புறப்படுங்க.''

''இரும்மா... நட்சத்திரங்கள் சிதறி விழப் போற காட்சியைப் பார்த்துட்டு அப்புறமா சொல்லு...''

- அவர் சொல்லும்போதே ஒரு பூவாணம் போல சில நட்சத்திரங்கள் அந்த மலை முதுகின் மேல் அங்கும் இங்குமா விழுந்தன.

''பாத்தியா... பாத்தியா...?''

''நட்சத்திரம் விழறது ஒரு சாதாரண விஷயம். நம்ம வீட்டுக்கிட்டயே நான் பல முறை பார்த்திருக்கேன். வாங்க போகலாம்.''



''அவசரப்படாதே. எனக்கு கொஞ்சம் ஒத்துழைப்பு தா. மனசை ஒருமுகப்படுத்து. இந்த மலையோட தொடர்புபடுத்தி யோசி... உனக்கு பழைய நினைவுகள் திரும்ப வரலாம்.''

''அவர் பேசப்பேச அவளுக்கு எரிச்சல் பீறிட்டது.

''யாராவது பார்த்தா நம்மை பத்தி கன்னாபின்னான்னு நினைப்பாங்கப்பா வாங்கப்பா.''

- எரிச்சலோடு கத்தினாள். அவரால் அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை. மகளை சோர்வோடு பார்த்தார். பின் அவள் விருப்பப்படி கிளம்பினார்.

**வி**டிந்து விட்டது.

திறந்திருக்கும் ஜன்னல் வழியாக உள்ளே புகுந்த சூரியனின் ஒரு ஒற்றைக் கதிர் குப்புறப்படுத்திருந்த சக்திவேலின் கன்னத்தில் பட்டு சூடு தாளிக்கத் தொடங்கியது.

நிலைக்கதவுக்குக் கீழே இந்துவும், தினத்தந்தியும் எட்டிப்பார்த்தபடி கிடந்தன.

கட்டிலின் மேல் மல்லாந்திருந்த பாஸ்கரன் புரண்டு படுத்தான். அப்படியே தூக்கத்தில் திரும்பவும் பள்ளத் தாக்கில் விழுகின்றவனைப் போல விழைய ஆரம்பித்தான். சற்றுத் தள்ளி மேஜைமேல் கிடந்த தொலைபேசிக்கு அது பிடிக்கவில்லையோ என்னவோ அமட்ட ஆரம்பித்தது. நல்ல நிசப்தத்தில் பலமாகவே காதைக் குடைந்தது. கண்ணைத் திறந்த பாஸ்கரன் எரிச்சலோடு போய் ரிசீவரைக் கையில் எடுத்தான்.

''பாஸ்கரன்...'' குயில் போல ஒரு பெண் குரல்.

''ஆமாம் பாஸ்கரன்தான். யார் பேசறீங்க?''

''அருள்மொழி!''

''அருள் மொழி... ஹாய் அருள்மொழி!'' அந்தப் பெயர் மின்னல் வேகத்தில் அவன் தூக்கக் கலக்கத்தை விரட்டியடித்தது.

''தூங்கிட்டு இருந்தீங்களா, கெடுத்துட்டேனா...''

''நோ... நோ... என்ன விஷயம் அருள்மொழி...''

''ரொம்ப முக்கியமான விஷயம் பாஸ்கரன்... எப்ப பொழுது விடியும்னு காத்துகிட்டிருந்தேன்...''

''என்ன... எனிதிங் சீரியஸ்...?''

''ஆமாம்... இங்க அப்பாவோட போக்கு ரொம்ப புதிரா இருக்கு. என்னை ஒரேடியா குழப்பறாரு... ராத்திரி கூட என்னை யானைமலைக்குக் கூட்டிக்கிட்டுப் போய் தாழி, எலும்புக்கூடுன்னு கண்டதைக் காட்டி கலவரப்படுத் திட்டாரு...''

''என்ன சொல்றீங்க...?''

''பாஸ்கரன், நான் உங்களோட கொஞ்சம் மனம் விட்டுப் பேசனும். அப்பாவுக்கு ஏதோ ஆயிடிச்சு. தூக்கத்துலகூட சொர்ண மீனாட்சி... சொர்ண மீனாட்சின்னு ஒரே புலம்பல்.''

''அப்படியா...?''

''ஆமாம் பாஸ்கரன் உங்களை நான் உடனே தனியா சந்திக்கணும். வீட்டுக்கு வரட்டுமா?''

''வீட்டுக்கு... ஒரு தாராளமா வரலாமே - இது என்ன கேள்வி. இது உன் வீடு- சாரி வெரி சாரி, உங்க வீடு...''

''உன் வீடுங்கறதுதான் சரி.. அது என்ன உங்க வீடு? என்கிட்ட உரிமை எடுத்துக்கறதுல கூடவா உங்களுக்குத் தயக்கம்?''

''ஓ.கே... ஓ.கே. சீக்கிரமா வா... நேரில் பேசலாம்.''

''ஒரு ஒன்பது மணிக்கு வரேன். அப்பா அனேகமா பன்னெண்டு மணிக்குத்தான் எழுந்திருப்பார். விடியவிடிய ஏதேதோ ஏடுகளைப் படிச்சிகிட்டிருந்தார். உங்களைப் பார்த்துப் பேசிட்டு நான் திரும்பிடணும்.''

''சரி.. சீக்கிரம் வா!''

''ரொம்ப நன்றி...''

''அந்நியர்களுக்குத்தான் நன்றி சொல்வாங்க. நான் அந்நியனா...?''



''அப்ப அது வாபஸ்...'' சொல்லிவிட்டு போனை வைத்தாள்.

சக்திவேலும் முழித்துக் கொண்டிருந்தான்.

பார்வையாலேயே 'யார் சார்?' எனகிற மாதிரி பார்த்தான். பாஸ்கரன் பதில் சொல்லவில்லை.

''எழுந்தாச்சா... கமான் சக்திவேல் - ஒரு இம்பார்ட்டன்ட் பர்சன் வரப்போறாங்க. வீட்டை எல்லாம் கொஞ்சம் ரெடி பண்ணுவோம்.''

- அவள் சொன்ன கவலைக்குரிய விஷயத்தையும் மீறி அவள் வரப்போகும் உற்சாகம் அவனிடம் பீறிட்டது.

சக்திவேலுக்கு ஆச்சரியமாகிப் போனது.

பாத்ரூம் எங்கே இருக்கிறது என்று கேட்டுப் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டான். பாஸ்கரன் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். தாடையில் மூன்று நாளில் இரண்டரை மில்லிமீட்டர் நீள ரோமம்.

முகத் தரையில் வளரும் அந்த கட்டாயக் கறுப்புப் புற்கள் என்னை அகற்று என்றன.

மனதிற்கினியவள் வரப்போகிறாள், இப்படியா பங்கரையாக இருப்பது?

அவசர அவசரமாக அலங்காரத்திற்குத் தயாரானான். கதவடியில் கிடந்த பேப்பரை எடுத்து ஒரு ஓட்டம் ஓடினான்.

ஒரு செய்தி கண்களை அகல விரிக்க விட்டது.

''பிரபல எழுத்தாளர் பாஸ்கரனுக்கு இலக்கிய பீட விருது!''

- தலைப்பே அவனைத் திணற விட்டது. செய்தியை விரிவாகப் பார்த்தான்.

பிரபல தமிழ் எழுத்தாளர் பாஸ்கரனுக்கு இந்த ஆண்டின் இலக்கிய பீட விருதை வழங்கிட இலக்கிய பீட அமைப்பு நிர்மானித்துள்ளது. வரலாற்று உண்மைகளை அப்பட்டமாகச் சித்தரிக்கும் அவரது படைப்புகளுக்கு உலகளாவிய வரவேற்பு

இருப்பது தெரிந்ததே. ரஷ்யா, சீனா உள்ளிட்ட மொழிகளில் இவரது பல நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது ஆய்வில் கற்சிலைகள் பேசும் விதமாக இவர் தீட்டிய 'பல்லவக் கோட்டம்' என்னும் நாவலுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.'

படித்த பாஸ்கரனுக்கு படபடப்பாகிப் போனது. அவன் எதிர்பார்த்திராத ஒரு பரிசு. சந்தோஷம் ரத்தத்தில் கூத்தாடிக் கொண்டு ஓடும்போது திரும்பவும் தொலைபேசி அழைப்பு.

நிச்சயம் அருள்மொழி தான். வாழ்த்துவதற்காக அழைத்திருப்பாள் - நினைப்புடன் போய் எடுத்தான்.

ஆனால் காதில் தொல் பொருள் இலாகாவைச் சேர்ந்த சந்த்ரப்ரகாஷ்!

''வாழ்த்துக்கள் பாஸ்கரன்!'' - என்றுதான் ஆரம்பித்தது அவர் குரல்.

''நன்றி சந்த்ரப்ரகாஷ்...''

''இன்னொரு விஷயம்...''

''என்ன சொல்லுங்க...?''

- சந்த்ரப்ரகாஷும் சொன்னார். ஆனால் பாஸ்கரன் முகம் அடுத்த நொடி பயங்கரமாக மாறியது.

## 23

பாஸ்கரனின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை க்ஷணத்தில் அடையாளம் கண்டு கொண்டான் சக்திவேல்.

அதை கேள்வியாகவும் ஆக்கினான்.

''சார்.. என்ன சார் ஏதாவது அதிர்ச்சியான விஷயமா?''

''ஆமாம் சக்தி...''

''நான் தெரிஞ்சுக்கலாமா சார்...''

''என்னைச் சுத்தி நடக்கிற எல்லாமே எனக்கு பெரிய மர்மமா இருக்கு சக்தி.''



- பாஸ்கரன் கசகசத்துப் போனான். ''என்னன்னே இருக்குன்னு சொல்றீங்களே சார்...''

''பல்லவ பீடம் நாவலுக்கு பரிசு கிடைக்கும்னு உங்க ஊர் பெருமாள்மலை கல்வெட்டுல செய்தி இருக்காம்.''

''அப்படியா... யார் சார் சொன்னது?''

''சந்த்ரப்ரகாஷ்ங்கற ஒரு ஆர்க்கியாலஜிஸ்ட்.''

''அப்ப அவங்களுக்கு எங்க ஊர் பெருமாள்மலைக் கரடு பத்தி எல்லாம் தெரியுமா சார்?''

''தெரியாமலா சக்தி எனக்கு அவர் போன் பண்ணிச் சொல்றாரு?''

''எப்படி சார்... எனக்குத் தெரிஞ்சு சமீப காலத்துல யாருமே அங்கே போனதே இல்லையே சார்...''

''அதான் சொன்னேன், எல்லாம் பெரிய மர்மமா இருக்குன்னு.''

''என்ன சார் நீங்க... வரலாறுங்கறது நம்மை விட்டுப் போன ஒரு காலம். இப்ப இருக்கிற அறிவைக் கொண்டு, கற்பனையைக் கொண்டு அந்தக் காலம் இப்படித்தான் இருந்திருக்கணும்னு அனுமானிச்சு அதுல அற்புதமா கதைகள் எழுதறவர் நீங்க...உங்களால கூடவா இந்த மர்மங்களை எல்லாம் புரிஞ்சுக்க முடியல?''

- சக்தி தான் ஒரு தேர்ந்த வாசகன் என்பது போலத் தான் பேசினான். அவனை முதல்முறையாக அதிகபட்ச ஆச்சரியத்தோடு பார்த்தான் பாஸ்கரனும்.

அப்படிப் பார்க்காதே என்கிற மாதிரி திரும்பவும் தன்னை நோக்கிக் கூப்பிட்டது தொலைபேசி.

இந்த முறை யார்?

போய் கையில் எடுத்தான்.

''பாஸ்கரு நான் அம்மா பேசறேன்டா...''

''அம்மா நீங்களா.. எப்படி இருக்கீங்க?''

''நல்லா இருக்கேன். இப்பதான் பேப்பர் பார்த்தேன். உனக்கு விருது கிடைச்சிருக்கிறத பார்த்த உடனே எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல.''

''நானும் இப்ப தான்மா பார்த்தேன். எல்லாம் உன் ஆசீர்வாதம்மா...''

''ரொம்ப சந்தோஷம்பா... இதைப் போல பல விருது உனக்குக் கிடைக்கணும்.. இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேனே.''

''என்னம்மா?''

''இன்னிக்கு விடியற்காலை ஒரு கனவு. அதுல நீ ஒரு சாமி விக்ரகத்தை புடிச்சிக்கிட்டு நிக்கறே. அது ஒரு தங்க விக்ரகம். அது நல்லா பளபளன்னு மின்னுது. மீனாட்சி விக்ரகம்னுதான் நினைக்கறேன். டக்குன்னு தூக்கம் முழிச்சிட்டேன். அதுக்கப்புறம் தான் இந்தச் செய்தியைப் பேப்பர்ல பார்த்தேன். எனக்கு எல்லாமே ஒரு மலைப்பா இருக்கு. உன் வாழ்க்கை இன்னிய தேதியில இருந்து புதுசா ஒரு பாதைல போற மாதிரி கூட ஒரு உள்ளுணர்வுடா பாஸ்கரா...''

- அம்மாவின் மறுமுனைப் பேச்சு பாஸ்கரனை ஒரு விநாடி மறுபேச்சு பேச விடாதபடி கட்டிப்போட்டுவிட்டது. அப்படியே சிலையாகி விட்டான்.

''பாஸ்கரா... பாஸ்கரா...'' அம்மாவின் குரல் அவன் பிரக்ஞையைக் கலைக்கப் பார்த்தது.

''ஆங்... அம்மா.. சரிம்மா.. சொல்லுங்க.''

''என்னடா.. நான் சொன்னதைக் கேட்டு அப்படியே கற்பனைல மூழ்கிட்டியா?''

''ஆங்... இல்லம்மா... ஆமாம்... ஆமாம்!''

''நல்ல பிள்ளைடா.. சரி போனை வெச்சுடட்டுமா?''

''சரிம்மா.''

-போனை வைத்துவிட்டு நிமிர்ந்தான் ''அம்மாவா சார்?'' இது சக்திவேல்



''ஆமா சக்தி.''

''அம்மாகூட உங்களை மலைக்க வைக்கற மாதிரி ஏதோ சொல்லி இருக்காங்க போல இருக்கே?''

''ஆமாம்... ஏன் இப்படி எல்லாம் நடக்குது?''

''என்ன சார்... இப்ப என்ன நடந்துச்சு?''

- சக்திவேலின் கேள்விக்கு பதில் சொல்லாதபடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

வெளியே ஏகத்துக்கும் மனித நடமாட்டம்.

'அதில் முக்காலுக்கும் மேல் எந்திரங்களால்... அந்த எந்திரங்களுக்கான சக்தியை பெட்ரோலும் டீசலும்தான் தருகின்றன. அதை பூமித்தாய் தன் வயிற்றில்தான் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

அதை உறிஞ்சி உறிஞ்சி எடுத்து மனிதக் கூட்டம் வெளியே இயங்கிக் கொண்டிருக்கிறது.

அப்படி இயங்கும் போது கரியும் புகையும் கிளம்பி வான மண்டலத்தையே அசுத்தமாக்கி விட்டன. காற்று கெட்டுவிட்டது. ஓஸோன் படலத்திலும் ஓட்டை.. . இதனால் மழை, வெய்யில் எல்லாவற்றிலும் அசாத்திய மாற்றங்கள். பெட்ரோலும், டீசலும் ஒரு நாள் வற்றிப் போகும். இதனால் பூமி சுருங்கும். பின் பூமியை சுருங்கிப் போக வைத்த மனிதன் வானத்தையும் அசுத்தப்படுத்தி, புவி ஈர்ப்பு விசையிலும் காலப் போக்கில் மாற்றங்களை உருவாக்கி இயற்கையைக் கடித்துக் குதறப் போகிறான்.

பின் அவனே ஒரு கட்டத்தில் இல்லாது போவான். பரந்த வானில் என்ன இயலாதபடி நட்சத்திரங்கள், கோள்கள், பூமியும் அதில் ஒன்றாய் மனித உயிர்களேயன்றி வான வெளியில் உருண்டு போய்க்கொண்டே இருக்கும். யாரோ உதைத்த கால்பந்து போல அது உருண்டு கொண்டேயிருக்கும். அது தான் நடக்கப் போகிறது. நடத்தப் போகிறவன் மனிதன்.

அவனது சுயநலம், அவனது இனப்பெருக்கம், அவனது தேவை இதைத்தான் செய்யப் போகிறது.

- ஜன்னல் வழியாக வெளியே தெரியும் மனித சமுதாயமும் அதன் எந்திர ஓட்டங்களும் பாஸ்கரனை இப்படித்தான் இதுநாள் வரை சிந்திக்க வைத்திருக்கின்றது.

இன்று அதில் ஒரு அச்சமூட்டும் மாறுதல்.

''வெளியே இயங்கும் ஒவ்வொரு மனிதனும் ஏற்கனவே எங்கோ யாராலோ திட்டமிடப்பட்டு அதன் காரணமாகத் தூண்டப்பட்டு இயங்குவதுபோல ஒரு கற்பனை.

இப்படி இல்லை என்றால் எப்படி தன் வாழ்வில் நடந்ததும், நடக்கப்போவதும் முன்பே கணிக்கப்பட்டிருக்க முடியும்?

தன்னுடைய விஞ்ஞான எண்ணங்கள் சரியா... இல்லை தன்னுள் மாற்றங்களை ஏற்படுத்த புறத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அமானுஷ்யமான இந்த மாதிரி விஷயங்கள் தான் சரியா?

அமானுஷ்யம் என்று ஒன்று இருக்கிறதா? பாஸ்கரன் கேள்விப் பந்துகளை அது எம்ப எம்ப அடித்துக் கொண்டிருக்கும் போது கதவு தட்டப்படும் சப்தம். சக்திவேல் போய் கதவைத் திறந்தான்.

- துர்காவும் அவள் அப்பா, அம்மாவும் தெரிந்தார்கள். ''குட்மார்னிங் தம்பி... கங்ராஜுலேஷன்ஸ்...'' துர்கா - அப்பா பேசியபடி உள்ளே வர பின்னாலேயே அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர்.

''உம் வாங்க.... வாங்க...''

''பேப்பர் பார்த்தோம். பெரிய விருது போல இருக்குதே.''

''ஆமாம். இந்தியாவுல எழுத்தாளர்களுக்கு தரப்பட்றதுல இதுதான் முதல் விருது. பத்மஸ்ரீ, பத்ம பூஷண் மாதிரி...'' சக்தி வேல் விசிறி விட்டான்.

''ரொம்ப சந்தோஷம். என் வீட்டுகிட்ட இருக்கற ஒருத்தர் ஒரு பிரபல எழுத்தாளர். அவர் இப்படி பெரிய விருது வாங்கியிருக்கிறவர்ங்கிறது எவ்வளவு பெருமைக்குரிய விஷயம் தெரியுமா?''



துர்காவின் அப்பா விஸ்தாரமாகப் பேசினார். அம்மா வாய் நிறைய சிரிப்பாக இருந்தாள். ஆனால் துர்கா தலை குனிந்து காலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். முகத்தில் ஒருவித இறுக்கம்.

பாஸ்கரன் அதைக் கவனித்தான்.

''தம்பிகிட்ட வேற சில விஷயங்களையும் பேசணும்னு...''

''என்னங்க?''

''அம்மா இப்ப மெட்ராஸ்ல இருக்காங்களோ?''

''ஆமாம்..''

''நீங்க எவ்வளவு நாளைக்கு இப்படி தனியா இருந்துகிட்டு கஷ்டப்படுவீங்க?''

''கஷ்டப்பட்றேனா... நானா?''

''இல்லையா பின்னே.. உங்களுக்கும் வயசாயிடிச்சு. கல்யாணம் கார்த்திகைன்னு அதுஅது நடக்கும்போது நடந்தாத்தானே நல்லா இருக்கும்?''

''ஆமாமா.. நானும் கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிற எண்ணத்துலதான் இருக்கேன்.''

- பாஸ்கரன் போகிற போக்கில் பட்டென்று சொல்லவும் துர்காவின் அம்மா திக்குமுக்காடிப் போய் கேட்டாள்.

''ஆமா.. பொண்ணு பாக்க ஆரம்பிச்சாச்சா?''

''கிட்டத்தட்ட முடிவே பண்ணியாச்சு...''

''அப்படியா.. பொண்ணு யார் தம்பி?''

- துர்காவின் அம்மா கேட்கும் போதே துடிதுடித்தாள்.

''அது இப்போதைக்கு உங்க வரைல சஸ்பென்ஸாவே இருக்கட்டுமே...''

- அவன் பதில் அவர்கள் முகத்தில் குத்தியது. துர்கா எந்தவித பதட்டமும் இன்றி இருந்தாள். அம்மாவும் அப்பாவும் அவளுக்கும் சேர்த்து உணர்ச்சிவசப்பட்ட மாதிரி இருந்தது.

''அப்ப நாங்க வரோம்.. ஆல் த பெஸ்ட் தம்பி.''- அப்பாவின் குரலில் சுரத்தே இல்லை. மூவரும் திரும்பினார்கள். துர்கா மட்டும் போகும் போது ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனாள்.

வாசல் தாண்டும்போது எதிரில் அருள்மொழி!

நின்று அவளை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தாள். அருள்மொழிக்கு அந்தப் பார்வையும் அதன் மொழியும் ஆனாலும் புதியது.

பார்த்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

ஏற்கனவே குழப்பம்...இதில் இந்தப் பார்வையும் சேர்ந்து கொண்டால்?

''வா அருள்...'' பாஸ்கரன் அவளைப் பார்த்த நொடி உற்சாகமானான். வந்தவள் முதல் காரியமாக ஹேண்ட் பேக்கைத் திறந்து குங்குமப் பொட்டலம் ஒன்றை எடுத்து பிரித்தாள். முதல் காரியமாக அவன் நெற்றியில் அதனை இட்டாள்.

''இது மீனாட்சி அம்மன் கோவில் பிரசாதம்... கிளம்பும் போது தான் நியூஸ் கேட்டேன். உங்களுக்கு விருது கிடைச்சதுக்கு என் மனபூர்வமான வாழ்த்துக்கள்.''

- அவனுக்கு அவள் பொட்டிட்டதும், வாழ்த்தியதும் பரவசத்தைத் தந்தது.

''நன்றி அருள்மொழி... ப்ளீஸ் உட்கார்...''

உட்கார்ந்தாள். சக்திவேலையும் பார்த்தாள்.

''யார் பாஸ்கரன் இது... வீட்டு வேலைக்கு புதுசா ஆள் போட்டிருக்கீங்களா?''

- அவள் அப்படிக் கேட்பாள் என்று அவன் துளி கூட எதிர்பார்க்கவில்லை. சக்திவேலை ஒரு பரிதாபப் பார்வை பார்த்தான். அவனோ முந்திக் கொண்டான்.

''சரியா சொன்னீங்கம்மா... நான் இனிமே இவர் அசிஸ்டெண்ட்தான்.''



- அவன் பதிலில் அப்படி யாராவது கேட்க மாட்டார்களா என்னும் ஆசையின் ஒளிவு.

பாஸ்கரனிடம் ஒரு மெலிந்த அதிர்ச்சி.

''சாரி அருள்மொழி... இவர் என் வாசகர். பேர் சக்திவேல்.''

''சார், அப்ப இவங்கதான் அந்த அருள்மொழியா?'' சக்திவேல் வேகமாகக் கேட்டான்.

''அந்த அருள்மொழியான்னா...?''

''பெருமாள்மலை கரட்டுல உங்க பேர், என் பேர், நம்ம பாஸ்கர் சார் பேரெல்லாம் இருக்கே. நாம மூணு பேரும் பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதிக்கப் போறோம்.''

- சக்திவேல் படபடவென்று கொட்டினான்.

அருள்மொழி நெற்றியைத் தேய்த்தாள்.

''சக்தி... என்ன இது வந்ததும் வராததுமா... கொஞ்சம் சும்மா இருங்க...''- அதட்டினான் பாஸ்கரன்.

''பாஸ்கரன், என்ன சொல்றார் இவர்? எனக்கு ஒண்ணும் புரியல...''

''சொல்றேன் அருள்மொழி. முதல்ல நீ வந்த விஷயத்தை சொல். அப்பாக்கு என்ன...? எதுக்காக யானைமலைக்குப் போனீங்க?''

''நேத்து ராத்திரி போனது மட்டுமில்ல பாஸ்கரன், இப்பவும் அங்க போகப் போறோம்...''

''அங்கயா... எதுக்கு?''

''என்னை அப்பா அங்க கூட்டிகிட்டுப் போய் எதைக் காட்டினாரோ அதை நானும் உங்களுக்குக் காட்டினாதான் நான் சொல்லப்போறதெல்லாம் உங்களுக்குப் புரியும்...''

- அருள்மொழி அசகாயமாகப் பீடிகை போட்டாள்.

''பரவல்ல... என்ன விஷயம்னு சொல்லு...

''சொன்னா ஆச்சரியப்படுவீங்க... நம்பவும் மாட்டீங்க. எல்லாம் பேத்தல்னு சொல்வீங்க.''

''ப்ளீஸ் அருள்.. விஷயத்தைச் சொல். நான் ஏற்கனவே ரொம்ப குழம்பிப் போயிருக்கேன்.''

''யானைமலைங்கறது இந்த மதுரை மண்ணோட ஒரு வரலாற்றுக் கருவூலமாம்.

அங்க பல நூற்றாண்டுகளுக்கு முந்தி நீங்களும் நானும் தூக்கிலிடப்பட்டு புதைக்கப்பட்டிருக்கோமாம். அதுக்கு சான்றா ஏடுகள் - அப்புறமா எலும்புக் கூடுகள், தாழிகள் எல்லாம் அங்க இருக்கு. அப்பா கூட்டிகிட்டு போய் காட்டினார்.

எனக்கு பழைய பூர்வ நினைவுகள் ஏதாவது ஞாபகத்துக்கு வருதான்னும் கேட்டார். ஒண்ணும் வரலைன்னு சொன்னேன். ஈவன் அதை பெரிய உளறலா நினைச்சேன். அதுக்குப் பிறகு திரும்பிட்டேன்.

ஒரு மணி நேரம் கண்ணயர்ந்திருப்பேன். அதுல ஒரு கனவு. அந்தக் கனவுல நீங்க ஒரு தங்க மீனாட்சி விக்கிரகத்தை அந்த மலைல ஒரு குகைல வெச்சு பூஜை செய்யறீங்க. நான் உங்களுக்கு உதவியா பூவெல்லாம் பறிச்சு கொண்டுகிட்டு வரேன்...''

- அருள்மொழி சொல்லச் சொல்ல பாஸ்கரனுக்குள் இதயத் துடிப்பு அதிகமாகத் தொடங்கியது. சென்னையில் இருக்கும் அம்மாவும் கிட்டத்தட்ட இதையேதான் சொன்னாள். இப்போது அருள்மொழி... காலம் எதற்காக இப்படி தன்னிடம் கண்ணாமூச்சி விளையாடுகிறது. எல்லாம் எதற்கு?

அவன் கேள்வியில் விழுந்து புரளும் போது திறந்திருக்கும் அவன் வீட்டு வாயிலில் ஒரு ஜைன பெண் துறவி.

வாயில் வெள்ளைத் துணியைக் கட்டிக்கொண்டு கருணைப் பார்வை சிந்தியபடி, ''வணக்கம் பாஸ்கரன்'' என்றாள் மிகச் சாந்தமான குரலில்...

''வாங்க... நீங்க?''



- உள்ளே அழைத்து விசாரித்தவன் முன்னால் அளவாகச் சிரித்தாள் அந்தப் பெண் துறவி.

''நான் சந்த்ரப்ரபா... ஒரு ஜைன துறவி. உங்ககிட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்.''- என்ற அந்தப் பெண் துறவி தான் கொண்டு வந்திருந்த கைப்பையிலிருந்து ஒரு புத்தகத்தை வெளியே எடுத்தாள்.

அது பாஸ்கரன் வசம் ஏற்கனவே வந்து பின் அழிந்தும் போன 'தெட்சிண ரகசியம்' என்னும் புத்தகம்!

## 24

'தெட்சிண ரகசியம்' என்னும் அந்தப் புத்தகத்தைப் பார்த்த நொடியில் பாஸ்கரனிடம் பயங்கர பிரகாசம்.

துறவிப் பெண்மணியும் அதை மடிமேல் வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''மிஸ்டர் பாஸ்கரன், முதல்ல உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.''

''நன்றி!''

''நான் என்னை அறிமுகப்படுத்திக்க விரும்பறேன். நான் ஒரு ஜைனத் துறவி. என் பேர் சந்த்ரப்ரபா... ஏற்கனவே ஒரு முறை உங்களைப் பார்க்க வந்திருக்கேன். ஆனா அப்ப நீங்க வீட்ல இல்லை.''

''நல்லதும்மா. என்ன விஷயம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''உங்ககிட்ட ஒரு முக்கியமான உதவியைக் கேட்டுத்தான் வந்திருக்கேன்.'' - சொல்லிவிட்டு அந்தப் பெண்மணி பாஸ்கரனை ஒட்டி நிற்கும் அருள்மொழியையும், சக்திவேலையும் பார்த்தாள்.

''என்ன உதவிம்மா...?''

''அது கொஞ்சம் ரகசியமான விஷயம். இவங்கள வெச்சுகிட்டு பேச தயக்கமா இருக்கு...''

- சொன்ன மறுநொடி அருள்மொழி ''நான் வேண்டு மானால் வெளியே போய் காத்திருக்கிறேன்.'' என்று கிளம்பினாள். சக்திவேலும் வெளியேறும் உடன்பாட்டோடு எழுந்தான்.

பின் இருவரும் வெளியேறினார்கள். அந்தப் பெண்மணி ஆழமான பெருமூச்சோடு பாஸ்கரனைப் பார்த்தாள். அவனைப் பார்த்தவள், அவன் வசிக்கும் வீட்டையும் சுற்றி ஒரு பார்வை விட்டாள். எங்கும் ஒரு சுவாமி படம் கூட இல்லை. சில இயற்கைக் காட்சிகளை உள்ளடக்கிய ப்ளோ அப் போஸ்டர்கள், ஒரு டெண்டுல்கரின் ப்ளோ அப் போஸ்டர் என்று அவனுக்கு இயற்கையின் மீதும் விளையாட்டின் மீதும் இருக்கும் ஈடுபாடு தெரிந்தது.

''உங்களுக்கு கடவுள் நம்பிக்கை கிடையாதா?'' - மிக நிதானமாகக் கேட்டாள்.

''நம்பிக்கை உண்டு. ஆனால் அதை பட்டவர்த்தனப் படுத்திக்க பிடிக்காது.''

''அது தப்பா?''

''தப்புன்னு நான் நினைக்கறேன். பிறப்பால நான் ஒரு இந்து. ஒரு இந்துக் கடவுளோட படத்தை வெச்சிருக்கறதன் மூலம் மற்ற மதக் கடவுள்களை மறுக்கறேன்னு ஒரு எண்ணம் பாக்கறவங்களுக்கு வரலாம் இல்லியா?''

''அப்ப மற்ற கடவுளர் படங்களையும் வெச்சுக்கலாமே?''

''அப்ப நான் அந்த கடவுளர்களோட பாதையும் ஃபாலோ பண்ணணும் இல்லியா?''

''ஏன் அது முடியாதா?''

''எப்படி முடியும்? ஒரு சமயத்துல ஒரு மனுஷன் நாலைஞ்சு பாதைல போறது குழப்புமே...''

''எப்படி...?''



''உங்க பௌத்தமும், ஜைனமும் புலால் உண்ணக் கூடாதுன்னு சொல்லுது. இந்து மதத்துலயும் ஒரு பிரிவு அதை ஆமோதிக்குது. ஆனா மற்ற மதங்கள் அப்படிச் சொல்லாத நிலைல எப்படி ஒரு மனிதன் எல்லா பாதையிலயும் ஒரு முழுமையோட போக முடியும்?''

''நல்ல பதில்தான்... அதனாலதான் எந்த பாதையும் வேண்டாம்னு முடிவு பண்ணிட்டீங்களா?''

''இந்தக் கேள்வியை இப்ப நீங்க கேட்கக் காரணம்?''

''இருக்கு மிஸ்டர் பாஸ்கரன். நீங்க ஒரு நாத்திகவாதியா இருந்தா நான் கேட்கப் போற உதவியை நீங்க செய்வீங் களாங்கறது எனக்கு சந்தேகம். அதனாலதான் அப்படிக் கேட்டேன்.''

''உதவி என்னன்னே சொல்லலையே...?''

''இது முழுக்க முழுக்க என்னோட தனிப்பட்ட சில நம்பிக்கை சார்ந்த விஷயம்...''

''அதுதான் என்னன்னு கேக்கறேன்.''

''இந்தப் புத்தகத்தை இதுக்கு முன்னால நீங்க பார்த்திருக்க வாய்ப்பு இல்லைன்னு நினைக்கறேன். இதைப் பாருங்க. படியுங்க. அதன்பிறகு நான் நீங்க என்ன செய்யணும்னு சொல்றேன்.''

''நான் இதை ஏற்கனவே பார்த்திருந்தா...?''

''பார்த்திருக்கீங்களா... நிஜமாவா?''

''பார்த்துப் படிச்சு அதனால பெரிய பாதிப்புகளுக்கும் உள்ளான ஒருவன்தான் நான்.''

''அப்ப நான் வந்த வேலை சுலபமா முடிஞ்சிடும்னு நம்பறேன். ஆமா எப்படி இது உங்களுக்குச் கிடைச்சது...?''

''பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் இதைக் கொடுத்து படிக்கச் சொன்னார். படிச்சேன்.''

''இதைப் படிச்ச நிலைல உங்க கருத்து?''

''இண்ட்ரஸ்ட்டிங்கா இருக்கு. இப்போதைக்கு அவ்வளவுதான் சொல்லமுடியும்.''

''இதுல உங்களைப் பற்றின குறிப்புகளும் இருக்கு பாஸ்கரன்.''

''அதனால...?''

''அதை நீங்க நம்பறீங்களா...?''

''அதைப்பற்றி நான் இப்ப எதுவும் சொல்ல முடியாது...'' - பாஸ்கரனின் நறுக்குத் தெறித்த பதில் அந்தப் பெண்மணியின் முகத்தில் ஒருவித ஏமாற்றத்தைப் பரத்தியது.

''சரி.. ரொம்ப ரகசியமா நீங்க கேட்க நினைச்ச அந்த உதவி என்னன்னு இன்னும் சொல்லலியே?''

''சொல்றேன். இதை எழுதின ஸ்ரீஸ்ரீபிரம்மமித்திரர் ஒரு ஜைனத் துறவி. தன் தவ பலத்தாலயும் முக்கால ஞானத்தாலயும் பின்னால நடக்கப் போறதை முன்கூட்டியே யூகம் செய்து எழுதி வெச்சிருக்கார். இந்தப் புத்தகத்துல உள்ள குறிப்புப்படி ஒரு தங்க புத்தர் விக்கிரகம் நிச்சயம் இருக்கணும்றது என் நம்பிக்கை. அதை இந்தப் புத்தகத்தோட உதவியோட நீங்க கண்டுபிடிப்பீங்கன்னும் இதுல இருக்கிற குறிப்பு சொல்லுது...!

''ஆமாம்...''

''அப்படி கண்டுபிடிக்கப்போற அந்த புத்தர் விக்ரகத்தை நீங்க எனக்குக் காட்டணும்.''

''நீங்களோ ஒரு ஜைனத் துறவி. பௌத்தம் உங்க பாதை இல்ல. நீங்க எதுக்கு அதை பார்க்க விரும்பறீங்க?''

''என் அனுமானம் அது புத்தர் விக்ரகமா இருக்காது. எங்க தீர்த்தங்கரர்கள்ள ஒருத்தர் விக்கிரகமாதான் அது இருக்கணும்...!''

- அந்தத் துறவியின் கருத்தைக் கேட்டு பாஸ்கரன் கொஞ்சம் வாய்விட்டே சிரித்துவிட்டான்.

''எதுக்கு சிரிக்கிறீங்க?''



''சிரிக்காம... கல்யாணமே நடக்கல. அதுக்குள்ள பிறக்கப் போற குழந்தைக்குப் பேர் வைக்கற மாதிரி இருக்கு உங்க பேச்சும் ஆசையும்...''

''உண்மைதான். நான் என் கருத்தைச் சொன்னேன். பிரம்மமித்திரர் ஒரு ஜைனத் துறவி. அவர் எதற்கு புத்தரைப் பற்றி சொல்லணும்கறதுதான் என் சந்தேகம்.''

''புத்தகமே ஒரு கற்பனையா ஏன் இருக்கக் கூடாதுன்னு நான் யோசிச்சுக்கிட்டிருக்கேன்... நீங்க அதுல புத்தரைப் பற்றித்தானே யோசிக்கறீங்க.''

''புத்தகம் கற்பனையா இருந்தா இப்ப நீங்க எப்படி பாஸ்கரன்கற ஒரு எழுத்தாளரா இருக்க முடியும்?''

''வேண்டாம், இதுக்கு மேல எதுவும் பேச வேண்டாம். அது மதங்கனி சித்தர் ரசவாதத்தால செய்த சொர்ண மீனாட்சின்னும் ஒரு கருத்து இருக்கு. அதைத்தான் புத்தரா மாற்றினாங்கன்னு இந்தப் புத்தகம் சொல்லுது. நீங்க ஒரு படி மேல அது தீர்த்தங்கரர்னு சொல்றீங்க. முதல்ல சிலை வசப்படட்டும். பிறகு பார்த்துக்கலாம்.''

''அதுவும் சரிதான்... அப்படி வசப்பட்ற பட்சத்துல பிரம்மமித்திரர் எழுதின இந்தப் புத்தகம்தான் அனைத்துக்கும் காரணம்னு நீங்க சொல்லணும் பாஸ்கரன். அதன்மூலமா பிரம்மமித்திரர் பேரும் புகழும் பேசப்படணும்.''

- பாஸ்கரன் திரும்பவும் சிரித்தான்.

''அடிக்கடி சிரிக்கறீங்க.''

''சிரிக்காம. உலகத் துறவிகள்ளயே ஜைனத் துறவிகளை நான் மிக உன்னதமானவங்களா நினைக்கறேன். அவர்களுக்கு ஆசை, பாசம் எதுவுமே கிடையாது. ஆனா நீங்களோ ஒரு கட்சித் தலைவரோட புகழுக்கு பாடுபட்ற ஒரு தொண்டனைப் போல பேசினா சிரிக்காம என்ன பண்ணட்டும்?''

- பாஸ்கரனின் பதில் அந்தத் துறவியைக் கொஞ்சம் வாயடைக்கச் செய்தது. இருந்தும் சுதாரித்துப் பேச ஆரம்பித்தாள் அந்தப் பெண்மணி.

"பாஸ்கரன்... நான் உண்மைல ஜைன மதத்துல பிறந்து அதன் வழி நடக்கற ஒரு பெண் இல்ல. ஜைனமதக் கருத்துக்களைப் படித்து அதனால் ஈர்க்கப்பட்டு ஒரு ஜைனத் துறவியா என்னை நானே ஆக்கிக்கிட்டிருக்கேன்.

எனக்குள்ள சராசரி ஆசைகள் இன்னும் அழியல. ஆனா உங்க பதிலைக் கேட்டபிறகு என் பலவீனம் எனக்குத் தெரியுது.

ஒண்ணு மட்டும் உண்மை பாஸ்கரன்.

இந்தப் புத்தகம் - இதுல உள்ள குறிப்புகள் - அதன்படி தான் எல்லாம் நடக்கும்னு நான் உறுதியா நம்பறேன். அப்படி நடந்து முடியும்போது இந்த உலகம் பல அதிசயங்களைச் சந்திக்கப் போகுது.

வெளிச்சத்துக்கு வரப்போற அந்த தங்க புத்தரோ இல்லை தீர்த்தங்கரரோ... அவருடைய கருணையால எங்கேயும், எப்பொழுதும் அமைதி தவழ்ந்தா அதுபோதும் எனக்கு... ஒரு விஷயம் இந்தப் புத்தகத்தோட கடைசி பக்கங்களைப் படிச்சுப் பாருங்க. அதுலதான் உங்க கண்டுபிடிப்பு மட்டுமில்ல, அதை நீங்க காப்பாத்துவீங்களா, இல்ல காணாமப் போவீங்களாங் கறதும் இருக்கு. அது தமிழ் மொழில இல்ல. பாலி மொழில இருக்கு.

பாலி மொழி தெரிஞ்ச ஒருத்தர் வந்துதான் அதை உங்களுக்குச் சொல்லணும்.

நானறிஞ்சவரை அதுல நல்ல தகவல் இல்லை. இது நிச்சயம்.

இந்தப் பேச்சையும் விஷயங்களையும் உங்களுக்குள்ள வெச்சுக்குங்க.

அவசியப்பட்டா திரும்ப சந்திக்கிறேன்.

உங்களுடைய வெற்றிக்கு என்னோட ஆசிகள்." - பேசி முடித்த பெண் துறவி கும்பிட்டபடி புறப்படத் தொடங்கினாள்.



பாஸ்கரனின் கரங்களில் திரும்பவும் அந்த தெட்சிண ரகசியம் புத்தகம்.

முதலில் அம்மாவின் கனவு...

அடுத்து அருள்மொழி சொன்ன தகவல்...

மூன்றாவதாக சந்த்ரப்ரகாஷ் சொன்ன கல்வெட்டுச் செய்தி. நான்காவதாக வழிகாட்டுவதற்கென்றே வந்து நிற்கும் அழிந்து விட்டதாகக் கருதிய புத்தகம்!

பாஸ்கரனின் மனதில் ஒரு பிரளயமே ஆரம்பமாகத் தொடங்கியது.

இப்படியும் காலம் ஒரு மனிதன் வாழ்வில் கண்ணாமூச்சி ஆடுமா என்ன?

புத்தகத்தை அவன் புரட்டும் அதே தருணம் வெளியில்...

ஓட்டுக்கு வெளியே கையைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்த அருள்மொழியையும், சக்திவேலையும் எதார்த்தமாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த துர்கா பார்த்தாள்.

"உள்ளதான் இருக்கார் பாஸ்கரன்" என்றாள்.

"தெரியும். உள்ள ஒரு முக்கிய பேச்சு நடந்து கிட்டிருக்கு. அதான் வெளியே வந்துட்டோம்."

"எவ்வளவு நேரம் இப்படியே நிற்பீங்க. உள்ள வாங்களேன்." அழைத்தாள்.

"பரவால்ல... ரொம்ப நன்றி..."

"நீங்க அவரோட வாசகரா...?" சக்திவேல் பக்கம் திரும்பினாள்.

"ஆ... ஆமாம்.. நான் வாசகன். ஆனா இவங்க யார் தெரியுமா? வருங்கால மனைவியும்கூட..."- சக்திவேல் சடாரென்று கொளுத்திப் போட்டான். அது அருள்மொழிக்கே அதிர்ச்சியாக இருந்தது. துர்காவோ அடுத்த நொடியே ஒரு ஜென்ம விரோதியைப் பார்க்கிற மாதிரி பார்க்க ஆரம்பித்தாள்.

''சக்திவேல் என்ன சொல்றீங்க...?'' அருள்மொழி படபடத்தாள்.

''அட என்னம்மா... ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கறீங்க. எனக்கு எல்லாம் தெரியும்.''

- அவன் சொல்ல பாஸ்கரன் அவர்களுக்கு நடுவில் நுழைந்தான்.

''அருள், சக்தி உள்ள வாங்க. அந்தம்மா போய்ட்டாங்க.''

- அருள் மொழி சக்திவேலை ஒரு மாதிரி வெட்கத்தோடு பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள். சக்திவேலும் சிரித்தபடி பின்தொடர்ந்தான்.

துர்கா முகத்தில் அனலின் வெம்மை. உள்மனதில் 'நீதானா அந்தக் காதலி' என்னும் எரிச்சல் மிகுந்த கேள்வி!

உள்ளே...

''பாஸ்கரன் அந்த சைன்ட் என்ன பேசினாங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

- அருள்மொழி புதிய உற்சாகத்தோடு இப்பொழுது பாஸ்கரனைப் பார்த்துக் கேட்டாள்.

''சொல்றேன் அருள்... அதுக்கு முந்தி நீ சொன்ன அந்த தாழியைப் பாத்துட்டு வந்துருவோமா?''

''சார் அப்படியே எங்க ஊருக்கும் போறோம். நீங்க அந்த ரயில்வே ஸ்டேஷன் ரெஸ்ட் ரூம்ல தங்கறீங்க. ஒரு ராத்திரி நாம மூண பேரும் ரகசியமா கரட்டுமேல ஏறி அந்தக் குகையை சல்லடை போட்டு சலிப்போம். என்ன சொல்றீங்க?''

- சக்திவேல் பறக்கத் தொடங்கினான்.

''அதப்பத்தி பிறகு பேசலாம். முதல்ல புரோபசர் கண்டுபிடிப்பு எந்த அளவு எனக்கு உதவி செய்யும்னு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன். அருள் நாம இப்பவே ஒரு டாக்சி பிடிச்சி யானைமலைக்கு போறோம். ஓ.கே...''

''ஷ்யூர் பாஸ்கரன்!''



காரை விட்டு மூவரும் இறங்கினார்கள்.

ஆடும், மாடும் மேயும்புதர்களையும் பாறைகளையும் தாண்டிக் கொண்டு நடக்கவும் தொடங்கினார்கள்.

''எந்த இடம்னு ஞாபகம் இருக்கா?''

''கொஞ்சம் குழப்பம்தான்... இருந்தாலும் கண்டு பிடிச்சுடுவேன்.''

- அருள்மொழி சொல்லும் போதே மலையின் பக்க வாட்டுச் சரிவும் அடர்ந்த புதர்களும் அங்கங்கே குழிகளும் கண்ணில் பட்டன.

''எல்லாம் உங்க அப்பா தோண்டினதா?''

''ஆமா...''

''வயசான காலத்துல ரொம்பதான் சிரமப்பட்டிருக்கார்.'' - சொல்லிக்கொண்டே நடந்தான். எதிரில் முந்தின இரவில் மீனாட்சிசுந்தரமும், அருள்மொழியும் வந்த சமயம் கண்ட அந்த சரபேஸ்வர மூர்த்தி விக்கிரகம் புதிய மலர் மாலை சூடப்பட்ட நிலையில் நடந்துவரும் மூவரையும் பார்த்தது.

அருள்மொழி அதைப் பார்த்த க்ஷணம் உற்சாக மானாள். ''இந்த இடம்தான்...இதே இடம்தான். அதோ சரபேஸ்வரர் விக்ரகம்!'' அவள் சொல்ல பாஸ்கரன் பார்க்க...

# 25

அந்த சரபேஸ்வரர் விக்கிரகத்தைப் பார்த்துவிட்டு சில நொடிகள் பம்மி நின்றாள் அருள்மொழி.

''என்ன அருள்... இங்க யாரோ வந்துட்டு போயிருக்கிற மாதிரி தெரியுதே?''

''ஆமா.. இந்த சாமிக்கு பயங்கர சக்தி இருக்குதாம். இதை ரகசியமா ஒரு பொண்ணு வந்து கும்பிட்டுட்டு போறதா அப்பாகூட சொன்னார்.''

- பாஸ்கரன் அதைக் கேட்டு சிரித்தான். அது அந்த விஷயத்தையே அவன் சர்வசல்லிசாக கருதுவதை சொல்லாமல் சொன்னது.

''ஆமாம் எங்க அந்த தாழிகள்?''

- சிரிப்பை தொடர்ந்தபடியே கேட்டான். அவள் ஒரு புதரை நோக்கி கையைக் காட்டினாள்.

அவனும் அந்த புதரை நோக்கி நடந்தான். சக்திவேல் மட்டும் சரபேஸ்வரரையே பார்த்தபடி இருந்தான்.

இதற்கு முன் அந்த உருவை வேறு எங்கோ பார்த்தது போல கூட தோன்றியது. மெல்ல மெல்ல பெருமாள் மலைக் கரட்டில் பல சிற்பங்களுக்கு நடுவில் இதுவும் இருப்பதாகக்கூட ஒரு உள்ளுணர்வு சொன்னது.

திரும்பினான்.

பாஸ்கரன் புதரை விலக்கியபடி இருந்தான். ஆளுயர தாழி மெல்ல தலைகாட்டத் தொடங்கியிருந்தது! முதல் தடவையாக ஒரு வியப்பு, மரங்கொத்தி போல பாஸ்கரனுக்குள் கொத்தியது.

படபடத்துப் போய் வேகமாகப் புதரினை விலக்கி தாழிக்குள் எட்டிப் பார்த்தான். சக்திவேலும் ஓடிவந்தான். உள்ளே நொறுங்கலாய் எலும்புக்கூடுகள்!

பாஸ்கரனின் விழிகளில் ஏராளமான விரிவு.

அருள்மொழி அதைப் பார்த்தபடியே கேட்டாள்.

''அது யாரோ இல்லையாம். நீங்களும் நானும்தானாம். அப்பா சொல்றார்.''

அருள்மொழியின் இந்த பதிலுக்கு பாஸ்கரனிடம் எந்த ஏளனச் சிரிப்பும் இல்லை. மாறாக புருவத்தில் கேள்விக்குறியும் பார்வையில் கூர்மையும் புகுந்திருந்தது.

''சார்... என்ன சார் இது? ரொம்ப ஆச்சரியமா இருக்குல்ல?'' - சக்திவேலும் சுருதி சேர்த்தான்.



''ஆமாம் சக்தி... சரித்திரக் குறிப்புகள்படி இங்க தமிழ்ப் புலவர்கள், தமிழர்கள் தூக்கிலிடப்பட்டு தாழிகள்ள புதைக்கப்பட்டது உண்மை. ஆனா பல நூற்றாண்டுக்கு முந்திய இந்த தாழிகள் இப்பவும் உடையாம அப்படியே இருக்கிறது தான் ஆச்சரியம். இந்த எலும்புகளை பரிசோதனைக்கு உட்படுத்தினா வருடம் தெரிஞ்சுடும். நிஜமா இது ஒரு சரித்திரப் புதையல்தான்...''

''ஆராய்ச்சியில கிடைக்கிற தாழியா மட்டும் இல்லாம உங்க பூர்வ ஜென்மத்தைக் காட்டற ஒன்றாகவும் இது இருக்கறதுதான் சார் எனக்கு பெரிய ஆச்சரியமா இருக்கு.''

''எதை வெச்சு இதை மீனாட்சிசுந்தரம் சார் எங்களோட தொடர்பு படுத்தினார்னு தெரியலியே...?''

''அப்பாகிட்ட ஒரு ஏட்டுக்கட்டு இருக்கு. அதுமட்டுமில்ல. இந்த யானைமலைலயே சில குறிப்புகள் கிடைச்சிருக்கு. அதை எல்லாம் வெச்சுதான் அப்பா அப்படி சொல்லியிருக்காரு.''

''அது இப்ப அப்பாகிட்ட இருக்கா?''

''ஆமாம். அதன்படி இந்த மலைலதான் மீனாட்சி விக்கிரகம் இருந்திருக்கு. அதுக்கு காவல் இந்த சரபேஸ்வர மூர்த்தியாம்!''

''அப்படி காவல் காத்த இந்த மூர்த்தி எப்படி இந்த விக்ரகத்தை அப்புறமா தொலைக்க விட்டாராம்?''

''தெரியல... இதுக்கெல்லாம் விடையை அப்பாதான் சொல்லணும். ஆனா ஒண்ணு. இப்பவும் இந்த விக்கிரகத்தை ஒரு பெண் வழிபட்டு நிறைய எதிரிகளை ஜெயிக்கிறதா அப்பா சொன்னார்.''

''பேத்தல்... அந்தக் காலத்துல சிற்ப சாஸ்திரம் படிச்சவங்க தங்களுக்கு கிடைக்கிற ஒரு கல்ல எடுத்து மனம்போன போக்குல சிற்பங்களை செதுக்கிப் பழகினாங்க.

அதுல ரொம்ப சுலபமா வசப்பட்ற ஒரு உருவம் பிள்ளையார். ஈவன் ஓவியமா வரையறதுலகூட பிள்ளையார் உருவம் ரொம்ப வசதியா இசைஞ்சு கொடுக்கும்.

அதனால அந்த உருவங்களை நிறைய செதுக்கினாங்க. அப்படி கலை வடிவப்படுத்தின அதை தூக்கி தூரப்போட மனசில்லாம தான் மரத்தடியிலும், குளத்தடியிலும் கொண்டு வந்து வெச்சாங்க.

அதனாலதான் பெரிய கோவில்கள்ளயும் சரி, பெரிய இடங்கள்ளயும் சரி பிள்ளையார் உருவங்கள் அதிகம் இருக்கு.

அதுமாதிரிதான் இந்த மாதிரி சிங்க உடம்பும், வினோத முகமுமான வடிவங்களும்.

நம்ம நாட்டுலதான் ஒரு குத்துக்கல்லுக்கு குங்குமம் வெச்சுட்டாலும் ஆத்தா அம்மான்னு விழுந்து கும்பிடத் தொடங்கிடுவாங்களே...இந்த சரபேஸ்வரரை விடுவாங்களா என்ன?''

- பாஸ்கரனின் விளக்கத்தில் பெரிய பெரிய உண்மைகள் பளிச்சிட்டாலும் சரபேஸ்வரர் பற்றி அவன் சொன்ன கருத்தை அருள்மொழி ஏற்காத மாதிரி தெரிந்தது.

சக்திவேலும் வேகமாக மறுத்தான்.

''இல்ல சார்... நான் ஒத்துக்க மாட்டேன். நான் சிலை பேசினதை காதால கேட்டவன்.'' என்றான். பாஸ்கரன் அதற்குமேல் அவர்களுடன் விவாதிக்க பிரியப்படவில்லை.

சுற்றி ஒரு பார்வை பார்த்தான்.

பின் ''முதல்ல ஆர்க்கியாலஜி சந்த்ரபிரகாஷ் சாருக்கு சொல்லி இதை ஆய்வுக்கு உட்படுத்தனும். அடுத்து புரொபசர் சாரை பார்த்து பேசணும்.'' என்றான்.

''சார், அப்ப எப்ப சார் நாம சமணப்பட்டிக்கு போகப் போறோம்?''

சக்திவேல் அதிலேயே குறியா இருந்து கேட்க, ''முதல்ல இந்த குழப்பங்கள் தெளிவடையட்டுமே - எதுக்கு சக்தி இப்படி பறக்கறீங்க?'' - என்றான்.

-சக்திவேல் முகம் ஒரு மாதிரி மாறிப் போனது.

''அது சரி சமணப்பட்டிக்கு போய் என்ன பண்ணப் போறீங்க?'' - அருள்மொழி குறுக்கில் புகுந்தாள்.



''நீங்களும் தான் வரப் போறீங்க மேடம். உங்களப் பத்தி என்னைப் பத்தி, சாரைப்பத்தி அங்க குறிப்புகள் இருக்கு. அதுமட்டுமல்ல. அங்க புதையல் இருக்கு. அத நாமதான் எடுக்கப் போறோம்.

சாருக்கு சரித்திரக் கதைகள்ள வராத பேரும் புகழும் அதை எடுக்கப் போறதால வரப்போகுது.''

''பாஸ்ரன், என்ன சொல்றார் இவர்?'' - அருள்மொழி ஆவல் கொடி கட்டியது.

''சக்தி சும்மா இருக்க மாட்டீங்களா... அருள், நான் உனக்கு எல்லாத்தையும் அப்புறமா சொல்றேன். இப்ப நாம கிளம்புவோம்.'' - சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித் தான். அருள்மொழி குழப்பத்தோடு பின்னால் தொடர்ந்தாள்.

பிரதான சாலைக்கு வந்தார்கள். காத்துக் கொண்டிருந்த காரில் ஏறினார்கள்.

ஏறும்முன் பாஸ்கரன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான்.

''என்ன பாஸ்கரன் பார்க்கறீங்க?''

''அந்த தாழிகள் ஆர்க்கியாலஜி கைக்கு போறவரை பத்ரமா இருக்குமா?''

''அவசரப்பட வேண்டாம். அப்பா வேற முடிவுல இருக்கார்.''

''அப்ப அவர் மூலமாவே ஆர்க்கியாலஜிக்கு தகவல் சொல்ல வேண்டியதுதான். யாராவது பார்த்தாலோ இல்ல ஆடு மாடுகள் மோதினாலோ அது உடைஞ்சிடலாம். அதான் எனக்கு பயமாக இருக்கு.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. இந்தப் பக்கம் இதுவரை அப்பாவையும் என்னையும் தவிர யாரும் வந்ததில்லை. அங்கெல்லாம் முள் புதர்கள். அதனால ஆடு மாடும் போக வாய்ப்பில்லை. நீங்க வாங்க..'' - அருள்மொழி அவனை கையைப் பிடித்து இழுக்காத குறை...

அடுத்த சில நொடிகளில் அந்த சின்ன மலைத்தலத்தை விட்டு புழுதி பறக்க அவர்கள் வந்த கார் மறையத் தொடங்கியது.

சீமணப்பட்டி.

சாத்தான் கோவில் மணி மண்டபத்தில் ஒரு கூட்டம் ஆடு புலி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தது.

கோனார் தாத்தா அதில் பிரதானம்! உற்சாகமாய் காய் நகர்த்தி விளையாடிக் கொண்டிருந்தார்.

காய்களை நகர்த்தும் அவர் கைவிரலை அப்பொழுதுதான் ஒருவன் பார்த்தான். அதில் ஒரு நவரத்ன மோதிரம்!

''என்ன கோணாரே.. கைல புதுசா மோதிரம் மின்னுற மாதிரி தெரியுதே?'' பார்த்தவன் கேட்கவும் செய்தான்.

''ஆமாம்லே... சல்லிசா வந்துச்சு. அதான் வாங்கிப் போட்டுகிட்டேன்.'' என்றார் கோனாரும்.

''சல்லிசா வந்துச்சா.. சரிதான் மழை இல்லாம விளைச்சல் இல்லாம பேங்குல வாங்குன லோனையும் கட்டமாட்டாம எல்லாரும் உக்காந்துகிட்டிருக்கோம். உங்களுக்கு மட்டும் எங்க இருந்து காசு வந்து கொட்டுனிச்சு?''

- காயை பதிலுக்கு நகர்த்தியபடியே அவன் திருப்பிக் கேட்டான். சாதாரணமாகத்தான் கேட்டான். ஆனால் கோனார் தாத்தாவுக்கு முகம் மாறிப் போனது. சட்டென்று பதில் பேச முடியவில்லை.

''என்ன கோனாரே.. பேசுங்க... பதிலக் காணோமே...?'' அவன் விடாமல் நிமிண்டினான்.

கோனார் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தமாதிரி அவனையும் மற்றவர்களையும் பார்த்தார்.

''நான் இப்ப ஒரு விஷயம் சொல்லுவேன். யாரும் வாயைப் பொளக்கக்கூடாது. சரியா?'' திருப்பிக் கேட்டார்.

''என்ன கோனாரே...?''

''டேய் கவனிடா.. பெருசு ஏதோ சொல்லப் போகுது.''

''இங்க நாம ஊர்க்கார பயலுக தவிர யாரும் இல்லியே...?''

''ஒருத்தரும் இல்லை. வடக்குத் தெரு மாடன் காளிமுத்து, கல்லு வீட்டு ராயன், நீங்க, நானுதான் இருக்கோம்.''



''நல்லது. என்கூட வாங்க.- உங்களுக்கு அதிசயத்த காட்றேன்.''

''என்ன கோனாரே.. மோதிரத்தைப் பத்தி கேட்டா அதிசயத்த காட்றேங்கறீங்க...''

''பதில் பேசாம கிளம்புங்க. அதுக்கு முந்தி நம்ம சாத்தான் சாமியை நல்லா கும்புட்டுக்குங்க.''

''எதுக்கு?''

''கேள்வி கேட்காம கும்புட்டுக்குங்கடான்னா...''

கோனார் அதட்ட அவர்கள் எழுந்து மடித்துக் கட்டியிருக்கும் வேட்டியை அவிழ்த்து விட்டுக் கொண்டு கம்பீரமாக முட்டை விழிகளோடு அமர்ந்திருக்கும் சாத்தான் சாமியைப் பார்த்து தபதபவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டு தரையிலும் விழுந்து விழுந்து எழுந்தனர்.

''வாங்க போகலாம்...'' - கோனார் தாத்தா ஒருவித சஸ்பென்ஸோடு முன்னே நடக்க, அவர்கள் பின்னே செல்லத் தொடங்கினார்கள்.

இருட்டும் வேளை...

வழக்கம்போல சாய்ந்து கிடக்கும் வயல் வெளிகளில் புகை மூட்டம்.

பத்து அடி தொலைவில் இருப்பவன் கூட தெரியாதபடி...

''கோனாரே.. எங்க கரட்டுப்பக்கம் கிரட்டுப்பக்கம் கூட்டிகிட்டு போய் எதையாவது காட்டப் போறீரா?''

''இல்ல. இன்னிக்கு எவனாவது கரட்டுமேல ஏறி உசுரை விட்டுபுட்டானா...?''

''அப்படித்தான் இருக்கும். அவன் கைல போட்டுருக்கற மோதிரத்த எடுத்து பெரிசு மாட்டிகிட்டு இருக்கும். நாம கேட்கவும் ஆளைக் காட்ட கூட்டிகிட்டு போகுதாட்டம் இருக்கு...''

- பின் தொடரும் சகாக்களிடம் விதம் விதமான கருத்துக்கள்.

வழியில் அங்கங்கே உடைந்த கல்தூண்கள், சிற்பங்கள், மூக்கு மூளியாகிப்போன முக ரூபங்கள்...

தாத்தா எதையும் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் நடந்தது. அடிவாரத்தை ஒட்டி ஒரு வன்னிமரம். மரத்தடியில் ஒரு சன்யாசியின் சிலை. ஊரே அதை மொண்டிச்சாமி என்றுதான் கூப்பிடும். தாத்தா அந்த சாமி சிலை அருகே போய் நின்று கொண்டு திரும்பிப் பார்த்தார்.

உடன் வந்தவர்களும் கூட்டாக வந்து சேர்ந்து அவரைப் பார்த்தார்கள்.

''என்ன கோனாரே எதுக்கு இப்படி மொண்டிச் சாமி மரத்தடிக்கு கூட்டிகிட்டு வந்துருக்கீங்க...?''

''காரணமாத்தாண்டா. இது மொண்டிச் சாமி மட்டுமில்ல பொன்காத்த அய்யனார் சாமி... அது தெரியுமா உங்களுக்...?''

''பொன் காத்த அய்யனாரா?''

''ஆமாண்டா.. எலேய் காளிமுத்து வாப்பு... இங்க இந்த இடத்தை தோண்டு...''

- தாத்தா சொல்லவும் காளிமுத்து என்பவன் நெருங்கி வந்து தாத்தா காட்டிய இடத்தை தோண்டத் தொடங்கினான்.

ஒரு அடி கூட தோண்டியிருக்க மாட்டான். வெண்கலப் பானை ஒன்று பளிச்சிட ஆரம்பித்தது.

''ஆத்தி புதையல் பானையாட்டம் இருக்குதே...!'' ஒருவன் உற்சாகக் குரல் கொடுத்தான்.

''புதையலேதான். பாத்து எடுங்க. விபரத்தை மொள்ளச் சொல்றேன். அதுக்கு முந்தி ஒரு நிமிஷம். எலேய் ராயா ஓடிப்போய் கோழியை பிடிச்சா பார்ப்போம்.''

- கோனார் தாத்தாவின் கட்டளையைக் கேட்டுவிட்டு அந்த நொடி ஆவேச ஓட்டமெடுத்தான் அவன்.

''எலேய் யார்கிட்டையும் மூச்சுவிடப்படாது...''

தாத்தாவின் குரலை காதில் வாங்கியபடியே புகை மூட்டத்தில் மறைந்து போனான்.



மண்ணைத் தோண்டிய காளிமுத்து என்பவன் பானையை வெளியே எடுக்கவா, வேண்டாமா என்கிற மாதிரி பார்த்தான்.

''கொஞ்சம் பொறு... கோழி வந்தபின்னே அதை அறுத்து பலி போட்டுப்பிட்றேன். அப்பால எடு. உள்ள இருக்கறத எல்லாரும் சம பங்கா பிரிச்சுக்குவோம்.

வெளியே தெரிஞ்சா அம்புட்டும் கவர்மெண்டுக்கு போயிரும். புரியுதா?''

''புரியுது கோனாரே புரியுது. ஆமா உங்களுக்கு இது இங்க இருக்கறது எப்படித் தெரியும்?''

-வடக்குத்தெரு மாடன் ஆவல் நெருக்கியடிக்க கேட்டான்.

''என் கனவுல சாத்தான் சாமிதாண்டா வந்து சொன்னிச்சு. இப்ப தெரியுதா மோதிரம் எங்க இருந்து வந்துச்சின்னு...?''

''கோனாரே... நெசமாவா...?''

''வெண்ண.. கன் எதுக்க பாத்துக்கிட்டே இப்படி கேட்டா என்னாடா அர்த்தம்? போகட்டும்னு உங்களுக்குப் பங்கு தாலாம்னு பார்த்தா சந்தேகமா பட்றே?''

''ஐயோ... உங்களைப் போய் சந்தேகப்படுவேனா கோனாரே. எனக்கு சந்தோஷத்துல என்ன பேசறோம், எதைப் பேசறோம்னே தெரியலை... அதான்...''

''மண்ணாங்கட்டி... ஆவற காரியத்த பாருங்க. வெளிய மூச்சு விட்டீங்க. அவ்வளவு தான். அது மட்டுமில்ல. நீங்க அத்தினி பேரும் இனி இந்தப்பக்கம் ஒரு பய நடமாடாதபடி பாத்துக்கணும்.

அதுலயும் கரட்டுப்பக்கம் ஒரு ஆட்டுக்குட்டிகூட போயிடக்கூடாது. ஜாக்ரதை...''

''சரிங்க கோனாரே...!''

- எல்லோரும் விழுந்து கும்பிடாத குறை. அதே சமயம் புகை மூட்டத்தில் மறைந்துகிடக்கும் கரடு நோக்கிச் செல்லும் பாதையில் ஏராளமான ஷூ தடயங்கள்!

## 26

அந்த ஷூ தடயங்கள் பெருமாள்கரட்டின் உச்சி நோக்கியும் படிந்து கிடந்தன.

புகை மூட்டத்தில் கூர்ந்து கவனித்தாலே பார்க்க முடிந்த விதத்தில் அவைகள் இருக்க வன்னிமரத்து மொண்டிச் சாமி அமர்ந்திருக்கும் மேடையருகே பரபரப்பாக கோனார்த் தாத்தா தன் சகாக்களோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்.

மரத்தடியில் பாதி தோண்டியும், மீதி தோண்டப் படவுமாகக் காத்துக் கொண்டிருந்தது அந்த புதையல் பானை.

அதன் மேலேயே பார்வையை வைத்துக் கொண்டிருந்தனர் சகாக்கள். கோழி பிடிக்க ஓடிப் போயிருந்தவனும் கைவசம் ஒருசேவலுடன் அது 'கொக்கொக்' என்று கத்தக் கத்த அதைக் கையில் பிடித்தபடி வந்துசேர்ந்தான்.

- பகபகவென்று மூச்சுவிட்டான்.

''வந்துட்டியா... எலேய் காளிமுத்து நீ அதை வாங்கி சாமி முன்ன வை...'' என்றார் தாத்தாவும்.

காளிமுத்து அடுத்த நொடி கொளுத்தப்பட்ட கம்பி மத்தாப்பாட்டம் பரபரப்பானான்.

கோழியைப் பிடித்து மொண்டிச்சாமி எதிரில் வைத்தான். அது திரு திரு முழியோடு 'கொக் கொக்' என்றபடி ஒடுங்கி அமர்ந்தது. சாமியின் கழுத்தில் யாரோ போட்டிருந்த ஒரு அலரிப்பூமாலை அதை எடுத்து தாத்தா கோழியின் மேல் போட்டார். பின் மொண்டிச்சாமி கையில் இருந்த பட்டை அறுவாளைப் பிடுங்கி காளிமுத்துவிடம் தந்து ''உம் பலிபோடு...'' என்றார்.

அடுத்த சில நொடிகளில் அந்த சேவல் ரத்தச் சீற்றத்தோடு உயிரை விட்டது. விடுமுன் தலையில்லா உடம்போடு திக்கு திசை தெரியாமல் ஓடி திரும்ப வந்து கச்சிதமாக தோண்டியிருக்கும் புதையல் குழி முன்பாகவே விழுந்தது.



''சாமி... சாமி...'' - என்று தாத்தா கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

''எலேய் பாத்தீகளா சாமிக்கு முழு திருப்தி. அதான் முண்டம் குழிகிட்டையே கச்சிதமா உழுந்திருக்கு. இனி ஒரு பயமும் இல்லை. பானையை தைரியமா வெளிய எடுங்கடா.'' என்றார்.

மாடன் வேகமானான். மளமளவென்று மண்ணை விலக்கி பானையை வெளியே தூக்கினான்.

- நல்ல கனம் கனத்தது.

- புஜத்தில் திமில் விடைக்குமளவு கனம்.

''தாத்தா.. ஏக கனம் கனக்குது. நல்ல வேட்டைதான்...'' என்றான்.

''சரி சரி.. அதோ வாய் மூடியைத் திற!''

- தாத்தா விரட்டவும் கீழே வைத்துவிட்டுத் திறந்தான் உள்ளே குப்பல் குப்பலாக தங்க நகைகள். ஒரு க்ஷணம் எல்லோருக்குமே நெஞ்சையடைத்தது.

தாத்தா கையைவிட்டு அள்ளினார். காசுமாலை, கல்லு வளையல், சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, அட்டிகை என்று ரகத்துக்கு ரகம் கையில் மின்னியது.

இத்தனைக்கும் மொண்டிச்சாமி சன்னதியில் காடா விளக்குதான். அதிலேயே அது வாரிக் கொட்டியது.

''எலேய்... இதை சமபங்கா பிரிச்சுக்குவோம். எந்தக் காலத்து செல்வமோ? சாத்தான் சாமி கருணையால வசப்பட்டிருக்கு. பங்கு போட்டுப் பிரிச்சுகிட்டதுக்கு பொறவு வெளிய மூச்சு விடக்கூடாது.

அப்படியே பொண்டாட்டி கழுத்துலயும் போட்டு அழகு பார்க்கவும் கூடாது.

அப்பால அப்படி இப்படின்னு விஷயம் வெளிய தெரிஞ்சு ரகளையாயிடும்.

இதை எடுத்துக்கிட்ட பிறகு ஒரு அஞ்சாறு மாசத்துக்கு மூச்சு விடக் கூடாது. அதே போல சாமி சொன்ன மாதிரி

அன்னி அசலு யாரும் இந்த ஊருக்குள்ள திரிஞ்சாலும் நமக்கென்னன்னு வேடிக்கை பார்க்கக் கூடாது.

நாமளும் இருட்டிப்புட்டா அடிவாரப் பக்கம் போகாம, யாரும் போகமலும் பார்த்துக்கிடணும் என்ன?''

- தாத்தாவின் விளக்கத்துக்கு கோவில் மாடு மாதிரி தலையை ஆட்டினர்.

''எலேய் ராயா... இந்தாலே நீயே பங்கு போடு. அதுக்குள்ள நான் அப்படிப் போய் கொஞ்சம் உக்காந்து எழுந்திரிச்சுட்டு வந்துட்றேன். வவுத்துல ஒரே சங்கடம்.''

தாத்தா மெல்ல அங்கிருந்து நழுவினார்... புகை மூட்டத்தில் அந்த வயதிலும் பார்வை தெரிந்தது ஒரு ஆச்சரியம்...

தெரியாமல் திகைத்த இடங்களில் வத்திப் பெட்டியைக் கொளுத்தி தடம் பார்த்துக் கொண்டார்.

அவர் பார்க்கும் போது ஷூத் தடயங்கள் கண்ணில் பட்டன.

கொஞ்சம் சுருக்கென்றது.

சுற்றும் ஒரு பார்வை பார்த்து விட்டு ''இப்படியா விவரமில்லாம நடந்துக்குவாங்க நாயிங்க...'' என்றபடி தன் காலால் அந்த ஷூத் தடயங்களை அழிக்கத் தொடங்கினார்.

மரத்தடியில் ''எனக்குலே அது... இல்லில்லே அதான் எனக்கு. ஏய் உனக்கு மட்டும் திடமா இருக்கற நகையா.. ஒரு கிராம்கூட குறைய வேணாம். கச்சிதமா பிரி. இல்ல கொலகாரனாயிருவேன்...'' என்கிற கூக்குரல்கள்.

தாத்தா காதிலும் அது விழுந்தது.

முகத்தில் ஒரு மர்மப் புன்னகை!

பதினோரு மணிச் சூரியனிடம் தோலை உரிக்குமளவு உஷ்ணம். அதிலும் வீட்டுக்கூரையின் கண்ணாடிச் சாளரம் வழியே தாண்டிக் குதித்து பிரவேசித்து படுக்கையில்முதுகைக் காட்டியபடி படுத்திருக்கும் மீனாட்சிசுந்தரத்தின் மேல் அந்த உஷ்ணக் கரங்கள் பிராண்டவும் மீ.சு... சூடுதாளாமலும் கொட்டாவி விலகாமலும் எழுந்து அமர்ந்தார்.



கண்ணைக் கசக்கிக் கொண்டு சுவரைப் பார்த்தார். அந்த நாளைய பர்மா கெடிகாரம்.. அம்பு போன்ற முட்கள் - அதில் மணி பதினொன்று எனும் அறிவிப்பு.

கொஞ்சம் போல பதைப்பாகிப் போனது.

''ஐய்யோடா...'' - என்று எழுந்தவர் '' அருள்மொழி... அருள்மொழி...'' என்றபடியே வெளியில் வந்தார்.

பதவிசாக கதவு தாழிடப்பட்டுக் கிடந்தது. மோடாமேல் ஒரு துண்டுக் காகிதம்.

என்ன அது?

எடுத்துப் பார்த்தார்.

'அப்பாவிற்கு...

நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பதால் நான் சில வேலைகளைப் பார்த்து வர வெளியே போய்விட்டு வந்து விடுகிறேன்.

வெளியே பூட்டிக் கொண்டு போயிருக்கிறேன்.

எனவே தேடாதீர்கள். எப்படியும் 11மணிக்கு முன் எழுந்திருக்க மாட்டீர்கள். அதற்குள் நானும் வந்து விடுவேன். ஒருவேளை முன்னால் முழித்துக் கொண்டால் காத்திருக்கவும்.

ராத்திரி குளிரில் யானைமலை அங்கே இங்கே என்று இழுத்தடித்ததற்கு இது தண்டனையும்கூட...

அருள்.'

துண்டுக்காகிதம் அடுத்த நொடி அவர் கைகளில் கசங்கி ஒரு பந்தானது.

எரிச்சல் பீறிட்டது.

போய் ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தார். அனல் அலை தவழும் வீதி.

ஐஸ்கிரீம் விற்பவனின் சைக்கிள் மணி சப்தம். அதற்கு நடுவிலும் ஒருவன் ஜன்னலைத் திறந்த மீனாட்சிசுந்தரத்தைப் பார்த்தது தான் ஆச்சரியம்.

இவர் பார்க்கவும் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டவன் அங்கிருந்து அப்படியே நழுவ ஆரம்பித்தான்.

மீனாட்சிசுந்தரத்துக்குள் கொத்தாக மண்புழுக்கள் விழுந்து நெளிகின்ற மாதிரி ஒருவித பரபரப்பு...

'இவனை... இவனை இதற்குமுன் எங்கோ பார்த்திருக்கிறோமே!' என்று கூடத் தோன்றியது.

எங்கே...?

எங்கே...?

தலையைத் தட்டிக் கொண்டார். மூங்கில் நாற்காலியில் போய் கால் மடக்கி உட்கார்ந்து கொண்டார். கண்களில் பீளையை அகற்றியபடியே மனசுக்குள் எப்பொழுதோ விழுந்து மூளைச் செல்களில் ஏதோ ஒன்றில் போய் பதிவாகிவிட்ட அவனைத் தேடத் தொடங்கினார்.

'யார் இவன்...? இவன்... ஆங்!' சட்டென்று ஞாபகத்தில் அவன் பளிச்சிடத் தொடங்கினான்.

ஆர்க்கியாலஜிஸ்ட் என்று சொல்லிக்கொண்டு ஒருநாள் தன்னைச் சந்திக்க வந்த சந்த்ரப்ரகாஷின் துணையாக வந்தவன் இவன்.

இவன் எதற்கு இப்படி தன் வீட்டு வாசல் முன் நின்று கொண்டு பார்த்தபடி இருந்தான். தன்னைப் பார்க்க வந்திருப்பானோ?

அப்படிப் பார்க்க வந்திருந்தால் ஜன்னலைத் திறந்து நான் பார்த்தபோது என்னைப் பார்த்துவிட்டு நெருங்கியல்லவா வந்திருக்க வேண்டும்?

- கேள்விகள் பட்டாசுக் கந்தகமாய்ப் பற்றி எரிந்தன. பதிலில் புகை தட்டிற்று.

மெல்லிசாக ஒரு நமைச்சல் குறுகுறுப்பை ஏற்படுத்திற்று.



சடாரென்று கொல்லைக் கதவு ஞாபகம் வந்தது. அது உட்பக்கமாகத்தானே தாழிடப்பட்டிருக்கும்.

திறந்து கொண்டு போய் பார்க்க வழி இருக்கும்போது இப்படியா முடங்கிக் கிடப்பது... ச்சை...!

மளமளவென்று எழுந்தவர் வீட்டின் பின் கதவைப் போய்த் திறந்தார். பக்கவாட்டில் திறந்த வெளியில் நடந்து மளமளவென்று வாசல் பக்கம் வந்தார்.

அவன் தெருவில் பெட்டிக்கடை ஒன்றின்முன் அவருக்கு முதுகைக் காட்டியபடி நின்றுகொண்டு செல்ஃபோனைத் தட்டி யாரோடோ பேச முயன்று கொண்டிருந்தான்.

விறுவிறுவென்று அவனை நோக்கி நடந்தார்.

அதேசமயம் அருள்மொழியும், பாஸ்கரனும் சக்திவேலும் அமர்ந்திருக்கும் டாக்ஸி வீதிக்குள் நுழைந்திருந்தது.

காரில் அவர்கள் வருவது தெரியாமல் கடையை அவர் நெருங்கவும் அவன் குரல் காதில் விழத் தொடங்கியது.

'சார்...

நான் லோகு பேசறேன்.

புரொபசர் வீட்லதான் இருக்கார். அவரை வெச்சு பூட்டிட்டு அந்தப் பொண்ணு பாஸ்கரனைப் பார்க்கப் போயிருக்கு.

சிலையைத் தேடித்தான் எல்லா வேலையும் நடக்குது.'

அவன் பேச்சு அவருக்குள் அமிலச் சுரப்பையே உண்டு பண்ணியது. நடுவில் ''அப்பா'' என்று ஒரு குரல்.

திரும்பினார்.

அவனும் செல்ஃபோனை முடக்கியபடி திரும்பினான். புரொபசரைப் பார்த்துவிட்டு பதட்டப்படத் தொடங்கினான்.

''அப்பா'' என்று குரல் கொடுத்த அருள்மொழியும் காரைவிட்டு இறங்கி அவரை நோக்கி வரத் தொடங்கியிருந்தாள்.

புரொபசரோ "டேய் நீ... நீ இப்ப யார்கூட பேசிகிட்டிருந்தே. நீ அந்த சந்த்ரப்ரகாஷ் கூட வந்தவன் தானே?" என்று கேட்டபடி அவனை நெருங்க அவன் ஒரு வினாடி அவரை வெறித்து விட்டு ஓட ஆரம்பித்தான்.

அவன் ஓடுவதும், புரொபசர் மீனாட்சிசுந்தரம் கத்துவதும் அருள்மொழியையும் நிரடிற்று.

"அம்மாடி... அவன் என்னை நோட்டம் போட்டவன். அவனைப் பிடிக்கணும். இரு வரேன். டேய் நில்லுடா..."

- புரொபசர் மீனாட்சிசுந்தரமும் தன்னிலை மறந்து அவனைத் துரத்தத் தொடங்க, பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரன் டிரைவரிடம் சொன்னான்.

"டிரைவர், காரைத் திருப்பு. ஓடுற அந்த ஆளைப் பிடிக்கணும்."

- அடுத்த நொடி கார் வளைந்து சீறத் தொடங்கியது.

# 27

தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தான் அவன். பாஸ்கரனின் காரும் அவனைப் பின்னால் துரத்தியது... மீனாட்சிசுந்தரமும், அருள்மொழியும், ஓட முடியாமல், ஒரு இடத்தில் தேங்கி நின்றுவிட, பாஸ்கரனின் கார் அவனை முந்திக் கொண்டு அவனை மறிக்கப் பார்த்தது.

அவனும் மோதி தலைகுப்புற விழ ஆரம்பித்தான். எல்லாமே சொற்ப நொடியில் முடிந்துவிட்டது.

கீழே விழுந்தவன் ஒருசில நொடிப் போதுகள் புரண்டு நெளிந்தான். பாஸ்கரன் காரை விட்டு வேகமாகக் கீழே இறங்கி அவனைச் சமீபித்தபோது தலையில் அடிபட்டு ரத்தம் கசிந்திருந்த நிலையில் அவன் மயக்கமாயிருந்தான்.

வீதியே அந்தக் காட்சியை ஒரு அதிசயம் போல கருதிப் பார்த்துக் கொண்டிருக்க பாஸ்கரனிடம் சமயோசிதம் வேகமாக வேலை செய்யத் தொடங்கியது.



அடுத்த நொடி அவனைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரி நோக்கி புறப்படத் தொடங்கி விட்டான். காருக்குள் மீனாட்சிசுந்தரமும் அருள்மொழியும் கூட ஓடி வந்து அடங்கிக் கொண்டார்கள்... வேகமெடுத்து ஆஸ்பத்திரி நோக்கி விரையும் காருக்குள்...

"சார்... யார் சார் இவன்? எதுக்காக இவனைப் பிடிக்க முயற்சி பண்ணீங்க?"

"என்னையே நோட்டம் போட்டு கிட்டிருந்தான் பாஸ்கரன் இவன்... இவனை நான் ஏற்கனவே சந்திரப்ரகாஷ்ங்கற ஒரு ஆர்க்கியாலஜிஸ்ட்டோட பார்த்திருக்கேன். என்னைப் பத்தி ஒரு தகவலைக்கூட செல்ஃபோன்ல யார் கிட்டயோ சொல்லிக்கிட்டிருந்தான்.

என்னை நீங்க இரண்டு பேரும் வீட்டுல அடைச்சுப் போட்டுட்டு யானைமலைல சிலையைத் தேடிப் போயிருக்கறதா இவன் சொன்னது தான் ஆச்சரியம்!"

- மீனாட்சிசுந்தரம் படபடத்தார். பாஸ்கரன் தாடையைத் தடவத் தொடங்கினான். அருள்மொழிக்கும் வியப்பாக இருந்தது. மயங்கியபடி அமர்ந்த நிலையில் சரிந்து கிடக்கும் அவனை ஊன்றிப் பார்த்தாள்.

"இவனை நான்கூட தெருவுல அடிக்கடி பார்த்திருக்கேன். அப்பல்லாம் நான் சாதாரணமாதான் நினைச்சேன். ஆனா இவன் நம்மை நோட்டம் போட்றதையே தொழிலா வெச்சுக்கிட்டிருக்கான்கறது எனக்கு பெரிய ஆச்சரியமா இருக்கு." என்றாள் அவளும்.

அதுவரை அமைதியாக இருந்த சக்திவேலுக்குள்ளும் பூச்சி பறக்கத் தொடங்கியது.

"சார் இவன் கண் விழிச்சா நிறைய உண்மைகள் தெரிய வரும்னு நினைக்கறேன்...' என்றான்.

"ஆமாம். கண் விழிச்சா நிச்சயம் நிறைய உண்மைகள் தெரியவரும்." ஆமோதித்தது பாஸ்கரனின் உதடு.

மீனாட்சிசுந்தரத்திடம் மட்டும் படபடப்பு அடங்கவேயில்லை.

கார் ஒரு தனியார் ஆஸ்பத்திரி முன் தேங்கி நின்றது.

''சார், ஆக்சிடெண்ட் கேசுன்னு சொன்னா ஜி.எச்.சுக்கு கொண்டுபோகச் சொல்வாங்களே...''

-கார் டிரைவர் புத்திசாலித்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

''இந்த ஹாஸ்பிடல் டாக்டர் எனக்குத் தெரிஞ்சவர். சீரியஸ் கேஸா இருந்தாதான் அப்படிச் சொல்வாங்க. என்ன நடக்குதுன்னு பார்ப்போமே?''

கேள்வியும் பதிலுமாக அவனைச் சுமந்துகொண்டு உள்ளே சென்றார்கள். எதிர்ப்பட்டார் டாக்டர். பாஸ்கரனைப் பார்க்கவும் அந்த நிலையிலும் அவன் வாங்கியிருக்கும் விருதுக்குப் பாராட்டுக்களைச் சொன்னார். பிறகு தான் விஷயத்துக்கே வந்தார்.

''என்ன பாஸ்கரன்.. யார் இவர்?''

''தெரிஞ்ச நபர்தான் டாக்டர். கார் முன்னால எதிர்பாராத விதமா மோதி விழுந்து அடிபட்டிருச்சி.''

- அடுத்த நொடி டாக்டர் நாடித் துடிப்பை சோதித்தார். அடிபட்ட இடத்தையும் பார்த்தார்.

''உயிருக்கு ஆபத்தா ஒண்ணும் இல்லையே?''

''இல்லை... வாங்க முதல்ல ஃபர்ஸ்ட் எய்ட் கொடுத்து முடிப்போம். பிறகு பேசலாம்.''

- டாக்டர் சிகிச்சைக்குத் தயாரானார்... மீனாட்சிசுந்தரத்திற்கு பரபரப்பு கூடிக் கொண்டே போயிற்று.

''அந்த சிலை விஷயமெல்லாம் எப்படி இவங்களுக்குத் தெரிஞ்சது... எப்படி தெரிஞ்சிருக்க முடியும்?'' என்று காரிடாரில் முனங்கியபடியே நடக்க ஆரம்பித்தார்.

பாஸ்கரன் அவரை நெருங்கினான்.

''சார் என்ன சார் இதெல்லாம். ஆர்க்கியாலஜிஸ்ட் சந்த்ரப்ரகாஷ் ஆளான இவன் எதுக்கு உங்களை நோட்டம் போடணும்?''



''அதான் தெரியல பாஸ்கரன்.. அந்த ஆள் ஒருநாள் வந்து என்னை சந்திச்சு சமணப்பட்டி பெருமாள் கரடு பற்றி ஏதாவது உங்களுக்குத் தெரியுமான்னு கேட்டார். எதுக்கு கேக்கறீங்கன்னு கேட்டேன். இல்லை, நீங்க ஒரு சரித்திர ஆராய்ச்சியாளர். அதனால உங்களக்கு ஏதாவது தெரியுமான்னு கேட்டேன்னார்.. நானும் எனக்குத் தெரிஞ்சதை சொன்னேன். பரவால்லியே நிறைய விஷயங்களை தெரிஞ்சு வெச்சிருக்கீங்களேன்னார்...''

''அப்படி என்ன சார் நீங்க தெரிஞ்சு வெச்சிருக்கீங்க...''

''ஒண்ணா இரண்டா பாஸ்கரன். எவ்வளவோ இருக்கு. எல்லாம் களப்பிரர்கள் காலத்து சமாச்சாரங்கள். ஏன் நீ கூட களப்பிரர்கள் காலத்துல தூக்குல போடப்பட்ட ஒரு தமிழ்ப் புலவன் தானே...?''

''சார் இதெல்லாம் உங்க நம்பிக்கை... சந்த்ரப்ரகாஷ் கிட்ட நீங்க என்ன சொன்னீங்க?''

''தங்க புத்தரோ இல்லை தங்க மீனாட்சியோ அங்க இருக்குன்னு சொன்னேன்.''

''எதை வெச்சு...?''

''எல்லாம் எனக்குக் கிடைச்ச தகவல்கள், என் ஆராய்ச்சி அடிப்படையிலதான். என் கணிப்புப்படி யானை மலைல தாழிகள் இருக்கும்போது பெருமாள் கரட்டுல அந்த சிலையும் இருந்துதானே தீரணும்? எல்லாத்துக்கும் மேல தெட்சிண ரகசியம் புத்தகத்தை பார்த்தியா...? அதுலயும் குறிப்புகள் அதைத்தானே சொல்லுது...''

''சரி இந்த ஆராய்ச்சியை எல்லாம் நீங்க ஏன் தனியா செய்யறீங்க. டிபார்ட்மென்ட்டுகிட்ட விடலாம் இல்லியா?''

''எதுக்கு பாஸ்கரன். டிபார்ட்மென்ட் பேர் தட்டிகிட்டு போகவா? அதோட எனக்கு அதுல இருக்கற அந்த சந்த்ரப்ரகாஷ் மேல நம்பிக்கை இல்லை. இதை நான் உன்கிட்டயே சொல்லியிருக்கேனே...''

''எதை வெச்சு அவர் மேல நம்பிக்கை இல்லைன்னு சொல்றீங்க?''

"இதோ பார் இப்படி மடக்கி மடக்கி கேள்வி கேட்டு என்னை குழப்பாதே...இந்தப் பய கண் முழிக்கட்டும். அப்ப தெரியும் பல உண்மைகள்..."

பாஸ்கரனும், மீனாட்சிசுந்தரமும் காரசாரமான வாக்கு வாதத்தில் இருக்க உள்ளிருந்து நர்ஸ் ஒருத்தி வெளிப் பட்டாள்.

"சார் அந்த நபருக்கு மயக்கம் தெளிஞ்சிடுச்சி."

அடுத்த நொடி எல்லோரும் உள்ளே நுழைந்தார்கள்.

அவன் தலையில் கட்டோடு படுக்கையில் எதிர்ப்பட்ட மீனாட்சிசுந்தரத்தையும், பாஸ்கரனையும் மலங்க மலங்கப் பார்த்தான். டாக்டரும் அருகில் இருந்தார்.

"பாஸ்கரன், இப்ப இவருக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஆனா வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டேங்கறாரு..." என்றார்.

"பேச மாட்டேங்கறானா.. எல்லாம் நடிப்பு. ஏய் உண்மையைச் சொல்லு. எதுக்குடா என்னை நோட்டம் போட்டே... யார்கிட்ட எங்களைப் பத்தி எல்லாம் சொன்னே? அந்த சந்த்ரப்ரகாஷ்கிட்டதானே?"

மீனாட்சிசுந்தரம் கத்தினார். டாக்டருக்கு கொஞ்சம் போல பகீர் என்றது....

"என்ன பாஸ்கரன்.. எதுக்கு இப்படி இவர் கத்தறார். ஏதவாது பிரச்சினையா?"

"நத்திங் டாக்டர் நத்திங். புரொபசர் சார் ப்ளீஸ் கொஞ்சம் அமைதியா இருங்க. நான் பேசிக்கறேன். நீங்கள்ளாம் கொஞ்சம் வெளியே போய் இருங்க."

பாஸ்கரன் சொல்லிக்கொண்டே அருள்மொழியைப் பார்த்தான். அவள் புரிந்து கொண்டவளைப் போல புரொபசரைப் பிடித்து இழுக்காத குறையாக வெளியேற ஆரம்பித்தாள். சக்திவேலும் இங்கிதத்துடன் நகர்ந்து கொள்ள பாஸ்கரனின் பார்வை அவனை ஊடுருவத் தொடங்கியது.

"ஆமா உன் பேர் என்ன...?"



"..........."

"கேக்கறேன்ல சொல்லு...."

".........."

"இப்படி மௌனம் சாதிச்சால்லாம் நான் விட்டுடமாட்டேன். எதுவா இருந்தாலும் சொல்லு..."

"........"

"திரும்பவும் சொல்றேன். என் பொறுமையை சோதிக்காதே. எதுக்கு புரொபசர் சாரை நோட்டம் போட்டே? நாங்க சிலையைத்தேட்றதா உனக்கு யார் சொன்னா?"

"........"

"ஒரு அளவுதான் நான் பார்ப்பேன். இந்த விஷயத்துல நான் போலீஸ்கிட்ட போக விரும்பல. போனா அவங்க உன்கிட்ட எப்படி விஷயத்தை வாங்கணுமோ அப்படி வாங்கிடுவாங்க. ஞாபகம் இருக்கட்டும்."

"........."

"டேய் என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. நீயா சொல்றியா? இல்லை நான் சொல்ல வைக்கட்டுமா?" - பாஸ்கரன் பேச்சைத் தொடர்ந்தபடி இருக்க அவனும் இறுக்கத்தைத் தொடர்ந்து கொண்டிருக்க நடுவில் அமட்டியது அவனது செல்ஃபோன்.

அதன் சப்தத்தைக் கேட்டவன் கொஞ்சம் போல மிரண்டு விட்டு செல்ஃபோனைத் தொட்டு எடுத்து அதன் திரையைப் பார்த்தான்.

"பேசு... ஏன் தயங்கறே?" பாஸ்கரன் எடுத்துக் கொடுத்தான். தொடர்ந்து முழித்தவன் அதற்குக் காது கொடுத்தான்.

"லோகு..."

"யெஸ் சார்..."

"என்னய்யா... எங்க இருக்கே...?"

"அது...அது..."

''என்ன மென்னு துப்பறே... முன்ன பேசும்போது கூட சரியா பேசலையே...எதாச்சும் பிரச்சினையா?''

''ஆமாம் சார்...''

''என்ன பிரச்சினை?''

''நேர்ல சொல்றேன் சார்...''

''சரி சீக்கிரம் வா...''

''வா, வரென் சார்...''

பதில் சொல்லி முடிக்க, மறு முனை அடங்கியது. நிமிர்ந்தான். துளையிடும் விழிகளோடு பாஸ்கரன்.

''சொல்லு... யார்கூட பேசினே?''

''சந்த்ரப்ரகாஷ் சார் கூட...''

''என்ன சொன்னார்?''

''நேர்ல வரச் சொன்னார்.''

''நல்லது.. என் கேள்விக்கெல்லாம் பதில் சொல்...''

''சொல்றேன் சார்.. ஆனா நீங்க அதிர்ச்சியடையக் கூடாது.''

''நீ முதல்ல விஷயத்தை சொல்லு.''

''சார் பெருமாள் கரட்டுல புதையல் இருக்கலாம்கறது ப்ரகாஷ் சாரோட ஒருஅனுமானம் சார்.''

''சரி... அதுக்கும் புரொபசர் சாரை நோட்டம் போட்றதுக்கும் என்ன சம்பந்தம்?''

''அந்த விஷயத்துல பெருமாள் கரட்டு மேல ஏறி அதை எடுக்கற அளவு அவருக்கு தைரியம் இல்லை. அங்க போனா தனக்கும் தற்கொலை பண்ணிக்கற எண்ணம் வந்துடுமோன்னு பயப்படுறாரு...''

''அதனால?''

''புரொபசரைத் தூண்டிவிட்டு எல்லா ஆராய்ச்சிகளையும் செய்ய வைச்சு அவர் மூலமா உங்களைக் கொண்டு அதை எடுக்கணும்கறதுதான் அவரோட திட்டம்.''



''அப்படி நாங்க எடுக்கும்போது பின்னாலேயே வந்து அதைப் பிடுங்கிக்கணும்கறது அவர் திட்டமா?''

''கிட்டத்தட்ட அப்படித்தான் சார்.''

''அப்ப அந்தமலைல புதையல் இருக்குன்னு அவர் உறுதியா நம்பறாரா?''

''ஆமாம் சார்...''

''அங்க நிலவற அந்த மூட நம்பிக்கைகளையும் மதிக்கறாரா?''

''நிச்சயமா சார்...''

''அவருக்கு எப்படி இதெல்லாம் தெரியும்...?''

'இதைஎல்லாம் நீங்க அவர்கிட்ட தான் கேட்கணும். சமணப்பட்டி விஷயத்துல பல பயங்கரமான விஷயங்கள்லாம் இருக்கு. உங்களைத் தூண்டி விட்றதுக்குப் பின்னால கூட ஒரு பெரிய காரணம் இருக்கு.''

''அதுதான் எனக்கும் தெரியணும்?''

''எனக்கு சில விஷயங்கள்தான் தெரியும். அதை நான் உங்ககிட்ட சொல்லிட்டேன். இப்ப சந்த்ரப்ரகாஷ் சார் டிபார்ட்மென்ட்ல கூட இல்லை சார். ரிசைன் பண்ணிட்டார்.''

''அப்படியா?''

''ஆமாம்... இப்ப அவரோட ஒரே அசைன்மென்ட் புரொபசரும் நீங்களும் அடுத்து என்ன செய்யப் போறீங்கன்னு கவனிக்கறதுதான்.''

''கவனிச்சு ஃபாலோ பண்றது இருக்கட்டும். அவ்வளவு உறுதியா அந்த கரட்டுல புதையல் இருக்கறதா அவர் எதை வைச்சு நம்பறார்?''

''சத்தியமா எனக்குத் தெரியாது சார். ஆனா ஒண்ணு. சமணப்பட்டில இந்த விஷயத்துல அவருக்கு உதவி செய்ய ஒரு ஆள் இருக்கான். அது மட்டும் எனக்கு நல்லா தெரியும். அவனையும் சந்த்ரப்ரகாஷ்தான் மோடிவேட் பண்ணி வெச்சிருக்கார்.''

''ரொம்ப குழப்பறேப்பா நீ... புதையல் இருக்கறது தெரிஞ்சா போய் எடுக்காம எதுக்கு எல்லாரையும் மோடிவேட் பண்றான் அந்த ஆள். இதுல என்னைக் குறிவைக்க என்ன காரணம்?''

''உங்களால தான் அதை எடுக்க முடியும்னு அங்க இருக்கற கல்வெட்டு சொல்றது ஒரு காரணமா இருக்கலாம்.''

''நான் எடுப்பேன்னு சொல்ற கல்வெட்டு அதை அவர் பிடுங்கிக்குவார்ன்னும் சொல்லுதா... என்ன உளர்றே? கல்வெட்டு கால்வெட்டு எல்லாம் ஹம்பக்... நானும் அதைப் பார்த்தேன். அந்தத் தமிழ் அந்தக் கால தமிழே இல்லை. அந்த எழுத்துக்களும் அந்தக் காலத்து எழுத்து எழுத்துக்கள் இல்லை. இதெல்லாம் தெரிஞ்சு தான் நான் இதுல பெரிசா ஆர்வம் காட்டாம இருக்கேன்.

நாலாபக்கமிருந்தும் இந்த எழுத்தாளனை புதையல்ன்னு சொல்லி தூண்டி விட்டிக்கிட்டு இருக்காங்க. தெட்சிண ரகசியம் புத்தகம், மலைல சிலை பேசறது, அப்புறம் கல்வெட்டு எல்லாமே திட்டமிட்ட ஒருவித சதி. அதுக்கு புரொபசரைத் தூண்டி விட்டு என்னையும் தூண்டி விட்டு அதுல இறக்கிவிட வேற ஒரு பெரிய காரணம் இருக்கு.

அது என்னன்னு தெரியாம நான் குழம்பிகிட்டு இருந்தேன். என் கணிப்புகள் சரி...

சந்த்ரப்ரகாஷைப் பிடிச்சு உலுக்கினா எல்லா உண்மையும் தெரிய வந்துடும்னு இப்ப தெரிஞ்சு போச்சு. இனி விட மாட்டேன்.'' - பாஸ்கரன் ஆவேசமானான்.

''ஆமாம் சார்.. அவரைப் பிடிச்சா தெரியலாம். ஆனா என்னை காட்டிக் கொடுத்திடாதீங்க சார். ப்ளீஸ் சார்..''

''நிச்சயமா காட்டிக் கொடுக்க மாட்டேன். நான் சொல்ற மாதிரி நீ நடி. உனக்கு அடிபட்டதுல பேச்சு போயிடுச்சு. என்கிட்ட நீ எதுவும் சொல்லலை. இதுதான் இப்ப உன் நிலை. மத்ததை நான் பாத்துக்கறேன். சரியா?''

பாஸ்கரன் புத்திசாலித்தனமாய்க் கேட்க அவன் ஆமோதிக்க...



# 28

அறையை விட்டு வெளியே வந்த பாஸ்கரனைப் பரபரப்பாகப் பார்த்தார் புரொபசர் மீனாட்சி சுந்தரம்.

''பாஸ்கரன்... அவன் என்ன சொன்னான்... ஏதாவது பேசினானா?''

''இல்லை சார்... எதையும் பேச மாட்டேன்னுட்டான். அடிபட்டதுல அவனால பேச முடியலைன்னு நினைக்கறேன்.''

''இல்லியே.. ஏதோ பேசற மாதிரி தெரிஞ்சிச்சே?''

''அது... அது என் குரல்தான்! அவனை இப்போ தொந்தரவு பண்ண வேண்டாம். விட்ருங்க. மற்றதை நான் பார்த்துக்கறேன்.''

''நீ பார்த்துக்கறேன்னா...?''

''புரொபசர் சார் கொஞ்சம் என் பேச்சை கேளுங்க. சக்திவேல் இப்ப நீங்க இங்க வந்த நபருக்கு காவலா இருக்கீங்க. நானும் புரொபசர் சாரும் கொஞ்சம் அவர் வீடு வரை போய்ட்டு வந்துடறோம். ரொம்ப ஜாக்ரதையா பார்த்துக்கணும். என்ன?''

''சரி சார்...'' என்றான் சக்திவேல் மிக உற்சாகமாக.

''வாங்க சார்... நாம போகலாம். நான் உங்களோட நிறைய பேசணும்.''

- பாஸ்கரன் அவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே நடந்தான். அருள்மொழியும் தொடர்ந்தாள்.

வீட்டில் குட்டி போட்ட பூனை போல் நடந்து கொண்டிருந்தார் புரொபசர். அவர் எதிரே கைகளைக் கட்டிக் கொண்டு பாஸ்கரன். அருள் மொழியும் அவனுக்குச் சரியாக மீனாட்சி சுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சார்... இப்ப நான் கேக்கற கேள்விக்கெல்லாம் ஒளிவு மறைவு இல்லாம பதில் சொல்லுங்க. தெட்சிணரகசியம் புத்தகம் உங்களுக்கு எங்க கிடைச்சுது? எப்படி கிடைச்சுது?''

''இப்ப எதுக்கு அந்தக் கேள்வி பாஸ்கரா...''

''அது தானே உங்களை பெரிய அளவில பாதிச்சிருக்கு.''

''பாதிச்சிருக்குன்னா... அதுக்கு காரணம் இருக்கு. அதை நான் ஒரு பழைய புத்தக்கடையில்தான் வாங்கினேன்.''

''உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா?'' அது பழைய புத்தகமே இல்லை. பழைய புத்தகம் போல உள்ள ஒரு புதுப் புத்தகம். இந்த வருஷம்தான் அச்சடிக்கப்பட்டது!''

-பாஸ்கரன் அவருக்கு அதிர்ச்சியளித்தான். மீனாட்சி சுந்தரமும் தடுமாறிப் போனார்.

''என்னப்பா சொல்றே... எதை வெச்சு அப்படிச்சொல்றே?''

''அதே போல இன்னொரு புத்தகம் எனக்குக் கிடைச்சுது. அதை நான் எனக்குத் தெரிஞ்ச நண்பர் ஒருத்தர் உதவியோட ஆராய்ந்தேன். அந்தப் புத்தகத்தோட பேப்பர் மட்டும்தான் பழசு. அதுல இருக்கற லெட்டர் ஃபாண்ட்ஸ், அதாவது அச்சு எழுத்துக்கள் இப்ப நடைமுறைல பயன்படுத்தற எழுத்துகள். குறிப்பா அதுல உள்ள சில ஸ்ட்ரோக்ஸ். அப்புறமா அதுல உள்ள படத்தோட பெயிண்டிங் முறை இதெல்லாம் நிச்சயமா இது திட்டமிட்டு தயாரிக்கப்பட்டதை எனக்கு சொல்லாம சொன்னது... ஒரு பெரிய புரொபசரான நீங்க எப்படி சார் இதை எல்லாம் உணராம போனீங்க?''

- பாஸ்கரன் கேட்கவும் மீனாட்சிசுந்தரம் அவனை வெறித்தார்.

''சொல்லுங்க... என்னைவிட சரித்திர ஆராய்வுல பழம் தின்னு கொட்டை போட்டவர் நீங்க. எப்படி கண்ணை மூடிக்கிட்டு இதை நம்பினீங்க?''

''நம்பாம என்ன பண்றது பாஸ்கரா. இப்பகூட உன் பதில் எனக்கு சந்தேகத்தைத்தான் தருது. அந்தப் புத்தகமோ அதிலுள்ள விஷயங்களோ பொய் இல்லை. அதுல உள்ளபடி யானைமலை பக்கம் நான் ஆராயச்சி செய்தப்போ தாழிகள் கிடைச்சதே அது எப்படி? அதுவும் யாரோ செய்த ஏற்பாடுங்கறியா...?''



''வேற எப்படி சார் நினைக்க முடியும். இந்தப் புத்தகம் மட்டுமல்ல. சமணப்பட்டி மலையில உள்ள கல்வெட்டுக்கள் கூட இப்ப யாராலோ செதுக்கப்பட்டதுதான்.''

''சரி, இதெல்லாம் எதுக்காகன்னு நீ நினைக்கறே''

''அதைத்தான் கண்டுபிடிக்கணும்.''

''அப்ப தங்க புத்தர் சிலையெல்லாம் இல்லேங்கறது உன் முடிவா?''

''இதெல்லாம் பொய்யா இருக்கும்போது அதுவும் பொய்யாத்தானே இருக்கணும்?'' - பாஸ்கரன் ஆவேசப் பட்டான். அருள்மொழி குறுக்கிடத் தொடங்கினாள்.

''பாஸ்கரன்... அது பொய்யா இருந்தா எதிரி எதுக்கு அப்பாவையும், உங்களையும் மோடிவேட் பண்ணனும்?''

''அப்ப உண்மைங்கறியா அருள்மொழி?''

''நிச்சயமா... நல்லா யோசிச்சுப் பாருங்க. எப்பவும் ஒரு புதையலோ இல்லை இந்த மாதிரி தங்கச் சிலைகளோ இருக்குன்னா அதைத் தேடற எதிரி காதும் காதும் வெச்ச மாதிரிதானே செயல்படுவான். அப்படி செய்யாம அப்பாவை, உங்களைத் தூண்டி விடற மாதிரியோ இல்லை நம்மை ஃபாலோ பண்ணியோ அதை எடுக்க நினைக்கிறான்னா அது உண்மையா இருக்கறதாலதானே?''

''அப்ப... சமணப்பட்டி மலையில அதை நாமதான் எடுக்க முடியும். மற்றவர்களால எடுக்க முடியாதுன்னு எதிரிகள் நினைக்கறதா நீ நம்பறியா?''

''ஆமா.. அந்த மலைக்குப் போனாதான் எல்லாருக்கும் தற்கொலை நினைப்பு வந்துடுதே?''

''இல்லை அருள்மொழி... உன் கேள்வியில இருக்கற நியாயத்தை நான் மதிக்கிறேன். அதே சமயம் அந்த மலைக்கு நம்மை அனுப்பத் துடிக்கிற விஷயங்கள் பின்னால வேற சில விஷயங்களும் இருந்தாகணும்.''

''ஒரு எழுத்தாளரா நீங்க இருக்கறதால ரொம்பவும் உங்களுக்கு பகுத்தறிவுப் பார்வை இருக்கு பாஸ்கரன். அதான்

இப்படி சந்தேகப்பட வைக்குது. கூட்டல், கழித்தல் கணக்குப் போட வைக்குது. நாம இங்க இருந்துட்டே பேசிக்கிட்டி ருக்கறதுல பிரயோஜனம் இல்லை. அந்த சமணப்பட்டி மலைக்குப் போய் அங்க என்னதான் இருக்குன்னு பார்த்துடுவோமே...''

''பார்க்கத்தான் போறேன்.. அதுக்கு முந்தி வேற வேலைகள் நிறைய இருக்கு.''

''என்ன வேலை பாஸ்கரா...?''

''அந்த சந்த்ரப்ரகாஷை நான் கொஞ்சம் உரசிப் பார்க்கணும்.''

''அதுக்கு முந்தி உனக்கு ஒரு விஷயம். யானைமலையில இருக்கற சரபேஸ்வரர் விக்கிரகத்தை நீ பார்த்தே தானே?''

''பார்த்தேனே... அதுக்கென்ன?''

''அதை வழிபட்ற ஒரு பெண்ணைப் பற்றிச் சொன்னேன் இல்லியா?''

''ஆமா...''

''அவளையும் போய்ப் பார். இப்படி சந்தேகப்பட மாட்டே.''

''அவளை எதுக்கு நான் பார்க்கணும்?''

''சரபேஸ்வரரை அந்தக் காலத்துல கடுங்கோன் பாண்டியன்ல இருந்து மதுரையை ஆட்சி செய்த பராந்தக நெடுஞ்சடையன் வரை வழிபட்டிருக்காங்க. எதிரிகளை நாசப்படுத்தி நமக்கு வெற்றியையே தரும் மூர்த்தி அவர்.

நான் சொல்ற பெண் அந்த மூர்த்தியை வழிபட்டு பல எதிரிகளை ஜெயிச்சிருக்கா. அசாதாரண பெண் அவ. அவளைச் சந்திச்சா உனக்கு சரபேஸ்வரர் சக்தி தெரியவரும். அந்த சரபேஸ்வரரை அங்க இருந்து நாம கொண்டு வந்து வழிபட்டா நமக்கும் வெற்றி நிச்சயம்.''- புரொபசர் ஒரு கோவில் பட்டரைப் போல மாறிவிட்ட மாதிரி பேசியதைக் கேட்ட பாஸ்கரனுக்கு எரிச்சலாக வந்தது.



''சார்.. இதெல்லாம் தனி மனித நம்பிக்கை. மனசு சார்ந்த விஷயம். நீங்க சொன்ன விஷயத்துக்கும், இதுக்கும் என்ன சார் சம்பந்தம்?''

''இருக்கு பாஸ்கரா... சரபேஸ்வரரை வழிபட்டு அவர் அனுக்ரகத்தோட நீ போவேன்னு புத்தகத்துல போட்டுருக்கு. அப்படி அனுக்ரகம் இல்லாத நிலையில சமணப்பட்டிக்குப் போனா வெற்றி கிடைக்காது.''

- மீனாட்சிசுந்தரம் சொன்ன விதத்தில் ஒன்று மட்டும் பாஸ்கரனுக்கு நன்றாகப் புரிந்தது.

தான் இனி இவரிடம் எவ்வளவு பேசினாலும் இவர் மாறப் போவதில்லை.

தன்னைப் போல் உண்மையைத் தேடும் ஒரு பார்வையும் அவருக்கு இல்லை என்பதை உணர்ந்தவன், கைகளைக் கசக்கிக் கொண்டான்.

மீனாட்சிசுந்தரம் அவனிடம் பேசியது போதும் என்கிறாற் போல தொலைபேசியை நோக்கிச் சென்றார். எண்களைச் சுழற்றத் தொடங்கினார்.

''யாருக்கு சார்...?''

''யாருக்கு - எல்லாம் சந்த்ரபிரகாஷுக்குத்தான். என்னை வேவு பாக்கறத விட்டு நீ தனிப்பட்ட முறைல உன் ஆராய்ச்சியைச் செய்யுன்னு சொல்லப் போறேன்.''

''அது சரி.. எங்கப்பன் குதிருக்குள்ள இல்லைன்னு சொல்லப் போறீங்களாக்கும். நீங்க சும்மா இருங்க. அதை நான் பார்த்துக்கறேன்.''

''அவனைப் பாத்துக்க என்ன இருக்கு? அவன் ஒரு கல்பிரிட். அதான் அவனை டிபார்ட்மெண்ட்டைவிட்டே துரத்திட்டாங்க. அவன் நான் ஆராயறது தெரிஞ்சு என்னை ஃபாலோ பண்ணிக்கிட்டு இருக்கான். இதுல பெரிசா தெரிஞ்சுக்க என்ன இருக்கு?''

- புரொபசர் மீனாட்சிசுந்தரம் விடுவிடுவென்று தன் போக்கிலேயே பேசினார்.

''சார் அப்ப அவன் ஆளைப் பிடிச்சு வெச்சுக்கிட்டு என்ன பண்ணப் போறோம். அவனை அனுப்பிடலாமே...''

''அவன்தான் பேசமாட்டேங்கறான்னு சொல்றியே. அவனை அனுப்பிடு. அதே சமயம் நான் சொல்றதையும் கொஞ்சம் கேள் பாஸ்கரா.

ஒரு பெரிய வரலாறு படைக்கப் போற வாய்ப்பு உனக்கு வரப்போகுது. நீ வாங்கியிருக்கற விருதைவிட பெரிய விஷயம் இது. இனி என் பேச்சை மட்டும் கேள்.''

''என்ன சார் கேக்கணும்?''

''மனசை போட்டுக் குழப்பிக்காதே. நான் சொல்றபடி செயல்படு. அந்த தங்க புத்தர் அகப்படுவார். அதை அடைஞ்சிட்டா அப்புறம் அரசாங்கத்துல இருந்து பத்திரிகையில இருந்து எல்லா மீடியா பார்வையும் நம்ம மேலதான்.''

''சரி சார்.. அதுக்கு முந்தி என்னை கொஞ்சம் தனியா விடுங்க. பல பத்திரிகைகளுக்கு நான் சேப்டர் எழுதி அனுப்பணும். அனுப்பிட்டு வந்துட்றேன்.''

''சரி போய்ட்டு வா...''

- மீனாட்சிசுந்தரம் கொஞ்சம் தினவாகச் சொல்ல பாஸ்கரன் புறப்பட்டான். வீட்டை விட்டு வெளியே வந்தான். அருள்மொழியும் உடன் வந்தாள். அவனை வாஞ்சையாகப் பார்த்தாள்.

''அருள்... உங்கப்பாவை எப்படி சமாளிக்கறதுன்னே எனக்குத் தெரியல. நான் பொய்யின்னு நம்பற ஒரு விஷயத்தை இப்படி உண்மைன்னு நம்பறாரே அருள்...''

- கொஞ்சம் போல கசிந்தான்.

''நீங்க இப்ப போயிட்டு வாங்க பாஸ்கரன். நாம அப்புறமா பேசலாம்...'' - அவள் அவனுக்கு விடை கொடுத்தாள். அவன் தலை மறையவும் உள்ளே வந்தாள். முதல் காரியமாக வாசல் கதவிலிருந்து சகலத்தையும் மூடியவள் புரொபசரை நெருங்கி வெறித்துப் பார்த்துவிட்டு சன்னமான குரலில் சொன்னாள்.



''அப்பா... பயமா இருக்குப்பா - பாஸ்கரன் நம் வழிக்கு வருவாரான்னு சந்தேகமா இருக்கு. வேண்டாம்பா இந்த முயற்சி...''

- அடுத்த நொடி ஓங்கி ஒரு அறை விட்டார் மீனாட்சிசுந்தரம்.

ஒரு வில்லன்னைப் போல பெற்ற மகளையே பார்த்தவர், ''படாத பாடுபட்டு அந்த ஆர்க்கியாலஜிஸ்ட்டை டிபார்ட்மென்டை விட்டு கழட்டி விட்டிருக்கேன். உலகத்தை விட்டும் கழட்டப் போறேன். இதெல்லாமே என் பல ஆண்டு காலக் கனவு. அதைக் கெடுத்துடாதே...''

- அவர் குரலில் ரௌத்ரம்!

## 29

அருள்மொழி அதற்குமேல் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. பேசினாலும் பலனில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். போய் ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டாள்.

மீனாட்சிசுந்தரம் மட்டும் குட்டி போட்ட பூனை போல நடக்கத் தொடங்கியிருந்தார். அடிக்கடி பார்வை தொலைபேசி பக்கம் திரும்பியது. அருள்மொழியும் கவனித்தாள்.

'அந்த சாந்திலால் தான் ஒரு வேளை போன் செய்வதாகக் கூறியிருப்பானோ?'

அவளுக்குள் கேள்வி தறிபோட்டு நெசவே நெய்தது. அவன்தான் என்கிற மாதிரி அதனிடமும் முணுமுணுப்பு. ஓடிப்போய் ரிசீவரை எடுத்து காதைக் கொடுத்த மீனாட்சிசுந்தரத்திடம் ஏராள விழி விரிவு!

''யாரு லால்ஜியா... நான் தான் மீனாட்சி பேசறேன்.''

''...............''

"டோன்ட் ஒர்ரி.... எல்லாம் ஸ்மூத்தா போய்க்கிட்டு இருக்கு. பாஸ்கரன்தான் இன்னும் சரியா வலைல விழலை."

"................"

"அதுக்கென்ன பண்ண முடியும், நாம தொட்டிருக்கிற விஷயம் அப்படி.. அவனும் புத்தியையே முதலா போட்டு பிழைக்கற ஒரு எழுத்தாளன். எனிவே நான் பாஸ்கரனை இதுல இறங்க வெச்சுடுவேன். இன்னும் என் கைல இரண்டு அஸ்திரம் இருக்கு."

".............."

"கவலையே படாதீங்க. பாஸ்கரன் இதுல இறங்கறான். அந்த சிலையையும் எடுக்கறான். அப்ப அவனை மீடியாவும் நிச்சயமா பூஸ்ட் பண்ணும். அதுதானே உங்களுக்கும் வேணும்?"

"............"

"என் விஷயத்தை மறந்துட வேண்டாம். பணத்துக்காக நான் இதுல ஈடுபடலை. அது உங்களுக்கு ஞாபகமிருந்தா சரி... உங்க சக்தியை நான் குறைச்சு மதிப்பிடலை. பாஸ்கரனுக்கு எப்படியோ விருது கிடைக்கும்படி பண்ணீட்டீங்களே. அதுலையே உங்கள சக்தியைத் தெரிஞ்சுகிட்டேன்."

".........."

"அந்த சந்த்ரப்ரகாஷ்தான் தொடர்ந்து கலாட்டா பண்ணிக்கிட்டு இருக்கான். வேலையை விட்டுத் தூக்கின மாதிரி உலகத்தை விட்டும் தூக்கினா ரொம்ப நல்லா இருக்கும்."

"........."

"ரொம்ப சந்தோஷம் லால்ஜி. அப்புறமா பேசுங்க. நல்லது நல்லது."

மீனாட்சிசுந்தரம் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தார். அருள்மொழி முறைத்துக் கொண்டேயிருந்தாள்.

"என்னடா கண்ணு அப்படிப் பாக்கறே?"



"நீங்க பண்றது உங்களுக்கே நல்லா இருக்காப்பா...?"

"இந்தக் கேள்வியையே நீ கேக்கக் கூடாதுன்னு நான் உனக்கு சொல்லியிருக்கேன். இருந்தும் அப்பப்ப நீ கேட்கறே..."

"அப்பா ப்ளீஸ்ப்பா.. பாஸ்கரனை இதுல இழுக்காதீங்கப்பா. அது உங்களுக்கு நல்லதில்லை."

"இனி எந்த நல்லது கெட்டதுபத்தியும் எனக்குக் கவலையில்லை. நான் முன்வைச்ச காலைப் பின் வைக்க மாட்டேன். என்னை என்னோட பல்கலைக்கழகம்தான் கௌரவிக்கத் தவறிடிச்சு. ஆனா மத்தவங்க தவறமாட்டாங்க. தவறவும் விடமாட்டேன்."

"விநாசகாலே விபரீத புத்திம்பாங்க. அப்ப யார் சொன்னாலும் கேட்க மாட்டாங்களாம். அது உங்க வரைல சரியா இருக்குப்பா..."

"அருள்மொழி. நீ என்னோட மகள். நாளைக்கு பாஸ்கரனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு பேரும் புகழுமா பெருவாழ்வு வாழணும்னு ஆசைப்பட்றேன். அதெல்லாம் நடக்கணும்னா எதையும் கண்டுக்காதே...

இந்த உலகத்துல எவ்வளவோ, ரகசியங்கள் பிறர் அறியப்படாமலே போயிருக்கு. அப்படி என் விஷயமும் போகட்டும்.

நான் ஆசையால மட்டும் இப்படி எல்லாம் நடந்துக்கலை. நான் ஒரு பெரிய சிக்கல்ல இருக்கேன். அது என்னன்னு தெரிஞ்சா நீ தாங்க மாட்டே.

புலிவாலைப் பிடிச்சவனும் நானும் இப்ப ஒண்ணு.

புரிஞ்சுக்கோ. இவ்வளவு நாளும் ஒத்துழைப்பு தந்த மாதிரி இனியும் தரப்பார்."

மீனாட்சிசுந்தரம் அங்கு தொட்டு இங்கு தொட்டு தன்னைப் பற்றிச் சொன்னதில் அருள்மொழி அப்படியே மெழுகாகி உருகத் தொடங்கவிட்டாள்.

''அந்தச் சிக்கல் என்னன்னுதான் சொல்லுங்களேன். நான் பாஸ்கரன் கிட்ட சொல்லி அதுல இருந்து உங்களை மீட்க முயற்சிக்கறேன்.''

''வேண்டாம்... அது உன்னால மட்டும் இல்ல. யாராலையும் முடியாது. அது மட்டுமில்ல, சமணப்பட்டி விஷயத்துல கிட்டத்தட்ட க்ளைமாக்ஸை நெருங்கியாச்சு. இனி எதைப் பத்தியும் பேசறதுல அர்த்தமில்லை. நான் இப்ப ஹிட்லரோட பொசிஷன்ல இருக்கேன். செய். இல்லை செத்துமடி. இதுதான் இப்போ என் தாரக மந்திரம்.''

- மீனாட்சிசுந்தரம் சொன்ன விதம், அதில் உள்ள அழுத்தம் எல்லாமே அருள்மொழியை ஒரு கலக்குக் கலக்கியது. பேசிவிட்டு தன் அறையை நோக்கிச் சென்றவர் சரேலென்று திரும்பி அருள்மொழியைப் பார்த்தார்.

''அம்மாடி... அவன்... அதாவது பாஸ்கரன் இப்ப சந்த்ரப்ரகாஷைச் சந்திக்க முயற்சி செய்வான்னு நினைக்க றேன். அவனைச் சந்திக்க விடாதபடி பண்ணணும். அதுக்கு என்ன பண்ணணுமோ அதைப் பண்ணு.''

''எப்படிப்பா...?''

''எனக்குத் தெரியாது.. மீறி அவன் சந்திக்கப் போனா அது அவனுக்குத்தான் பெரிய அதிர்ச்சியா இருக்கும்.''

''என்ன சொல்றீங்க?''

''விளக்கமா பேச இப்ப நேரமில்லை. சந்த்ரப்ரகாஷ் கொஞ்ச நேரத்துல சாகப்போறாம்மா!''

-மீனாட்சிசுந்தரம் பொட்டிலடித்த மாதிரி சொல்லிவிட்டு அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

அருள்மொழிக்கு இதயம் ஒரு கரணமே அடித்து முடித்திருந்தது. சுதாரித்துக் கொண்டு எழுந்துபோய் ரிசீவரைத் தொட்டாள். எண்களைத் தட்டி பாஸ்கரனைப் பிடிக்க முயற்சி செய்தாள்.

ஆனால் மறுமுனையில் பாஸ்கரன் வீட்டில் அவன் இல்லை என்பதற்கான அறிகுறியாக தொடர்ந்து ரிசீவரின் அழைப்பொலி போய்க்கொண்டே யிருந்தது.



சந்த்ரப்ரகாஷைப் பார்க்கத்தான் பாஸ்கரன் சென்று விட்டானோ?

சந்த்ரப்ரகாஷ் வீடு!

கதவைத் தட்டிக் கொண்டிருந்தான் பாஸ்கரன்.

சில நொடிகளிலேயே திறந்து கொண்ட கதவுக்குப் பின்னால் சந்த்ரப்ரகாஷ்!

''வாங்க பாஸ்கரன்.. நீங்க வருவீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்.''

- உள்ளே திரும்பியபடி சந்த்ரப்ரகாஷ் செல்ல பின் தொடர்ந்தான் பாஸ்கரன்.

உள்ளே ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஒரு நாற்காலியில் சக்திவேல் கட்டப்பட்டிருந்தான்.

அருகில் தலையில் கட்டோடு ஆஸ்பத்திரியில் கிடக்க வேண்டிய லோகு.

''ப்ரகாஷ் என்ன இது...? எதுக்கு சக்திவேலைக் கட்டிப்போட்டிருக்கீங்க?'' பாஸ்கரனிடம் பதைப்பின் விரிவாக்கம்.

''சொல்றேன். பாஸ்கரன். தயவு செய்து முதல்ல உட்காருங்க.''

''நான் உட்கார வரலை. இது என்ன சினிமா வில்லனாட்டம். உங்க போக்கே எனக்கு கொஞ்சம் கூட புரியலை. என்னதான் நடக்குது இங்க?''

''என் விஷயம் மட்டும்தானா? நிறைய விஷயங்கள் அப்படித்தான் இப்ப இருக்கு மிஸ்டல் பாஸ்கரன். நீங்க முதல்ல உட்காருங்க.''

''முதல்ல சக்திவேலை அவிழ்த்து விடுங்க. அவர் என்ன தப்பு பண்ணினார்?'' பாஸ்கரன் உச்சபட்சமாகக் குரலெடுத்தான்.

''லுக் பாஸ்கரன்... மிஸ்டர் மீனாட்சிசுந்தரத்தை நான் ஃபாலோ பண்ணினது வாஸ்தவம்தான். ஆனா...''

சந்த்ரப்ரகாஷ் விளக்கமளிக்கத் தொடங்கி ஆனா-வில் வந்து நின்றபோது, போதும் என்னை கவனி என்கிறாற்போல் தொலைபேசி குறுக்கிட்டது.

தொலைபேசியிலும் ஒரு பெண் குரல்.

''ஈஸ் திஸ் மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ்...?''

''யெஸ்... ஸ்பீக்கிங்!''

''அங்க மிஸ்டர் பாஸ்கரன் இருக்காரா?''

''ஓ... அருள்மொழித் தேவியாரா... இருக்காரும்மா இருக்கார். என்ன விஷயம்... அவரோட பேசி என் பேச்சைக் கேட்க வேண்டாம்னு சொல்லணுமா?''

''ப்ளீஸ் மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ். ரிசீவரை கொஞ்சம் பாஸ்கர்கிட்ட தரீங்களா?''

''தரேன்... அதுக்கு முந்தி ஒண்ணு மட்டும் நல்லா தெரிஞ்சுக்கோ. என்னை ஏமாத்திட்டு உங்களால எதையும் செய்ய முடியாது. நீங்கள் யாரு, என்ன ஏதுங்கற அவ்வளவையும் இந்த உலகத்துக்குச் சொல்லப் போற ஒரே எவிடன்ஸ் நான்தான். நீங்க எட்டடி பாய்ஞ்சா பதினாறு அடி பாயறவன் நான்...''

''பதினாறு அடி இல்லே 32 அடி கூட பாயுங்க. இப்ப முதல்ல போனை பாஸ்கர்கிட்ட கொடுங்க.''

''சாரி அருள்மொழி... என்னைப் பத்தி என் போன்லயே நீங்க தப்பா பேசறத என்னால அனுமதிக்க முடியாது.''

- எரிச்சலோடு போனை முடக்கிவிட்டுத் திரும்பின சந்த்ரப்ரகாஷை ஏராளமான கேள்விகளோடு பார்த்துக் கொண்டிருந்தான் பாஸ்கரன்.

''என்ன பாஸ்கரன்... ஒரே குழப்பமா ஆச்சரியமா, அதிர்ச்சியா எல்லாமுமா இருக்கா?''

''ஆமா... போன்ல யார்... அருள் மொழியா?''

''ஆமாம்!''

''என்கிட்டே பேச நினைச்சா மாதிரி இருக்கே?''



''உண்மைதான். அவ பேசறதுக்கு முந்தி நானும் உங்கிட்ட சில விஷயங்களைப் பேசணும் பாஸ்கரன்.''

''பேசறதுக்கு முந்தின்னா... என்ன சொல்றீங்க? அவ பேசறதுக்கும் நீங்க பேசறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நிறைய்ய இருக்கு.. அதனால் தான் அவ பேச ஆசைப்பட்டப்போ நான் லிங்க் கொடுக்கலை.''

''நீங்க என்ன சொல்றீங்க... நான் இப்ப புரொபசர் வீட்ல இருந்து தான் வரேன்.... அங்க பேசாததையா அவ இங்க போன்ல பேசிடப் போறா?''

''நிச்சயமா பேசலைங்கறது என் அனுமானம் மிஸ்டர் பாஸ்கர். அவ பேச வேண்டியதை பேசியிருந்தா நீங்க என்னைப் பார்க்க வந்திருக்கவே மாட்டீங்க.''

''லுக் மிஸ்டர் சந்த்ரபிரகாஷ்.... என்னை யாரும் கட்டிப்போட முடியாது. நான் என் மனசுக்கு எது சரின்னு படுதோ அதன்படி நடக்கறவன். அதைப் புரிஞ்சுக்குங்க...''

''எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கறதாலதான் உங்ககிட்ட பேச விரும்பறேன். ஒரு வகைல பார்த்தா நீங்க ரொம்ப பாவம் பாஸ்கரன்.''

- சந்த்ரப்ரகாஷ் ஒரு மாதிரி சொல்லும் போது திரும்பவும் தொலைபேசி சிணுங்கல்.

''அருள்மொழிதான் திரும்ப கூப்பிட்றா... இந்த தடவை அவளுக்கு டோஸ் விட்டாதான் சரிப்படுவா. வரேன் இருங்க.''

- சந்திரப்ரகாஷ் எழுந்து போய் திரும்ப ரிசீவரைத் தொட்டார். எதிர் பார்த்தது போலவே மறுமுனையில் அருள்மொழிதான்.

''சந்த்ரப்ரகாஷ் ப்ளீஸ் ஒரு நிமிஷம் பாஸ்கரன்கிட்ட போனைக் கொடுங்க...''

''முடியாது... தயவுசெய்து தொந்தரவு பண்ணாதே...''

- சந்த்ரப்ரகாஷ் போனை வைக்கப் போகும்போது மறு முனையில் அலறினாள் அருள்மொழி.

''மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ் வெச்சுடாதீங்க. ஒரு முக்கியமான விஷயம். உங்க உயிருக்கு ஆபத்து. ஜாக்கிரதை. எந்தவிதத்துல வேணும்னாலும் நீங்க தாக்கப்படலாம். இதைதான் பாஸ்கரன்கிட்ட சொல்ல விரும்பினேன். வேற வழி இல்லாம உங்ககிட்டையே சொல்லும்படியாயிடிச்சு...''

''என்னம்மா... என்ன இது புதுக்கதை. இப்படி எல்லாம் பேசினா நான் ஏமாந்துட மாட்டேன்.''

''ஐய்யோ, நான் சொல்றது சத்யம். நானே அப்பா போக்கு பிடிக்காம தான் இதைச் சொல்றேன். ப்ளீஸ் புரிஞ்சுக்குங்க.''

- தொலைபேசியில் அருள் மொழி சந்த்ரப்ரகாஷிற்கு எச்சரிக்கை செய்யும் அதே சமயம் வழக்கமாக அவருக்கு மதியமானால் டீ கொண்டு வரும் எதிரில் உள்ள டீக்கடைக்காரன் டீ கிளாஸோடு அவர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

அதில்...?

## 30

சந்த்ரப்ரகாஷ் மிக தீர்க்கமாக தான் பேச விரும்பிய விஷயத்திற்காக வாயைத் திறக்கும்போது ''சார்...'' என்றபடி உள்ளே நுழைந்தான் அந்த டீக்கடைக்கார சிறுவன்.

அவனைப் பார்த்த சந்த்ரப்ரகாஷ் ''இன்னும் மூணு டீ'' என்று ஆர்டர் பண்ணிவிட்டுத் திரும்ப, அவனும் டீயை அவர்களுக்கு நடுவில் டேபிளின் மேல் வைத்தான்.

நாற்காலியில் கட்டப்பட்டிருக்கும் சக்திவேல் கொஞ்சம் போல அவன் கண்ணை உறுத்த அதற்கான அதிர்ச்சியோடும் ஆச்சரியத்தோடும் சந்த்ரப்ரகாஷைப் பார்த்தான்.

''என்ன பாக்கறே?''

''எப்பவும் ஏதாச்சும் ஒரு வில்லங்கம் உங்களுக்கு இருந்துகிட்டே இருக்கும்போல இருக்குதே?'' அவன் ஒரு பெரிய



கேள்வியை சாதாரணமாகக் கேட்க சந்த்ரப்ரகாஷ் முகம் கசங்கிப் போகத் தொடங்கியது. அவன் எதிரிலேயே மளமள வென்று சக்திவேலின் கட்டுகளை அவிழ்த்து விட்டார்.

''வெளிய போய் டமாரம் போட்டுகிட்டு திரியாதே. போய் டீயோட வா...''

''யாருக்கு மிஸ்டர் சந்த்ரபிரகாஷ் டீ?'' பாஸ்கரன் குறுக்கிட்டான்.

''உங்களுக்குத்தான்.''

''உங்க உபசரிப்புக்கு நன்றி. எங்களுக்கு டீயெல்லாம் வேண்டாம்.''

''டேய் நீ போடா... அவசரப்பட்டு என்னை ஒரு எதிரியா முடிவு பண்ணிடாதீங்க பாஸ்கரன். உங்களுக்குத் தெரிய வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு. எல்லாம் தெரிஞ்சா அப்ப தெரியும் நான் யாருன்னு...''

''இப்படி பீடிகை போட்டுகிட்டிருந்தா எப்படி? விஷயத்துக்கு வாங்க.''

''சாரி...'' சந்த்ரப்ரகாஷ் சொல்லிக் கொண்டே டீயை ஒரு சூப்பு சூப்பினார். பின் ''வெரி சாரி... எனக்கு டயத்துக்கு சாப்ட்டு பழக்கம். அதான் கடைக்காரன் டாண்ணு டீ கொடுத்து விட்டுட்டான்.''

''ஆமா உங்களுக்கு மனைவி, குழந்தைகள்...?''

''எல்லாரும் இருக்காங்க. எனக்கு சொந்த ஊர் செஞ்சிக் கோட்டை. பிறந்து வளர்ந்தது எல்லாமே அங்கதான்...''- டீயை சூப்பியபடியே சந்த்ரப்ரகாஷ் தனது பயோடேட்டாவை வாசிக்க சக்திவேலும் அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

லோகுவால் நிற்க முடியவில்லை. தரையில் காலை நீட்டியபடி அமர்ந்து விட்டிருந்தான். டீ கிட்டத்தட்ட முக்காலே மூணு வீசம் காலியாகி விட்டிருந்தது. அவன் மிக முக்கியம் என்று சொல்ல நினைத்த விஷயமும் வெளிப்படத் தொடங்கியது.

''பாஸ்கரன்... புரோபசர் மீனாட்சிசுந்தரத்துக்கு ஒரு புகழ் கிறுக்கு பிடிச்சிருக்கு. கிறுக்குன்னா கிறுக்கு அசாதாரண கிறுக்கு. ஒருநாள் அவரை சந்திச்சு யானைமலை பற்றி, சமணப்பட்டி பற்றயெல்லாம் சில சந்தேகங்கள் கேட்டேன். ஒரு சரித்திரப் பார்வையுள்ள ஆராய்ச்சியாளராவும் கல்வெட்டுக்களைப் படிச்சு பொருள் சொல்றதுல எக்ஸ்பர்ட்டாவும் இருக்கறதால அவர்கிட்ட கேட்டேன்.

நான் கேட்கறதுக்கு முந்தி வரை யானைமலை பற்றி சமணப்பட்டி பற்றி அவருக்கு எதுவும் தெரியாது.

என் மூலமா தான் அவர் அந்த மலையை பற்றின சரித்திரப் பின் புலங்களைத் தெரிஞ்சுக்கத் தொடங்கினார். அப்படிப்பட்டவர் என்னையே ஏமாற்ற ஆரம்பிச்சார். அதுக்குக் காரணம்...''

- சந்த்ரப்ரகாஷ் முக்கியமான விஷயத்தின் முதல் கட்டத்திற்கு வந்து அந்த துல்லியமான நொடிப் பொழுது சந்திரப்ரகாஷின் நெஞ்சில் கத்தி ஏறியது போல ஒருவித வலி. முகம் க்ஷணத்தில் கோணலாகிப் போனது. பேச்சு நின்று போக அப்படியே மரவட்டை போல சுருண்டு கீழே விழத் தொடங்கினார் அந்த மனிதர்.

''மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ்... சந்த்ரப்ரகாஷ்...'' - பாஸ்கரன் பரிதவிக்க ஆரம்பித்தான்.

''சக்தி ஓடிப்போய் ஒரு ஆட்டோவைக் கூட்டிகிட்டு வாங்க.'' அலறினான். சக்திவேலும் வெளியே ஓடினான். லோகுவுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. வெலவெலக்க ஆரம்பித்தான்.

ஆஸ்பத்திரி...

இன்டென்சிவ் கேருக்குள் சந்த்ரப்ரகாஷின் உடல் நுழைய வெளியேயே பாஸ்கரனும் சக்திவேலும் தேங்கி நிற்க வேண்டிய நிலை. லோகுவும் தொற்றிக் கொண்டு வந்திருந்தான். முகம் வெளிறிப் போய் அவன் கண் பார்வையில் மரண பயம் நன்றாகத் தெரிந்தது.



''என்ன சார் இது... விஷயம் எங்கெங்கியோ போகுது?''

''ஆமாம் சக்தி. எனக்கு ஒண்ணும் புரியல. விஷயத்தைச் சொல்ல வரும்போதுதானான இந்த ஆளுக்கு ஹார்ட் அட்டாக் வரணும்?''

''சாரி சார். அது ஹார்ட் அட்டாக் இல்லை. வேற... வேற...'' லோகுவின் குரல் இடையில் கத்தரித்து முனங்கியது.

''என்ன லோகு சொல்றே நீ...?''

''ஆமாம் சார்... எனக்கும் இப்ப பயமா இருக்கு சார். நிச்சயம் என்னையும் கொன்னுடுவாங்க.''

''என்னய்யா உளர்றே?''

''உளறலை சார். உயிரோட இப்ப போராடிகிட்டு இருக்கேன்.''

''இதோ பார், பயப்படாம எல்லா விஷயத்தையும் சொல்லு, நான் இருக்கேன்.''

''நீங்க இருப்பீங்க, ஆனா நான் தான் இருக்க மாட்டேன்.''

''யோவ் ஏன்யா இப்படி உசுரை வாங்கறீங்க. என்னய்யா நடக்குது இங்க?''

''தங்க புத்தர் சிலையோட எடையே கிட்டத்தட்ட ஐநூறு கிலோ... இன்னிக்கு அதோட மதிப்பை கணக்குப் போட்டுப் பாருங்க.''

''எதையோ கேட்டா எதையோ சொல்றியேய்யா...''

''இந்த உலகத்தோட ராட்சஸ புதையல் சார் இது, ராட்சஸ புதையல். அவ்வளவும் சொக்கத் தங்கம்.''

''லோகு... உளறாம விஷயத்துக்கு வா. உன் உயிருக்கு ஆபத்து, சந்த்ரப்ரகாஷுக்கும் ஹார்ட் அட்டாக் இல்லைன்னு சொன்னியே. எதை வெச்சு?''

''வேண்டாம், என்னை விட்றுங்க! என்னை எதுவும் கேட்காதீங்க. எனக்கு எதுவும் தெரியாது. நான் உயிர் வாழணும். சத்தியமா நான் எதையும் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன். என்னை விட்றுங்க... என்னை விட்றுங்க..'' லோகு கும்பிட்டபடியே வெளியேறத் தொடங்கினான்.

பாஸ்கரனை ஆச்சரியம் கிள்ளித் தின்றது.

''சக்தி, நம்மைச் சுற்றி பயங்கரமா என்னென்னமோ நடக்குது. என்னன்னுதான் புரியலை.''

''சார் இதை எல்லாம் அப்படியே விட்டுட்டு என்கூட எங்க கிராமத்துக்கு வாங்க சார். அருள்மொழியும் வரட்டும். நாம முதல்ல அந்த மலைல இருக்கற அந்த தங்கப் புதையலை வெளியே எடுப்போம். அதை நம்மைத் தவிர யாராலையும் எடுக்க முடியாது சார். அதை எடுத்துட்டா எல்லா சிக்கலும் தன்னால தீர்ந்துடும்.''

-சக்திவேல் தன் பழைய பல்லவியையே அந்த இடத்திலும் பாடினான்.

''என்ன சக்தி திரும்ப பழைய பல்லவியா... இங்க சந்த்ரப்ரகாஷ் சாரை அப்படியே விட்டுட்டுப் கிளம்பவா? எனக்கு இப்ப எப்படியாவது சந்த்ரப்ரகாஷைப் பிழைக்க வைக்கணும். அவர் சொல்றத என்னன்னு கேட்கணும். அதுதான் முதல்ல முக்கியம்.''

''சார் யார் சொல்றதையும் கேக்காதீங்க. நாம ஊருக்குப் போவோம். நான் சொல்றத கேளுங்க.''

''சக்தி உங்களுக்கு உங்க க்யூரியாசிடி. புரோபசருக்கு அவரோட க்யூரியாசிடி. இங்க இந்த சந்த்ரப்ரகாஷுக்கு வேற மாதிரி க்யூரியாசிடி. ஒரு காமனான விஷயம். உங்க அத்தனை பேருக்கும் நான் தேவைங்கறதுதான்.

சமீப சில நாட்களாக வாரங்களாக என்னைச் சுற்றி நடக்கற எந்த ஒரு விஷயத்திலையும் இயல்பு இல்லை. அதுல ஏகப்பட்ட மர்மங்கள். இந்த மர்மத்துக்கெல்லாம் விடை தெரியத நிலைல நான் அந்த சமணப்பட்டி பக்கம் வரவோ எதையும் ஆராயவோ தயாராயில்லை.

இன்ஃபாக்ட் ஒரு கிராமத்து இளைஞனான நீங்க உங்க கால நேரத்தை தப்பா செலவழிச்சுக்கிட்டு இருக்கீங்களோன்னு கூட தோணுது.

என்கூட இருக்கறதாலையே உங்களுக்கும் சில சங்கடங்கள். ஆகையால நீங்க ஊருக்குப் போங்க. போய்



வேலையைப் பாருங்க. நான் அங்க வரும்போது உங்களைப் பாக்கறேன்.

அந்த மலைக்குப் போக வேண்டிய அவசியம் வரும்போது நிச்சயமா உங்களோட தொடர்பு வெச்சுப்பேன். இப்ப நீங்க கிளம்புங்க. அதுதான் உங்களுக்கு நல்லது.''

- பாஸ்கரன் கொட்டித் தீர்த்தான். சக்திவேல் தர்மசங்கடத்தோடு பாஸ்கரனைப் பார்த்து நெளிந்தான்.

''என்ன பாக்கறீங்க. நீங்க கிளம்புங்க.''

''இருக்கட்டும் சார்... எனக்குன்னு எந்த வேலையும் இல்ல. குறைந்த பட்சம் உங்களுக்கு உதவியாவாவது இருக்கேனே...?''

''அப்படின்னா நான் சொல்றத தான் நீங்க கேட்கணும்.''

''இப்பவும் அப்படித்தானே சார் இருக்கேன்.''

''இல்ல... நடுநடுவில என்னை உங்க ஊருக்குக் கூப்பிட்டுகிட்டே இருக்கீங்க...''

''அது நீங்க சொன்ன மாதிரி ஒரு க்யூரியாசிடிதான். வேணும்னா நான் இனிமே அப்படி கூப்பிடலை.''

''அப்ப சரி. ஆமா உங்க அப்பா அம்மா உங்களைத் தேடமாட்டாங்களா?''

''உங்களோட இருக்கறதை தெரிஞ்சா எதுவும் சொல்ல மாட்டாங்க சார்.''

''அது தெரியுமா?''

''தெரியும். கொஞ்சம் முந்தி கூட போன் பண்ணி சொன்னேன்.''

- சக்திவேல் அறுத்துக் கொள்ளாதபடி தொடர்ந்து பதிலளிக்க பாஸ்கரன் முகத்தில் ஒருவித புதிய சிந்தனை; கூடவே ஒரு சின்னச் சிரிப்பு.

''சரி... என்கூடவே இருங்க. வாங்க டாக்டரைப் பார்த்து சந்த்ரப்ரகாஷ் உடல் நிலையைப் பற்றிக் கேட்போம்.''

''சார் அப்படியே அருள்மொழி மேடம் கூடவும் பேசிப்பாருங்க சார். அவங்க கூட போன்ல உங்களோட பேச ஆடைப்பட்டாங்கல்ல...?''

''ஆமா.. அருள்மொழி என்ன பேச விரும்பினாங்கறதும் எனக்குத் தெரியணும். இப்ப முதல்ல டாக்டரைப் பார்த்துக் கேட்போம். சந்த்ரப்ரகாஷ் நல்லவரோ கெட்டவரோ, அவர் குணமாகனும்- அது தான் இப்ப முக்கியம்.''

- பாஸ்கரன் டாக்டரைப் பார்க்கத் தயாரானான். ஐ.சி.யிலிருந்து வெளியே வந்த அவரும் சுரத்தில்லாமல்தான் தெரிந்தார்.

''டாக்டர், பேஷண்ட் இப்ப எப்படி இருக்கார்?''

''சொல்றேன். உண்மைய சொல்லுங்கள் மிஸ்டர் பாஸ்கரன். மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ் தற்கொலைக்கு ஏதும் முயற்சி செய்தாரா?''

''தற்கொலைக்கா... என்ன டாக்டர் சொல்றீங்க?''

''அவர் கடுமையான விஷத்தால் பாதிக்கப்பட்டிருக்கார். இது ஜி.எச்.சுக்குப் போகவேண்டிய கேஸ். ஏன் இங்க கொண்டு வந்தீங்க?''

''இல்லை டாக்டர். அவர் எங்க கூட நல்லா பேசிக்கிட்டு இருக்கும்போது திடீர்னு சுருண்டு விழுந்துட்டார். அதான் உண்மை. நெஞ்சை கைல பிடிச்சுகிட்டு விழவும் நான்தான் ஹார்ட் அட்டாக்கோன்னு நினைச்சுட்டேன்.''

''ஹார்ட் அட்டாக்கோட சிம்டம்ஸே வேற. உடம்பு வியர்க்கும். உடம்புல நீலமும் பாரிக்காது. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா?''

''அப்ப சந்த்ரப்ரகாஷுக்கு விஷத்தாலதான் பாதிப்பா?''

''ஆமா இப்போதைக்கு ஸ்டமக்கை க்ளீன் பண்ணி ஆக்சிஜன் கொடுத்துருக்குகோம். பிழைக்கற வாய்ப்பு ரொம்பவும் குறைவு. அவர் சாப்பிட்ட ஏதோ ஒண்ணுல பாய்சன் இருந்திருக்கு..''



- டாக்டர் சொல்லச் சொல்ல பாஸ்கரன் குலை நடுங்கிப் போனான்.

''டோன்ட் ஒர்ரி.. எப்படியாவது அவரைப் பிழைக்க வைக்கப் பார்க்கறேன். ஆமா அவர் பேரண்ட்ஸ் யாரும் வரலியா?''

''யாருக்கும் எதுவுமே தெரியாது. இனிமேதான் தகவல் சொல்லணும்.''

''முதல்ல தகவல் தாங்க. ஆக்சுவலா இப்படி ஒரு கண்டிஷன்ல எந்த பிரைவேட் டாக்டரும் ரிஸ்க் எடுக்க மாட்டாங்க. உங்களுக்காத்தான் நான் இங்க இவருக்கு ரிஸ்க் எடுத்திருக்கேன்.''

''தேங்க்யூ டாக்டர் நான் இப்பவே அவரோட பேரண்ட்சுக்கும் தகவல் தரேன். ப்ளீஸ் டாக்டர், எப்படியாவது அவரைப் பிழைக்க வைக்கப் பாருங்க.''

''அது என் ட்யூட்டி. ஆமா நீங்க ஏதாவது சிக்கல்ல இருக்கீங்களா?''

- டாக்டர் கூர்மையாகக் கேட்ட விதம் பாஸ்கரனுடைய பொட்டில் அடித்தது.

''சிக்கல்... சிக்கல்... அதெல்லாம் ஒண்ணுமில்லை டாக்டர்.''

''இல்ல பாஸ்கரன், உங்க தவிப்பு, சந்த்ரப்ரகாஷ் பொசின் எல்லாம் எனக்கு சந்தேகத்தைத் தருது. அதான் அப்படிக் கேட்டேன்.''

''எனக்கு இப்ப இருக்கற சிக்கல் சந்த்ரப்ரகாஷ் பிழைக்கணும்கறதுதான். வேற எதுவும் இல்லை. அவரைச் சந்திக்கப் போன இடத்துலதான் இப்படி ஆயிடிச்சு. ஒரு மனிதனா அவரை இங்க கூட்டிகிட்டு வந்து அட்மிட் பண்ணியிருக்கேன். தட்ஸ் ஆல்!''

- பாஸ்கரன் மென்று விழுங்கினான். டாக்டர் அதில் பாதியை நம்பி மீதியை நம்பாததுபோல அவனைப் பார்த்துவிட்டு திரும்பவும் ஐ.சிக்குள் புகுந்து கொண்டார்.

பாஸ்கரனுக்கு கொஞ்சம் போல நெஞ்சைக் கரித்தது. ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான்.

எஸ்.டி.டி. பூத் ஒன்றில் நுழைந்து முதல் காரியமாக அருள் மொழிக்குத்தான் போன் செய்தான்.

''அருள் மொழி...''

''நான் அருள்தான் பேசறேன். எங்க இருக்கீங்க பாஸ்கரன்?''

''அது இருக்கட்டும், மிஸ்டர் சந்த்ரப்ரகாஷ் வீட்டுக்கு போன் பண்ணினியா.''

''ஆமாம்.''

''என்ன விஷயம்? என் கூட பேச ஆசைப்பட்டே போல இருக்கே?''

''ஆமாம் இப்ப சந்த்ரப்ரகாஷ் வீட்ல இருந்துதான் பேசறீங்களா?''

''இல்ல அருள். அவர் இப்ப ஹாஸ்பிட்டல்ல. சம்திங் ராங்! அவரை யாரோ கொல்ல முயற்சி செய்திருக்காங்க. அதுசரி நீ போன் செய்த காரணம்?''

''ஒண்ணுமில்லை பாஸ்கரன். உங்களை சாப்பிட கூப்பிடத்தான் போன் பண்ணினேன். ஆமா சந்த்ரப்ரகாஷ் இப்ப எப்படி இருக்கார்? கொலை முயற்சி அது இதுன்னு பயமுறுத்தறீங்களே பாஸ்கரன்...''

''நீ கூட அவர் உயிருக்கு ஆபத்துங்கற மாதிரி ஏதோ பேசினே போல இருக்கே...?''

''நானா... இல்லையே...''

- அருள்மொழி ஏராள அதிர்ச்சியை தாராளமாக அளித்தாள்.



# 31

அருள்மொழி சொன்னதைக் கேட்டு பாஸ்கரன் ஒரு சில வினாடிகள் தடுமாறிப் போனான். மறுமுனையில் அருள்மொழியும் பேச்சை மாற்ற ஆரம்பித்தாள்.

''பாஸ்கரன் இப்ப எங்க இருக்கீங்க?''

''எதுக்கு கேக்கறே அருள்மொழி...?''

''இல்ல உங்களை சாப்பிடக் கூப்பிடலாம்னுதான்.''

''நிஜமாலுமே சமைச்சு சாப்பாடு போட்ற ஒரு மூட்ல நீ இருக்கியா அருள்...?''

- அருள் அந்தக் கேள்வி முன் அமைதியாக நின்றாள்.

''என்ன அருள் பேச்சைக் காணோம்?''

''நீங்க கேக்கறதும் சரிதான் பாஸ்கரன். ஆனா நான் இப்ப அந்த மாதிரி மூடுக்கு மாறத்தான் விரும்பறேன். இந்த அப்பாவால என் மனநிலை அந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கு...''

''அது சரி... எதுக்காக சந்த்ரப்ரகாஷுக்கு போன் பண்ணினே?''

''உங்ககூட பேசத்தான் போன் பண்ணினேன். ஆனா அந்த ஆள் லொடக் லொடக்னு போனை எடுத்துட்டார்.''

''அவர் வீட்டு போனை அவர் எடுக்காம நான் எடுப்பேன்னு எதை வெச்சு எதிர்பார்த்தே?''

''என்ன பாஸ்கரன் இது... கோர்ட்ல கேட்கற மாதிரி கேக்கறீங்க?''

''சரி... என்ன பேச விரும்பினே...?''

''அதான் சொன்னேனே, சாப்பிடக் கூப்பிடத்தான் போன் செய்தேன்.''

''நிஜமா அதுக்குத்தானா?''

''சத்யமா அதுக்குத்தான்...''

''சரி.. உன் ஆசையை நான் ஏமாத்த விரும்பலை. நான் சாப்பிட வரேன்.''

''பா...பாஸ்... ரியலாவா சொல்றீங்க...''

''ஏன் பதட்டப்பட்றே? கிளிண்டனா உன் வீட்டுக்கு சாப்பிட வர்றதா சொல்லிட்டாரு? இவ்வளவு டென்ஷன் ஆகறியே...''

''அது.. அது.. எனக்கு நீங்க கிளிண்டனைவிட ஒசத்தின்னு வெச்சுக்குங்களேன்.''

''சரி... ஐஸ் வெச்சது போதும்! நான் இன்னும் அரை மணி நேரத்துல அங்க இருப்பேன்.''

''அரை மணி நேரத்துலையா? ஐய்யோ...''

''ஏன்... எல்லாத்தையும் ரெடி பண்ணிட்டுதானே கூப்பிட்றே?''

''அது.. அது... சரி வாங்க!'' அருள்மொழி மறுமுனையில் சுதாரித்தாள்.

''என்னம்மா.. எதும் பண்ணலைன்னு சொல்லு...''

''அதெல்லாம் இல்ல. பண்ணலைன்னாலும் ரெடி பண்ணிடுவேன். ஆமா இப்ப எங்க இருந்து பேசறீங்க. சந்த்ரப்ரகாஷ் வீட்ல இருந்தா?''

''ஆமான்னு வெச்சுக்கயேன்.''

''அவர்... அவர் எப்படி இருக்கார்?''

''அவருக்கென்ன நல்லாதான் இருக்கார்...''

''அப்பபடியா?''

''ஆமாம்... என்ன திடீர்னு அவரைப் பற்றி கேள்வி.''

''ஒண்ணுமில்லை. ஆமா ஏதாவது சொன்னாரா?''

''இதுவரைக்கும் இல்லை. இனிமே சொல்லலாம்.''

''அவர்கிட்ட நீங்க எவ்வளவு பேசினாலும் உங்களுக்குப் பிரயோஜனமில்லை பாஸ்கரன். அவரை விட்டுத் தள்ளுங்க. அப்பா அதைத்தான் சொல்றார்.''



''அப்படியா?''

''என்ன பாஸ். நான் கதைசொல்றேனா... அப்படியாங்கறீங்க.''

''கதைகூட இவ்வளவு சுவாரஸ்யமா இருக்காது அருள். இது அதைவிட விறுவிறுப்பா இருக்கு.''

''அது... அது... சரி.. சாப்பிட வந்துருங்க. மிச்சத்த நேர்ல பேசிக்கலாம்.''

''கவலப்படாத... ஒரு மணி நேரம் கழிச்சு வரேன். நிதானமா சமைச்சு வை. இப்போதைக்கு தற்காலிகமாக உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்வது பாஸ்கரன்.''

''பிரபல எழுத்தாளர் பாஸ்கரன்னு சொல்லுங்க.''

''சரி பிரபல எழுத்தாளர் பாஸ்கரன். டொட்க்.''

ரிசீவரை வைத்துவிட்டு திரும்பினான். பூக்காரப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள் அவளிடம் ஒருவித பிரமிப்பு.

''இந்தாங்க. மீதி கொடுங்க'' - அவன் ஒரு பத்து ரூபாயை நீட்ட அவள் ''நீங்கதான் எழுத்தாளர் பாஸ்கரனா?'' என்றாள் உற்சாகமாக. அவனிடமும் தோளைக் குலுக்கியபடி ஆமோதிப்பு.

''சார் நான் உங்க வாசகி.''

''மகிழ்ச்சி...''

''என்னால் நம்பவே முடியலை. நீங்க என் பூத்ல...?''

''ஏம்மா ஒரு எழுத்தாளர் டெலிபோன் பூத்துக்கு வரக்கூடாதா?''

''ஐய்யோ நான் அப்படிச் சொல்லலை. உங்களை, உங்களை நான் எதிர்பார்க்கலை. அதான் அப்படிச் சொன்னேன்.''

''சந்தோஷம். மீதி தாங்க.''

''ஆமாம்... நீங்க பெரிய ஆராய்ச்சியில எல்லாம் இறங்கியிருக்கீங்க போல இருக்கே?''

''யார் சொன்னது அப்படின்னு?''

''என்ன சார்... இன்னிக்கு டெய்லி ரிப்போர்ட்டர்ல வந்திருக்கே...''

''என்னன்னு...?''

''ஏதோ ஒரு தங்க விக்ரகத்தை நீங்க தேடிக்கிட்டி ருக்கிறதாகவும் அது கிடைச்சிட்டா உங்களுக்கு உலகப் புகழ்னும் அதுல போட்டுருக்கு. நீங்க ஒண்ணுமே தெரியாத மாதிரி கேக்கறீங்களே...''

''அப்படியா?'' -அதிர்ந்து போனான் பாஸ்கரன். மிச்சத்தை வாங்கிக் கொண்டு பூத்தைவிட்டு வெளியே வந்தவன் நேராக ஒரு புத்தக் கடையை நோக்கித் தான் ஓடினான்.

முன்னால் கொடித்துணிபோல தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பத்திரிகையில் ஒன்றை உருவி உள்ளே பார்வையை ஓடவிட்டான். பொட்டில் வலித்தது. அந்தப் பெண் சொன்னது உண்மைதான்!

கடைக்காரரும் அவனை அடையாளம் கண்டு கொண்டவராக, ''வாங்க சார்... வாங்க வாங்க...'' என்றபடி பரபரப்பானார்.

''என்ன சார் பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் கண்டு பிடிக்கப் போறீங்க போல இருக்கே. நம்ம ஊர் யானை மலையும் எலும்புத் தாழி அது இதுன்னு ஏகத்துக்கும் விஷயம் இருக்குது போல இருக்கே...?''

- அவர் கேட்கக் கேட்க அவர் எதிரில் சிரித்து வழிந்து சமாளித்துவிட்டு புத்தகத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டு திரும்ப ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

சக்திவேல் ரிசப்ஷனிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''சார் போன் பண்ணீட்டீங்களா? என்ன சொன்னாங்க?'' துள்ளிக் கொண்டு எழுந்தபடி கேட்டான்.

''எல்லாமே பெரிய புதிரா இருக்கு சக்தி. நாம யானை மலைக்குப் போய் அந்தத் தாழியைப் பார்த்துட்டு வந்த தெல்லாம் பேப்பர்ல கூட வந்துடுச்சு. நான் தங்கச் சிலையை தேடி அலையறேனாம். அதுக்கான எல்லா குறிப்பும் என்கிட்ட இருக்காம்... கண்டுபிடிக்காம விட மாட்டேனாம்.''



''அப்படியா... எந்த பேப்பர்ல சார்?'' - சக்திவேல் கேட்க பாஸ்கரன் நீட்ட....

''சார் இது புரொபசர் சார் வேலையா தான் இருக்கணும்.''

''ஆமாம்... ஆனா அவரைப் பற்றி பெரிசா எதுவும் எழுதாம என்னைத்தான் தூக்கிவெச்சு எழுதியிருக்காங்க. இந்தச் சிலையைக் கண்டுபிடிக்க என்னுடைய சரித்திர அறிவும், ஆராய்ச்சியும்தான் காரணம்னு சொல்லி யிருக்கறதைப் பார்த்தா எனக்கு எல்லாமே அதிர்ச்சியா இருக்கு.''

''சமணப்பட்டி பற்றியும் எதாவது எழுதி இருக்காங்களா சார்...''

''இல்ல... இனியும் நான் தடுமாறிக்கிட்டிருந்தா இதை விட நம்ப முடியாத சேதி எல்லாம் வரும். இப்பவே நான் இந்தப் பத்திரிக்கை ஆசிரியரோட பேசறேன். யார் உங்களுக்கு இதை எல்லாம் சொன்னதுன்னு கேக்கறேன். ஒரு பெரிய சதி என்னைச் சுத்தி நடக்கற மாதிரி தெரியுது.'' - பாஸ்கரன் கசகசத்துப் போய் பேசினான். சக்திவேல் மௌனமாக வெறித்தான்.

''சரி... நான் புரொபசர் வீட்டுக்கு இப்ப வரேன்னு சொல்லியிருக்கேன். நீங்க இங்க சந்த்ரப்ரகாஷை ஜாக்ரதையா பார்த்துக்கங்க. அவர் கண் திறந்த உடனே அவர் மனைவியோட முகவரியைக் கேட்டு அவங்க வீட்டுக்கு தகவல் தந்துருங்க. எந்த நிலையிலையும் இதுல பிசகல் வந்துடக்கூடாது. நான் புரொபஸரைப் பார்த்துட்டு ஒரு முடிவோட வரேன்.'

''சரிங்க சார்.''

- பாஸ்கரன் கொஞ்சம் வேகமாகவே அங்கிருந்து புறப்படத் தொடங்கினான்.

**பா**ஸ்கரன் வீடு.

ஏகத்துக்கும் தபால்கள்... புத்தகங்கள்... கர்ப்பிணி வயிறு போல இருக்கும் ஒரு புதிய நவீன பெட்டி ஒன்றில் அவ்வளவும் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது.

துர்கா பார்த்துக் கொண்டேயிருந்தாள். பாஸ்கரன் எங்கோ போயிருக்கிறான். இல்லாவிட்டால் கடிதங்கள் இப்படி எடுக்கப்படாமல் கிடக்குமா என்ன, ஒரு க்யூரியாசிடி அவளுக்குள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

'அவன் உன்னை நான் காதலிக்கவில்லை என்று சொல்லிவிட்டாலும் என்னால் உன்னைக் காதலிக்காமல் இருக்க முடியாது. அது சாத்யமே இல்லை.' என்று அவள் நினைக்கிற மாதிரி தோன்றியது.

கடிதங்களைப் படிப்பதில் தவறு இல்லை. அதற்கு தனக்கு உரிமை இருப்பது போல் நினைத்துக் கொண்டவள் மெல்ல அந்த தபால் பெட்டியைச் சமீபித்தவள், உள்ளேயிருந்து கடிதங்களை மெல்ல வெளியே எடுத்தாள்.

வாணியம்பாடியில் இருந்து ஒரு ரசிகை அடிக்கடி கடிதம் எழுதி உருகித் தள்ளுவது அவளுக்குத் தெரியும்... ஆத்தூரில் இருந்தும் ஒரு ரசிகை அவளோடு போட்டி போடுவதும் தெரியும்.

ஆனால் இப்படி கடிதம் எழுதும் எந்தப் பெண்ணிடமும் சிக்காமல் அருள்மொழியிடம் அவன் மனம் சிக்கிக் கொண்டதை நினைக்கும் போது கொஞ்சம் போல கொந்தளிக்கத்தான் செய்தது மனது.

' அருள்மொழி நீ மிகக் கொடுத்து வைத்தவள். உன்னை நினைத்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது.' அவள் அருள்மொழி நினைப்போடு ஒவ்வொரு கடிதமாகப் புரட்டும் போது வாசலில் ஒரு வேன் வந்து நிற்கும் சப்தம்.

எட்டிப் பார்த்தாள்.

அதிலிருந்து இரண்டு பேர் இறங்கி தூக்க மாட்டாமல் ஒரு பார்சலைத் தூக்கிக் கொண்டு வந்து பாஸ்கரன் ஃப்ளாட் முன் நின்றனர்.



''இதுதானே எழுத்தாளர் பாஸ்கரன் வீடு.''

''ஆமாம்...''

''பூட்டியிருக்கே அவர் இல்லையா...?''

''எங்கையோ வெளியே போயிருக்கார்.''

''அப்ப இந்த பார்சலை நீங்க அவர் வந்த உடனே கொடுத்துட்றீங்களா?''

'என்ன பார்சல் இது?''

''தெரியாது... ஹேண்ட் ஓவர் பண்றது மட்டும்தான் எங்க வேலை...''

''சரி கொடுத்துட்டுப் போங்க. நான் கொடுத்துட்றேன்'' அவர்கள் அவளிடம் கூரியர் தபால் போல ஒப்படைத்துவிட்டு வந்த வேகத்தில் திரும்பிப் போனார்கள். பார்சல் அற்புதமாக பேக் செய்யப்பட்டிருந்தது. தொட்டு அசைக்கப் பார்த்தாள். முடியவில்லை.

'என்னவாக இருக்கும்?' - கடிதங்களைப் போட்டுவிட்டு பார்சலை ஆராய ஆரம்பித்தாள்.

கும்மென்று மஞ்சள் சந்தன வாசனை மூக்கை நிரடிற்று. காடா துணியில் ஏகத்துக்கும் சுற்றிக் கட்டியிருந்தார்கள். ஏதாவது விலை உயர்ந்த பரிசுப் பொருளாக இருக்குமோ?''

அவள் கேள்வியில் ஊஞ்சல் கட்டி ஆடும்போது தெருவில் கோவில் யானை ஒன்று நுழைந்திருந்தது. நெற்றி கொள்ளாத நாமத்தோடு நுழைந்திருந்த அதன் முதுகில் மாவுத்தன் அமர்ந்திருந்தான்.

யானையே கம்பீரம். அதன்மேல் ஒரு மனிதன் மிகப் பெரிய கம்பீரம். ரசித்தபடி யானையைத் தாண்டி தன் ஃப்ளாட் நோக்க ஆட்டோ ஒன்றில் பயணித்தபடி இருந்தான் பாஸ்கரன்.

# 32

வீட்டு முகப்பு... ஆட்டோவிலிருந்து அம்பு போலப் பாய்ந்து உள்ளே நுழையத் தொடங்கினான்.

ஃப்ளாட் வாயிலிலேயே அந்த பார்சல் மூட்டையுடன் துர்கா.

''என்ன?''

''ஏதோ பார்சல்...''

''யாருக்கு?''

''உங்களுக்குத்தான். வேன்ல வந்து இறக்கிட்டுப் போனாங்க. பயங்கர வெயிட்.''

- பாஸ்கரன் கண்களை வியப்பு வளைத்தது. விசித்திரமாகவும், விபரீதமாகவுமே எல்லாமே நடந்து கொண்டிருப்பதால் உள்மனதில் ஒரு சிவப்பு விளக்கு தன்னாலே எரிந்தது. தயக்கத்தோடு தொட்டுப் பார்த்தான். கல் போல கனமாக ஒன்று இருந்ததாக உள்ளுணர்வு சொன்னது.

வெளியே நின்றபடியே பார்சலைப் பிரிக்கத் தொடங்கினான். துர்கா தன் வீட்டிற்குள் ஓடிச்சென்று கத்தரிக்கோலை எடுத்து வந்து தந்து உதவி செய்தாள். மெல்ல காடாதுணிகள் பிரிக்கப்பட உள்ளே இருந்து ஒரு கற்சிலை தெரியத் தொடங்கியது.

பாஸ்கரனின் முகம் முழுக்க ஸ்ப்ரே செய்தது போல வியர்வைப் புள்ளிகள்!

முழுவதுமாக துணி விலக்கப்பட 3 அடி உயரத்தில் இரண்டு அடி அகலத்தில் மஞ்சள் குங்குமம் மணக்க சரபேஸ்வரர் விக்கிரகம் தெரியத் தொடங்கியது. யானைமலை அடிவாசரத்தில் ஒரு பாறைச் சுவற்றை ஒட்டி பார்க்கப்பட்ட அதே விக்கிரகம்!

நெஞ்சில் சிலீர் என்று ஒரு அதிர்ச்சி...



''என்னங்க இது... ஏதோ வித்தியாசமான சாமி நிலை மாதிரி இருக்கே?'' - துர்கா வியப்போடு கேட்க அவளது அம்மாவும்கூட எட்டிப் பார்த்து ஆச்சரியப்பட ஆரம்பித்தார்கள்.

பாஸ்கரனிடம் பேச்சில்லை. யார் இதை தனக்கு அனுப்பியது? கேள்வி மலைப்பாம்பாய் புரள துர்காவின் அப்பா படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

''தம்பி இது சரபேஸ்வர மூர்த்தியோட விக்கிரகம். உங்களுக்கு யார் அனுப்பினது?'' - பரவசம் பொங்கி வழியக் கேட்டார்.

''தெரியல... எனக்கு எதுக்காக இது அனுப்பப்படணும்கறதும் புரியல.''

''ரொம்ப சக்தி வாய்ந்த கடவுள். சத்ருக்களை ஜெயிக்க இதை வழிபடுவாங்க. இதுவே உங்களைத் தேடி வந்துருக்குன்னா ஆச்சரியமா இருக்கு... எனக்குத் தெரிஞ்சு ஒரு கல் சிலை பார்சல்ல வந்து இப்பதான் பாக்கறேன்.'' - அவர் சரபேஸ்வரருக்கு விளக்கம் அளித்தபடியே அந்த மூர்த்தி விக்கிரகத்தை வெறித்தார். பாஸ்கரனும், தாடையைச் சொறிய ஃப்ளாட்டின் உள்ள தொலைபேசி சிணுங்கும் சப்தம்.

மளமளவென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று ரிசீவரை கையில் எடுத்து காதைக் கொடுத்தான்.

''ஹலோ பாஸ்கர்... நான் மீனாட்சிசுந்தரம் பேசறேன்...'' அந்தப் பக்கத்தில் புரொபசர்.

''என்ன சார் விஷயம்?''

''முக்கியமான விஷயம்தான்... சரபேஸ்வர மூர்த்தி விக்கிரகம் உன் வீட்டுக்கு வந்துடிச்சா?''

''ஆமாம்... உங்க வேலையா?''

''அப்படித்தான் வெச்சுக்கோயேன். யானைமலைல நான் கண்டுபிடிச்ச தாழியும் எலும்புக்கூடும் இப்ப ஆர்க்கியாலஜி கிட்ட. இந்த கல் விக்கிரகத்தைமட்டும் அவங்களுக்குத் தெரியாம அங்க இருந்து எடுத்து உனக்கு அனுப்பி யிருக்கேன்.''

''எனக்கு எதுக்கு அனுப்பினீங்க? என் வீடு என்ன கோயிலா- இல்ல நான்தான் பூசாரியா...?''

''இனிமேல் உன் வீடு ஒரு கோவில்தான்... நீ பூசாரி இல்லை. அதுக்கும் மேல! இந்த விக்கிரகத்தோட அருமை உனக்குத் தெரிய வேண்டாமா?''

''என்ன பைத்தியக்காரத்தனம் சார் இது... உங்க போக்கும் பேச்சும் எனக்கு கொஞ்சம்கூட நல்லா விதமா படலை. இது பொதுச் சொத்து. எனக்கு எதுக்கு பார்சல் செய்தீங்க?''

''அதோட சக்தியை நீ தெரிஞ்சுக்கதான்.''

''புடலங்கா. நான் தெரிஞ்சு என்ன பண்ணப் போறேன்?'' பாஸ்கரன் கத்தினான்.

''கத்தாதே.. உன்னைப் பற்றியே உனக்குத் தெரியலை பாஸ்கரன். சில அமானுஷ்யங்களை நீ நம்ப மாட்டேங்கறே. ரொம்ப சந்தேகப்படறே. உன் மூளை ரொம்ப சின்ன மூளை... மனுஷ மூளையே ரொம்ப சின்னது தான். சின்னதுன்னா வடிவத்துல சொல்லலை... சக்தியில சொன்னேன். இந்த மூர்த்தி விக்கிரகம் உனக்குத் தன் சக்தியைக் காட்டி பிரமிப்பைத் தரும்.

புத்தகம்கூட பார்த்திருப்பியே? நீ பெரிய பெரிய சாதனையை எல்லாம் செய்யப்போறே. அதுக்கு உதவத்தான் இது. அந்த சந்த்ரப்ரகாஷ் மாதிரி சதிகாரங்க உன்னை ஜெயிக்கக்கூடாது பார். அதுக்காகத்தான் அதை உனக்கு அனுப்பினேன்...''

''நீங்க அனுப்பினா...? நான் இதை ஆர்க்கியாலஜிகிட்ட ஒப்படைக்கப் போறேன். இதெல்லாம் சட்ட மீறலான விஷயங்கள். இதுக்கெல்லாம் நான் இடம் தரமாட்டேன்.''

''அவசரப்படாதே பாஸ்கரா. மிகப்பெரிய சாதனையைச் செய்யப் போற உனக்கு நான் சில வரம்புகளை மீறி உதவிகிட்டு இருக்கேன். அதை புரிஞ்சுக்கோ. இது ஒரு நாள் ஒரே ஒரு நாள் உன் வீட்ல இருக்கட்டும். அப்புறம் பார்.''



''ஒரு நிமிஷம்கூட இடம் தர மாட்டேன். நான் எந்த சாதனையையும் செய்யப் போறதில்ல. என்னை ஏன் இப்படி ஃபோர்ஸா மோடிவேட் பண்றீங்க. உங்ககிட்ட ஏதோ தவறு இருக்கு...''

''ஒரு தவறும் இல்ல.... தயவு செய்து என் பேச்சைக் கேள். அந்த விக்கிரகத்தை எடுத்துக்கிட்டு வீட்டுக்குள்ள போ. ஒரு விளக்கேற்றி அதன் முன்னால வை. பிறகு இங்க கிளம்பி வா, நான் மற்ற விஷயத்தை சொல்றேன்.''

- மீனாட்சிசுந்தரம் மறுமுனையில் தொலைபேசியைக் கத்தரித்துக் கொண்டார். பாஸ்கரனும் எரிச்சலுடன் திரும்பினான்.

''அமானுஷ்யமாம்... ஆட்டுக்குட்டியாம். நான்சென்ஸ். இந்த சிலையோட நேரா அவர் வீட்டுக்கே போறேன். என்னய்யா நினைச்சு கிட்டிருக்கீங்கன்னு கேக்கறேன்.'' - கத்திக் கொண்டே வெளியே வந்தான்.

துர்கா வெறித்தபடி இருந்தாள். அவளுக்குமேல் அவளது அப்பாவும், அம்மாவும்...

''என்ன தம்பி ஏதாவது பிரச்சினையா?''

''ஆமாம்... புதுசா பிரச்சினைகள், ஒரே குழப்பமா இருக்கு. ஒரு நிமிஷம் இந்த சிலையை திரும்ப பேக் செய்யணும். உதவி செய்யறீங்களா?''

''செய்து...''

''இதை அனுப்பினவர்கிட்டேயே கொண்டு போய் கொடுக்கப் போறேன்.''

''உங்க பிரச்சினை என்னன்னு தெரியாது. ஆனா ஒரு விஷயம் மட்டும் நான் சொல்லிக்க விரும்பறேன். வாசல் வரை வந்துட்ட இந்த தெய்வ விக்கிரகத்தை உள்ள கொண்டு போகாம திருப்பி அனுப்பாதீங்க.''

''என்ன சார் நீங்க... தெய்வ விக்கிரகம் அது இதுன்னுகிட்டு. எதுவா இருந்தாலும் முறைப்படி வரணும். இது அரசாங்கச் சொத்து. உங்களுக்கு விரிவா சொன்னாதான் புரியும். ஆனா அதுக்கு எனக்கு நேரமில்லை. ப்ளீஸ்.''

- பாஸ்கரன் கெஞ்சினான்.

"சரி தம்பி... குறைந்தபட்சம் நாங்களாவது இதை எங்க வீட்டுக்குள்ள கொண்டு போய் வைச்சு ஒரு விளக்கேற்றி வழிபட்டுட்டு அப்புறமா உங்க விருப்பப்படி நடந்துக்கறோமே..."

"என்ன சார் பைத்தியக்காரத்தனம் இது... இது ஒரு கல்சிலை. மனுஷன் தன் கலை உணர்ச்சியால செய்தது. அதுக்கு மேல இதுல பார்க்க எதுவும் இல்லை."

"இல்ல தம்பி... சரபேஸ்வரரை கல்லுல வடிக்கறதே சிரமம். சொன்னா கேளுங்க. அவசரப்படாதீங்க. இதோட சக்தி பற்றி உங்களுக்குத் தெரியாது."

- அவர் மீனாட்சிசுந்தரம் சொன்னதெல்லாம் ஒன்றுமில்லை என்கிற ரகத்தில் நம்பிக்கை வசப்பட்டு பேச அவர் மனைவியோ கைகளைக் கூப்பிக் கொண்டு நிற்கத் தொடங்கி விட்டாள்.

பாஸ்கரனுக்கு தான் வேறு எதாவது ஒரு புதிய உலகத்துக்குப் போய்விட்டோமோ என்பது போலகூடத் தோன்றியது. கைகளைப் பிசைந்து கொண்டான்.

"உங்க முட்டாள்தனத்துக்கெல்லாம் ஒரு அளவே இல்லையா?"- பலமாகவே கத்தினான். அதே சமயம் யானையின் பிளிறல் சப்தம் அவன் காதில் அசுரத்தனமாகத் தாக்கியது. வீதியில் அவன் பார்த்துவிட்டு வந்திருந்த அந்த யானையின் குரலோ? வெளியே ஓடிச் சென்று பார்த்தபோது பகீர் என்றது. அந்த யானை தும்பிக்கையில் ஒரு மாலையுடன் அவன் ஃப்ளாட்டின் ஃப்ளோர் முகப்பில் தயாராக நின்று கொண்டு பிளிறிக் கொண்டிருந்தது. பாகன் அங்குசத்தால் அதன் முன் தொடையில் அடித்து பின்னே போகச் சொல்லியபடி இருந்தான்.

"யோவ் என்னய்யா இது?"- துர்காவின் அப்பா பாகனைப் பார்த்துக் கேட்க. "என்னன்னே தெரியல சாமி. மாலைக் கடையில தொங்கிகிட்டிருந்த ஒரு மாலையை தும்பிக்கைல எடுத்துக்கிட்டு இங்க வந்து நின்னகிட்டு பிளிறுது.



திரும்புன்னா திரும்ப மாட்டேங்குது. இங்க யாருக்கோ அது மாலை போட விரும்பற மாதிரி தெரியுது..."

-பாகன் விளக்கமளித்து முடிக்குமுன் அந்த யானை ஃப்ளாட் காரிடாரில் கால் வைத்து நடக்க ஆரம்பித்தது. எல்லோரும் நாலாபுறமும் சிதறி ஓட, கழுத்து மணி சப்திக்க நடந்து ஃப்ளாட் முகப்பில் தெரிந்த சரபேஸ்வரமூர்த்தி விக்கிரகம் முன் போய் கச்சிதமாக நின்றது. தும்பிக்கை மாலையை பயபக்தியோடு அதன்மேல் போட கூட்டத்தில் பரவசமான பரவசம்.

"நான் சொல்லலை... நான் சொல்லலை..." துர்காவின் அப்பா பரவச வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறவராக கத்த, பாகனும் காதுவரை கண்களை விரித்துக் கொண்டு வெறிக்க, பாஸ்கரன் ஸ்தம்பிக்கத் தொடங்கியிருந்தான்.

இதைத்தான் அமானுஷ்யம் என்கிறார்களோ?

## 33

யானையின் செயல், கூடி இருப்பவர்களின் பரவசம் எல்லாமாக ஒருகணம் பாஸ்கரனை அப்படி தாம்புக்கயிற்றால் கட்டியது போல கட்டிப்போட்டது.

விக்கித்துப் போய் பார்த்தபடி இருந்தான்.

விஷயம் பரவத் தொடங்கியதில் வீதி ஜனங்கள் வேறு மளமளவென்று கூட ஆரம்பித்தார்கள்.

துர்காவின் அப்பா கருணாகரன் சுதாரிக்க ஆரம்பித்தார்.

"தம்பி... இப்படி பிரமிச்சு நின்னா, எப்படி? இதைத்தான் சரபேஸ்வரர் மகிமைன்னு சொன்னேன். பாருங்க கூட்டம் சேர்ந்துகிட்டே இருக்கு. முதல்ல விக்கிரகத்தை உள்ள கொண்டு போங்க...

இந்தாப்பா யாருப்பா இங்க யானைப்பாகன்?"

- ஒருவன் உடனே முன்னால் வர, அவன் கையில் ஒரு 50 ரூபாயை வைத்து ''யானையை கூட்டிக்கிட்டு போப்பா...'' என்றார்.

படாதபாடு பட்டுத்தான் யானையை பாகனும் கூட்டிச் சென்றான்.

விஷயத்திடம் காட்டுத் தீயை விட அதிகமான வேகம்.

''என்ன சார் இது அதிசயம்... இன்னிக்கு காலைல பேப்பர்ல தான் உங்களோட ஒரு பெரிய ஆராய்ச்சி பற்றி படிச்சோம். அடுத்து இப்ப இங்க ஒரு புல்லரிக்க வைக்கிற நிகழ்ச்சி. இந்த ஸ்வாமி சிலையும் பழைமையானதுதானா சார்...?''

- கூட்டத்தில் ஒரு வாசகர் கேட்க பாஸ்கரனிடம் தடுமாற்றம்.

''அது... அது... ஆமாம்! இது பாண்டியர் காலத்து சிற்பம். பராந்தக நெடுஞ்சடையனும், கடுங்கோன் பாண்டியனும் வழிபட்டதா சொல்வாங்க...''

''கிரேட் சார்... இப்ப இதை என்ன சார் பண்ணப் போறீங்க?''

''அது... அது... இனிமேல் தான் முடிவு செய்யணும்.''

''தம்பி பாஸ்கர் பேசினது போதும் - சிலையை ஒரு நாலு பேரா சேர்ந்து தொட்டுத் தூக்குங்க. கூட்டம் சேருது பாருங்க.''

- துர்காவின் அப்பா படபடத்தார். சொன்னபடி தூக்க முயல நாலுபேர் வந்து ஒத்தாசிக்க அந்த சரபேஸ்வர மூர்த்தி விக்கிரகம் விறுவிறுவென்று பாஸ்கரன் வீட்டுக் கூடத்தில் போய் சுவர் ஓரமாக நின்று கொண்டது.

எல்லோரும் கைகளைத் தட்டி விட்டுக் கொள்ள, துர்கா ஒரு குத்து விளக்கை வந்து திரி போட்டு ஏற்றியபடி எடுத்து வந்து அதன் முன் வைத்தாள்.

பாஸ்கரன் பிரமிப்போடு பார்த்துக் கொண்டு இருந்தான். நடந்து முடிந்ததை எப்படி டைட்டுப் பார்ப்பது என்றே தெரியவில்லை.



குழப்பம் கும்மியடித்தது.

திகைப்பு நெஞ்சில் கூடாரம் போட்டது.

ஊடே திரும்பவும் தொலைபேசி சிணுங்கல்.

''பாஸ்கரா நான் மீனாட்சிசுந்தரம் பேசறேன். கொஞ்சம் சீக்கரமா கிளம்பி வா. உனக்காக இங்க ஒரு பெண் காத்திருக்காங்க.''

''யார் சார்... எதுக்காக அவங்க காத்திருக்கணும்?''

''அட வாப்பா... அவசரப்பட்டு அந்த விக்கிரகத்தை அலட்சியப் படுத்திடாதே... ஆர்க்கியலாஜிக்கும் தகவல் தராதே. நீ தகவல் தந்தாலும் வந்து பார்த்து என்கொயரி பண்ணி அந்த அசைன்மென்டை எடுத்துக்க அங்க யாருமில்ல. ஏன்ன இன்னிக்கு, நாளைக்கு, நாளை மறுநாள் மூணு நாளும் கவர்மென்ட் ஹாலிடே.''

- மீனாட்சிசுந்தரம் பதில் சொல்வதுபோல கொஞ்சம் கிரங்கடிக்கவும் செய்தார்.

கதவு திறந்தே இருந்தது...

வெளியேயும் சில கார்கள்! ஆட்டோவில் வந்திறங்கிய பாஸ்கரன் சர்வத்தையும் பார்த்தபடி உள்ளே சென்றான். ஹாலில் மீனாட்சிசுந்தரமும் ஒரு பெண்ணும் அமர்ந்திருக்க சிலர் வெளியில் நின்றுகொண்டிருந்தனர். அருள்மொழி திரைச்சீலையை ஒட்டி நின்றபடி நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வா இப்படி உட்கார்... இவங்க பேர் சிவகாமி.''

''வணக்கம்.''

''வணக்கம்.''

''இவங்கதான் அந்த சரபேஸ்வர மூர்த்தி விக்ரகத்தை தவறாம வழிபட்டவங்க. நாம போனப்போகூட விளக்கு எரிஞ்சுக்கிட்டிருந்திச்சே - இவங்களாலதான்!''

''சரி அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா... அது ரொம்ப சக்தி வாய்ந்த சாமி சிலை சார். புரொபசர் அதை அங்க இருந்து எடுத்து உங்க வீட்டுக்கு அனுப்பிட்டார். எனக்கு ஒரே திகைப்பு. அதான் விசாரிக்க வந்தேன்.''

''சரி, நான் என்ன பண்ணணும்?''

''நீங்க ஒண்ணும் பண்ண வேண்டாம். அதை நான் எடுத்துக்கிட்டு போய் என் வீட்டுத் தோட்டத்துல கோவில் கட்டி வழிபட விரும்பறேன். அந்த சிலை விஷயத்தை பெரிசுபடுத்தி ஆர்க்கியாலஜிக்கும், கவர்மென்ட்டுக்கும் கவனத்தைக் கொண்டு போகாம எனக்கே அதை தந்துடுங்க.''

''சட்டத்துக்கு புரம்பா புரொபசர்தான் தப்பு பண்ணியிருக்கார்னா என்னையும் பண்ணச் சொல்றீங்களா?''

''அப்ப அதை எடுத்த இடத்துலயாவது கொண்டு போய் வெச்சுடுங்க.''

''புரொபசர் சார் இதுக்கு நீங்க தான் பதில் சொல்லணும். ஏன்னா அதை நான் அங்கிருந்து எடுத்துக்கிட்டு வரலை. ஆகையால கொண்டுகிட்டு போய் வைக்க வேண்டிய அவசியமும் எனக்கில்லை.''

''இதோ பார் பாஸ்கரா.. அதோட சக்தியை நீ புரிஞ்சுக்கணும்னுதான் நான் கொஞ்சம் ரிஸ்க் எடுத்து அதை உன் வீட்டுக்கு கொண்டு வந்தேன். இனி அது திரும்ப பழைய இடத்துக்கே போறதுல எனக்கு ஆட்சேபணை இல்லை.

அதே சமயம் இந்த பெண் மூலமா அதோட பிரதாபங்களை நீ தெரிஞ்சுக்கறது நல்லது.''

''ஆமாம் சார். அதை ஒரு ஜோசியர்தான் எனக்கு காட்டினார். அவருக்கு ஞானதிருஷ்டில தெரிஞ்சதா சொன்னார். அவர் எனக்கு காட்டின நாள்ல இருந்து நான் அவர் சொன்னபடி வழிபட்டுகிட்டு வரேன்.

எனக்கு தொழில்லயும், வியாபாரத்துலயும் பயங்கர போட்டியாளர்கள். சொத்து தகராறுனால எங்க பங்காளிகள் என் குடும்பத்துக்கே விஷம் வெச்சு கொல்லவெல்லாம் பார்த்தாங்க.



இப்ப அவங்க அவ்வளவு பேரும் அடங்கி ஒடுங்கிட்டாங்க. நான் இந்த ஸ்வாமிக்கு நம்பிக்கையா பூஜை மட்டும்தான் செய்தேன்.

நாம அதை வணங்க வணங்க அந்த சிலை ரூபத்திலிருந்து ஒரு சக்தி நமக்குள்ள நுழையுது. அதன் காரணமா நம்ம எண்ணம், பேச்சு எல்லாத்துலயுமே ஒரு அசாத்திய மாற்றம். நம்மை பார்க்கிறவங்களும் நம்மகிட்ட நல்லவிதமா நடந்துக்கறாங்க. இதெல்லாம் உண்மை சார். நீங்களும் பாருங்க. இனி பல ஆச்சரியங்களைச் சந்திப்பீங்க...''

- அந்தப் பெண்மணி சொல்லி முடித்தாள். பாஸ்கருக்கு தலையை வலித்தது. மயக்கம் வரும்போல கூட தோன்றியது. நல்ல பசி வேறு. தலையைச் சரித்தபடி அப்படியே நாற்காலியில் விழுந்தான். அருள்மொழிக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

''அப்பா அவருக்கு இப்ப கொஞ்சம் ரெஸ்ட் தேவை போல தெரியுதுப்பா'' என்றாள்.

அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் விலகிக் கொள்ள புரொபசர் மட்டும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அருள்மொழி அவரை சுடுவது போலப் பார்க்க, அவர் ''பாஸ்கரா முதல்ல சாப்பிடு - பிறகு பேசலாம்'' என்றார்.

அருள்மொழியும் உள்ளே ஓடினாள். பாத்திரங்கள் இடிபடும் சப்தம் கேட்கத் தொடங்கியது. பாஸ்கரன் நிமிர்ந்தான்.

''புரொபசர் சார் என்னை ஏன் இப்படி சித்ரவதை பண்றீங்க?'' - அழாத குறையாகக் கேட்டான்.

''சித்ரவதையா...? என்னப்பா சொல்றே?''

''என் மேல நீங்க ஒவ்வொரு விஷயமா திணிக்கிறீங்க ஏன்?''

''இல்ல பாஸ்கரா... இது திணிப்பு இல்ல. எல்லாம் என் கடமை. என்னை நம்பு.''

''அங்கதான் எனக்கு குழப்பமே. நான் கல்தூண் மாதிரி திடமானவன். ஆனா என்னையே அசைச்சுட்டீங்க. உங்களுக்கு என்ன வேணும்?''

''முட்டாள்... நீ பெரிய சாதனை செய்யப் போறே? மதங்கனி சித்தர் தன் ரசவாதத்தால செய்த தங்க மீனாட்சியை ஒரு புத்த மதத்தை தழுவின அரசன் புத்தரா மாற்றினான். ஒரு ஆச்சரியம் போல அந்த சிலையில இரண்டு உருவங்களுமே இருந்தது. ஆமா. முன்னால இருந்து பார்த்தா மீனாட்சி. பின்னால இருந்து பார்த்தா புத்தர். இது நான் கஷ்டப்பட்டு சேகரிச்ச வரலாற்றுத் தகவல். இதை பூர்வ ஜென்மத்துல பதுக்கி வெச்சவன் நீ. அதுக்கு காவல் பல நூறு சமண சன்யாசிகளோட ஆவிகள். அதனாலதான் அது இருக்கிற இடம் தெரிஞ்சும் என்னால எடுக்க முடியலை. இந்த விஷயத்துல என்னோட அந்த சந்த்ரப்ரகாஷ் போட்டி போட்டான். ஆனால் அவனை நான் வணங்கற தெய்வங்கள் முன்னே விடலை. இப்பகூட ஃபுட் பாய்சன் தாக்கி ஆஸ்பத்திரியில தான் இருக்கானாமே...?''

''நோ புரொபசர் சார். நீங்க சொல்ற எல்லாமே கட்டுக்கதை. அசகாய புருடா. இந்த ஆவி பூதம் எல்லாம் இந்த இன்டர்நெட் யுகத்தோட சூப்பர் பம்மாத்து... ''

''ஓஹோ. அப்ப எதனால் சமணப்பட்டி மலைக்குப் போற அத்தனை பேரும் தற்கொலை செய்துக்கறாங்களாம்?''

''அதெல்லாம் ரொம்ப தற்செயலான விஷயங்கள். நானும் தான் போனேன். என் வாசகன் சக்திவேலும் வந்தான். அவனோட அவன் அத்தை மகளும் போயிருக்கா. எங்க யாருக்கும் எதுவும் ஆகலையே...?''

''மூணு பேருக்கு அதுல விதி விலக்கு இருக்குங்கறதுதான் கல்வெட்டு பாட்டு.''

''என் பினாத்தல் சார் இது. அந்தப் பாட்டெல்லாமும் ஒருவித செட்டப்.

அதுல இருக்கற மூணு பேர் நான், சக்தி, அருள்மொழி... அதுல எங்க இருந்து சக்திவேல் அத்தை பொண்ணு



மகேஸ்வரி வந்தா? இப்ப சொல்றேன் அவளோட சக்திவேல் போனதே யாருக்கும் தெரியாது. அவ கல்லுக் குண்டாட்டம் நல்லாதான் இருக்கா.''

''இருக்க முடியாது. செத்துப் போயிருக்கணும் அவ! இப்பவும் சொல்றேன். நீங்க மூணு பேர்தான் அங்க போக முடியும். அதை எடுக்க முடியும். அதுக்கான நாளும் நெருங்கிட்டிருக்கு. பூர்வஜென்மத்துல ஒரு புத்த பௌர்ணமி அன்னிக்குதான் நீ அதை பதுக்கினே. அதே பௌர்ணமில வெளிய எடு. உன் மூலமா அந்த விக்கிரகம் எட்டாவது அதிசயமா காட்சி தரட்டும். உலகப் புகழ் இதனால உனக்கு இருக்கு. அதுமட்டுமில்ல ஒரு பூர்வஜென்ம கதையையும் இந்த உலகம் தெரிஞ்சுக்கட்டும். எல்லாம் விஞ்ஞானம்கற ஒருவித நாகரீக மாயை இதனால கட்டுப்படும். பக்தியும், ஆன்மீகமும் வளர்ச்சி அடையும். இதுக்காகத் தான் நான் பாடுபட்றேன்.''

- புரொபசர் நரம்பு புடைக்க கத்திவிட்டு நிமிர்ந்து மகளைப் பார்த்தார். அவள் போதும் என்கிற மாதிரி கையெடுத்துக் கும்பிட்டாள்.

பாஸ்கரன் தலையை உசுப்பி விட்டுக் கொண்டான்.

''சரி சார்.. நீங்க சொல்றதெல்லாம் உண்மையா இருந்தா நான் ஏன் இவ்வளவு தூரம் இந்த விஷயங்களை சந்தேகப்படணும். அந்த பூர்வஜென்ம ஞாபகம் எனக்கு தானா ஏற்பட வேண்டியதுதானே?''

''அதுக்கு எனக்கு பதில் சொல்லத் தெரியலை. இதே பார் தெளிவா சட்டுன்னு ஒரு முடிவுக்கு வா. நான் என்ன உன்னை கொலையா பண்ணச் சொல்றேன்? ஒரு சிலை இருக்கு, எடுத்துக் கொடுன்னு தானே சொல்றேன். உனக்கு பேரும் புகழும் கிடைக்கத்தானே பாடுபட்றேன். அது இருந்தா நான் சொன்னதெல்லாம் உண்மை - இல்லேன்னா பொய்னு போய்க் கிட்டே இரு.''

-மீனாட்சிசுந்தரத்தின் அந்தப் பேச்சு மட்டும் அவனை கொஞ்சம் கட்டிப்போட்டது. அதே சமயம் அவனை மேலும்

கட்டிப் போடுகிற மாதிரி ஒரு தகவலுடன் வீட்டு வாசலில் ஆட்டோவில் வந்த நின்றாள் துர்கா. அவள் கையில் ஒரு தந்தி.

''என்ன துர்கா... என்ன இது தந்தி?''

''உங்ககூட இருக்கிற சக்திவேலுக்கு வந்திருக்கு. அவர் முறைப் பொண்ணு மகேஸ்வரி போன வாரம் விஷம் குடிச்சு தற்கொலைக்கு முயற்சி செஞ்சாங்களாம். காப்பாத்த போராடி பலனில்லாம நேத்து இறந்துட்டாங்களாம். அவரை கிளம்பி வரச் சொல்லி தந்தி வந்திருக்கு. அதான் ஒரு யூகமா நீங்க இங்கதான் இருப்பீங்கன்னு நினைச்சு வந்தேன்.''

-பாஸ்கரனின் பின் மண்டையில் சொடேல் என்று ஒரு அடி விழுந்த மாதிரி இருந்தது.

## 34

துர்கா கொண்டு வந்திருந்த தந்தியின் சேதி பாஸ்கரனை அதிர்ச்சிக்குள்ளாக்க, அதைப் பார்த்த மீனாட்சிசுந்தரம் அந்தத் தந்தியை வாங்கி தானும் பார்த்தார்.

அவர் கண்களும் அகண்டு விரிந்தன. சில நொடிகளுக்குப் பேச்சேவரவில்லை.

இடையில் சூர்யாவும் அருள்மொழியும் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்.

''அப்பா. என்னப்பா ஏன் இரண்டு பேரும் பேச மாட்டேங்கறீங்க?'' அருள்மொழி அவர்களின் மௌனத்தைக் கத்தரித்தாள்.

''என்னம்மா பேச... இனி பேச வேண்டியதெல்லாம் பாஸ்கரன் தான்.'' - மீனாட்சிசுந்தரம் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலப் பேசினார்.

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை சார்.

''நீ எதுவும் சொல்லாதே. இனியாவது என் பேச்சைக் கேள்.''



-மீனாட்சி சுந்தரம் கட்டளையிடுகிற மாதிரி சொன்னார். பாஸ்கரன் அவரை வெறித்தான்.

''வெறிக்காதே.. என் பேச்சைக் கேளு.. ஆமாம் இப்ப அந்த சக்திவேல் எங்க இருக்கான்?''

''ஹாஸ்பிடல்ல சந்த்ரப்ரகாஷுக்கு காவலா இருக்கான்.''

''முதல்ல போன் போட்டு அவனுக்கு விஷயத்தைச் சொல். அவனைக் கிளம்பிப் போகச் சொல்லு. ஆமா எந்த ஆஸ்பத்திரி?''

''டாக்டர் ரங்கநாத்தோட எம்.ஆர். டிஸ்பென்சரிலதான் இருக்கான்.''

''அருள் போன் போடு... சக்திவேல்கிட்ட விஷயத்தைச் சொல்.''

-அருள்மொழி தலையை ஆட்டினாள். தொலைபேசியைத் தொட்டு சக்திவேலைக் கூப்பிட்டு தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்லிவிட்டு அவனைப் புறப்பட்டுப் போகச் சொன்னாள்.

இடையில் புகுந்து ரிசீவரை வாங்கிய பாஸ்கரன் சக்திவேலுடன் பேசத் தொடங்கினான்.

''சக்தி நீங்க புறப்படுங்க. ஆமாம் சந்த்ரப்ரகாஷ் எப்படி இருக்கார்?''

''நடுவுல கொஞ்சம் நினைவு திரும்பிச்சு சார். அப்ப அவர் வீட்டு முகவரியைக் கேட்டு வாங்கிட்டோம். செஞ்சிக் கோட்டைல இருக்கிற அவங்க ஃபேமிலிக்கு தகவல் கொடுத்திருக்கேன்.''

''நல்லது. நீங்க புறப்படுங்க!''

''இல்லை சார். நான் போகப் போறதில்ல!'' சக்திவேலிடம் இருந்து மாறுபட்ட பதில்.

''ஏன் சக்தி... நீங்க போய்த்தான் தீரணும்!''

''இல்ல சார்... நான் போய் ஆகப் போறது ஒண்ணுமில்லை. செத்தவளுக்கு உயிர் திரும்ப வந்துடவா போகுது?''

''நோ... நீங்க போகலேன்னா நல்லா இருக்காது. கஷ்டப்பட்டு தந்தி கொடுத்திருக்காங்க. போய் துக்கம் கேக்கறதுதான் நாகரீகம்.''

''இல்ல சார்.. போனா என்னால சும்மா இருக்க முடியாது. அவளை கரட்டுக்கு கூட்டிக்கிட்டு போனது நான்தான். என்னோட தப்புதான் அவளோட உயிரை வாங்கிடிச்சி. என் மாமா அதைப் பத்தி எல்லாம் கேப்பார். ரொம்பவும் ரசாபாசமாயிடும். நான் போக விரும்பலை.

ஆமா நீங்க என்ன சார் முடிவு செய்திருக்கீங்க?''

''நான்... நான்...''

''சார் இனியும் நீங்க யோசிக்கறது நல்லது இல்லை. நடக்கற ஒவ்வொரு சம்பவமும் உங்களை யோசிக்காதீங்கன்னு தான் சொல்லுது.

அந்த கரட்டுக்குப் போய் அந்த சிலையை எடுத்துட்டா எல்லாம் சரியாயிடும் சார்.''

''என்ன சக்தி சொல்றீங்க?''

''ஆமாம் சார்... அந்த விக்ரகம் அங்க அடங்கி இருக்கறதால தான் இந்த மாதிரி எல்லாம் நடக்குது. அதை வெளிய எடுத்து பூஜிக்க ஆரம்பிச்சுட்டா அந்தக் கரட்டுல திரியற ஆத்மாக்களுக்கு சாந்தி ஏற்பட்டுடும். அப்புறமா இப்படி எல்லாம் எதுவும் நடக்காதுன்னும் மலை கல்வெட்டுக் குறிப்பு சொல்லுது.''

''அதை எல்லாம் அன்னிக்கு நான் பாக்கலையே?''

''எங்க சார்... அவசர அவசரமா போனோம். பாத்தோம். வந்தோம். இப்ப போனா எல்லாத்தையும் பாக்கலாம். அப்ப நீங்க நான் சொல்றதையும் ஏத்துக்குவீங்க.''

''சரி சக்தி.. அதுவும்தான் என்னன்னு பாத்துடுவோமே...''

''ரொம்ப நன்றி சார்... அப்ப நாம எப்ப சார் கிளம்பறோம்?''

''நாளைக்கு ராத்திரி அந்த கரட்டுக்குப் போகலாம். இடையில எனக்கு சில வேலைகள் இருக்கு. முடிச்சுட்டு வந்துட்றேன்.''



''அதுவும் சரி சார். அதுக்குள்ள சந்த்ரப்ரகாஷ் ஃபேமிலில இருந்தும் யாராவது வந்துடுவாங்க. அவங்க சந்த்ரப்ரகாஷ் சாரைப் பார்த்துக்குவாங்க.''

''சரி.. அவங்க வந்ததும் நீங்க கிளம்பி வாங்க.''

-ரிசீவரை வைத்துவிட்டு திரும்பினவனை மீனாட்சிசுந்தரம் மலர்ந்த முகத்தோடு பார்த்தார்.

''அப்ப நாளைக்கு போறோமா பாஸ்கரன்?''

''ஆமாம் சார்.''

''குட். வெரிகுட்!''- அவர் பார்வை அப்படியே துர்கா பக்கம் திரும்பியது.

''உனக்கு ரொம்ப தேங்க்ஸ்மா. சமயத்துக்கு வந்து என் சிக்கலைத் தீர்த்துட்டே. அருள் அந்த பொண்ணுக்கு சாப்பிட ஏதாவது கொடு.''

''பரவாயில்லிங்க.. நான் புறப்படறேன்...'' - துர்கா சொல்லிக் கொண்டு பாஸ்கரனைப் பார்த்தாள்.

அவனும் 'போய் வா' என்கிறாற் போல் அவளைப் பார்த்தான். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவள் புறப்பட்டுப் போனாள்.

இலை போட்டு சாப்பாடு போடும்போது அருள்மொழியிடம் உறைந்தது போல மௌனம். பாஸ்கரனும் ஏதோ பெயருக்குச் சாப்பிட்டான்.

''நல்லா ருசிச்சு சாப்பிடு பாஸ்கரன். உனக்காக அருள் ரொம்ப சிரமப்பட்டு சமைச்சிருக்கா பார்...'' - மீனாட்சி சுந்தரம் நிமிண்டி விட்டார்.

அவளிடம் பதிலே இல்லை.

''நாளைக்கு நாம ஒரு மூணு மணியைப் போல கிளம்புவோம். சமணப்பட்டி ஸ்டேஷன்ல இறங்கி அங்க இருக்கற ரெஸ்ட் ரூம்ல தங்குவோம். ராத்திரி ஒரு பத்து மணி ஆன பிறகு ரகசியமா நீ, அருள்மொழி, சக்திவேல் மூணு பேரும் புறப்பட்டு கரட்டுக்குப் போங்க. உங்களுக்கு நான் ஒரு

வயர்லெஸ் போன் தரேன். அது பத்து கிலோமீட்டர் தூரத்துக்கு வேலை செய்யும். நான் அடிவாரத்துல இருந்துஉங்களோட பேசிக்கிட்டே இருப்பேன்.

அங்க பேசக்கூடிய ஒரு மஞ்சினிங்கற விக்ரகம் இருக்கு. தலை இல்லாத அதன் முண்ட உடல்ல தலையை எடுத்து கச்சிதமா பொருத்து. அப்ப அதோட பார்வை எதை நோக்கி இருக்குன்னு பார். அது பார்க்கற இடத்துலதான் சிலை இருக்கற இடத்துக்கான குறிப்பு இருக்கு.

இன்ஃபாக்ட் அந்த சிலை பேசுமாம்! ஆனா வளர்பிறை நாட்கள்ல மட்டும்தான் பேசும். தேய்பிறைல அது பேசாதாம். நாளைக்கு தேய்பிறை பொழுதுதான். ஆகையால அது பேசற பேச்சை கேட்க முடியாது.

இருந்தாலும் பாதகமில்லை. உன் விருப்பப்படி ஒரு ஹேண்டி வீடியோ காமிராவால் எல்லாத்தையும் படமும் பிடிச்சுக்கோ. இது ரொம்ப ரொம்ப முக்கியம். நீ எடுக்கப் போற படம் எல்லா டி.வி.யிலயும் வந்து உலகத்தையே பரவசப்படுத்தணும். அப்படியே அந்த விக்ரகம் வசப்பட்டதும் எங்கூட பேசு அதன்பிறகு நான் மேலே ஏறி வரேன்.''

''ஏன் சார்... முதல்லயே எங்ககூட வந்தா உங்களுக்கு ஏதாவது ஆயிடுமா?''

''பின்னே.. அந்த சிலை வெளிப்படாத வரை, அதை நீ எடுத்து முடிக்காதவரை அந்த மலைல நிலவற சன்னியாசிகளோட சாபப்படி யார் அங்க போனாலும் செத்துதான் தீரணும்.''

''எடுத்துட்டா மட்டும் எல்லாம் சரியாயிடுமா?''

''ஆமாம். அப்படித்தான் அங்க இருக்கற கல்வெட்டு சொல்லுது.''

-மீனாட்சிசுந்தரம் சொல்ல பாதிச் சாப்பாட்டில் எழுந்த நின்றான் பாஸ்கரன்.

''ஏய் என்ன எழுந்திட்டே...?''



''ஒண்ணுமில்லை சார்... எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. நான் புறப்படறேன்.''

- பாதிச் சாப்பாட்டில் கை கழுவத் தொடங்கினவனை அருள்மொழி ஈரப் பார்வை பார்த்தாள். தொடர்ந்து சாப்பிடச் சொல்லி வற்புறுத்த அவளால் முடியவில்லை.

பார்த்துக் கொண்டே நின்றாள்.

அவன் விறுவிறுவென்று வெளியேறத் தொடங்கினான்.

''பாஸ்கர் இப்ப நீ எங்க வேணா போ. ஆனா நாளைக்கு மதியம் நாம புறப்பட்றோம். அதை மறந்துடாதே!''

- அவன் நின்ற நிலையில் தலையை ஆட்டினான்.

''போட்டுக் குழப்பிக்காதே.. உன் எழுத்து வேலையை கவனி. அதுக்கு முந்தி உனக்கு ஒரு முக்கியமான விஷயம்.''

- அவன் திரும்பிப் பார்த்தான். மீனாட்சிசுந்தரம் எழுந்து பீரோ அருகே சென்றார். திறந்து உள்ளே இருந்து ஒரு நோட்புக்கை எடுத்தார். அவனை நோக்கி நீட்டினார்.

''என்ன சார்...?''

''இதைப்படி... இது ஒரு கதை. இதைப் படிச்சா நீ குழம்பமாட்டே தெளிவாயிடுவே.''

- அவனும் அதை வாங்கிக் கொண்டான். புறப்பட்டான். அவன் தலை மறைந்திருக்கும். அருள்மொழியிடம் ஆக்ரோஷம்.

''அப்பா நீங்க இப்படி அவரை ஃபோர்ஸ் பண்றது கொஞ்சமும் நல்லா இல்லை.''

''அருள்... போய் வேலையைப் பார். அதிகட்சம் 48 மணி நேரம் தான். அப்புறம் எல்லாம் சரியாயிடும்.''

''ஆமாம். நான் தெரியாமத்தான் கேக்கறேன். அந்த சிலை இருக்கறது நிஜமாப்பா?''

''இல்லாமலா நான் இவ்வளவு மெனக்கெட்றேன்?''

''சரி.. அதை எங்களைத் தவிர யாராலயும் எடுக்க முடியாதுங்கறதும் உண்மையா?''

''இந்தக் கேள்வியை நீ மூணாவது முறையா கேக்கறே?''

''ஆனா ஒரு தடவை கூட நீங்க தெளிவா பதில் சொல்லலையே...?''

''இப்ப சொல்றேன். உங்களைத் தவிர யாராலயும் அதை எடுக்க முடியாது...''

''இவ்வளவு விஷயங்களைச் சேகரிச்சு சொல்ற உங்களாலயுமா?''

''யாராலயும் முடியாதுன்னா, அதுல நானும்தானே இருக்கேன்?''

''எப்படிப்பா... எப்படி? வெளிய யார் கிட்டேயாவது சொன்னா இதை நம்புவாங்களா?''

''கஷ்டப்பட்டு நான் கண்டு பிடிச்சிருக்கிற இந்த உண்மைகளை நான் எதுக்கு வெளிய சொல்லணும்?''

''இல்ல... இதெல்லாம் உண்மையே இல்லை. உங்களை ஒரு கூட்டம் மிரட்டி வேலை வாங்கிக்கிட்டு இருக்கு. நீங்க அவங்க சொல்றதை செய்யறீங்க. அவங்க யார்... எதுக்கு உங்க மூலமா பாஸ்கரன் உதவியை அவங்க கேக்கறாங்க?''

''அருள்மொழி... அதிகபட்சம் 48 மணி நேரம் பொறுத்துக்கோ. சிலை கிடைக்கட்டும். உனக்கு எல்லா கேள்விகளுக்கும் விடை தெரிஞ்சிடும்.''

''சரி.. இதை ஏன் ரகசியமா செய்யணும். எல்லா பத்திரிகையாளர்களையும், டி.வி.காரங்களையும் கூப்பிடுங்க. அவங்க கீழ காத்திருக்கட்டும். மேல நாங்க போய் முயற்சி செய்யறோம். ஒரு லைவ் ஷோவாவே இதை டெலிகாஸ்ட் பண்ணலாமே?''

''இடியட்... பாஸ்கரன் ஒரு பெரிய கண்டுபிடிப்புல இருக்கான்கறது மட்டும்தான் வெளிய தெரியணும். ஆனா அது எங்க எதுக்கு எப்படிங்கற எதுவும் சிலை வெளிப்பட்ற வரை வெளிய தெரியக்கூடாது.

ஆர்வக் கோளாறுல யாராவது அந்தக் கரட்டுக்கு முன்னாலயே போனா அவங்க நிலை என்னாகும்னு யோசிச்சு பார்த்தியா?''



அருள்மொழி மீனாட்சிசுந்தரத்தின் கேள்வி முன் மடங்கிக் கொண்டாள். கழுத்தில் வியர்வை வடிய ''எனக்கு பயமா இருக்குப்பா... நாம எந்தக் காலத்துல வாழறோம்னே தெரியலப்பா...'' என்றாள்.

''வெரி சாரி பேபி... இதுக்கு மேல எதையும் பேசாதே. அப்புறம் நான் மறுபடியும் மிருகமாயிடுவேன்.''- என்று கத்திவிட்டு கண்ணாடிக் கிண்ணத்தைக்கூட தேட பொறுமை இல்லாதவாராக அப்படியே வாயில் கொட்டிக் கொள்ளத் தொடங்கினார். அருள்மொழியின் கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

பாஸ்கரன் கதவைத் தட்டியது அவனது ஆப்த நண்பன் சந்தான கிருஷ்ணனின் வீட்டுக் கதவை!

''வாடா... எங்க இவ்வளவு தூரம்?'' சந்தான கிருஷ்ணனும் சிகரெட்டும் கையுமாக வரவேற்பு முகமன் வாசித்தான்.

உள்ளே நுழைந்தவன் ஒரு நிமிடம் சந்தான கிருஷ்ணனின் வீட்டை ஒரு நோட்டம் போட்டான்.

ஓவல் ஷேப் கொண்ட டி.வி. திரை. அதன் மேல் குருவிக்கூடு. காய்ந்த பனம்பழக்கொட்டைகளில் அரக்கன் தலை. அது அங்கும் இங்குமாக சுவற்றில்...

விளக்குகள் மூங்கில் கூடைக்குள் எரிந்து கொண்டிருக்க அதன் இண்டு இடுக்கில் வெளிச்சப் பீற்றல்கள்.

சோபாவுக்கு பதிலாக தரைக்கு மேல் சேட்ஜீக்களின் நகை அடகுக்கடை போல மெத்தை திண்டுகள். ஜன்னலோரமாக ஒரு மீன் தொட்டி. அதில் மீனுக்கு பதிலாக ஆமைக் குஞ்சுகள்!

யார் வீட்டுக்குள் வந்தாலும் ஒரு க்ஷணம் நெஞ்சு எகிறும். அப்படி ஒரு வித்தியாசமான டேஸ்ட் சந்தானகிருஷ்ணனுக்கு.

ஆயிரம் பேர் வேலை பார்க்கும் ஒரு எஞ்சினியரிங் இண்டஸ்ட்ரியின் எச்.ஆர்.டி. பிரிவின் ஜெனரல் மேனேஜர். மனங்களைக் கூறு போட்டுப் பார்ப்பது, கேரக்டர்களை இனம் பிரிப்பது இதெல்லாம்தான் அவன் உத்தியோகம்.

விசித்திரமான மீசை இல்லாமல் தாடி வளர்த்துக் கொண்டு பார்ப்பவர்களை அதிர விடுபவன். கடைத் தெருவுக்கும், சினிமாவுக்கும் நாமெல்லாம் சைக்கிளிலோ, பைக்கிலோ போய் வந்தால், இவன் மட்டும் குதிரை மேல் அமர்ந்து போய் வருவான்.

பிறரை தன்னை நோக்கித் திருப்புவதிலும் அவர்களைக் குழப்புவதிலும் கில்லாடிக்குக் கில்லாடி...

இந்த உலகம் மனித வாழ்க்கைக்கு ஒரு சட்டம் போட்டு வைத்திருக்கிறது. அதை உடைத்துக் கொண்டு வாழ்வதில் சந்தான கிருஷ்ணனுக்கு எதனாலோ கொள்ளைப் பிரியம்.

மொத்தத்தில் வித்தியாசத்தின் இன்னொரு பெயர்தான் சங்க்கி! (சுருக்கமாக அப்படித்தான் கூப்பிடுவார்கள்.)

''சங்க்கி உன்கூட நிறைய பேசணும்டா...'' - பாஸ்கரன் மெத்தை திண்டில் படுத்தபடி பேச்சை எடுக்க. ''சொல்லு'' என்றபடி அருகில் அமர்ந்த கொண்டான் சங்க்கி.

''கேள்விப்பட்டிருப்பியே...''

''உம்... ஏதோ ஆராய்ச்சியெல்லாம் பண்ணிக் கிட்டிருக்கியாமே...?''

''இல்லடா... நான் ஒரு எழவும் பண்ணலை. ஆனா பண்ணாமலே இவ்வளவு தூரத்துக்கு விஷயங்கள் பரவியிருக்கு...''

''என்ன... யாராவது உன்னை மோடிவேட் பண்றாங்களா?''

சங்க்கி எப்படி அத்தனை சீக்கிரமாக அந்தக் கேள்விக்கு வந்தான் என்பது தெரியவில்லை. பாஸ்கரன் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

''உம்... கமான்... ஸ்பீக்...''

''என் வாழ்க்கையே கொஞ்ச நாளா மாறிப் போச்சு. நம்ப முடியாத, லாஜிக்கே இல்லாத விஷயங்கள் நடக்கற ஒரு கதை மாதிரி ஆயிடிச்சுடா லைஃப்.''



''அப்ப நீ யாருக்கோ ரொம்பதான் தேவைப்பட்றேன்னு சொல்.''

''எப்படி இப்படி பட்டு பட்டுன்னு சொல்றே?''

''அஞ்சும் மூணும் எட்டு மாதிரி இது ஒரு சாதாரண விடை. உம், மிச்சத்தை சொல்.''

''நான் இதுவரை எதுக்கும் பயந்தது இல்லை. அச்சமே நரகம்கறது என் பாலிசி. ஆனா நான் இப்ப ரொம்ப பயப்பட ஆரம்பிச்சிருக்கேன். ஆமா, அமானுஷ்யம் பத்தி என்ன நினைக்கறே?''

''யு மீன் பிளாக் மேஜிக்...?''

''இல்ல... அமானுஷ்யம் வேற! பிளாக் மேஜிக் ஒரு தந்திரம். அமானுஷ்யம் அப்படி இல்லை. அதாவது இப்ப நீயும், நானும் இங்க ஒரு கடவுளைப் பார்க்கறோம்னு வை.''

''எப்படி.. தமிழ் சினிமாவுல வர்ற மாதிரி பயங்கர மேக்அப் போடயா?''

''வெச்சுக்கோ.. இல்ல நாம ஒரு அதிசயமான விஷயத்தைக் கண்ணால பாக்கறோம்னு வை...''

''நீ அமானுஷ்யத்துக்கு சரியான பொருள் சொல். அப்புறமா கேள்வி கேள்.''

- சங்க்கி எனும் சந்தான கிருஷ்ணன் மடக்கிவிட்டு மல்லாக்கப் படுத்துக் கொண்டு ஒரு ரப்பர் பந்தை கூரை நோக்கி எறிந்து எறிந்து திரும்பப்பெற பாஸ்கரனும் எப்படி விளக்கமளிப்பது என்பது புரியாமல் திணறும்போது ஜன்னலுக்கு வெளியே ஒரு உருவம் தெரிந்தது! அதை பாஸ்கரன் கவனிக்கவில்லை. அவன் சங்க்கியோடு பேசுவதை ஊர்ஜிதம் செய்து கொண்ட அந்த உருவத்துக்குரியவன் சற்று நகர்ந்து செல்ஃபோனைத் தட்டி யாரோடோ பேச ஆரம்பித்தான்.

''சார்... பாஸ்கரன் இப்ப சங்க்கிங்கிற ஒரு மெண்டல் ஆபீசர்கிட்ட பேசிகிட்டிருக்கார். இந்த ஆள் ஒரு லூசாட்டம் தெரியற பயங்கர புத்திசாலி!''

''அப்படியா?'' - மறுமுனையில் ஒரு விதமான அங்கீகாரம்!

# 35

செல்ஃபோனில் உளவு சொன்னவன் திரும்பவும் ஜன்னல் அருகே வந்து நின்று கவனிக்கத் தொடங்கினான்.

உள்ளே பாஸ்கரனுக்கும், சங்கி என்னும் சந்தானகிருஷ்ணனுக்கும் விவாதம் தொடர்ந்து கொண்டிருந்தது. அது எது அமானுஷ்யம் என்பதில் மையம் கொண்டிருந்தது.

''என் வரைல மனித சக்தியால முடியாத விஷயங்கள் எல்லாமே அமானுஷ்யம்தான்...'' - பாஸ்கரன் விளக்கிக் கொண்டிருந்தான்.

''சரி... மனித சக்தியை நீ எவ்வளவு தூரத்துக்கு தெரிங்சு வெச்சிருக்கே?'' இது சங்க்கி.

''எவ்வளவு தூரத்துக்குன்னா...? நிலாவுல கால வைக்கிற அளவு, செவ்வாய் கிரகத்துல தண்ணி இருக்குன்னு கண்டுபிடிக்கற அளவு, உள்ளங்கைக்குள்ள அடங்கிட்ற செல்ஃபோன் மூலமா கண்டம் விட்டு கண்டம் கூட பேச முடிஞ்ச அளவு...''

''போதும் போதும்... இதெல்லாம் சரி- ஆமா, ஒரு விதை நெல்லை அதாவது ஒரு மைப்பொட்டு அளவு கூட இல்லாத மிகச் சின்ன விஷயத்தை ஏன் இந்த மனுஷனால கண்டுபிடிக்க முடியலை?''

- சங்க்கி தன் குடுமிச்சடை முடியை ஒரு மாதிரி நீவிக் கொண்டே கேட்கவும். பாஸ்கரனுக்கு சிரிப்புத்தான் வந்தது. அத்தோடு கேள்வியும்...

''சங்க்கி நீ மனுஷ சக்தியைப் பத்தி பேசும்போது அதுல ஏன் இயற்கையை கலக்கறே?''



''அப்ப இயற்கை வேற- மனுஷன் வேறயா?''

''இல்லையா பின்னே... ஆமா அமானுஷ்யம் பத்தி கேட்டுட்டு எதுக்கு இப்படி வேற விஷயம் பேசறோம்?''

''வேற விஷயம் ஒண்ணும் பேசலை. சரியாதான் பேசிகிட்டிருக்கே. லுக்டா... மாயமந்திரச் செயல்களைத்தான் இந்த உலகம் அமானுஷ்யம்னு சொல்லுது... ஆனா அது உண்மை இல்ல. மனுஷ சக்தியோட பல பரிமாணங்களை இந்த உலகம் இன்னும் பாக்கவே இல்லை. கூடு விட்டு கூடு பாஞ்ச விக்ரமாதித்தன், தன் இரைப்பையை தன் வாயாலேயே வெளியே எடுத்து கழுவி சுத்தம் செய்துகிட்ட ஷீரடி சாய்பாபா, ஒரு இடத்தில் இருக்கும்போதே தென்பட்ட சித்தர்கள் இவங்கள்லாம் மனுஷ சக்தியோட வித்யாசமான பரிமாணங்கள்.''

''சரி எதுக்கு இந்த விளக்கம்?''

''அமானுஷ்யம் இந்த உலகத்துல இப்பவும் இருக்கு. நாம அதை எப்படி புரிஞ்சுக்கறோம்கறதுதான் கேள்வி. நீ சொன்ன விஷயங்களை கூட்டிக் கழிச்சு பார்த்தப்போ உனக்கு அமானுஷ்ய அனுபவம் ஏற்பட நிறைய வாய்ப்பு இருக்குன்னுதான் தோணுது.''

''என்ன சங்க்கி.. யாரோ என்னை மோடிவேட் பண்றாங்க. யாருக்கோ நான் தேவைப்பட்றேன்னு கொஞ்சம் முந்திதான் சொன்னே... இப்ப இப்படி சொல்லி குழப்பறியே...''

''குழப்பலை... ஒரு விஷயத்துக்கு முந்நூற்றி அறுபது கோணங்கள். அதுல ஒரு கோணத்துலதான் அந்த விஷயத்தோட முழுப்பரிமாணத்தை புரிஞ்சுக்க முடியும். ஆகையால எல்லா கோணங்களையும் பாக்கணும். நான் முன்ன சொன்ன கருத்து விஞ்ஞான பூர்வமா சிந்திக்க சொன்னது. ஆனா இப்ப சொன்ன கருத்து அனுபவத்தின் அடிப்படையில சொன்னது.''

''அப்ப இந்த விஷயத்துல மனித அறிவுக்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட விஷயம் இருக்குன்னு சொல்றியா?''

''இருக்கலாம்னு தான் சொல்றேன்.''

''அப்படின்னா நான் என் முந்தைய பிறப்புகள்ள பாண்டியனா, பல்லவனா இருந்து இப்ப பாஸ்கரனா ஜனிச்சிருக்கேனா?''

''இருக்கலாம்...''

''சமணப்பட்டி பெருமாள் மலை கரட்டுல சமண சன்யாசிகள் ஆவி சுத்திகிட்டிருக்குன்னும் அது அந்த மலைமேல ஏறி வர்றவங்க மனசுல புகுந்து தற்கொலைக்குத் தூண்டறதாவும் சொல்லப்பட்ற விஷயம்?''

''ஏன் உண்மையா இருக்கக் கூடாது?''

''அந்த மலைல தங்க மீனாட்சி விக்ரகம் தங்க புத்தர் சிலையாவும் இருக்குங்கற விஷயம்?''

''இருக்கலாம்... இருக்கலாம்...''

''டேய் ஸ்பானிஷ் தாடி... பீரும் சேண்ட் விட்ச்சும் சாப்டுகிட்டு டார்வின்ல இருந்து பிளாக் ஹோல் தியரி வரை படிச்சுட்டு ஜீன்ஸ் பேண்டும் தொளதொள போஜன சட்டையுமா மாடர்னிடிக்கு ஒரு ஐக்கண் சிம்பலா இருக்கற நீயா இப்படி பேசறே?''

''நானேதான் பேசறேன். அதெல்லாம் படிச்சதால தான் பேசறேன். ஒரே ஒரு அமானுஷ்ய அனுபவம் போதும், நோபல் பரிசு வாங்கின விஞ்ஞானியா இருந்தாலும் ஆடிப்போயிடுவான். ஒரு சின்ன எக்ஸாம்பிள் சொல்றேன். பிளட் கான்சர்ல ஒரு விஞ்ஞானி மரணத்தோட வாசலுக்குப் போயிட்டான். அப்ப ஒரு சைன்ட் வந்துஅந்த விஞ்ஞானி உடம்பு பூரா வருடி விட்டார். நீ குணமாயிடுவேன்னு சொல்லிட்டு போனார். அதன்பிறகு அப்படித்தான் நடந்தது. அந்த விஞ்ஞானி பிழைச்சிட்டார். டாக்டர்கள் அதன்பிறகு அவரை டெஸ்ட் பண்ணி பார்த்துட்டு அசந்து போயிட்டாங்க. கான்சர் செல் எதுவும் அவர் ரத்தத்துல இல்ல. மிராகிள்னு ஒரேஒரு வார்த்தை தான் சொன்னாங்க. அதைத்தான் நாம அமானுஷ்யம்னு வேற வார்த்தைல சொல்றோம்.''

- சங்கி சொல்லிக்கொண்டே மிக நிதானமாக ஜன்னலோரமாகப் பார்த்தான். அந்த உருவும் நின்று



கொண்டிருந்தது. சங்கியின் முகத்தில் ஒரு சன்னச் சிரிப்பு பரவிய நிமிடம் மறைந்தும் போயிற்று.

''அப்ப தைரியமா இந்த வித்யாச அனுபவத்துக்கு என்னை தயாராகுன்னு சொல்றியா?''

''ஆமாம்... ஏதோ ஒரு வகைல நீ ரொம்ப கொடுத்து வெச்சவன். அதனாலதான் உனக்கு இந்த ஜென்மத்துல இப்படி ஒரு அனுபவம் ஏற்பட இருக்கு. சந்தோஷமா அதை அனுபவி. சந்தேகங்களைத் தூக்கி எறி. விஞ்ஞான புத்தியைக் கழட்டி விடு. திறந்த மனசோட, ஆழ்ந்த நம்பிக்கையோட இறங்கு. நானும் உனக்கு உதவி செய்யறேன். உன்கூட நானும் அந்த மலைக்கரட்டுக்கு வரேன்.''

- சங்கி பாஸ்கரனின் கைகளைப் பற்றிக் கொண்டு உறுதி தொனிக்க பேச, பாஸ்கரனின் விழிகளில் பளபளப்பு.

அதே சமயம் வெளியில்...

''சார்... ஒரு முக்கியமான திருப்பம். பாஸ்கரன் எல்லா விஷயங்களையும் நம்பியிருக்கணும். இது ஒரு கிரேட் சான்சுங்கற மாதிரி அட்வைஸ் பண்ணியிருக்கான் இந்த சங்கி.''

''............''

''என்னாலயும் நம்ப முடியலை. எது எப்படியோ பாஸ்கரன் போலீஸ், பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்சின்னு யாரையும் இனி பார்க்கப் போக மாட்டான். அந்த அளவு இந்த சங்கியே அவனை பிரெய்ன் வாஷ் பண்ணிட்டான்.''

''............''

''சரிங்க சார்.. இனி பிரச்சினை இருக்காது. பாஸ்கரன் புரொபசரொட தன் போக்குல போய் விஷயத்தை முடிச்சுடுவான். நாம கவலைப்பட வேண்டாம்...''

- செல்ஃபோன் பார்ட்டி பேசி விட்டு ஓசைப்படாமல் வீதி இருளில் நழுவவும் தொடங்கினான். அவன் நழுவவும் சங்கியும் பாஸ்கரனும் அவனைப் பார்த்தபடியே வெளியே வந்தனர்.

''சங்க்கி... இவன்...இவனைப் பார்த்துட்டுதான் நீ அப்படியே உல்ட்டாவா பேச்சை மாத்தினியா?''

''ஆமாம் பாஸ்கரா.. நான் முன்ன சொன்னதுதான் கரெக்ட். உன்னை ஒரு கூட்டமே கவனிச்சுகிட்டு இருக்கு. இந்த அமானுஷ்ய சரித்திர ஆராய்ச்சியை உன் மூலமா அந்த கூட்டம் செய்ய விரும்பறாங்க. இவங்க யார்... நீ எதுக்காக இவங்களுக்கு தேவைப்பட்றேங்கறதுதான் இப்ப பிரதானமான கேள்வி. நீ இங்கேயே இரு. நான் கொஞ்சம் அந்த நபரை ஃபாலோ பண்ணிட்டு வரேன். ஒரு விஷயத்தை நல்லா ஞாபகம் வெச்சுக்கோ.. நீ அந்த அமானுஷ்ய சரித்திர ஆராய்ச்சியை நம்பி ஆராய்ச்சியில இறங்கறே. அதே சமயம் இவன் யார்னு கண்டுபிடிச்சு இவன் கூட்டத்தை நான் கண்டு பிடிக்கறேன்.

இந்த நொடி சினிமா ஹீரோ மாதிரி தைரியம்தான் நமக்கு பிரதானம். புத்திசாலித்தனம்தான் நம்மோட பலம். ஞாபகம் வெச்சுக்கோ. நான் அவனை ஃபாலோ பண்ணி யார்னு தெரிஞ்சுக்காம திரும்பமாட்டேன். அதுவரை இங்கேயே வெயிட் பண்ணு.''

-சங்க்கி சொல்லிவிட்டு ஒரு துண்டை எடுத்து தலையில் உருமா கட்டிக்கொண்டு சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு பட்டைக் கோடு போட்ட லுங்கியும் திறந்த மார்பும் தலைப்பாகையுமாக வீதி இருட்டில் ஒரு நூறு மீட்டர் அளவு முன்னேறிவிட்ட அந்த செல்ஃபோன் மனிதனைக் குறிவைத்து நடக்கத் தொடங்கினான்.

பாஸ்கரனுக்கு பிரமிப்பாக இருந்தது.

இந்த சங்க்கியிடம்தான் என்ன ஒரு வேகம். என்ன ஒரு தைரியம்?

தெருமுனையில் ஒரு வேப்ப மரத்தடியில் பைக் ஒன்று நின்று கொண்டிருந்தது. செல்ஃபோன் மர்ம ஆசாமி அதைப் போய் கிளப்பினான். வீதி விளக்கு வெளிச்சத்தில் வண்டி நம்பரைப் பார்க்க முடிந்தது. அது சங்க்கியின் கண் வழியாக மனதுக்குள் ஏறி பதிந்து கொண்டது.



பைக்கும் உறுமியபடி புழுதிப் புரட்டலோடு சீறிப்புறப்பட நல்ல வேளை காலியாக வந்த ஒரு ஆட்டோ கை கொடுத்தது.

''அந்த பைக்கை ஃபாலோ பண்ணு...''

ஆட்டோக்காரன் அதிகம் தூரத்த அவசியமில்லாதபடி பைக்காரன் ஒரு அபார்ட்மெண்ட் கட்டிடம் முன் நின்றான். கீழே பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திவிட்டு மேலேறும் போது வாட்ச்மேன் ஒரு சல்யூட் அடித்தான்.

ஆட்டோவை அபாட்மென்ட்டுக்கு வெளியே நிறுத்திக் கொண்டு கழுகைப் பார்க்கத் தொடங்கிய சங்க்கிக்கு வசதியாக மேலேறிய அவன் மூன்றாவது ஃப்ளோரில் காற்றுக்காக ஜன்னலைத் திறந்தபடி வெளியே பார்த்தான்.

இப்போதைக்கு இது போதும் என்று தோன்றியது சங்க்கிக்கு.

ஆட்டோவும் திரும்ப ஆரம்பித்தது!

மண்டை ஓட்டைக் கவிழ்த்துப் போட்டு ஆஷ்ட்ரேயாகப் பயன்படுத்தியிருக்கிறான் சங்க்கி. வீட்டுக்குள் ஏதோ கப்பரை போல இருக்கிறதே என்று கையில் எடுத்துப் பார்த்த பாஸ்கரனுக்கு தூக்கி வாரிப் போட்டது. வீசி எறிந்தான். கடமுட என்று உருண்டு ஓடி வாசல் படி அருகில் அது விழவும் சங்க்கி உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

''எதுக்குடா இதைத் தூக்கி எறியறே?'' என்றபடி அதை கையில் எடுத்து புறாவை வருடித் தருவதுபோல் வருடியபடி உள்ளே நுழைந்து தரையில் கிடக்கும் இலவம் பஞ்சுத் திண்டின் மேல் விழுந்தான் சங்க்கி.

''ஆமா எதைத்தான் ஆஷ்ட்ரேயா யூஸ் பண்றதுன்னு இல்லையாடா?'' பாஸ்கரன் புடைக்க, தன் ஆட்டுத் தாடியை நீவியபடி சிரித்தான்.

''சிரிக்காதே... வித்யாசமா இருக்கறதுக்கும் ஒரு அளவு உண்டு தெரியுமா?''

"சரி... இப்ப நான் எவ்வளவு வித்யாசமானவன்கறது விஷயமில்லை ஜென்டில்மேன். நாம அடுத்து என்ன செய்யப் போறோம்கறதுதான் விஷயம்.

"சரி சொல்லு... பெரிய ஜேம்ஸ் பாண்ட் மாதிரி ஃபாலோ பண்ணிக்கிட்டுபோனியே, கண்டுபிடிச்சியா?"

"விடுவேனா.. அய்யா பக்கத்து நீலகண்டன் நகர்ல ராயல் அபார்ட்மெண்ட்ல மூணாவது ஃப்ளோர்ல இருக்கார். நாளைக்கு சாவகாசமா போய் மற்ற விஷயங்களை கவனிக்கணும்."

"ஆமா சங்க்கி, ஏண்டா என்னை சுத்தி இப்படி நடக்குது. நான் என்னடா பாவம் பண்ணினேன்."

"ஃபூல்.... புண்ணியம் பண்ணியிருக்கே நீ. எந்த எழுத்தாளனுக்கு இப்படி ஒரு ரியல் எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும்? உக்காந்த இடத்துல பேனாவால மர்மங்களை ஒருவாக்கி பேனாவால கொலை செஞ்சு ஜனங்க காதுல பூ சுத்திகிட்டிருந்தா போதுமா?

நீ கற்பனைல எழுதற மாதிரி ஒரு விஷயம் நிஜத்துல நடக்குது. அதுல நீதான் ஹீரோ... யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு ஆப்பர்ச்சூனிட்டி...?"

"இது ஆப்பர்ச்சூனிட்டியா, இல்லை என்னை அழிக்க நடக்கற சதியா?"

"புடலங்கா.. உன்னை அழிக்க ஒரு கூட்டம் எதுக்கு? ஒரு தோட்டா போதாது. மைடியர் ரைட்டர். உணர்ச்சிவசப் படாதே. வாழ்க்கை பல சமயங்கள்ள மலைப்பாதைல பயணிக்கிற மாதிரி ஒரு உணர்வை ஏற்படுத்தும். வளைஞ்சும் நெளிஞ்சும் முழுப்பாதையும் கண்ணுக்குத் தெரியாம இருக்கும்போது நாம நம்பி அதுல பயணம் செய்யற தில்லையா... அப்படித்தான் இதுவும்..."

"ரொம்ப தேங்க்ஸ்டா.. உன்னை நான் தூக்கலாம். உன்னைப் போல இன்னொரு நபரையும் கூட சேர்ந்து தூக்க லாம். ஆனா என்னால எப்படி என்னைத் தூக்கிக்க முடியும்? அதுக்கு உன்னை மாதிரி ஒருத்தர் வந்தா தானே நல்லா இருக்கும்."



"அதான் வந்துட்டேன்ல... டோன்ட் ஒர்ரி. நாளைல இருந்து ஒரு வாரத்துக்கு ஆபீசுக்கு லீவு. ஆமா அது என்ன கைல நோட்...?"

- அங்கு தொட்டு இங்கு தொட்டு சங்க்கி மீனாட்சிசுந்தரம் பாஸ்கரனிடம் தந்திருந்த நோட்டிடம் வந்து நிற்க, பாஸ்கரனும் அதை எடுத்து நீட்ட அட்டையைத் திறந்த அடுத்த நொடி கப்பலான காகிதத்தில் அந்துப்பூச்சி ஒன்று நசுங்கிச் செத்து ஒரு பாலிதீன் தாளின் துண்டுச் சிடுக்கு போல அதில் கிடக்க, 'பெருமான் கரடு' என்னும் கோணல் கையெழுத்தும் கீழே அடுக்களையூர் அப்பாசாமித்துரை எனும் பெயரும் கண்ணில் பட்டது. கூடவே அவரது முகவரி. அதில் அமெரிக்க மண்ணின் விசாலம்.

அடுத்த பக்கத்தைப் புரட்ட அதில் என்னுரை என்னும் அடுக்களையூர் அப்பாசாமிதுரையின் விவரணம். தேதி *18.4.1906.*

"மைகுட்நெஸ்... கிட்டத்தட்ட 95 வருஷத்து பழமையான நோட்டு..." சங்க்கி உதட்டில் உற்சாகக் கூவல்.

"இந்த விவகாரத்துல இது இரண்டாவது விஷயம்! 'தெட்சிண ரகசியம்'னு ஒரு புருடா புத்தகம் ஒண்ணும் இருக்கு."

"அது எங்க?"

"வீட்ல..."

"அதுல உன்னை மோடிவேட் பண்ற விஷயங்களா?"

"ஆமாண்டா... பிரம்ம மித்திரர்ங்கற சமண சன்யாசி எழுதி போன நூற்றாண்டுல பைபிளை பிரிண்ட் பண்ணினப்போ இதையும் பிரிண்ட் பண்ணி இருக்கணும்னு நினைக்கற மாதிரி..."

"அப்படின்னா அது முதல் அஸ்திரம். இது இரண்டாவது அஸ்திரமா?"

"ஆமா.. ஆனா நான் இன்னும் இதைப் படிக்கலை..."

"பொறு... இந்தப் புத்தகத்துல என்ன இருக்குன்னு பாக்கறேன்..."

"என்ன இருக்கும்? எல்லாம் பழைய பல்லவிதான்!"

"பொறு பாஸ்.. இதுல கொஞ்சம் உண்மை தெரியறமாதிரி இருக்கு..." சங்க்கி கூற, பாஸ்கரனும் எட்டிப் பார்க்க அடுக்களையூர் அப்பாசாமித்துரை அணிந்துரையில் இனி....

"அடியேன் அடுக்களையூர் அப்பாசாமித்துரை அனந்தகோடி வந்தனங்களுடன் எழுதிக் கொள்வது... இந்த பெருமான் கரடு ஏடானது கற்பனையோ, காவியமோ பிறர் பிரவசனமோ அன்று. இது ஒரு சத்யமான விஷயம்.

அடியேன் சமணப்பட்டியில் இருக்கும் எனது மைத்துனர் இல்லத்துக்குப் போன சமயம் இந்த பெருமான் கரடு உச்சிக்குப் போக நேர்ந்தது. போன பிறகே இந்தக் கரட்டின் அருமைபெருமையினை அறியலானேன்.

இது ஒரு சாதாரண கற்குவியலன்று. இங்கே தமிழும் பாலியும் பிரம்மதேயமும் கொஞ்சி விளையாடியிருக்கிறது. சமணர்களும் சைவர்களும் வாதப்போர் நடத்தியிருக்கி றார்கள். இங்கே ஒரு கல்வி நிறுவனமும், கலாலயமும் இருந்திருக்க வேண்டும்.

நான் அனைத்தையும் ஆராயப் போந்தேன். எனக்கு கல்வெட்டுகளை வாசிக்கும் திராணியில்லை. ஆகையால் பாலி, பிரம்மதேயம் அறிந்த சில சமணர்கள் மூலம் ஆராய்ந்தேன். அதனடிப்படையில் இந்த மலையில் ஓர் பொக்கிஷம் புதையுண்டு கிடப்பதும், அதனை துறவிகள் ஆன்மா காவல் காப்பதையும் அறியலானேன்.

அந்த துறவிகளின் ஆன்மா எனக்கு தரிசனமும் தரலாயிற்று. அதில் சிகாமணி மித்ரர் என்பாரது ஆவி என்னிடம் தானுரைத்ததை இங்கே ஒரு வரலாற்றுக் காவியமாகத் தருகிறேன்.. இதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அமெரிக்க மண்ணில் இதைப் பிரசுரிக்கவும் தீர்மானித்துள்ளேன்.



ஒன்று உறுதி. சிகாமணி மித்ரர் கூற்றுப்படி இது அச்சில், எழுத்தில் என்று எப்படி இருந்தாலும் எல்லோராலும் இதை வாசிக்க ஏலாது. அருளாசிகள் மிக்கவர்களே வாசித்தறிவர். இது எழு ஞாயிறும் பொழில் சந்திரனும் சுற்றி வரும் ஆழி மேவிய இந்தப் பாரின் புண்ணிய ஆத்மாக்களேமேல் சத்யமான ஒன்று.

இனி பெருமான் மலை காவியம் புகுவோமா...?"

- திக்கித் திணறி பல்லை உடைக்கும் தமிழைப் படித்துவிட்டு நிமிர்ந்த சங்க்கிடம் வாய் கொள்ளாத சிரிப்பு.

"என்னடா சிரிக்கறே...?"

"என்னடா தமிழ் பாஸ்கரா இது... எனிவே ஸோ இன்ட்ரஸ்ட்டிங். இதைப் படிக்க விதி இருக்கணுமாம். கூத்தடிச்சிருக்கான். இரு உள்ள என்ன கதை சொல்லியிருக்கான்னு பார்ப்போம்..."

-சங்க்கி அடுத்த பக்கத்தைத் திறக்க....

"வானில் பௌர்ணமிச்சந்திரன்! சந்திரனின் அந்த தண்ணொளியைப் புரட்டிப்போடும் வண்ண வேம்பா மணக்கும் எண்ணெய் வாடையடிக்கும் பந்தச்சுடர்கள்! சந்திரபிம்பமும், பந்தச் சுடரொளியும் சூழ்ந்து கிடக்கும் அந்த கரட்டுமலை பாறைப் பெரு வெளியில் சந்திரகாச திலோத்தமர் தன் எதிரில் அமர்ந்திருக்கும் அத்துணை சமண சன்யாசிகளையும் நோக்கியபடி பிரவசனம் செய்து கொண்டிருந்தார்.

சன்யாசாத்மாக்களே... சரண கச்சம் சொல்லி நமது தேவனாம் பிடுகனை தியானித்துவிட்டு லோகாயத வாழ்வாம் மாயா விலாசம் பற்றி சிந்திக்க உள்ளோம்.

இந்த மாயா விலாசத்தின் ஒரு பகுதிதான் நம்மை அச்சுறுத்தும் விதமாக திண்டெழுந்து நிற்கும் வீர சைவம்!

சிவமென்றும் சக்தியென்றும் அதன் கூறுகள் நம்மை மாயையில் தள்ளி அழிக்கவே இன்று இரண்டு வந்துள்ளது.

நாம் நமது ஆன்மாக்னியை ஆசைக்கறை படாமல் வைத்துக் கொண்டிருக்கும்வரை நமக்கு பங்கமில்லை, பழுதில்லை. அதன் பொருட்டு நாம் நமது தேவாதி தேவனை நாம் தியானிப்போம்...'

-சந்திரகாச திலோத்தமர் தியானிப்போம் என்று சொன்ன நொடிப் பொழுதில் அங்கே பேரமைதி வந்து ஆட்கொண்டது.

அதே வேளையில் அவர்கள் அமர்ந்திருக்கும் அந்தப் பாறைப் பெருவெளிக்குப் பின்னால் உள்ள கற்கோவிலில் சிறிய அகல்தீபம் ஒன்றன் முன் மங்கலாக செம்பொன் சுடர் போல தெரிந்து கொண்டிருந்தது பீடத்தில் இருக்கும் செம்பொன் பிரம்ம திருமேனி!

# 36

அந்த சொர்ண விக்கிரக பிரம்ம திருமேனி முன் பானை அகல் ஒன்று அடக்கமாக சுடர்விட்டபடி எரிந்து கொண்டிருந்தது! திருமேனியிலும் கூட, எளிதான ரஞ்சித மலர் மாலை. அதன் வாசக் கமழல் அந்தச் சூழலில் வீசும் தென்றல் காற்றிலும் கலந்து பிரவேசித்துக் கொண்டிருக்க, மையைக் கரைத்தாற் போன்ற இராப் பொழுதும் நள்ளிரவை நோக்கிக் கரைந்த வண்ணம் இருந்தது.

அதே இரவுக்காலம் மதுரை யானை மலைப் பெருவெளி மேல் பெரும் கூட்டம் ஒன்று கூடியிருந்தது. அவர்கள் அத்தனை பேரும் பாண்டியராஜ்ய வீரர்கள்! மதுரையை ஒரு பிசாசைப் போலப் பற்றிக் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அதில் ஒருவன் வீராவேசமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

''என்னருமை சகாக்களே..!

நாம் புனிதமான தமிழ்ப்புலவர்கள் புதைக்கப்பட்ட மண்மேல் நின்று கொண்டிருக்கிறோம். நமது காலடிக்குக் கீழே பல செந்தமிழ்க் கிழார்கள் தாழிப் பிணங்களாகக் கிடக்கின்றார்கள். இதற்குக் காரணம் நம்மை அடிமை கொண்ட களப்பிரர்கள்.



நமது பாண்டிய குல திலகர் கடுங்கோன் பாண்டியனார் அவர்கள் பெரும்படையைத் திரட்டி வருகிறார்கள். அது களப்பாளன் படையை நிர்மூலமாக்கும். மீண்டும் மதுரை நமது வசப்படும். நமக்கு எதிராக யார் வந்தாலும் அவர்களை வெட்டி வீழ்த்த நாம் தயங்கக் கூடாது. அது களப்பிர வீரனாக இருந்தாலும் சரி, சமண சன்யாசியாக இருந்தாலும் சரி, புத்த விஹாரத்து பிட்சுக்களானாலும் சரி நமது ஒரே குறி சுதந்திர பாண்டியநாடுதான்.

இந்த களப்பிரர்கள் வந்தேறிகள்! நமது தமிழை நசுக்கி பாலியையும், பிரம்மதேயத்தையும் இந்த மண்ணில் நுழைத்தவர்கள். இன்பத் தேன் மொழியான நம் இன்தமிழை நாம் பேசினாலே பாவம் என்று சொன்னவர்கள். அதற்காக நம் நாக்கினையே அறுத்தவர்கள்! அப்படி பாதிக்கப்பட்டவர்களை எல்லாம் இந்த மலைத்தலத்தில்தான் அந்த களப்பன் கழுவில் ஏற்றியும், கழுத்தை வெட்டியும் கொன்றான்.

அவர்கள் புதைக்கப்பட்டிருக்கும் இந்த பூமிமேல் நின்று கொண்டு நாம் மேற்கொண்ட சபதத்திற்கு அவர்களது ஆன்மாவும் துணை செய்யும். இந்த மலைத் தலத்திலும், ஏனைய பாண்டிய நாட்டு மலைத் தலங்களிலும் களப்பிரன் நமது தமிழர்களை மட்டும் புதைக்கவில்லை. தமிழர்களாகிய நாம் வணங்கி வந்த தெய்வப் பிரதமைகளையும் சேர்த்தே புதைத்துவிட்டான்.

இந்த பாண்டி மண்டலத்தில் ஆயிரத்து எட்டு லிங்கங்கள் இருந்து வழிபாடு செய்யப்பட்டதாகவும், அதில் ஒன்பது லிங்கங்கள் மட்டும் நவரத்தினக் கல்லால் ஆனது என்றும், நம் முன்னோர்கள் கூறிச் சென்றிருக்கிறார்கள். அவை எங்கே போயிற்று?

களப்பன் தன் வசம் கொண்டு சென்று விட்டானா? இல்லை மண்ணோடு மண்ணாகப் புதைத்து விட்டானா? இதை நாம் கண்டறிய வேண்டும். மீண்டும் மதுரை எங்கும் நமது சைவ சமயம் ஓங்கி வளர வேண்டும்.

ஈஸ்வரலிங்க சொரூபங்களும், சப்த கன்னியர், நந்திகேஸ்வரர், ஜடாரூபர், காலபைரவர், சிவகடாட்சர், ஆனந்த நாராயணர், ஜ்வால நரசிம்மர், பள்ளிகொண்ட அரங்கர், அமர்ந்த கூடலழகர் என்று மதுரையம்பதியே நமது சைவ வைணவ மார்க்கச் சிறப்போடு வாழ்ந்ததை எல்லாம் களப்பன் காலாவதி ஆக்கிவிட்டான்.

ஒரு நாளா இரு நாளா...? இருநூறு வருடங்கள் இதுதான் நம்நிலை என்றாகிவிட்டது. இதிலிருந்து மீள்வதற்கும், தமிழ்ச் சமுதாயமான பாண்டிய சமுதாயம் புதிய பலம் பெறுவதற்கும், தமிழ்ச் சித்தராம் மதங்கனிச் சித்தர், எங்கிருக்கிறாள் என்றே தெரியாத அன்னை மீனாட்சி உருவை முதலில் ஐம்பொன்னில் செய்து பின் தன் ரசவாதத் திறத்தால் பச்சிலைக் காப்பினால் தங்க மீனாட்சியாகவே ஆக்கி விட்டார்.

அதன்பின் அவர் வழிபட்டு வந்த அந்த உருவைக்கூட சமணக் கூட்டம் ஒன்று கவர்ந்து சொன்று விட்டது. ஒரு சாரார் பிட்சுக்கள் அதைக் களவாடிச் சென்றுவிட்டதாகக் கூறினாலும் நமக்கு வந்த உளவுத் தகவல்கள் மூலம் அது சமணீய நல்லூர் என்னும் சிற்றூரை ஒட்டி இருக்கும் பெருமான் கரட்டில் இருப்பதாகவே தெரிகிறது.

அவர்கள் அன்னையை சந்திர பிரபா தேவியாக தங்கள் நம்பிக்கைக்கேற்ப மாற்றி அனுதினமும் பூஜிப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

இன்னொரு தகவலோ அது பிரம்மமூர்த்தமாக வழிபடப் பட்டு வருவதாகக் கூறுகிறது. எதுவாக இருப்பினும் அது நமது சொத்து. நாம் அதை அடைந்தாக வேண்டும். இதற்காக பணியை நமது வீர பாண்டியன் தலைமையிலான குழு செய்யும்.

புதிதாக திகம்பரர்களும், காபாலிகர்களும் கூட இப்பொழுது இந்த மண்ணில் நடமாடத் தொடங்கி விட்டார்கள். இவர்களில் திகம்பரர்கள் சமணீயர்களுக்குத் துணை போகிறார்கள். காபாலிகர்களோ நமக்குத் துணை வரத் தயாராக இருக்கிறார்கள்.



காபாலிகர்கள் மந்திரப்பிரசாதிகள். இவர்கள் துணை நமக்கு இருந்தால் போதும். நாம் நிச்சயம் வெற்றி பெற்றுவிடலாம். இப்பொழுதுகூட இந்த மலையில் நமது பாண்டிய வம்சாவளியில் வந்த கோச்சடைப் பாண்டியரும், நெடுஞ்சடையனாரும் உக்கிரப் பெருவழுதி யாரும் போற்றி வணங்கித் துதி செய்த, யுத்த ஜெயத்துக்குக் காரணமான சரபேஸ்வர மூர்த்தியின் பிரதிஷ்டை சொரூபம் இதே யானை மலையின் ஈசான்ய முடிவில் வடக்கு நோக்கிய பார்வையோடு உள்ளது. அவரை வணங்கிவிட்டு நமது போராட்டத்தைத் துவக்குவோம். பாண்டியப் பெருநாட்டையும் அடைந்து காட்டுவோம்.''

-பாண்டிய வீரனின் நீண்ட உரை முடிவடைந்த நொடி அவனால் விளிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்ட வீரபாண்டியன் என்பவன் அத்துணை பாண்டிய வீரர்கள் மத்தியிலும் ஆவேசமாக முன்வந்தான்.

''வீர சகாக்களே...

களப்பிரனை அழித்து ஒழிக்கும் முயற்சியில் கைவிட்டுப் போன நமது கடவுளர் உருவங்களை யெல்லாம் கண்டறிவதே இங்கே இனி எனது பணி.

எனது சகாக்கள் அதற்காக எனக்கு உதவுவார்கள். இப்பொழுதே சமணீய நல்லூர் சென்று பெருமான் மலைக்கரட்டை குறி வைப்போம்.

நமது கடுங்கோன் பாண்டியர் களப்பிரனைக் குறிவைத்து யுத்த பேரிகை முழக்கும் சமயம் சமணீய நல்லூர் பெருமான் மலைக் கரட்டில் நாங்களும் வீரமுழக்கம் இடுவோம்.

இனி அது சமணீய நல்லூராக இராது. ரமணீய நல்லூர் எனும் தனது பழைய பெயரை அடைந்துவிடும். பெருமான் மலைக் கரடும் பெருமாள் மலைக்கரடு எனும் தன்து பழைய பெயரை அடைந்துவிடும். சந்திரபிரபாவோ, இல்லை பிரம்ம திருஉருவோ எதுவாய் இருந்தாலும் மதங்கனிச் சித்தரின் சொர்ண மீனாட்சி உருவம் மீண்டும் வசப்படும்.

பின் அது இப்பொழுது நெல் கொட்டாரமாக விளங்கும் அன்னை மீனாட்சியாலயத்தில் வைத்து வணங்கப்படும். அந்த அன்னையே அதற்கு நமக்கு உதவுவாள். அகோரர்களுக்கு அஞ்சாமல், சமண சன்யாசிகளின் நலனுக்காகக் காவல் இருக்கும் களப்பிரர்களின் படைபற்றியும் கவலைப் படாமல் நாம் செயல்பட்டால் நிச்சயம் நாம் வெல்வது உறுதி. அதற்காக நான் இப்பொழுதே இந்த மலையைவிட்டு நீங்கச் சித்தமாகிவிட்டேன். வருகிறேன்.''

- அந்த வீரன் முழக்கமிட்டு முடித்துவிட்டு அந்தக் கூட்டத்தில் தென்பட்ட ஒரு முதிய கிழட்டு வீரரைப் போய்ப் பார்த்து அவர் காலில் விழுந்து வணங்கினான்.

''ஆசிரியரே நான் சென்று வருகிறேன்.''

''நல்லது... கத்தியை விட... புத்தியை பயன்படுத்துவது தான் சிறந்தது. அதைப் புரிந்து கொண்டு செயல்படு. அந்த பெருமான் கரட்டு மலையைச் சுற்றி ஒரு மாய வேலி போடப்பட்டிருப்பதாகவும், அது அங்கு வரும் சமணீயர்கள் அல்லாதவர்களைப் பித்துப்பிடிக்க வைத்துவிடும் என்றும் அறிந்தேன். எச்சரிக்கை.''

- அவர் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடை கொடுத்தார். அவனும் துள்ளிக் கொண்டு புறப்பட்டான். இரவுக்காலம் என்ற திகட்டல் இல்லை. நிலா ஒளி போதுமானதாக இருந்து வழியினைக் காட்டியது. அவனைத் தொடர்ந்து சிலரும் அவன் பின்னேயே நடந்து கொண்டிருந்தார்கள்.

கீழே இறங்கிய அவன் நேராக ஒரு கல் மண்டபம் கீழ் மலைப் பாறையின் அடிச்சரிவை ஒட்டி எழுந்தருளியிருக்கும் சரபேஸ்வர மூர்த்தி திரு உருவம் முன் போய் நின்றான்.

காட்டாமணக்கு எண்ணெய் உதவியோடு இலவந்திண்டுகள் விளக்குகளாய் எரிந்தபடி இருக்க சரபேஸ்வர மூர்த்தி விக்கிரகம் விசித்திர உருவத்தோடு அவனை ஆச்சரியப்படுத்தியது.

கைகளைக் கூப்பி வணங்கினான்.



''ஐயனே... நான் இறங்கிச் செயல்படுத்த உள்ள செயல்களுக்கு உறுதுணையாக இருங்கள்... எதிரிகள் வெற்றி கொள்ளாதபடி நான் மட்டுமே வெற்றி கொள்ள எனக்கு வழி காட்டுங்கள்...'' வேண்டி முடித்த நிலையில் புரவியில் ஏறி அதை புழுதிக் காற்றோடு செலுத்தத் தொடங்கினான். அவனைப் பின் தொடர்ந்து ஒரு கூட்டமும் செல்ல ஆரம்பித்தது.

சமணீய நல்லூர் பெருமான் மலைக்கரடு.... சமண சன்யாசிகள் உறக்கத்தில் இருந்தார்கள். பாறைச் சரிவுகளில் ஒரு ஆண் படுத்துக் கொள்ளத் தோதாக படுக்கைகள் செதுக்கப்பட்டிருக்க, சில இடங்களில் கல்தச்சர்களும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அடிவாரப் பரப்பில் இருந்து மேல் தளம் வரை ஆங்காங்கே தீப்பந்தம் தாங்கிய களப்பிரக் காவல்காரர்கள்! காற்று, உருண்ட பாறைகளிலும் அதன் ஊடாக வளர்ந்து கிடக்கும் செடி கொடிகளிலும் மோதி ஒரு தினுசாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்க, எவர் கண்ணிலும் படாதபடி மலைப்பாம்பு ஒன்று ஊர்ந்து மேலேறியபடி இருந்தது,

நன்கு நீண்ட யானையின் தும்பிக்கை அளவு தடித்த பாம்பு அது. பசி வேட்கையுடன் மேலேறும் அந்தப் பாம்பின் பார்வைக்கு நிலவின் ஒளி வழிகாட்டிக் கொண்டிருந்தது. மேலேறி வந்த நிலையில் சமதளத்தில் ஆங்காங்கே யோக நித்திரையாக மல்லாந்து ஒரு சடலம் போல கை கால்கள் பொருதிக் கட்டப்பட்டது போல, சன்யாசிகள் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தபடியே ஊர்ந்தது.

அதன் நெளியும் தேகத்துக்கு மிக அருகில் ஒரு முதிர்ந்த ஒற்றை நாடிச் சன்யாசியின் தேகம் ஒன்று யோக நித்திரையில் இருப்பதைப் பார்த்து அப்படியே அவர் உடல் மேல் ஏற ஆரம்பித்தது. அடுத்த சில நொடிப் போதில் அந்தப் பாம்பின் வளைப்பில் அந்த சன்யாசி அகப்பட்டுக் கொண்டு ஹீனக் குரல் எடுத்து முனகத் தொடங்கினார்.

சப்தம் கேட்டு மற்ற சன்யாசிகளும், கல் தச்சர்களும் கண் விழித்துக் கொண்டார்கள். மலைப்பாம்பின் பிடிக்குள் உயிர் வாதையை அனுபவித்தபடி இருக்கும் தங்கள் சக சன்யாசியைப் பார்த்து வாய் பிளந்தார்கள்.

சில கல்தச்சர்கள் தங்கள் வசம் உள்ள உளி மற்றும் மட்டத்தடிகளால் அந்தப் பாம்பைத் தாக்கச் சென்ற போது ஒரு சன்யாசி பாய்ந்து வந்து தடுத்து விட்டார்.

''வேண்டாம்... அந்தப் பாம்பினைத் தாக்காதே. அது தன் பசிக்கான ஆகாரத்தைப் புசித்தபடி இருக்கிறது. ஆகாரமாய் எங்கள் சன்யாசியொருவர் அமைந்து விட்டது அவர் கருமம்...''

''அட என்னங்க நீங்க. இப்படிக் கூடவா இருப்பீங்க. இது தர்ம நியாயம் பேசற இடம் இல்லீங்க...'' ஒரு கல்தச்சன் அந்தப் பாம்பின் பின்னுடல் மேல் உளி கொண்டு குத்தத் தொடங்கினான்.

''தச்சனே... வேண்டாம்! உயிர் வதை செய்யாதே. அதுவும் இந்த இடத்தில் நிச்சயம் செய்யலாகாது. தர்மத்திற்காகவும், மோட்சத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்து, அனைத்தையும் சகித்துக் கொண்டு ஒரு புழு பூச்சிக்கும் தீங்கு நேரா வண்ணம் வாழும் எங்கள் தவ வாழ்க்கையை பங்கப்படுத்தி விடாதே. அந்தப் பாம்பின் பசிக்கு இரையாக வேண்டும் என்பது அவர் கர்மம்.''

அந்த சன்யாசி குரல் நடுங்கப் பேசி அந்தத் தச்சனைத் தடுத்தாலும்.. பலர் அதை ஒப்புக் கொண்டது போலத் தெரியவில்லை. பாம்பின் வளைப்பில் உடம்பு எலும்பெல்லாம் நொறுங்க, அகப்பட்டுக் கொண்ட சன்யாசி போடும் சப்தம் பல சன்யாசிகளையும், புதிதாக சமணம் தழுவியர்களையும் மிகவே பாதித்தது.

பொறுக்காத ஒருவர் மிக வேகமாக மட்டக்கம்பு ஒன்றைக் கொண்டும், தீப்பந்தம் ஒன்றைக் கொண்டும் பாம்பின் உடம்பைத் தீண்ட அது அந்த சன்யாசியைப் பிடித்த பிடியை நழுவ விட்டது. தன் மேல் தாக்குதல் நிகழ்த்தியவர்களை நோக்கிச் சீறவும் செய்தது.



''வேண்டாம் வேண்டாம்....'' அந்தக் கூட்டத்தின் தலைமைச் சன்யாசியும், சன்யாசத்தின் உச்சமான ஆனந்தலயப் பயிற்சியையும் பெற்றவருமான 'சந்திரகாச திலோத்தமர்' கூட தடுத்துப் பார்த்தார்.

ஆனால் அவர்கள் காதில் எதுவும் விழவில்லை. அந்தப் பாம்பின் பிடியில் இருந்து விடுபட்ட சமண சன்யாசியிடம் கூட உயிர் மூச்சு இல்லை. அது எப்பொழுதோ போய்விட்டிருக்க, காயம்பட்ட நிலையில் அங்கிருந்து விலகி ஓடத் தொடங்கிய மலைப் பாம்பானது ஒரு துவாரத்தில் புகுந்து கொண்டு தன் மொத்த உடலையும் உள் இழுத்துக் கொண்டது.

அதைப் பின்தொடர்ந்து சென்றவர்கள் அது மறைந்துவிட்டதைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி திரும்பும்போது ஒரு கல்தச்சன் மட்டும் அந்தத் துவாரம் அருகே சென்று தீப்பந்தச் சுடரொளியோடு எட்டி உள்ளே பார்த்தான். அதிர்ந்தும் போனான். உள்ளே அவனது பந்தஒளி பட்டு பதிலுக்கு தகதகவென செந்தீபோல ஒரு லிங்க உருவம் தெரிய அந்த மலைப்பாம்பு அதை வளைத்துப் பிடித்துக் கொண்டிருந்தது! அதற்கு அப்பால் வெல்ல உருண்டைகள் போல ஆயிரத்தெட்டு லிங்க சொரூபங்கள்!

# 37

கல் தச்சன் விழிகள் அந்த 1008 லிங்கங்களைப் பார்த்து அயர்ந்து போன விழிகளோடு பார்வையைத் திருப்பினான். சமண சன்யாசிகள், மலைப்பாம்பின் பிடியில் சிக்கி உயிரை விட்டிருந்த சன்யாசியை பதவிசாகத் தூக்கிக் கொண்டு அந்த சிறு மலையின் சமதளம் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். சிலர் ஒரு சந்தோஷ அனுபவம் போல உற்சாகமாகப் பாட ஆரம்பித்தார்கள். அந்த தச்சனை வியப்பு பிடுங்கித் தின்றது.

நேராக தனது குருநாதரைத் தேடிக் கொண்டு ஓடினான். அவரும் மற்ற கல்தச்சர்களும் ஒரு கல்குகையில்தான்

தங்கியிருந்தார்கள். அங்கே ஒரு காண்ணாடி சிம்னி விளக்கு எரிந்தபடியிருந்தது. சமணர்கள் பெரும்பாலும் பந்தங்களைப் பயன்படுத்துவதில்லை. பந்த வெளிச்சம் நோக்கி ஈசல்கள் படையெடுத்து வந்து உயிர் விட்டால் அந்தப் பாவம் தங்களைச் சேரும் என்பது அவர்கள் நம்பிக்கை. எனவே கூடியவரை அடக்கமாக எரியும் விளக்குகளையே பயன் படுத்துவதால் அந்த கரட்டின் மேல் தளமே சுமாரான வெளிச்சத்தோடு தான் இருந்தது. லிங்கங்களைப் பார்த்த நிலையில் பிரமித்திருந்த கல்தச்சன், நேராக தன் குழுவினரி டம் போய் நின்றான். அவர்கள் பார்வை இறந்துவிட்ட சன்யாசியை முக்தி வழிகாட்டும் வைபவத்தில் இருந்தது.

ஒரு அநியாய இறப்பைக் கூட துக்கமாகக் கருதாமல் அவர்கள் கொண்டாடுவது அவனுக்கு வியப்பாக இருந்தது. அந்த வியப்பையும், மலைக்குகையில் தன் கண்ணில் பட்ட காட்சியின் வியப்பையும் ஒரு சேர அனுபவித்த நிலையில் இருந்த அந்த கல்தச்சன் அதை தங்கள் குழுவினரிடம் வெளிப்படுத்த ஆரம்பித்தான்.

''நண்பர்களே என்ன இது... இந்த சன்யாசிகள் செயல் பெரிய வியப்பாக இருக்கிறதே...?''

''இதில் வியக்க ஏதுமில்லை தேவதாசா... இதுதான் சமண சன்யாசிகளின் பழக்கம்.''

''என்ன பழக்கம் இது... ஒரு மரணம் இவர்களுக்கு வருத்தமளிக்காதா?''

''இல்லை... இவர்கள் மரணத்தை அச்சத்திற்குரிய ஒன்றாக நினைப்பவர்கள் இல்லை. அதை ஒரு மாற்றமாகக் கருதுகின்றவர்கள். மனிதப் பிறப்பெடுத்து விட்ட வாழ்க்கை தான் இவர்கள் வரையில் பாரமான ஒன்று. மரணம் இவர்களுக்கு விடுதலை. சில மடாலயங்களில் மரண முக்தியை இனிப்புகள் தந்து கொண்டாடி மகிழ்வார்கள்.'' - தேவதாசன் என்று விளிக்கப்பட்ட அந்த கல்தச்சனுக்கு தனது குருநாதர் சொன்ன பதில் பேராச்சிரியம் தந்தது. இருந்தாலும். அங்கங்கே சில சன்யாசிகள் துக்கத்தோடு இருப்பதையும் பார்க்க முடிந்தது. அவர்கள் சன்னியாசத்திற்கு புதிதாக வந்து இன்னமும் நிலைபெறாதவர்கள்.



அந்த இரவு நேரம் இப்படி வித்யாசமான அனுபவமாக ஆகிவிட்டதை நினைத்த அவன், அடுத்து தான் பார்த்த லிங்க சொரூபங்களை பற்றிப் பேசத் தொடங்கினான்.

''குருவே.. நான் இப்பொழுது ஒரு அதிசயக் காட்சியைக் கண்டேன்.'

''தெரியும்... நீ எதைப்பற்றி பேசப் போகிறாய் என்று தெரியும்.''

''எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்.''

''ஈசான்ய் குகையில் லிங்க சொரூபங்களைப் பார்த்திருப்பாய்.''

''உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?''

''தெரியாமலா... நமது வேலை அதைப் பார்த்து வாய் பிளப்பது அல்ல. நமது களப்பச் சக்கரவர்த்தியின் ஆணைப் படி இங்கே சமண விலாசங்களை உருவாக்குவதுதான்.

''அதுசரி அந்த லிங்க சொரூபங்களை ஏன் அங்கே போட்டு வைத்திருக்கிறார்கள்?''

''வேண்டாம், அதைப்பற்றி அதிகம் பேசாதே. சிவரூபங்கள் இங்கே சிறைபிடிக்கப்பட்டு பல காலமாகி விட்டது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அவை இங்கே சித்த புருஷர்களால் வழிபடப்பட்டது.''

''அப்படியா?''

''இந்த மலைக்கே சிவபெருமான் கரடு என்பதுதான் பெயர். சிவப் பாதையான சைவம் முக்திக்கு வழி காட்டாது. அது பிறப்புகளை தந்தபடி இருக்கும் என்பதால்தான் களப்பன் சமண நாட்டம் கொண்டான்...''

-சன்யாசிகளின் செயல்பாடுகளைப் பார்த்தபடி சன்னமான குரலில் தேவதாசனுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார் அவனது குருநாதர். சிவபெருமான் கரடு என்று அவனாலும், பின் சன்யாசிகள் வசம் அகப்பட்ட நிலையில் பெருமான்

கரடாகவும் ஆகிவிட்ட அந்தமலைத் தலம் மேல் ஒரு துர் மரணமும், பின் விசித்திரக் காட்சிகளுமாகவும் தென்பட்டுக் கொண்டிருக்க வானில் வட்ட நிலாவும் ஒளியை உமிழ்ந்து கொண்டு நடப்பதைப் பார்த்தபடி இருந்தது. அந்த வேளையில்தான் அடிவாரச் சருக்கத்தில் வீரபாண்டியனின் புரவிக் கூட்டமும் வந்து கூடியிருந்தது.

அவர்களில் பிரதானமாகத் திகழ்ந்த வீரபாண்டியன் தன் வீர சகாக்களைப் பார்த்துப் பேசலானான்.

''சகாக்களே... நான் மலைமேல் சென்று அங்கு எத்தனை சன்யாசிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தனை பேர் காவலிருக்கிறார்கள் போன்ற தகவல்களை ரகசியமாக அறிந்துகொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே தங்கியிருங்கள்.

இந்த அடிவாரத்தை ஒட்டிய அந்த கிராமமான ரமணீய நல்லூரின் காவல்தெய்வமான காத்தவராயன் கோயிலைத் தான் களப்பிரர்கள் தங்களது சதுக்க பூதமாக சாத்தக் கடவுளுக் குண்டானதாக மாற்றி சாத்தன் கோயிலாக்கிவிட்டார்கள்.

அங்கு நீங்கள் தங்கி இளைப்பாறலாம். நான் மேலே போய் ஆழ அகலம் அறிந்து திரும்புகிறேன்.

அனேகமாய் நாளைய விடியலில் நமது கடுங்கோன் பாண்டியர் மதுரையை வளைத்து யுத்த முழுக்கம் செய்வார். அதுதான் நாமும் இங்கே இந்த மலையை வளைத்து முழக்கமிட வேண்டிய தருணம்!

அங்கே மதுரையும் இங்கே மலையும் நமது வசப்பட்டுவிட்டால் அதுவே நமக்கு பெரிய வெற்றி. இந்த மலை அசாதாரணமானது. நமது தெய்வத்திரு மேனிகளை களப்பன் இங்கே தான் சிறை வைத்திருக்கிறான். அந்த சிறைவாசமும் இன்றோடு முடிந்து விடும். நாளைய இரவோ, இல்லை நாளை மறுதினமோ அந்தத் திருமேனிகள் விடுதலை பெறும். வரலாற்றிலும் நமது பெயர் கால காலத்திற்கும் வாழும். வாழத்தான் போகிறது. அதை நாமும் பார்க்கத்தான் போகிறோம்.''



-வீரபாண்டியன் கெழுமிய ஒரு பேருரையை நிகழ்த்திவிட்டு மலை நோக்கி ஏறத் தொடங்கினான்.

பூர்ண சந்திரன் வழித் தடத்தைக் காட்டி ஒத்துழைப்பு தந்து கொண்டிருந்தான். அடப்பான புதர்களினூடே இரவில் மட்டுமே மலரும் சில விருட்சிப் பூக்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. பருத்த பாறைகள் அவன் ஒளிந்தும் மறைந்தும் மேலேற உதவிக் கொண்டிருந்தன. மலையின் ஒரு சருக்கத்தில் சாவடிக் கூண்டுகள் இருந்தன. அதில் களப்ப வீரர்கள் அமர்ந்தவண்ணம் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அங்கங்கே சில அகோரர்கள் நிர்வாண கோலத்தில் பாறைகளின் மேல் மல்லாந்து கிடந்தனர். சில இடங்களில் சோமபானம் தேங்கிய மண் பானைகள் உடைந்து கிடந்ததில் இருந்து அகோரர்கள் அவற்றை ருசி பார்த்திருப்பதை வீரபாண்டியனால் உணர முடிந்தது.

சங்கம் வைத்து தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெரு நகரம் பாண்டி மாநகரம். அது இன்று கலாச்சாரச் சிதைவடைந்து அன்னியன் வசப்பட்டு அல்லோல கல்லோலமாகி விட்டிருந்ததை அசை போட்டபடியே வீரபாண்டியன் ஒளிந்து ஒளிந்து மேலேறிக் கொண்டிருந்தான்.

ஒன்றுக்கொன்று முரணான நம்பிக்கைகளை உடையவர் கள் ஒரே மலைத்தலத்தில் திரிவது அவனுக்குள் ஆச்சரியத்தை யும் தந்தபடி இருந்தது. காவலாளிகள் இவர்களை விடவும் வேறுபட்டவர்கள். மண்டையோடும் கையுமாக மந்திர தந்திர வித்தைகளில் கைதேர்ந்தவர்களாக பாண்டிய மண்டலத்தில் மறைந்திருந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டதையும் கூட அவ்வேளையில் நினைத்துப்பார்த்தான். ஒருவழியாக உச்சியை எட்டியபோது சம தளத்தில் சன்யாசிகள் கூட அமர்ந்திருப்பதையும் அவர்களுக்கு நடுவில் இறந்துவிட்ட சன்யாசியின் உடல் கிடப்பதையும் கூட கண்டான்.

ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்து விட்டது. அதனால் தான் இந்த நள்ளிரவிலும் சன்யாசிகள் உறங்காமல் உட்கார்ந் திருக்கக் கண்டான். இவர்களுக்கு நடுவில் கல்தச்சனாகிய

தேசதாசன் மட்டும் அதீத பரபரப்போடு ஆர்வத்தை அடக்கமாட்டாமல் தனியே பிரிந்து தான் முன்பு பார்த்த ஈசான்ய குகை நோக்கிச் செல்வதைப் பார்த்தவன், மெல்ல அவனைப் பின் தொடர்ந்தான். அந்தக் குகை 'உள்ளே செல்ல முடியாதபடி பருத்த பாறைகளால் மூடப்பட்டிருப்பினும் ஆங்காங்கே துவாரங்கள் இருப்பதும், அதில் ஒன்றினுள் தான் மலைப்பாம்பும் நுழைந்திருக்கும். பாம்பு நுழைந்திருந்த துவாரம் வழியாகவே தேவதாசனும் எட்டிப் பார்த்தபடி இருந்தான். அங்கங்கே கசியும் நிலவொளியில் சாண் உயர லிங்க சொரூபங்களின் அரை வட்ட தலைப்பாகம் ஒரு வினோதக் காட்சியாக அவனுக்குத் தோன்றியது. கூடவே சிவத் தொடர்பாக அவனுக்கு அவன் முன்னோர்கள் கூறிய கதைகளும் நினைவில் எழும்பத் தொடங்கின.

'ஈசன் ஒரு புலையன். அரவத்தை கழுத்தில் சூடிக் கொண்டு சதா நடனமாடிக் கொண்டிருப்பவன்! மனித மனத்தில் ஆசையை உருவாக்கி பாவத்தில் தள்ளுபவன்...' என்றெல்லாம் அவனுக்குச் சொல்லப்பட்டிருப்பதும் அதன் காரணமாகவே அவனது சொரூபங்களை எல்லாம் களப்பன் சிறைபிடித்து இப்படி ஒரு மலைக்குகையில் போட்டு அடக்கிவிட்டான் என்றும் நினைத்தவன் திரும்பிய போது வீரபாண்டியன் நின்று கொண்டிருந்தான். அவன் கரத்து வாள் தேவதாசனை குறிவைத்தபடி நீண்டிருந்தது.

''நீ... நீ யார்...?'' தேவதாசன் பயத்தோடு வினவ, வீரபாண்டியன் அவனை நெருங்கி வாளை நெருக்கினான். பின் ''கத்தாதே.. நான் பாண்டிய வீரன். நீ கல்தச்சன் தானே?'' என்றும்கேட்டான்.

''ஆமாம்.''

''இங்கென்ன செய்கிறாய்...?''

''இங்கே... இங்கே.. எட்டிப்பார் உனக்கே தெரியும்?'' தேவதாசன் கூறவும், வீரபாண்டியனும் எட்டிப் பார்த்தான். பின் பரவசப் பட்டவனாக 'ஓம் நமச்சிவாயாம்... ஓம் நகச்சிவாயம்' என்று கண்களை ஒரு வினாடி மூடி



தியானித்தவன் ''நட என்னோடு... வழியில் கூப்பாடு போட்டால் தொலைந்தாய்...'' என்றான்.

''உனக்கு என்ன வேண்டும். எதற்காக என்னை அழைக்கிறாய்... நான் உன்னோடு எங்கு வரவேண்டும்?'' - தேவதாசன் நடுங்கியபடி கேட்க, வீர பாண்டியன் அவனுக்குத் தொடர்ந்து பதில் சொல்லிக் கொண்டிராமல் அவன் பிடரியில் ஒரு வர்மத் தட்டு தட்டவும் தேவதாசன் சுருண்டு விழத் தொடங்கினான். விழுந்தவனைத் தூக்கிக் கொண்டு வீரபாண்டியனும் கீழிறங்க ஆரம்பித்தான். களப்பிரர்களின் சாவடிக் கூண்டுகளை ஏமாற்றி கீழே இறங்குவது சிரம மானதாக இருந்தாலும் சாதிக்கும் வெறி நிரம்பியிருந்ததால் அந்த சிரமங்கள் பெரிதாகத் தெரியவில்லை.

கீழே சாத்தான் கோயில் கல்மண்டபத்தில் பாண்டிய வீரர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவனைச் சுமந்தபடி வீரபாண்டியன் வரவும் விடைத்து எழுந்து நின்றார்கள்.

''பாண்டியா... யார் இவன்?''

''சொல்கிறேன். இவன் ஒரு கல் தச்சன். சமணவாடிகளை எழுப்பும் கூட்டத்தவன். இந்த பாண்டிய நாட்டில் ஒரு மலைத்தலம் விடாமல் சென்று சமணவாடிகளை எழுப்பியும், விகாரங்களை உருவாக்குவதையும் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

இவனை விசாரித்தால் போதும், மேலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அவர்கள் என்ன செய்து கொண்டி ருக்கிறார்கள் என்பதெல்லாம் நமக்கு விளங்கிவிடும்.''

''இவன் மயங்கிக் கிடக்கிறானே...?''

''இதோ இப்பொழுது விழித்து விடுவான்.''- வீரபாண்டியன் சொல்லிக் கொண்டே தேவதாசன் பிடரியைத் திரும்பத் தட்டி வர்மக் கட்டை விடுவித்தான். தேவதாசனும் ஏதோ தூக்கத்தில் இருந்து எழுந்தவன் போல எழுந்து நின்று கொண்டு சுற்றி நிற்பவர்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

# 38

"என்ன பார்க்கிறாய்... உன் பெயர் என்ன?"

"என் பெயர்... என் பெயர் தேவதாசன்."

"எந்த தேவனுக்கு தாசன்... நீ...?"

"நான் எல்லா தேவர்களுக்கும் தாசன்..."

"ஆனால் பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு களப்பன் சொல்கிறபடி புத்த விரகாரங்களையும், சமணவாடிகளையும் எழுப்புகின்றவன் அப்படித்தானே?"

"ஆ... ஆமாம்... ராஜகட்டளையை ஈடேற்றுவது எங்கள் கடமையாயிற்றே?"

"சரி மேலே எத்தனை சன்யாசிகள் இருக்கிறார்கள்?"

"அறுபதுக்கும் மேல் இருக்கிறார்கள்."

"அவ்வளவு பேரும் சமண சன்யாசிகளா?"

"இல்லை ஹீனயானப் பிரிவைப் பின்பற்றும் சில பௌத்த சன்யாசிகளும் இதில் அடக்கம்."

"சமண சன்யாசிகளும் புத்த சன்யாசிகளும் ஒரே இடத்தில்... பலே! ஆமாம் இவர்கள் இந்த இடத்தை தேர்ந்தெடுக்கக் காரணம்?"

"இந்த மலைக்கற்கள் நல்ல ஜாதி இனத்தைச் சேர்ந்தது. அலிக்கற்கள் இங்கே கிடையாது. அத்தோடு மேலே நீருற்றும், சில விருட்சங்களும் கூட இருக்கின்றன. எனவே இங்கே சமணவாடியை எழுப்பத் தீர்மானித்தார்கள்."

"எல்லாம் சரி... இவர்களை களப்பன் எந்த அளவு போஷிக்கிறான்?"

"நன்றாகவே போஷிக்கிறான். மலையைச் சுற்றிக் காவலிருக்கிறான்."

"காவல் பலமோ?"



"ஆமாம்... இந்த மலைக்கு சில பாண்டிய சித்தர்கள் வந்து, அவர்கள் தெய்வமான ஈசனை வழிபாடு செய்து திரும்புவதாகக் கேள்விப்பட்டதில் இருந்தே இங்கே காவல் அதிகமாகி விட்டது. மலையிலும் மதுரையம்பதியில் உள்ள ஆலயங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட அத்தனை விக்கிரகங்களும் உள்ளது!"

"பொன்னாலான மீனாட்சி விக்கிரகம் இருக்கிறதா...?"

"அது தெரியாது. ஆனால் ஒரு பொன்னாலான பிரம்ம திருமேனியைத்தான் வழிபாடு செய்கிறார்கள்."

"அப்படியானால் மதங்கணிச் சித்தர் தன் ரசவாதத் திறத்தால் செய்த மீனாட்சி உருவமே அது. களப்பன் ஒரு சண்டாளன். எங்களை அழித்தொழிப்பதையே நோக்கமாகக் கொண்டவன். ஆனால் அவன் காலம் முடியப்போகிறது அப்பனே... சமணமும் பௌத்தமும் இந்த நாட்டை விட்டு எப்படி ஓடப்போகிறது என்று நீ பார்க்கப் போகிறாய். அது சரி, மேலே இந்த இரவில் கூட்டமாகக் கூடி என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்."

"ஒரு துறவியை மலைப்பாம்பு ஒன்று பிடித்து விழுங்கப் பார்த்தது. காப்பாற்ற முயன்றோம். ஆனால் துறவி இறந்து விட்டார். அவர் மரணமுக்தி அடைந்து விட்டாராம். அவரது உடலைப் போட்டுக் கொண்டு சரணம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்."

"அந்தப் பாம்பை என்ன செய்தார்கள்?"

"அதை ஒன்றும் செய்யவில்லை. அது போய்விட்டது. அதைத் தாக்கவும் கூடாது என்று கூறிவிட்டார்கள்..."

தேவதாசன் சொன்னதைக் கேட்டு வீரபாண்டியன் ஒரு வினாடி நெக்குருகிப் போனான்.

"என்ன ஒரு கருணை. தன்னை விழுங்கப் பார்த்த பாம்புக்கும் கருணை செய்கின்ற இந்த சன்யாசிகளை என்னவென்று சொல்வது?"

வீரபாண்டியன் சொன்னதைக் கேட்டு அவன் சகாக்கள் முகத்தில் அதிர்ச்சி.

''என்ன வீரபாண்டியா... நீ சிந்திப்பதைப் பார்த்தால் அவர்களுக்காக மனம் இரங்குகிற மாதிரி தெரிகிறதே?''

''ஆமாம். நமக்கு எதிரி களப்பன்தான். இந்த சன்யாசிகள் அல்ல. இவர்கள் ஈ, எறும்புக்கும் துரோகம் நினைக் காதவர்கள்.''

''ஆகையால்...''

''இவர்களைத் துன்புறுத்தாமல் இந்த மலையைவிட்டு அகற்றுவோம். களப்பிரர்களை மட்டும் அழிப்போம்.''

''புதிய முடிவுதான். அஹிம்சையை ஆயுதமாக கொண்டவர்களை அழிப்பது வீரமல்ல. திரும்பவும் சொல்கிறேன். களப்பன்தான் நமது எதிரி...''

''அப்படியானால் மலை மேல் உள்ள நமது தெய்வத் திருமேனிகள்...!''

''அவை வழிபாட்டுக்கு உரியவை. இந்த மலையில் அவை வழிபடப்படும். இந்த மலையும், ஊரும் வரும் காலத்தில் ஒரு க்ஷேத்திரமாகும்.''

''கல்தச்சர்களை என்ன செய்வதாக உத்தேசம்?''

''இவர்கள் சமணவாடிகளை எழுப்பியவர்கள். இனி நமக்கான ஆலயங்களை எழுப்புவார்கள்... எழுப்பினால் உயிரோடு விடுவோம். இல்லையேல் இவர்களையும் களப்பிரர்களோடு சேர்த்துக் கொன்று குவிப்போம்.''

வீரபாண்டியன் தனது தீர்மானங்களைச் சொல்லிக் கொண்டிருந்த அந்த அர்த்த ஜாமம் மீறிய இரவில் திடும்மென்று பூவாசம் கமழத் தொடங்கியது.

சுநாதமாக காதுகளிலும் கொலுசுப் பரல் ஒலி கேட்க ஆரம்பித்தது...

*யார் அது?*

சலங்கை சப்தம் வந்த திக்கைப் பார்க்கையில் வியப்பு கண்களைப் பிடுங்கிற்று. பதுமைக்கு நிகரான இளம் பெண் ஒருத்தி கையில் தீப்பந்தமுடன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள்!



அந்த அர்த்தஜாமம் கடந்து விட்ட இரவுப் பொழுதில் ஒரு சர்வலட்சணமான இளம்பெண் பந்தச் சுடர் தகதகப்பில் ஒரு பொற்சிலை போல வருவதைப் பார்த்து வீரபாண்டியனும் அவனது வீரசகாக்களும் வியந்து போய் நின்றனர். அந்தப் பெண்ணோ அவர்களை நெருங்கி துளியும் அச்சமோ, பதட்டமோ இன்றி அவர்களைத் துளையிடுவது போல பார்க்கத் தொடங்கினாள்.

வீரபாண்டியன் ஒரு க்ஷணம் சர்வத்தையும் மறந்துபோய் அவளது அழகில் கரைந்தவனாய் அவளை மெய்மறந்து பார்த்தபடி இருக்க, வீர்களில் ஒருவன் செருமினான். பின் ''வீரபாண்டியா... வீரபாண்டியா...'' என்று அவனையும் அசைத்து பிரக்ஞைக்கு பற்றி இழுத்தான். அடுத்த நொடிப் பொழுது அந்தப் பெண் கலகலவென சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

*சிரிப்பா அது...?*

லட்சம் பரல் கொண்ட வட்டச் சக்கரம் ஒன்று சங்கீதச் சப்தமெழுப்பியபடி உருண்டு ஓடினாற்போல் இருந்தது.

வீரபாண்டியனுக்கு மேலும் வியப்பாகி போனது. ''யார் நீ?'' என்று கேட்கக் கூட முடியாதபடி நாவண்ணங்களை பிரமிப்பும், திகைப்பும் அவனை அமுக்கியது இருந்தும் சுதாரிப்போடு கேட்கலானான்.

''பெண்ணே யார் நீ...?''

''நான்... நான்'' அவள் இமைகள் படபடக்க அவனைப் பார்த்துவிட்டு ''நீங்கள்தானே வீரபாண்டியன்?'' என்று கேட்டாள்.

''ஆமாம் என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?''

''உங்கள் பெயர் மட்டுமல்ல... நீங்கள் எதற்காக இந்த நல்லூருக்கு வந்திருக்கிறீர்கள். என்ன செய்யப் போகிறீர்கள் என்கிற சர்வத்தையும் நான் அறிவேன்.''

அவள் வியப்பைப் பெருக்கினாள்.

''புதிர் போடாமல் நீ யார் என்று கூறு...?'' அதட்டலாய் ஒருவன் அவளை நோக்கி அடித்து விடுவது போல முன் வந்தான். அந்தப் பெண் பதிலுக்கு அவனை ஒரு விதமாகப் பார்த்து உதட்டைச் சுழித்தாள். பின் ''கால நிமித்தகர் கங்காளர் என்பாரது வளப்பு மகள் நான். எனது பெயர் அருள்மொழி!'' என்றாள்.

நிமித்திகர் கங்காளர் பெயரை அவள் கூறியதுதான் தாமதம். வீரபாண்டியன் மிக வேகமாகக் கேட்கலானான்.

''நிமித்தகர் கங்காளர் மகளா?''

''ஆமாம்.''

''இவர் இந்த நல்லூரிலா வசிக்கிறார்? ''

''தற்போதைக்கு அவரது வசிப்பு இங்கேதான்.''

''இப்பொழுது அவர் எங்கே?''

''ஊருக்குள் இருக்கும் பாண்டிய வாணிகர் ஒருவரின் இல்லத்தில் இருக்கிறார். நீங்கள் இப்பொழுது இங்கே வருவீர்கள். உங்களை அழைத்துவர வேண்டும் என்பது அவரது கட்டளை...''

''ஆச்சரியமாக இருக்கிறதே... நாங்கள் இங்கு வந்திருப்பது அவருக்கு எப்படித் தெரியும்?''

''இதை நீங்கள் அப்பாவிடமே வந்து கேட்பதுதான் சரி...''

அடுத்த நொடியே வீரபாண்டியன் தன் சகாக்களைப் பார்த்தான்.

''நண்பர்களே வாருங்கள் போவோம். நிமித்திகரைப் பார்த்து வருவோம்.'' என்றான். பதிலுக்கு சகாக்கள் அவனை வெறித்தார்கள். குறிப்பாக கல்தச்சன் தேவதாசன் நடப்பது எதுவும் புரியாதவனாக மலங்க மலங்க விழித்தபடி இருந்தான்.

''பாண்டிய வீரர்களே... என்னை இங்கே கொண்டு வந்து விட்டீர்கள். என்னைக் காணவில்லை என்று மேலிருந்து யாரும் தேடி வந்தால் உங்களுக்குதான் ஆபத்து. என்னை விட்டுவிடுங்கள்.'' என்றான் பரிதாபமான குரலில்...



வீரபாண்டியன் அதை அலட்சியம் செய்தவனாக ''வாருங்கள் நண்பர்களே. நிமித்தகர் நமக்காகக் காத்திருக்கிறார். அவர் ஏதோ ஒரு சேதியைக் கூறப்போகிறார்.'' என்று நடையிட ஆரம்பித்தான்.

''வீரபாண்டியா என்ன இது...? நாம் வந்திருப்பது போரிட.... மலைமேல் இருக்கும் சமணவாடியை அழித்து அங்கு ஒடுங்கிக் கிடக்கும் நம் பெருஞ்செல்வங்களை மீட்க. இன்னும் சற்று நேரத்தில் விடிந்து விடும். அப்பொழுது எப்படி போரிடுவது என்று சிந்திக்காமல் யாரோ ஒரு நிமித்திகர் காத்திருக்கிறார், அவரைப் பார்க்கப் போகிறோம் என்றால் அது நன்றாகவா இருகிறது?'' ஒரு வீரன் திமிறலாகக் கேட்ட கேள்விக்கு அருள்மொழி என்னும் அந்தப் பெண் உதட்டைச் சுழித்து மீண்டும் ஒரு மாதிரியாகச் சிரித்தாள்.

''எதற்காக இப்படி அலட்சியமாகச் சிரிக்கிறாய்?''

''சிரிக்காமல் என்ன செய்வது...? என் தந்தை உங்களை அழைப்பது உங்கள் நன்மைக்காக. அது புரியாமல் , அருமை தெரியாமல் பேசினால் சிரிக்கத்தானே முடியும்?''

''வீரபாண்டியா... என்ன இந்தப் பெண் ஏதேதோ உளறுகிறாள்? நீயும் பார்த்துக் கொண்டிருக்கிறாய். யார் இந்த நிமித்திகர்?''

''நிமித்திகர் கங்காளர் ஒரு திரிகால ஞானி. நமது பெருந்தலைவராம் கடுங்கோன பாண்டியருக்கும உற்ற நண்பர்.''

''அப்படியானால் அவரே இங்கு வந்து நம்மைச் சந்திக்கலாமே. ஏன் ஒரு இளம் பெண்ணை விட்டு அழைக்கிறார். அதுவும் நள்ளிரவில்...?''

''காரணமில்லாமல் என் தந்தை எதையும் செய்ய மாட்டார். தாமதமின்றி புறப்படுங்கள். இன்னும் சற்று நேரத்தில் உங்களை ஆபத்து சூழ்ந்திட இருக்கிறது. உம்...'' அந்தப் பெண் அதுவரை இருந்த இயல்பிலிருந்து மாறி துரிதப்படுத்தினாள்.

வீரபாண்டியனும் "நான் நிமித்திகர் கங்காளரை எனது வழிகாட்டிகளில் ஒருவராகக் கருதுகிறேன். அவரைச் சந்திப்பதில் நன்மைதான் விளையும், உம் புறப்படுங்கள்..." என்றபடி புறப்பட்டான்.

"இந்தக் கல்தச்சனை என்ன செய்வது?"

"அவனும் நம்முடன் வரட்டும்..."

"ஐய்யோ உங்களுடன் நான் வந்து என்ன செய்யப் போகிறேன்?"

"உன்னை விட்டால் மேலே சென்று எங்களைப் பற்றிச் சொல்லி எல்லோரையும் விழிப்படையச் செய்து விடுவாய். பேசாமல் எங்களுடனேயே இரு. உம் புறப்படு..."

அடுத்த சில நொடிகளில் அந்தக் கல்மண்டபமே ஆளரவமின்றி வெறிச்சிட்டுப் போனது!

சீமணியநல்லூரே உறங்கிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே திண்ணைகளில் பிட்சுக்களும் சன்யாசிகளும் யோக நித்திரை யில் இருந்தார்கள். யோக நித்திரை என்பது ஒருக்களித்தோ, அல்லது புரண்டு படுத்தலோ இல்லாத ஒருவித சவப் படுக்கை. மார்பின் மீது இரு கைகளையும் கோர்த்த வண்ணம் விரைப்பாகப் படுத்திருப்பதாம். அப்படிப் படுத்திருப்பதை வைத்தே அவர்களை சன்யாசிகள் என்று தீர்மானித்து விடலாம்.

சில இடங்களில் வீட்டுமனைகள் முன்பாக புரவிகள் படுத்திருந்தன. அவற்றின் அவ்வப்போதைய கனைப்புச் சப்தம் அந்த இரவின் அமைதியில் மிகத் துல்லியமாகவே கேட்டது.

வீரபாண்டியனோடு நடக்கும் பாண்டிய வீரர்கள் குதிரைகள் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைக் கடக்கையில் அது நிச்சயமாக களப்பர்களின் மனையாகத்தான் இருக்கும் என்கிற திடமான முடிவோடு எச்சரிக்கையாக நடந்து சென்று வாணிகர் வீட்டையடைந்தார்கள்.



அந்தப் பெண்ணும் வித்தகி... சலங்கைப் பரல் ஒலிக்காதவாறு ஒரு துணியை காலுக்குக் கட்டிக் கொண்டு அவர்களுக்கு முன் நடந்து வந்திருந்தாள்.

வாணிகர் வீட்டுக் கூடத்தில் நிமித்திகர் கங்காளர் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி இருந்தார். வீரபாண்டியன் தன் சகாக்களோடு வரவும் பாய்ந்து வந்து மார்போடு தழுவிக் கொண்டு அவனை வரவேற்றார்.

"நிமித்திகரே நீங்கள் எங்கே இங்கே?"

"காரணமாகத்தான் வந்திருக்கிறேன் வீரபாண்டியா. நீங்கள் யாரும் பெருமான் மலைக்கரட்டில் ஏறிவிட வில்லையே...?"

"இல்லை... கரட்டின் காவலையும் சமண சன்யாசிகளின் நிலைப்பாட்டையும் கவனித்து வைத்திருக்கிறேன். எதற்காகக் கேட்கிறீர்கள் நிமித்திகரே...?"

"காரணமாகத்தான். அவசரப்பட்டு அங்கு யாரும் சென்று விட வேண்டாம். அங்கு இருக்கும் சன்யாசிகளுக்கும் பாதகம் இழைத்து விட வேண்டாம். அதைச் சொல்லவே உங்களை அழைத்து வரச் செய்தேன்."

"காரணம்?"

"அங்கே நமது தெய்வப் பிரதமைகள் வழிபாடும் பூசனைகளும் இன்றிக் கிடக்கின்றன. சராசரியாக நூற்று எண்பது ஆண்டுகள். அதாவது மூன்று ஆயுள் வட்ட சுழற்சிகளாக அவை அப்படிக் கிடக்கின்றன. அப்படிக் கிடப்பவைகளை கைக்கொள்வதற்கு உரிய முறைகள் உள்ளது! அது மட்டுமல்ல, பல தமிழ்ப்புலவர்களின் ஆன்மா அவற்றை காவல் காத்துக் கொண்டிருக்கிறது. உரிய சாந்தி பரிகாரம் செய்யாமல் அவற்றை நெருங்கக் கூடாது."

கங்காளர் அந்த வீரர்களுக்கு மிதமான அதிர்ச்சியளிப்பதுபோல பேசினார்.

"நீங்கள் என்னதான் கூறுகின்றீர்கள். கங்காளரே... சுதந்திர பாண்டிய நாடு உருவாகும் தருணத்தில் இங்கே இந்த

மலைக்கரட்டினை எதுவும் செய்யாமல் திரும்பிச் செல்லுங்கள் என்று கூறுகின்றீர்களா?''

- ஒரு வீரன் ஆக்ரோஷமாகக் கேட்டான். ''புரியாமல் பேசுகிறாய் வீரனே நீ... நான் வேதம் படித்தவன். ஆகமம் தெரிந்தவன். அதன் தளத்தில் நின்று கூறுகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக சன்யாசிகளை கொலை செய்வது கொடும்பாவமாகும். அந்த பாவத்தின் மேல் நின்று கொண்டு புதிய பாண்டிய நாடும் அதன் இறை செல்வங்களும் நிலை பெறக் கூடாது. அதை புரிந்து கொள்-''

''என்றால் சமண சன்யாசிகளை பொருட்படுத்தச் சொல்கின்றீர்களா? ஈசனே பெருங்கடவுள் என்பதை உணராமல் தனிப்பாதையில் செல்கின்ற அறிவிலிகளை நாங்கள் மனிதர்களாகவே நினைக்கத் தயாரில்லை. புரிந்து கொள்ளுங்கள். எங்கள் வரையில் அவர்கள் பிச்சைக்காரர்கள். அதிலும் கொடுமைக்கார களப்பனுக்கு துணை போகும் பிச்சைக்காரர்கள். வந்தேறிகள். இந்த மண்ணின் புனிதத் தனத்தை அழித்து அதன் மேல் தங்களுக்கான ஆலயத்தைக் கட்டிக் கொள்ளப் பார்த்தவர்கள். இவர்களை அழிப்பதால் யாதொரு பாவமும் வராது. வந்தாலும் அதைப் பற்றிய கவலை எங்களுக்கில்லை. சுதந்திரப் பாண்டிய மண்டலம் எங்கள் ஒரே குறி... கோழையாய் பேடிகளாய் அருகிப் போய்விட்டவர்களை பாண்டியர் கடுங்கோன் படாதபாடு பட்டு ஒன்று திரட்டியுள்ளார். ஒருவரல்ல. இருவரல்ல, நாளைய விடியலில் நாற்பதாயிரம் வீரர் மதுரையை வளைக்க உள்ளனர்.

களப்பனைக் கண்ட துண்டமாக்கி மதுரையை மீட்க உள்ளனர். மதுரையை மீட்டு நகரில் வெற்றி உலா வரும் சமயத்தில் இங்கே அடைக்கப்பட்ட லிங்க மூர்த்தங்களும் மற்ற உருவங்களும் அந்த உலாவில் பங்கு கொள்ள வேண்டும். அவ்வளவும் சொக்கநாதர் ஆலய ஆயிரக்கால் மண்டபம் சென்று சேர்ந்து ஒரு தூணுக்கு ஒரு லிங்கம் என்று எழுந்தருள வேண்டும். அதன் பின் அனுதினமும் பூசனைகள் கண்டு சைவம் தழைக்க வேண்டும். இதுவே எங்கள் குறிக்கோள். புரிந்து கொள்ளுங்கள்.



அனைத்திற்கும் மேலாய் அன்னை சொர்ண மீனாட்சியின் திருஉருவம் உங்கள் வசப்பட்டு உற்சவத் திருமேனியாக அது சொக்கர் ஆலயத்தில் இடம்பெற வேண்டும்.

அப்பொழுது தான் மதங்கனிச் சித்தரின் ஆத்மா சாந்தியும் மகிழ்ச்சியும் அடையும்.'' வீரன் ஒருவன் மேடை கிடைத்து விட்ட மாதிரி தனது ஆத்திரத்தைக் கொட்டினான். கங்காளருக்கு முகம் சிவந்து போயிற்று.

''மூடர்களே... நீங்கள் நினைப்பது போல எதுவுமே நடக்கப்போவதில்லை. தெரிந்து கொள்ளுங்கள்.'' என்றார் ஆவேசமாக...

''ஏன் நடக்காது... விடியட்டும் பாருங்கள்... அப்பொழுது தெரியும். மலையையே சுற்றி வளைப்போம். ஒரு பிச்சைக்கார சன்யாசியையும் விட மாட்டோம். கழுவில் ஏற்றுவோம். எங்கள் தமிழ்ப் புலவர்களை, எங்கள் மண்ணின் மக்களை அந்த களப்பன் எப்படிக் கொண்டு புதைத்தானோ அப்படி அவர்களையும் கொன்று புதைப்போம். பெருமான் மலைக்கரட்டை பெருமான்மலையாக்கி மலைக்கு மேலேயே அன்னை சக்திக்கோ இல்லை அப்பன் சிவனுக்கோ ஒரு ஆலயம் எழுப்பி இந்த மலைத்தலத்தை ஒரு சைவத் திருத்தலமாக்குவோம். ஆக்கியே தீருவோம்.''

''இல்லை... நீங்கள் புரியாமல் பேசுகிறீர்கள் அந்த மலைக்கு மேல் செல்லும் எவரும் உயிருடன் திரும்ப முடியாது. இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு இந்த மலை ஒரு புதிராகத்தான் இருக்கும். இருக்க முடியும். இந்த மலையை சில சதுக்க பூதங்கள் காவல் காத்தபடியே உள்ளன. அவைகளின் பிடியில் அகப்பட்டு அழிந்து போகாதீர்கள்.''

- கங்காளரின் கருத்துக்கு வாளை உருவிக் கொண்டு ஒருவன் அவர் முன் வந்தான். ''கங்காளரே... நீர் நிமித்திகர் அல்ல. களப்பனின் கையாள். எங்களை முடக்கிப்போட சதி செய்கிறீர்கள். எங்களை எப்படியாவது கட்டிப்போட நினைக்கும் உங்களை இங்கேயே இப்பொழுதே அழித்தால்தான் நாங்கள் திட்டமிட்டபடி வெற்றிக்கனியைப் பறிக்க முடியும். ஆகவே...''

- அந்த வீரன் ஓங்கிய வாளை க்ஷணமும் தாமதியாமல் கங்காளரின் சிரப்பகுதி நோக்கி வீசினான்.

கங்காளரின் தலைப்பகுதி துண்டு பட்டு தனியே விழுந்து அனைவரையும் அதிரவிட்டது!

பாஸ்கரனும் படித்தவரை போதும் என்பது போல அந்த நோட்டுப் புத்தகத்தை மூடினான். எதிரிலேயே கன்னத்தில் கை வைத்துக் கொண்டு பாஸ்கரனையே உற்றுப்பார்த்தபடி சங்க்கி...

''என்ன பாஸ் படிச்சு முடிச்சிட்டியா?''

''இல்ல சங்க்கி. இப்பதான் பாதி முடிஞ்சிருக்கு!''

''என்ன சொல்லுது அந்த நோட்டு...''

''ஒரே சரித்திர புருடா. ஒரு சரித்திர நாவலுக்கான எல்லா அம்சங்களும் நல்லாவே இருக்கு.''

''அப்படின்னா?''

''தமிழ்நாட்டு ஹிஸ்டரில பாண்டிய நாடான மதுரையைப் பற்றின கதை இது. மதுரைக்கு ஒரு இருநூறு வருஷத்துக்கு வரலாறே கிடையாது. செப்பேடோ, பட்டயமோ கல் வெட்டோ எதுவுமே கிடையாது. பாண்டிய நாட்டின் இருண்ட காலம்னு அதை வரலாற்று ஆய்வாளர்கள் சொல்றாங்க.

அந்த இருண்ட காலத்தைப் பற்றி இதுல இஷ்டத்துக்கும் அடிச்சிவிட்டிருக்கார் இதை எழுதியிருக்கிற அடுக்களையூர் அப்பாசாமித்துரை. ஒரு முழுக் கற்பனையான இதை கற்பனைன்னு சொன்னா எங்கே யாரும் மதிக்காம போயிடுவாங்களோன்னு அவருக்கு பயம்போல இருக்கு. அதனாலதான் சிகாமணி மித்ரர்ங்கிற ஒரு சன்யாசியோட ஆவி சொன்னதா சும்மா ரீலா விட்டுத் தள்ளியிருக்காரு...''

''சரி சுவாரஸ்யமான ஏதாவது இருக்கா...?''

''நிறையவே இருக்குது... அந்தக் கரட்டுல 1008 லிங்கங்கள் இருக்குதாம். அது மட்டுமில்ல. ஏராளமான



தெய்வச்சிலைகளும் இருக்குதாம். எல்லாம் களப்பனால அங்கு சிறைவைக்கப்பட்ட விக்கிரங்களாம்.

களப்பன் சமண சமயத்தையும் புத்த சமயத்தையும் ஆதரிச்சானாம். அந்த மலையிலேயும் சமண வாடி இருந்ததாம். அந்த சமண சன்யாசிகளை பாண்டிய வீரர்கள் கழுவிலேற்றிக் கொல்லத் துடிச்சிருக்காங்க. ஆனால் கங்காளர்ங்கற ஒரு நிமித்திகர் அது பாவம். அப்படிச் செய்யாதீங்க. அது மட்டுமில்ல அந்த மலை மேல ஏறினாலே செத்துடுவீங்கன்னு மிரட்டியிருக்காரு. அப்படி மிரட்டின வரையே ஒரு பாண்டிய வீரன் தலையை வாங்கிடறான்!''

''அப்புறம்?''

''இனிதான் படிக்கணும்.''

''அதையும் படிச்சு என்னதான் சொல்லுதுன்னு பார்த்துடுவோம்.''

''ஒரு சரித்திர நாவல் படிக்கற நேரமா இது சங்க்கி. இன்னும் சில மணி நேரங்கள்ள நான் அந்த மலைக்கு கிளம்பணும். நீ நம்மை வேவு பார்த்தவனைக் கண்டுபிடிக்கணும். எவ்வளவு வேலை இருக்கு?''

''ஓ.கே. நீ பிரயாணத்துக்கு தயாராகு, நான் அந்த ஸ்பைமேனோட பின்புலத்தை தெரிஞ்சிகிட்டு வந்து உன்னை சந்திக்கறேன்.''

- சங்க்கி உற்சாகமாகத் துள்ளிக் கொண்டு எழுந்தான். பாஸ்கரனும் அந்த நோட்டை மடக்கி எடுத்துக் கொண்டு கிளம்பத் தயாரானான்.

வாசல்வரை சென்றவன் திரும்பிப் பார்த்தான். ''சங்க்கி நீயும் என் கூட வரேன்னு சொல்லியிருக்கே. வந்தா எனக்கும் ரொம்ப உதவியா இருக்கும். நான் புறப்படுவதற்குள்ள உன்னால அந்த ஸ்பை மேனோட பின் புலத்தையும் மற்ற விஷயங்களையும் தெரிஞ்சுக்க முடியும்னு நம்பறியா?''

''நிச்சயமா பாஸ்கரா... அவங்க பார்வை இப்ப உன் மேல தான் இருக்கும். நீ உன் பாதைல போ. நான் அங்க எப்படியும்

வந்து சேர்ந்துடுவேன். அதே சமயம் உன்னை மோடிவேட் பண்ற அந்த கூட்டத்தோட ஆதி அந்தத்தை நிச்சயம் தெரிஞ்சுக்க முடியும்கற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு. நீ என்னை நினைக்காதே. புரொபசரோட சேர்ந்து அவர் சொல்றபடி கேட்டு நடந்துக்கப் பார், என்னை மறந்துடு. எனக்கு என்ன செய்யணும், அதை எப்படிச் செய்யணும்னு நல்லாவே தெரியும்.'' - சங்க்கி தன்னம்பிக்கையோடு பேசி பாஸ்கரனை அனுப்பி விட்டு தானும் வெளியே கிளம்பினான். சங்க்கியின் பைக் நீலகண்டன் நகர் ராயல் அபார்ட்மென்ட்டின் மூன்றாவது ப்ளோரைக் குறி வைத்துப் பறக்க ஆரம்பித்தது.

ராயல் அபார்ட்மென்ட்டின் மூன்றாவது ஃப்ளோரில் உள்ள அந்த ஃப்ளாட்டின் பால்கனியில் நின்றபடி பேசிக் கொண்டிருந்தான் அவன்.

''எல்லா ஸ்டேச்சூஸும் பெருமாள் மலைக்கரட்டுல பாஸ்கரன் கண்டுபிடிக்கத் தோதா தயாரா இருக்கு. அவ்வள வும் நிச்சயமா ஆயிரம் வருஷத்துக்கு முந்திய கல்லுல அன்றைய சிற்ப சாஸ்திரப் படியே செய்யப்பட்டவை.

பாஸ்கரனை கண்டுபிடிச்ச நொடி நம்ம ப்ளான்படி நாம மூவ் பண்ண வேண்டியதுதான். புரொபசர் அப்ப சொதப்பாம இருக்கணும். அது மட்டும் உங்க கைல இருக்கு. பாத்துக்குங்க.''

- அவன் யாரோடு பேசுகிறான் என்பது தெரியவில்லை. ஆனால் தொலைவில் வந்து நின்றபடி கூர்மையாகக் கவனிக்கத் தொடங்கியிருந்தான் சங்க்கி!

## 39

சங்க்கி 'பார்ப்பதை அவன் கவனிக்கவில்லை. செல்லை முடக்கியபடி திரும்பவும் ஃப்ளாட்டுக்குள் நுழைந்து மறைந்தும் போனான்.



'சங்க்கி'யின் கைகள் அவனின் துண்டுத் தாடியைத் தடவ ஆரம்பித்திருந்தன. அவன் யார்... யாரோடு பேசினான் என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

புத்தி க்ஷணத்தில் ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடித்தது.

நேராக பைக்கை நிறுத்தி விட்டு அபார்ட்மென்ட் வாட்ச்மேனை நோக்கி நடந்தான்.

''யார் சார் வேணும்?''

''இங்க தேர்ட் ஃப்ளோர்ல மிஸ்டர் சாந்தகுமார்ங்கறவர் இருக்காருல்ல...?''

''சாந்தகுமாரா.. அப்படி யாரும் இல்லியே . ரங்கராஜன், தாமஸ், சண்முகசுந்தரம்கறவங்க தான் இருக்காங்க. அதுல சண்முகசுந்தரம் சார் ஊர்ல இல்ல. ரங்கராஜன் வெளியே போயிருக்காரு. தாமஸ்தான் இருக்காரு. ஆமா எதுக்கு கேக்கறீங்க...?''

''ஒண்ணுமில்ல. ஒரு கொரியர் தபால் வந்திருக்கு. தரணும். அதுக்காகத்தான்.''

''அட்ரஸை சரியா பாத்தீங்களா?''

''ராயல் அபார்ட்மென்ட் தேர்ட் ஃப்ளோர்னுதான் போட்டிருக்கு. ஒருவேளை தாமஸ் சார் வீட்ல இருக்கற சாந்தகுமார்ங்கறவருக்கு வந்திருக்குமோ?''

''அப்படி அவர் வீட்ல யாருமே இருக்கறதா தெரியலியே. ஆனா எப்பப் பாரு புதுசு புதுசா யாராவது வந்து போய்க்கிட்டு இருப்பாங்க.''

''இங்க இருந்து இன்டர்காம் லிங்க் இருக்கா, கேட்டுப் பாத்துட்றேன்...''

''அதோ...''-வாட்ச்மேன் கைகாட்டினான். காட்டி விட்டு ஒரு குரைக்கத் தொடங்கிவிட்ட நாயை விரட்டுவதற்காக விலகினான்.

சங்க்கி மனசுக்குள்ளே 'லட்சுத்துல ஒரு வாட்ச் மேன்யா நீ' என்றபடியே போய் இன்டர்காமைத் தொட்டான்.

''தாமஸ் ஸ்பீக்கிங்...''

''சார் நாங்க நம்ப அபார்மென்ட் அஸோசியேஷன்ல இருந்து பேசறோம். நீங்க ஓட்டுப் போடறதுக்கான ஐ.டி. கார்டை வாங்கிட்டீங்களா?''

''இல்லையே... என்ன இப்போ அதுக்கு?''

''வாங்கிடுங்க சார்.. நாளைக்கு பாஸ்போர்ட், விஸான்னு ஒவ்வொரு விஷயத்துக்கும் கேப்பாங்க. நம்ப அஸோசியேஷன்ல எல்லாரும் வாங்கிட்டாங்க. வாங்காதவங்களுக்கு ஞாபகப்படுத்தறோம்.''

''ஓ தேங்க்யூ... அதுக்கு இப்ப நான் என்ன பண்ணணும்? எங்க போய் வாங்கணும்?''

''நாளைக்கு போட்டோ எடுக்க வருவாங்க. அப்ப நாங்க உங்களுக்கு தகவல் சொல்றோம்... வீட்லயே இருங்க.''

''இதுக்காக வீட்ல இருக்க முடியுமா? எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கே...?''

''செல்ஃபோன் வெச்சிருப்பீங்களே... நம்பர் தாங்க கூப்பிட்டுச் சொல்றோம். அப்ப வந்து போட்டோ எடுத்துட்டு போயிடுங்க...''

''குட்... நோட் பண்ணிக்குங்க. 98400...'' நம்பரைச் சொல்லி முடித்த மறுநொடி, சங்க்கி கைகளைக் குத்திக் கொண்டான்.

''டொக்... டொக்...''- கதவைத் திறந்தார் எஸ்.பி. அஜித்குமார். எதிரில் நிற்கும் சங்க்கியைப் பார்த்து ''வெல்கம் சங்க்கி...'' என்றார் ஸ்னேகத்தோடு. உள்ளே போனவன் ஒரு சிகரெட் புகையோடும், அவரை நன்கு தெரிந்த ஸ்னேகத்தோடும் விஷயத்தை கூற ஆரம்பித்தான்.

''அஜித் ஜீ... ஒரு முக்கியமான உதவியைக் கேட்டு வந்திருக்கேன். எழுத்தாளர் பாஸ்கரனைத் தெரியுமில்லியா?''

''நல்லாவே...''



''அவரை பயங்கரமா டேப் பண்ணி ஒரு தேடல்ல ஈடுபடுத்திக்கிட்டிருக்கு ஒரு கூட்டம். டேப் பண்ணின விதத்தைக் கேட்டா அசந்து போயிடுவீங்க. கொஞ்சம் கூட பகுத்தறிவால அதை ஒத்துக்க முடியாது.''

''ஐ.சீ.''

''ஏதோ ஒரு பெரிய சதி இதுக்குப் பின்னாடி இருக்கறதா பாஸ்கரனே ஃபீல் பண்ணி, என்கிட்ட வந்து கன்சல்ட் பண்ணினான். அதன் பிறகு தான் அவன் விஷயத்துல இறங்கினேன். ரொம்ப மர்மமாக யார் டேப் பண்றாங்க, யார் மோடிவேட் பண்றாங்க, எதுக்கு பண்றாங்கன்னே தெரியாத அந்த விஷயத்துல ஒரு சின்ன லீட் கிடைச்சிருக்கு.

நீலகண்டன் நகர் ராயல் அபார்ட்மென்ட்ல தேர்ட் ஃப்ளோர்ல குடியிருக்கற தாமஸ்ங்கறவன் இதுல சம்பந்தப்பட்டிருக்கற ஒருத்தன். அவன் செல்ஃபோன் நம்பர் கூட இப்ப என்கிட்ட இருக்கு.

இவனைப் பிடிச்சா பல உண்மைகள் தெரிய வரலாம். என் யூகப்படி ஒரு இன்டர்நேஷனல் லெவல்ல விஷயம் இருக்கலாம்னு நினைக்கிறேன்.''

''எப்படி?''

''மூட நம்பிக்கைக்கு பேர்போன சமணப்பட்டி பெருமாள் மலைக் கரடுதான் இந்த விஷயத்தோட களம். அதோட ஹிஸ்டாரிகல் பேஸ் ரொம்ப விசித்திரமானது. அங்க நிறைய கற்சிலைகள். குகைகள், கல்வெட்டுகள்லாம் இருக்கு. நம்ம ஆர்கியாலஜிகூட அந்தக் கரட்டோட முட்டாள்தனமான சில நம்பிக்கைகளுக்குப் பயந்துகிட்டு, முழுசா அதை அடாப்ட் பண்ணிக்காம விட்டுட்டாங்க.''

''முட்டாள்தனமான நம்பிக்கைன்னு எதைச் சொல்றீங்க சங்க்கி..''

''அந்த மலைக்கு யார் போனாலும், போறவங்களுக்கு தற்கொலை எண்ணம் வந்துடுதாம். அதனால் யாரும் போறதே இல்லை. மீறிப் போன பலர் இந்த ஒரு மாச கால அளவுல இறந்தும் போயிருக்காங்க.''

''நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆமா! அது உண்மை இல்லைன்னு சொல்றீங்களா?''

''என்ன அஜித் ஜீ நீங்களும் இப்படிக் கேக்கறீங்க. எப்படி உண்மையா இருக்க முடியும்? நாம எந்த காலகட்டத்துல இருக்கோங்கறத கொஞ்சம் யோசிச்சு பாருங்க.''

''இல்ல சங்க்கி... சபரிமலை மகர ஜோதி பத்திகூடத்தான் காண்ட்ரவர்ஸி இருக்கு. ஆனா பக்தர்கள் அதை கேர் பண்றது இல்லியே. நம்பிக்கையாதானே வணங்கறாங்க?''

''அந்த நம்பிக்கைக்குப் பின்னால பெரிசா உயிர் இழப்பு, பெரிய அளவுல மர்மமான செயல்பாடுன்னு எதுவுமே இல்லை. ஆனா இந்த விஷயம் அப்படி இல்லை. தற்கொலைங்கற பேர்ல கொலைகள் செய்யப்பட்டிருக்கலாம்கறது என் எண்ணம்.''

''உங்க எண்ணத்தை விடுங்க, ஆதாரமிருக்கா?''

''இந்த தாமஸை பிடிச்சா தானா எல்லாம் கிடைச்சிடும். எல்லாம் தெரிஞ்சிடும்.''

-எஸ்.பி. யோசிக்க ஆரம்பித்தார்.

''என்ன சிந்தனை. நான் சொல்ற விஷயம் சாதாரணமானதல்ல. பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு விஷயம்.''

''கோடி ரூபாய் மதிப்பா?''

''ஆமாம். பாஸ்கரன் சமணப்பட்டி பெருமாள் மலைக் கரட்டுல புதையல் போல பல விஷயங்களை எடுக்கப் போறான். அவனால்தான் எடுக்க முடியும்கறது தான் இந்த அசைன்மெண்ட்டோட மேஜர் பாய்ண்ட்!''

''பாஸ்கரனால்தான் முடியும்னா... எப்படி?''

''மத்தவங்களால அதை எடுக்க முடியாது. ஈவன் எடுக்க முயற்சி செய்தவங்கள்லாம் அவுட். பாஸ்கரனுக்காகவே அந்த மலைக்கரட்டுல பல விலை மதிப்பில்லாத சிலைகள், விக்கிரகங்கள் காத்துக்கிட்டிருக்கு. அவன் தான் அவைகளை எடுக்கணும். அதனால அவனுக்கு பேரும் புகழும்



கிடைக்கணும்கறதுதான் விதிங்கறது. புரொபசர் மீனாட்சி சுந்தரம் வலியுறுத்தி சொல்லிக் கிட்டிருக்கற ஒரு விஷயம்.''

''இதுல அவர் எப்படி வந்தாரு?''

''அவர் மட்டுமல்ல, அவருடைய பொண்ணு அருள்மொழி, தட்சிண ரகசியம்கற ஒரு பழைய புத்தகம் வரை பல விஷயங்கள் இதுல சம்பந்தப்பட்டிருக்கு. சுருக்கமா சொல்லப் போனா மோசடிகள் பலவிதமா நடக்கும். பணத்தால மோசடி, பக்தியால மோசடின்னு... இது சரித்திர மோசடி..''

''சரி இப்ப பாஸ்கரன் எங்கே?''

சமணப்பட்டி ரயில் நிலையத்தில் ஓட்டப்பந்தயக் காரனைப் போல தேங்கி நின்ற பாசஞ்சரில் இருந்து உதிர ஆரம்பித்தான் பாஸ்கரன். கூடவே அருள் மொழி, சக்திவேல்!

ஸ்டேஷனில் சில வவ்வால்கள் மட்டும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. பட்டை கழண்ட சில ட்யூப் லைட்டுகள், ஈசல் பூச்சிகளின் முத்தங்களோடு டல்லடித்துக் கொண்டிருந்தன.

''வாங்க மிஸ்டர் பாஸ்கரன்...'' ஸ்டேஷன் மாஸ்டர் நரசிம்மன் கையில் விளக்கும், பச்சைக் கொடியமாக வரவேற்றபடி வந்தார்.

பாஸ்கரன் சிரித்தான்.

''எனக்குத் தெரியும் நீங்க திரும்ப வருவீங்கன்னு, கொஞ்சம் இருங்க...'' சொன்னபடியே விசில் எடுத்து ஒரு ஊது ஊதினார். பச்சைக் கொடியையும் ஆட்டி ரயிலைக் கிளம்பி விட்டு, விட்டு திரும்ப அவன் பக்கம் வந்தார்.

''அப்புறம் எப்படி இருக்கீங்க?''

''நல்லா இருக்கேன்... நீங்க எப்படி இருக்கீங்க?''

''எனக்கென்ன... சரி இந்த முறை எங்க தங்கறதா உத்தேசம்?''

-சக்திவேல் அதற்குள் குறுக்கே புகுந்து பதிலைச் சொன்னான்.

''சாரும், மேடமும் இன்னிக்கு ஸ்டேஷன் ரூம்லதான் தங்கப் போறாங்க.''

''தெரியுமே... அதுக்காகவே புதுசா லைட்டெல்லாம் போட்டு சுத்தப்படுத்தி வெச்சிருக்கேன் வாங்க...'' முன்னால் நடக்க ஆரம்பித்தார் அவர். அருள்மொழி மிரள மிரளப் பார்த்தபடி பாஸ்கரனோடு பின் தொடரத் தொடங்கினாள்.

''சக்தி நீங்க வீட்டுக்குப் போகலையா?''

''போகப் போறது கிடையாது சார், வீட்டுக்குப் போனா என்னைக் கோவிச்சாலும் கோவிப்பாங்க.''

''அதுக்காக போகாமலே இருந்து விட முடியுமா?''

''போவேன் சார்... நாளைக்கு நம்ம விஷயம்லாம் முடிஞ்ச நிலையில நல்ல பேரோட போவேன்.''

- அவன் சொன்னதைக் கேட்டபடியே அறைக்கதவைத் திறந்தார் ஸ்டேஷன் மாஸ்டர் நரசிம்மன்.

மூவரும் உள்ளே நுழைந்தார்கள். பாஸ்கரன் ஒரு க்ஷணம் இதுபோல முன்பு வந்தபோது தன் மீது விழுந்த பேப்பர் பந்துகளை நினைத்துக் கொண்டான். அவ்வளவுக்கும் காரணம் தூக்கில் தொங்கி உயிரை விட்ட நரசிம்மனின் மகளான வைஷ்ணவி என்பதும் ஒரு வினாடி நினைவில் எழும்பி அடங்கியது.

வைஷ்ணவி பற்றி அருள்மொழியிடம் சொன்னால் அவள் ஓடினாலும் ஓடிவிடலாம் என்று நினைத்தவன் வாயே திறக்கவில்லை.

அறை மூன்று கட்டில்களோடு தயாராக இருந்தது. போன முறைகூட ஒரு கட்டில்தான் இருந்தது. நரசிம்மனுக்கு ஒருவேளை இப்படி மூன்று பேராக வரப்போவது தெரியுமோ? கேள்வி உள் ஓடியது.

''மணி எட்டாகுது... என்ன சாப்பிட்டீங்க. நானே ஊருக்குள்ள போய் சாப்பிட எதையாவது வாங்கிகிட்டு வரேன்.''- என்ற நரசிம்மன் ஃபேன் சுவிட்சைப் போட்டார்.



''உங்களுக்கு எதுக்கு சார் சிரமம்?''

''சிரமமில்ல பாஸ்கரன். ஏதோ என்னாலான உதவி. எவ்வளவோ பெரிய காரியமெல்லாம் பண்ணப் போறீங்களே?'' நரசிம்மனின் பதில் பாஸ்கரை, சக்திவேலை நோக்கிப் பார்க்கவிட்டது. கண்ணிரண்டும் 'சக்தி இவருக்கு எப்படித் தெரியும்?' என்கிற கேள்வியை ஏந்திப் பிடித்தன.

''என்ன பாக்கறீங்க.. பேப்பரில பார்த்தேன். அதான் கொட்டை எழுத்துல போட்டிருக்காங்களே..'' சாதாரணமாகச் சொன்னபடியே வெளியேறிப் போனார் அவர். தீவிர யோசனையோடு போய் கட்டிலில் அமர்ந்தான் பாஸ்கரன். கூடவே சேர்ந்துகொண்டு அமர்ந்தாள் அருள்மொழி. ஃபேன் காற்றை மிறி வியர்த்திருந்தாள். சக்திவேல் ஹேண்ட்பேக்கை ஷெல்ப்பில் செருக்கிக் கொண்டிருந்தான்.

''என்ன அருள்... பயமா இருக்கா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை.''

''இந்த ஸ்டேஷன் மாஸ்டர் ஒண்ணும் லேசுப்பட்ட ஆள் இல்லை. இந்த ரூம்ல ஒரு ஆவி இருக்கறதா சொல்லி எனக்கு அல்வா கொடுத்தவர்...''

''சார் அது அல்வா இல்லை சார். அது உண்மைதான்!'' - வேகமான வக்காலத்து சக்திவேலிடம் இருந்து வந்தது. பாஸ்கரன் பதிலுக்கு சிரித்தான். பக்கத்தில் குப்பை கூடை அதில் ஒரு காகிதப் பந்து சுருண்டு கிடந்தது. அதை எடுத்தவன் அருள்மொழியைப் பார்த்தபடி, ''இப்படித்தான் அருள்மொழி நிறைய காகிதப் பந்துங்க மேல வந்து விழுந்துச்சு. கேட்டா இந்த ஸ்டேஷன் மாஸ்டர் மகள் ஆவியா சுத்திக்கிட்டு இருக்காளாம். அவதான் இப்படி எழுதிப் போட்றவளாம். ஆவிக்கு பேனா பேப்பர்லாம் எங்க இருந்து கிடைக்குதுன்னு தெரியலை.''

சிரித்தபடி அந்த சுருண்டு கிடந்த தாளைப் பிரித்தான். அதில் புரொபசர் மீனாட்சிசுந்தரத்தின் கையெழுத்தில் 'பாஸ்கரனுடன் என் மகளும் வருகிறாள். ஆவி விளையாட்டு

காட்டாமல் நன்கு உபசரிக்கவும். நமது விஷயம் க்ளைமாக்ஸை நெருங்கிவிட்டது. மீ.சு...'' என்று இருந்தது.

- படித்த பாஸ்கரனுக்கு குப்பென்று வியர்த்தது.

''அதுல என்ன எழுதியிருக்கு பாஸ்கர்... இப்படி வேர்த்திருக்கே உங்களுக்கு...'' என்றபடி அருள்மொழியும் நெருங்கி வந்தாள். பாஸ்கரன் வேகமாக திரும்பவும் காகிதத்தைக் கசக்கி குப்பைக் கூடையில் போட்டுவிட்டு ''ஒண்ணுமில்லை.'' என்றபடியே சக்திவேலைப் பார்த்தான். சக்திவேல் கிளம்பவதற்குத் தயாராக டார்ச்லைட், ஃபோகஸ் லைட், நைலான் கயிறு, எதற்கும் இருக்கட்டும் என்று கத்தி, கேமரா இவைகளை எடுத்து வெளியில் வைத்தபடி இருந்தான். பாஸ்கரனிடம் இதயத்துடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது!

சங்கி கண்டறிந்த தாமஸின் செல்ஃபோன் நம்பரை ட்ரேஸ் செய்ததில் அவன் மதுரையிலேயே மிகப் பிரபலமான ஒரு தொழிலதிபர் சாம்ராஜோடு பேசியது முதலில் தெரியவந்திருந்தது. அந்த தொழிலதிபரின் பின்புலத்தில் அவர் ஒரு சிவன் கோவில் அறங்காவலராக இருப்பதும், அந்தக் கோவிலில் கூட ஒரு முறை பஞ்சலோக நடராஜமூர்த்தி விக்கிரகம் முதல் சர்வமும் காணாமல் போய், இன்றுவரை கண்டுபிடிக்கப்படாததும் சிகப்பு மையால் அடிக்கோடிட்டு சொல்லப்பட்டிருந்தது.

''சங்க்கி.. உங்க யூகம் சரிதான். ஒரு சிலை கடத்தற குழுதான் இந்த அசைன்மென்ட்ல ரொம்ப தீவிரமா இருக்காங்க. இந்தத் தொழிலதிபருக்கு ஒரு ரைட் ஹேண்டும் இருக்கான். இவன் எமகாதகன்னு சொல்றாங்க. பாருங்க இவன் தான் அவன்...''

-எஸ்.பி. அஜித்குமார் தூக்கிப் போட்ட புகைப்படத்தைப் பார்த்த சங்க்கிக்கு தலையைச் சுற்றியது.

புகைப்படத்தில்...?



# 40

புகைப்படம் சங்க்கியை ஒரு மிரட்டு மிரட்டியது. ''என்ன சங்க்கி... உங்களுக்கு இந்த நபரை தெரியுமா?'' - அஜித்குமார் வேகமாகக் கேட்டார்.

''தெரியுமாவா... ஏன் மிஸ்டர் அஜித், கல்பிரிட்ஸ் எல்லாம் நம்ப முடியாத தோற்றத்துலயும், சாந்த சொரூபியாவும்தான் இருப்பாங்களா?''

''உங்க வரைல இவன் அப்படித்தான் நடந்துகிட்டு இருக்கானா?''

''பின்ன... நான் மனசை துளை போட்டு உள்ள நுழையறவன். அது என் தொழிலும்கூட. ஆனா இவன் எனக்கே அல்வா கொடுத்துருக்கானே...''

''யானைக்கும் அடிசறுக்கும்னு சும்மாவா சொன்னாங்க.''

''அதெல்லாம் ரொம்ப பெரிய வார்த்தை சார். ஆமாம் இவ்வளவு தூரத்துக்கு இவங்களைப் பத்தி தெரிஞ்சு வெச்சுகிட்டு ஏன் இப்படி விட்டு வெச்சிருக்கீங்க?''

''எந்த ஆதாரத்தை வெச்சு உள்ள போட்றது சங்க்கி...?''

''அதான் இப்ப கொடுத்துட்டேனே.''

''இது போதாது... கையும் களவுமா பிடிக்கறதுன்னு ஒண்ணு இருக்கு. அதுலயும் இன்டர்நேஷனல் லெவல்ல ஒரு விஷயம்னு சொல்லும்போது அதுக்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் வேணும்.''

''ஆதாரங்கள் வேணும்னு உக்காந்துகிட்டிருந்தா கிடைச்சிடுமா, கிளம்புங்க. இப்ப மணி பத்தரை. பாஸ்கரன் சமணப்பட்டி பெருமாள் கரட்டுல ஏற ஆரம்பிச்சிருப்பான். நாமளும் போனா நிறைய ஆதாரங்களை வசப்படுத்தலாம்.''

''இங்க இருந்து டிராவல் பண்ணி போகவே மூணு மணி நேரத்துக்கு மேல ஆயிடுமே...''

''ஆகட்டுமே... நடு ராத்திரிக்கு மேலதான் விஷயம் சூடுபிடிக்கவே போகுது. செல்ஃபோனை கொடுத்து விட்டிருக்கேன். அரை மணிக்கொரு தகவலை பாஸ்கரன் தந்துடுவான். அவன் தரப்போற தகவலுக்கு தகுந்த மாதிரி நாமளும் பிளான் பண்ணலாம்.''

''இப்ப கடைசியா எப்ப அவர் கிட்ட இருந்து தகவல் வந்தது?''

- அஜித்குமார் கேட்ட நொடி இதோ என்கிற மாதிரி செல்ஃபோன் அலறியது. சங்கியும் எடுத்து அதன் திரையைப் பார்த்தான்.

''பாஸ்கரன்தான்'' - உதடு கூவியது.

''ஹலோ பாஸ்...''

''சங்கி நான் இப்ப அடிவாரத்துல இருக்கேன். வழக்கம் போல சரியான புகை மூட்டம். என் கூட அருளும், சக்திவேலும் இருக்காங்க. மேல ஏற வேண்டியதுதான். நீ எப்ப வரே?''

''நான் மூணு மணி நேரத்துல அங்க இருப்பேன். ஆனா நான் வரப்போறதா தயவு செய்து நீ ஆக்ட் பண்ணாதே. பயந்துட்டு வர மறுத்துட்டதா தயவு செய்து உன் சகாக்கள் கிட்ட வருத்தப்பட்டுக்கோ. மற்றபடி நீ உன் பாட்டைல போ. ஆமா புரொபசர் எங்க இருக்கார்?''

''தெரியல. ஒண்ணுமட்டும் உறுதி. அவர் இந்த ஊருக்கு எனக்கு முந்தி வந்துட்டார். நிறைய முன் ஏற்பாடுகள் செய்து வெச்சிருக்கார்.''

''எல்லாத்தையும் பிறகு பேசிக்கலாம். இப்ப நீ கல்வெட்டு எழுத்து சொல்றபடி நடந்துகிட்டு தங்கச் சிலையையும், மற்ற விஷயங்களையும் கண்டு பிடிக்கப்போற ஒருத்தன்.''

''நிச்சயமா... ஆனா அந்த கல் பிரிட்டை கண்டு பிடிச்சிட்டியா?''

''விடுவேனா... இப்பகூட எஸ்.பி. அஜித்குமார் சார் ஆபீஸ்ல இருந்துதான் பேசறேன். எனக்காக ஆபீசுக்கு வந்து ரொம்ப மெனக்கெட்டுகிட்டு இருக்கார் மிஸ்டர் அஜித்.''



''தேங்க்யூப்பா. நீங்க இருக்கற தைரியத்துல தான் நான் இப்ப மேல போறேன்.''

''ஸ்டுப்பிட், நீ ஒரு ஹீரோ, ஆவரேஜாட்டம் பேசாதே, தைரியமா செயல்படு.''

சங்கி ஊக்கப்படுத்திவிட்டு செல்லை முடக்கினான். குத்துப் பார்வை பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்த அஜித்குமாரைப் பார்த்தான்.

பார்வையே 'புறப்படலாமா?' என்று கேட்டது. ஒரு நிமிஷம் என்ற அஜித்குமார் கம்ப்யூட்டர் திரைமுன் போய் அமர்ந்தார். அவசரமாக ஒரு இ-மெயில் தயார் செய்தார்.

ஒரு முக்கியமான அசைன்மெண்ட்டில் தானே நேரில் இறங்க வேண்டிய கட்டாயத்தை தகுந்த வார்த்தைகளில் போட்டு தனது துறையின் தலைமைக்கும், முதல்வருக்கும் செய்தியாக அனுப்பிவிட்டு க்ரைம் பிராஞ்சு ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் சண்முகராஜை செல்லில் பிடித்தார். ''சண்முகராஜ் ரொம்ப அவரமான விஷயம் இது. மிஸ்டர் சாம்ராஜ் இப்ப எங்க இருக்கார், என்ன செய்து கிட்டிருக்கார்னு சொல்ல முடியுமா?''

''நோ சார்... அவர் மேல உள்ள விஷனை விலக்கிக்கிட்டு பல மாசம் ஆயிடிச்சே?''

''அப்படியா... பரவால்ல - கொஞ்சம் அவரை இம்மீடியட்டா கண்காணிக்க முடியுமா?''

''ஷ்யூர் சார்... அப்படியே இதுக்கான ர்சனை என் ஹெட்டுக்கு ஒரு இ-மெயில்ல சொல்லிட்டாகூட போதும்.''

''டோன்ட் ஒர்ரி... முதல்வர் வரைக்கும் இந்த விஷயத்தைக் கொண்டு போயிருக்கேன். நீங்க தான் இனி கருணை செய்யணும்.''

'பெரிய வார்த்தை எதுக்கு சார். இவ்வளவு தூரம் கேக்கறீங்கன்னா இதுக்குப் பின்னால பயங்கரமா ஏதோ இருக்குன்னு தெரியுது இல்லியா சார்...''

''ஆமாம். ஏதாவது விபரீதமா தெரிஞ்சா என்னை காண்டாக்ட் பண்ணுங்க. செல் நம்பர் இருக்குல்ல?''

''இருக்கு சார்.''

- அஜித் குமாரின் நாலாவித பிரயாசைகளும் வலைவீச்சும் சங்கிக்கு பூஸ்ட்டை கலக்கிக் கொடுத்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அஜித்குமார் ஒரு அவசர அடி மேக்கப்பில், புருவம், மீசையில் கூடுதல் முடியோடும், விக்கில் முற்றிலும் மாறுபட்ட ஒருவித ஹேர் ஸ்டைலோடும் வந்த நின்றபோது சங்கி திணறிப் போய்விட்டான்.

''என்ன சார் இது... ஸ்டேஜ் ஹீரோ கூட இவ்வளவு ஃபாஸ்டா மேக் அப் சேஞ்ஜ் பண்ண மாட்டான்.

''பாராட்டு அப்புறம். இதெல்லாம் தொழில் ரகசியம். கமான்!''

- அடுத்த ஐந்தாவது நொடியில் ஒரு அழுக்கு நிற மாருதி கார் துளிகூட போலீஸ் அடையாளங்கள் இல்லாதபடி சீறிக் கொண்டு புறப்பட்டது!

கட்டிலின் மேல் உட்கார்ந்து கொண்டு சுருட்டை வலிவோடு இழுத்துக் கொண்டிருந்தார் கோனார் தாத்தா. அங்கங்கே வீடுகளில் எல்லோரும் தூங்கிவிட்டிருந்தார்கள். சில சிம்னி விளக்குகள் மட்டும் அழுது வடிந்து கொண்டிருந்தது.

சுவர்க் கோழிகள் காதைத் திருகுகிற மாதிரி கத்த, வட்டமாக டார்ச்லைட்டை உருட்டிக் கொண்டு ஒருவன் வீதியில் வந்துகொண்டிருந்தான்.

தாத்தாவை நெருங்கியவன் அவர் எதிரில் தன் முகத்தை டார்ச் லைட்டை அடித்து காண்பித்தான்.

''வாங்க சாமி... ஒண்ணும் பிரச்சினை இல்லையே?''

''இதுவரை இல்லை. ஊர்ல எந்த குழப்பமும் இல்லையே?''



''நான் இருக்கிறவரை அதுக்கெல்லாம் இடம் கொடுப்பேனா. ஆமா இன்னியோட எல்லா விசயமும் முடிஞ்சிடுமா?''

''முடிஞ்சிடும். முடிச்சே தீரணும்.''

''அதுசரி... அப்ப நாளைல இருந்து நம்ம கரட்டுக்கு ஒரு தனி பேர் வந்துடும்னு சொல்லுங்க.''

''நிச்சயமா... பத்திரிகைக்காரங்களும், டி.வி.காரங்களும் கூட்டம் கூட்டமா படையெடுக்கப் போறாங்க. இந்த மலை உலக அளவில பாக்கப்படப் போவுது. உலக அதிசயம் ஏழுன்னு சொல்வாங்க. இனிமே எட்டு. அது உங்க ஊர்தான்.''

''என்னவோ சாமி, உங்களைத்தான் நான் மலை மாதிரி நம்பியிருக்கேன். காலம் காலமா நாங்க நம்பிகிட்டு இருக்கற விஷயங்களுக்கெல்லாம் ஒரு முடிவும், அதனால் ஒரு பேரும் வந்தா ஏதோ இந்த ஊருக்கு ஒரு மதிப்பு தன்னால வரும்னு சொன்னீங்க. வந்தா சரி...''

''வந்தே தீரும். இந்த வானம் பார்த்த பூமி இனிமே லட்சக் கணக்கான பேர் வந்துட்டு போற ஒரு க்ஷேத்திரம் ஆயிடும். ஒரு லிங்கத்துக்கு ஆயிரம் லிங்கம்ல மலை மேல இருக்கு. இந்த பூமியில ஒரு மலை மேல இவ்வளவு லிங்கங்கள் எங்கயும் இருந்தது கிடையாதே. அதோட எத்தனை வருஷத்து பழமையானதுன்னும் தெரியவந்தா கூட்டம் கட்டி ஏறும்.''

''ஏறணும். சென்ட் நூறு ரூபாய்க்கு போக மாட்டேங்குது நிலம். அது ஆயிரம் பத்தாயிரம்னு விக்கணும். என் சந்ததிங்க என் கண் எதிர்க்க பெரிய காசுக்காரங்களா ஆனா அதுபோதும் எனக்கு,''

''ஆகும்.. ஆகியே தீரும். சமணப் பட்டி மட்டுமில்ல, வர்ற வழியில இருக்கிற பத்தொன்பது கிராமத்துக்கும் நாளைல இருந்து ஒரு புது உயிர் வரப்போகுது. இதுக்காக எவ்வளவு சிரமப்பட்டிருப்போம். எத்தனை பேரைக் கொன்னுருப் போம்?''

''எல்லாம் சரிங்க சாமி... நாளைக்குப் பிறகு யார் வேணா மலைக்கு மேல ஏறலாங்களா?''

''அதுல என்ன சந்தேகம். ஏறிப் பாக்கனும். எல்லா ஊர்லயும் ஐம்பொன் விக்கிரகம்தானே கோவில்ல இருக்கும்? ஆனா இங்க மட்டும்தான் அசல் தங்கத்துலயே விக்கிரகம். அதுவும் சாதாரண விக்கிரகம் இல்ல. மதங்கனி சித்தர்ங்கறவர் ரசவாதத்தால செய்த விக்கிரகம். வேண்டிக்கறவங்களுக்கு வேண்டிக்கிட்டதை கொடுக்கப் போற தெய்வம் அது. திருப்பதிக்குப் பிறகு இந்தியாவுல அதிகம் கூட்டம் வந்து போகப்போற ஊர் இனி சமணப்பட்டிதான். சபரிமலைக்குப் போறவங்க வாபரைக் கும்பிடற மாதிரி இனி உங்க சாத்தானையம் எல்லாரும் கும்பிடுவாங்க. கவலைப்படாதீங்க.''

- அவன் யாரோ... ஆனால் பேசியதில் ஒரு ராட்சஸத் திட்டத்தின் பரிமாணங்களை உணர முடிந்தது.

''கடைசியா உனக்கு ஒரு விஷயம். நாமபோட்ட பிளானைப் பத்தியோ, அதுக்கு நீ ஒத்துழைச்சதைப் பத்தியோ யார்கிட்டேயும் மூச்சுவிடக் கூடாது.''

''ஐய்யோ என்ன சாமி இது... சொன்னா நானும்ல மாட்டிக்குவேன்.''

''அப்படி இல்ல.. ஒருவேளை, ஒரு வேளைதான். போலீஸ்காரங்க மோப்பம் பிடிச்சு வந்தா, இல்லை பத்திரிகைக்காரங்க குடைஞ்சாங்கன்னா தப்பித்தவறிக் கூட வெளிய சொல்லிடக்கூடாது.''

''நான் சொல்ல என்னங்க இருக்கு. என் சொத்து ஒரு அம்பது ஏக்கர் புஞ்செய்க்காடு இருக்குது. அதுக்கு நல்ல விலை கிடைச்சாப் போதுங்க.''

''கிடைக்கும். அது நீ சாதிச்சுப் பேசறதுலதான் இருக்கு. எப்பவும் சாமி சம்பந்தப்பட்ட விஷயங்கள்ல ஒரு கூட்டம் நம்பிக்கையா வந்தா ஒரு கூட்டம் அதுக்கு எதிரா பேசும். நாம எடுத்த எடுப்புல ஒரு பெரிய பேரை அடைஞ்சாலும் அது நிலைச்சிருக்கறது நம்ம ஒத்துமைலதான் இருக்கு.''

''இதை எனக்கு சொல்லணும்ங்களா... நீங்க தைரியமா போய்ட்டு வாங்க சாமி...''



- தாத்தா அவனுக்கு விடை கொடுக்கும் போது மணி சரியாக பனிரெண்டு!

பெருமாள் மலைக்கரட்டின் மேல் தளம்! நட்சத்திரமும் நிலவும் சேர்ந்து வேடிக்கைப் பார்க்க, அந்த நள்ளிரவிலும் ஒரு கூட்டமாய் ராணுவப் பிரிவுபோல ஒரு நாரைக் கூட்டம் அணிவகுத்தபடி பறந்து கொண்டிருக்க, உச்சியின் சமதளப் பாறைமேல் பாஸ்கரனும் அருள்மொழியும் சக்திவேலும் ஒரு சேர வந்து சேர்ந்தார்கள்.

மார்பெல்லாம் வியர்வை ஈரம். சட்டை பட்டனைத் திறந்து விட்டுக் கொள்ளவும் காற்று வந்து பனிக்கட்டியை வைத்து ஈஷிவிட்ட மாதிரி ஒரு சிலுசிலுப்பை பாஸ்கரனுக்கு ஏற்படுத்திற்று.

''சார் ஒரு அஞ்சு நிமிஷம் ரெஸ்ட் எடுப்போமா?'' சக்திவேல் மூச்சிளைத்தபடி கேட்டான்.

''அஞ்சு நிமிஷம் இல்ல, அப்படியே விடியவிடிய இங்கேயே தூங்கிடலாம் போல இருக்கு''- என்று பாஸ்கரன் சொன்ன மறுநொடி ஒரு செல்ஃபோனின் சங்கீத முனகல் காதில் விழுந்தது.

அருள்மொழியும் தன் ஹேண்ட் பேக்கில் இருந்து அதற்குக் காரணமான தன் செல்லை எடுத்து காதைக் கொடுத்தாள்.

கூப்பிட்டது புரொபசர்தான்...

''அம்மாடி மேல தானே இருக்கீங்க?''

''ஆமாம்ப்பா...!''

''தாமதிக்காம குகைக்குள்ள போய் தேடலைத் தொடங்குங்க. கல்வெட்டுப் பாடலோட கருத்துப்படி நாளைய தேவ முகூர்த்தமான காலை வேளை அதாவது நாலுமணிக்கு மேலான பொழுதுல அந்த மலை மேல சொர்ண மீனாட்சி ஆயிரக்கணக்கான வருஷ தன்னுடைய உறக்கத்தை நீக்கிகிட்டு வெளிப்பட்டாகணும். இன்ஃபாக்ட் மதுரை மீனாட்சியம்மன் கோவில்லயும் அம்மன் நாளைக்குத்

தான் சுவாமி சுந்தரேஸ்வரர் கிட்ட இருந்து செங்கோல் வாங்கற நிகழ்ச்சி நடக்க இருக்குது. என்ன ஒரு ஒத்துமை பார்த்தியா?''

''சரிப்பா நான் இப்பவே பாஸ்கரன் கிட்ட சொல்றேன்.''

''சொல்றது ஒரு பக்கம். பாஸ்கரன் தன் தேடல்ல அந்த விக்கிரகத்தைக் கண்டறியும்போது அதை நீ மறக்காம வீடியோ காமிராவால ஷூட் பண்ணிடு. அந்தக் காட்சி ரொம்ப ரொம்ப முக்கியம்.''

''சரிப்பா. இதை எத்தனை தடவை சொல்வீங்க?''

''எல்லாம் ஒரு எச்சரிக்கைக்குத்தான். அந்த விக்கிரகத்தைக் கண்டுபிடிச்ச முடிச்ச மறுநிமிஷமே எனக்கு போன் பண்ணு. நான் உடனே மேல வரேன்.''

''சரி சரி சரி.. இப்ப போனை வைங்க. இங்க எங்களுக்கு எவ்வளவு டயர்டா இருக்கு தெரியுமா?'' அருள்மொழி சொல்லிவிட்டு செல்லை முடக்கினாள்.

''யார் அருள்... அப்பாவா?''

''ஆமாம். வேற யார்...?''

''என்ன சொல்றார்?''

''என்னத்த சொல்வார். கண்டு பிடிச்சுட்டீங்களான்னு கேக்கறார். 4 மணிக்குள்ள கண்டுபிடிச்சுடுவோம்னு வேற சொல்றார்...''

''துடிக்கறாரே.. ஆமா எங்க இருக்கார் இப்போ?''

''அனேகமா கீழதான் இருக்கணும். நாம கண்டுபிடிச்ச பிறகு தகவல் சொன்னா உடனே வராராம். மறக்காம வீடியோ எடுத்துக்க சொன்னார்.''

''ஆமாம் சார், அது ரொம்ப முக்கியம். நம்ம மூணு பேரோட கண்டுபிடிப்பை உலகத்துக்கு நாம எடுத்துச் சொல்லவும், புரியவைக்கவும் வீடியோதான் சார் பெரிய ஆதாரம்.''

-சக்திவேல் குறுக்கிட்டு பின் பாட்டு பாடினான். பாஸ்கரனின் பார்வை அவனை அர்த்த புஷ்டியோடு பார்த்தது.



''என்ன சார் பார்க்கறீங்க...?''

''ஒண்ணுமில்ல சக்தி. என் புரொபசர் மீனாட்சி சுந்தரத்தைவிட நீங்களும் ரொம்பதான் துடிப்பா இருக்கீங்க.''

''எப்படி சார் இல்லாம இருக்க முடியும். ஒரு அதிசயமான விஷயத்தை சாதிக்கப்போறோமே... அதுவும் ஜென்ம ஜென்மங்களைக் கடந்து...''

- திரும்பவும் பாஸ்கரன் சிரித்தான்.

''சார் இது சிரிக்கிற நேரமில்ல. நாம ஆராய வேண்டிய நேரம்.''

''வாஸ்தவம்தான். அருள்மொழி அப்பா என்ன சொன்னார்னு சொன்னே?''

''விடிகாலை நாலுமணிக்கு முன்ன நாம கண்டுபிடிச்சுடுவோமாம்.''

''அப்படின்னு கல்வெட்டு சொல்லுதாமா?''

''ஆமாம். நாளைக்கு மதுரைல மீனாட்சியம்மை செங்கோல் வங்கற நாள். அதாவது மீனாட்சியோட ஆட்சிக்கு மதுரை வரும் நாள். இங்கேயும் பல ஆயிரம் வருஷம் கழிச்சு அந்த மீனாட்சி ஒரு புது அவதாரம் எடுக்கப்போற நாளா அது அமையப் போகுதுன்னு சொன்னார்.''

''அப்படியா?'' கேட்டுவிட்டு பாஸ்கரன் அவர்களைவிட்டு ஒதுங்கினான். செல்லைத் தட்டிவிட்டான். ''சங்கி, நான் பாஸ்கரன் பேசறேன். நான் இப்ப மலைக்கு மேல இருக்கேன். நீ எங்க இருக்கே?''

''நான் வந்துகிட்டே இருக்கேன். என்கூட எஸ்.பி. சாரும் வரார். ஆமாம், மேல எப்படி இருக்கு பொசிஷன்?''

''ஈ, காக்கை இல்லை. உள்ள போய் பார்க்க வேண்டியதுதான். காலை 4 மணிக்குள்ள முதல்ல நாங்க இங்க இருக்கற தங்க மீனாட்சியைக் கண்டு பிடிச்சிடுவோமாம். அது மட்டுமில்ல, அதுல துளிகூட ரகசியத்துக்கு இடமில்லாதபடி அதை வீடியோ வேற எடுக்கச் சொல்லி இருக்கார் புரொபசர். ஒரு தப்பான விஷயம்னா ரகசியமா செய்யச் சொல்லிதான்

கார்னர் பண்ணுவாங்க. ஆனா இங்க அதை வீடியோ எடுக்கச் சொல்றாங்க. புரொபசரும் கீழதான் இருக்கார். இந்த விஷயத்தை எப்படி எடை போட்றதுன்னுதான் எனக்குத் தெரியல.''

''இப்ப அதையெல்லாம் யோசிக்காதே. கேரி ஆன். இனி நீ என்னைக் கூப்பிடாதே. நான் உன்னைக் கூப்பிடறேன். நீ தைரியமா செய்ய வேண்டியதைச் செய். உனக்கு ஒரு முக்கியமான அட்வைஸ். உன்கூட இருக்கிற சக்திவேல் என்ன சொல்றானோ அதைக் கேள். அவனுக்குக் கட்டுப்பட்ட மாதிரி நடந்துக்கோ. ரொம்ப பரவசப்படு. உன் அவநம்பிக்கையை, சந்தேகத்தை எதையும் காட்டிக்காதே, என்ன?''

''அப்படின்னா சக்திவேல்?''

''இந்த மாஸ்டர் பிளானோட ஒரு முக்கிய நபர்!''

-சங்கி சொல்லி முடிக்க, பாஸ்கருக்குள் மஞ்சள் பாஸ்பரம் அடி வயிற்றில் தகிக்க ஆரம்பித்தது.

## 41

சங்கி சக்திவேலைப் பற்றி அவனது போக்கிற்கு போகச் சொன்னது பாஸ்கரனுக்குள் ஒரு பிரளயத்தையே உருவாக்கி யிருந்தது. அதன் எதிரொலிகள் முகத்தில்.. அத்தோடு செல்ஃபோனை பாக்கெட்டில் செருகியபடி அருள்மொழி யையும், சக்திவேலையும் நெருங்கினான். சக்தி துடிப்போடு கேட்டான்.

''சார்... யாருக்கு சார் போன் பண்ணீங்க?''

கபடில்லாத கிராமத்து இளைஞன் என்றும், ரசனையுள்ள வாசகன் என்றும் நினைத்தவன், சினிமாக்களில் வருகிற நம்ப முடியாத வில்லன் போல ஆகிவிட்டான். போதாதற்கு கேள்வி வேறு கேட்கிறான்.



''யாருகிட்ட பேசி இருப்பேன்று நினைக்கறே சக்தி...?''

-சுரத்தில்லாத குரலில் திருப்பிக் கேட்டான் பாஸ்கரன்.

''உங்க நண்பர் சங்கிக்கிதான் இருக்கும். அவர் வந்துட்டாரா சார்...''

''அவர் எதுக்கு வரணும்?''

''என்ன சார் நீங்க.. நாம எவ்வளவு பெரிய காரியம் பண்ணப்போறோம். அதை அவர் பார்க்க வேண்டாமா?''

''வாஸ்தவம்தான். ஆனா அவன் ரொம்ப பயப்பட்றான். என்னை விட்று. அதான் டி.வி.யில எல்லாம் வருமே நான் அதுலயே பார்த்துக்கறேங்கறான்.''

''அதுவும் சரிதான் சார்.... நடங்க சார் போகலாம். நேரம் கடந்து கிட்டிருக்கு. நம்ம புரொபசர் சார் சொன்ன மாதிரி விடியறதுக்குள்ள நாம அந்த விக்ரகங்களை நல்லாம் எடுத்துடணும்.''

-சக்திவேலின் பேச்சில் சிலைகள் விக்ரகங்களாக வெளிப் பட்டது. பாஸ்கரைக் கொஞ்சம் போல திடுக்கிட வைத்தது. அருள்மொழி ஒரு பார்வையாளர் போல பார்த்துக் கொண்டிருந்தாள். பாஸ்கரன் பக்கத்தில் இருக்கும் பரவசமோ, இல்லை ஒரு அமானுஷ்ய அனுபவத்தில் ஈடுபடப் போகும் பதட்டமோ எதுவுமே அவளிடம் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

சக்திவேல் கேமராவை ஆன் செய்து, ஃபோகஸ் லைட்டை பாய்ச்சத் தொடங்கியிருந்தான். பத்து அடி தூரத்தில் இருப்பவர்களைப் பளிச்சென்று காட்டி, அவர்களை எல்லாம் துல்லியமாக விழுங்கும் டிஜிட்டல் கேமரா.

அதை அவன் ஆன் செய்த விதத்தில் துளிகூட பட்டிக்காட்டுத் தனமே இல்லை. பல வருடங்கள் கேமராவை இயக்கியவன் என்பது அவன் தோளில் அதை சென்டர் செய்து உட்கார்த்தியிருப்பதிலேயே புரிந்து போனது.

''சார், வாங்க குடிசைக்குள்ள போகலாம். முதல்ல நீங் களும் அருளும் போங்க. நான் அதை படம் பிடிச்சுக்கறேன்.''

''உள்ள போறதை எல்லாம் எதுக்கு சக்தி எடுக்கணும்?''

''என்ன சார்... நீங்க இந்த ஏரியா முழுவதையுமே எடுத்து ஒரு பதினைஞ்சு நிமிஷத்துக்கு இல்லை முப்பது நிமிஷத்துக்கு ஓட்ற மாதிரி எடிட் பண்ணாதான் நாளைக்கு டி.வி.ல எல்லாரும் பார்க்கும்போது பிரமிப்பா இருக்கும்...?''

- சக்திவேல் சில தீர்மானங்களை எடிட் பண்ணுவது வரை ஒரு வித தொழில் சுத்தமாகவே பேசினான். 'உனக்கு எப்படி சக்திவேல் இதெல்லாம் தெரியும்?' என்று கேட்கத் தோன்றினாலும் சங்கிி போட்ட வாய்ப்பூட்டு மேற்கொண்டு பாஸ்கரனைப் பேச விடவில்லை.

அவன் சொல்கிறபடியே அந்த ஒரு ஆள் நுழைய முடிந்த துவாரத்துக்குள்ளே இருவரும் நுழையத் தொடங்கினர். அதை சக்திவேலும் வாரிச் சுருட்டிக் கொண்டான்.

உள்ளே கும்மிருட்டின் ஆட்சி... அதைப் பின்னால் வரும் சக்திவேலின் காமிரா ... ஃபோகஸ் லைட்டின் வெளிச்சம் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது.

வெளிச்சம் பரவிய மறு நொடி, உள்ளே தெரிந்த காட்சிகள் அருள்மொழியை வாயைப் பிளக்க வைத்து விட்டது.

''வாவ்... இந்த கரட்டுக்குள்ற இப்படி ஒரு குகையா...? இதுக்குள்ற எவ்வளவு ஸ்பேஸ்... எவ்வளவு விக்ரகங்கள். ஒண்டர்ஃபுல்.'' என்றவள் தலை இல்லாத காளி சிலையைப் பார்த்து ஒரு க்ஷணம் விக்கித்து நின்றாள்.

''என்ன அருள் பாக்கறே... பாதாள பைரவி படத்தோட செட் மாதிரி இருக்குதா?''

''கிட்டத்தட்ட அப்படித்தான். ஆமா, அந்த காளி சிலையோட தலை எங்கே?''

''அதோ கீழ கிடக்குது பார்.. ஒரு ஆச்சரியம், அது சக்திவேல் கூட பேசும். இல்ல சக்தி....''

- பாஸ்கரன் கேட்ட விதத்தில் கிண்டல் இழையோடியது. சக்திவேல் அதைக் கண்டு கொண்ட மாதிரியே தெரிய வில்லை. காமிராவை வட்டம் கட்டி எல்லாக் காட்சிகளையும்



வாரிச் சுருட்டிக் கொண்டான். பிறகு கல்வெட்டு எழுத்துக்கள் அருகே சென்றான்.

''மேடம்... இந்த கல்வெட்டை வெச்சுதான் நான் சாரையும் உங்களையும், ஏன் என்னையுமே தெரிஞ்சுக் கிட்டேன். நாம மூணு பேருமே இந்த குகைல ஒரு காலத்துல இருந்தவங்க. இன்னும் சொல்லப் போனா நம்மாலதான் பாண்டிய நாட்டு கலைச் செல்வங்கள் இங்க ஒளிச்சு வைக்கப்பட்டது. பல நூறு வருஷங்களுக்கு முன்னால நாம் ஒளிச்சு வெச்சதை இன்னிக்கு நாம மூணு பேரும் வந்து திரும்ப கண்டு பிடிச்சு வெளிய எடுக்கப் போறோம்.

இந்த உலகத்துல இப்படி ஒரு சம்பவம் மட்டும் எங்கேயும், எப்பவும் நடந்துருக்க வாய்ப்பே இல்லை. எகிப்திய பிரமிடுகளையும், ரோமானிய அரண்மனைகளை யும், ஏன் - அங்க கண்டு எடுக்கப்பட்ட மம்மி உடம்புகளை யும் ஒரு உலக அதிசயமா நினைக்கறவங்க நம்மோட இன்றைய சாதனையைக் கேட்டா வாயைப் பொளந் துடுவாங்க.''

-கேமராவைக் கையில் பிடித்துக் கொண்டு ஷூட் செய்த படியே ஒரு ரன்னிங் கமெண்ட்ரி போல பேசினவனை பாஸ்கரன் கூர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தான்.

''பாஸ்கரன் சார் நீங்கதான் இந்த சம்பவத்தோட ஹீரோ, நீங்க ஒளிச்சு வெச்ச மதங்கனிச் சித்தரோட தங்க மீனாட்சி விக்கிரகத்தை, நீங்க ஒளிச்சு வெச்ச சஹஸ்ர லிங்கங்களை, நீங்க ஒளிச்சு வெச்ச மற்ற பரிவார தேவியர் உருவங்களை இப்படி நீங்களே கண்டுபிடியுங்க. அதுக்கு முந்தி தரையில் கிடக்கிற காளி சிலையோட தலையை திரும்பவும் காளி தேவியோட கழுத்து மேல வைக்கணும்னு, இங்க இருக்கற ஒரு கல்வெட்டுக் குறிப்பு சொல்லுது. அதன்படி செய்யுங்க. அதுதான் ஒளிஞ்சிருக்கிற கலைச் செல்வங்களை, அருள் விக்கிரகங்களை இந்த உலகத்துக்குக் காட்டும்னு குறிப்பு சொல்லுது. உம்.. சீக்கிரம்...''

-சக்திவேல் முடுக்கிவிட்டது போல் பேசினான். பாஸ்கரனுக்கு எரிச்சலாக வந்தது. அடக்கிக் கொண்டான். தரை மேல் கிடந்த காளி சிலையின் தலையைப் போய்த் தொட்டான். அதிக பாரமில்லாமல் சுட்ட மண்ணால் ஆனது போல ஒரு உணர்வைத் தந்தது அது. தொட்டுத் தூக்கியதை எப்படி கழுத்தின் மேல் வைப்பது என்று பார்த்தபோது அருகே ஒரு கல் மேடை தெரிந்தது. அதன் மேல் ஏறி காளியின் கைகளில் எல்லாம் காலை வைத்து முண்டமான உடம்பின் கழுத்தின் மேல் தலையைப் பொருத்திய மறு நொடி அந்தச் சிலையே அப்படியே திரும்ப ஆரம்பித்தது.

அருள்மொழி அரண்டு விட்டாள். ஓடிவந்து ''பாஸ்கர்'' என்று கட்டிக் கொள்ளவும் செய்தாள்.

பாஸ்கரனின் உள் மனதில் ஏக கணக்குகள்.

தலைபாகத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு பாரம் வைத்த நிலையில், உடம்பில் அசைவு ஏற்படும்படியாக ஒரு ஆட்டோமாடிக் மோட்டார் செட் அப் ஏதாவது அதன் உள் இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டிருக்கும் போதே அந்தக் காளி சிலை குகையின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசையில் வடகிழக்குப் பகுதியான ஈசான்யத்தில் நிலை குத்தியபடி நின்றது.

''சார்.. பாஸ்கர் சார்... ஈசான்ய பாகத்தை தேவியோட கண்கள் பார்க்குது. அங்கதான் சிலைகளும் இருக்கணும். போங்க.. போய் அங்க அவைகள் இருக்கான்னு பாருங்க. கமான் க்விக்...''

-பேசிக் கொண்டே ஃபோகஸ் லைட்டின் வெளிச்சத்தோடு ஈசான்ய மூலையை நெருங்கினான். பக்க வாட்டில் குகைச் சுவரின் கற்பாறையைத் தவிர வேறு எதுவுமில்லை. தரை மேல் ஒரு சிம்மத்தின் சிறிய சிலை. அம்பிகையின் வாகனமாய் சக்தி ஸ்தலங்களில் அம்பிகையின் திருச்சன்னதி முன் தெரியும். அதே சிலை!

''பாஸ்கரன் சார்... இந்த சிம்ம விக்கிரகத்துக்கிட்ட ஏதோ இருக்கு. அம்பிகையோட வாகனம் இது. இதையே காவலா வெச்சு நாம இங்க விக்கிரகங்களைப் புதைச்சிருக்கலாம். தோண்டிப் பார்த்தா தெரியவரலாம். உம் கமான்... மசமசன்னு நிக்காம பயப்படாம அங்க தோண்டிப் பாருங்க...''



உணர்ச்சி வசப்பாட்டில் கத்தினான் சக்திவேல்.

''தோண்டறதா... எதைக் கொண்டு தோண்றது?''

''முதல்ல அந்த சிம்மச் சிலையை அசைக்க முடியுதா பாருங்க. அதுவே கூட ஏதாவது வழியைக் காட்டலாம்.''

-சக்திவேல் சொன்னபடியே சிம்ம விக்கிரகத்தைப் போய் தொட்டபோது அது நாலாபுறமும் திரும்பியது. தொட்டுத் தூக்கிய போது கீழே ஒரு துவாரம் தெரிந்தது. ஃபோகஸ் லைட்டை உள்ளே செலுத்தி, பார்வையை விட்டபோது மயக்கம் வராத குறை. உள்ளே ஒரு ராட்சஸ அறை. அதனுள் வரிசையாக ஆயிரத்தி எட்டு லிங்கங்கள். கூடவே நடுவில் பச்சைப் பாசம் பூத்த நிலையில் சொர்ண மீனாட்சியின் உருவம். அங்கும் இங்குமாய் சத்திரத்தில் மனிதர்கள் தூங்குவது போல துவார பாலகர்கள்; அம்பிகை சொரூபங்கள்.

ஒரு க்ஷணம்... ஒரே ஒரு க்ஷணம் தான்! அதைப் பார்த்து முடித்த மறுநொடி பேச்சு மூச்சே இல்லாதவனாட்டம் பிரமித்துப் போய் நிற்கத் தொடங்கினான் சக்திவேல்.

அருள்மொழியும், பாஸ்கரனும், அடுத்தடுத்து எட்டிப் பார்த்தனர். காற்றுக்கூட புகமுடியாதபடி இருண்டு கிடந்த அறை... அதனுள் இருந்து இன்னதென்று சொல்ல முடியாத ஒருவித வாசம் மூவர் மூக்கையும் நிருடியது.

காதுகளையும் எங்கோ இடி விழும் ஒருவித சப்தம் தாக்கத் தொடங்கியது.

''சார்... சார்...'' சக்திவேல் எதையோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் முடியவில்லை.

''என்ன சக்திவேல், என் வேலை முடிஞ்சிடுச்சா இல்லை இன்னும் இருக்கா...?''

''சார்... சார்...''

''என்ன... உங்க நாடகத்துல இன்னும், சாரி உங்க டைரக்ஷன்ல தான் நான் நல்லா நடிச்சுக்கிட்டு இருக்கேனே... கமான் என்ன பண்ணனும். உள்ள இறங்கி எல்லா லிங்கங்களையும் என் கையால நான் எடுக்கணுமா? அதை நீங்க வீடியோல பதிவு செய்துக்கணுமா?''

''இல்ல சார்.. அது வந்து...''

''என்ன சக்தி... சொல்லுங்க.. அதான் க்ளைமாக்ஸை நெருங்கிட்டோமே. இன்னும் என்னவெல்லாம் நான் பண்ணணும்?''- பாஸ்கரன் கேட்கும் தொனியல் அவன் துளி கூட ஈடுபாடின்றி செயல்பட்டுக் கொண்டிப்பவன் என்னும் நிதர்சனங்கள்.

''என்ன அருள்மொழி... உங்க அப்பா.. ஐ மீன் என் அருமை புரொபசர் மீனாட்சி சுந்தரம் சார், வேற ஏதாவது சொல்லி அனுப்பி, அதை நாம செய்யாம இருக்கோமா?''

''பாஸ்கர் நீங்க என்ன கேக்கறீங்க?''

''தமிழ்லதானே கேக்கறேன். உங்கப்பா, சக்திவேல், நீ எல்லாரும் போட்டுருக்கற திட்டப்படி எதுவும் பழுது இல்லாமதானே நடந்து கிட்டிருக்கு?''

-சக்திவேல் தெப்பமாக வியர்த்துவிட்டிருந்தான்.

''சார்.. இங்க இந்த நிமிஷம் நடக்கற எதுவும் நாடகம் இல்லை சார்.. இந்த லிங்கங்களை நானே இப்பதான் பாக்கறேன்.''

''இது என்ன புதுக்கதை?''

''கதை இல்ல சார். நான் சொல்றதுதான் சத்யம். வாங்க காட்றேன்.''

- சக்திவேல் அங்கிருந்து நேர் எதிர்முனைக்கு ஓடினான். அங்கேயும் ஒரு சிம்மவாகினி சிலை. அதை முட்டித் தள்ளினான். கீழே ஒரு பெரும் பள்ளம். அதில் ஆயிரக்கணக்கான லிங்க சொரூபங்கள், விக்கிரகங்கள். நெருங்கி வந்த பாஸ்கருக்கு மேலும் வியப்பாகியது.

''இது என்ன... இங்கேயும் சிலைகள்?''



''இது... இது...''

''கமான். இதுதான் சார்...''

''இதுதான்னா.''

சக்திவேலால் மேற்கொண்டு பேச முடியவில்லை. முகம் வெளிறி, கை கால்கள் எல்லாம் நடுங்கத் தொடங்கியது.

''என்ன சக்தி வேல்... சாமி சிலைகளைக் கண்டுபிடிச்சிட்ட பரவசமா?''

''இல்ல சார்... ஆமாம் சார்...''

''என்ன இல்லை... ஆமாம்.. எதுக்காக தவிக்கிற மாதிரி நடிக்கிறீங்க?''

''இது... இது நடிப்பு இல்லை சார்.''

''இது மட்டும் இல்லை சக்தி. என் வாசகனா நடிச்சதுல இருந்து, என்னை வந்து சந்திச்சு இந்த மலைக்குக் கூட்டிக்கிட்டு வந்தது வரை எல்லாமே நடிப்புதான். எனக்கு அது தெரியும்.

இன்னொரு விஷயமும் தெரிஞ்சுக்குங்க. இதை உங்க சகாக்கள் யாரும் அடைய முடியாது. விடியும்போது இந்த மலையைச் சுற்றி போலீஸ்தான் நின்னிக்கிட்டிருக்கும் அவங்ககிட்ட உங்க மாஸ்டர் பிளானுக்கான வாக்குமூலத்தை, நீங்க அவ்வளவு பேரும் கொடுக்கணும். நான் இங்க வந்துருக்கறது உங்க பொய்களை எல்லாம் நம்பி, இந்த விக்கிரகங்களை எடுக்கறதுக்காக இல்லை. உங்களை விட்டுப் பிடிச்சு, நீங்க எங்க போறீங்கன்னு தெரிஞ்சுக்கறதுக்காக...''

- பாஸ்கரனின் விவரிப்பு அருள்மொழியை ஒரு ஓரமாகப் போய் கண் கலங்கி அழவிட்டது.

- சக்திவேல் அப்படியே மண்டியிட்டான்.

''சார், நீங்க பெரிய புத்திசாலி சார். நான் ஒத்துக்கறேன். என்ன நடந்தது. எதுக்காக இதெல்லாம் நடந்ததுன்னு எல்லா விஷயங்களையும் நான் சொல்லிட்டேன். ஆனா ஒரு விஷயம் சார். எதை பொய்யின்னு நாங்க நினைச்சோமோ அது பொய் இல்ல சார். உண்மை. அப்பட்டமான உண்மை.''

''இது என்ன புதுக்கதை.''

''சத்தியமா இப்ப நான் சொல்றது கதை இல்ல சார். இந்த சமணப்பட்டி மலை பற்றி பல மூட நம்பிக்கைகள் ரொம்ப நாளாவே உண்டு. இங்க சில கல்வெட்டுகளும் அதுல இருக்கற குறிப்புகளும் உண்மைல நாங்க செயற்கையா உருவாக்கினதில்ல. இதுதான் எங்களுக்கு பெரிய மாஸ்டர் பிளானுக்கு ஐடியாவை உருவாக்கிக் கொடுத்தது.

எங்க ஊர் ஒரு வானம் பார்த்த பூமி. நல்லா மழை பெய்தாலே ஒரு போகம் விளைஞ்சா அது அதிகம். வானம் பார்த்த அந்த பூமிக்கு ஒரு பெரிய மதிப்பை தன்னால உருவாக்க முடியும்னு என்னோட பாஸ் சாம்ராஜ்தான் சொன்னார்.

எப்படின்னு கேட்டப்போ இந்த கல்வெட்டுப்படி இந்த மலைல பாண்டியர் கால சிலைகள் இருக்கணும். அவை ஒரு முகூர்த்த நாள்ல வெளிப்பட்டு, இந்த மலையும் இதைச் சுற்றியுள்ள ஊரும் க்ஷேத்திரமா மாறணும். லட்சக்கணக்குல டூரிஸ்ட்கள் வந்துட்டு போற ஒரு ஊரா இது ஆகணும்... அது ஆகுமோ ஆகாதோ, நாம மனசு வெச்சா ஆக்கலாம்னு அவர் சொன்னார். அதோட எதிரொலிதான் எங்களோட திட்டங்கள்.

எங்களுக்கு இரண்டு நோக்கம்.

என்னோட பாஸ் ஒரு அம்பிகை விக்கிரகத்தை ஏற்கனவே திருமாவள நல்லூர் கோவில்ல இருந்து திருடி வைச்சிருந்தார். அதுக்கு தங்க மூலாம் போட்டு, அதை மதங்கனிச் சித்தரோட ரசவாத சிலையாவும், மற்ற கல் லிங்கங்களை நாங்களே செய்தும் இங்க இதோ இந்தக் குழியில வெச்சு பதுக்கினோம்.

இதை ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரபலமான மனிதர் கண்டு பிடிச்சாதான் இந்த விஷயத்துக்கு ஒரு ஆழமான பார்வை இருக்கும்னு நாங்க நினைச்சோம். உங்களை விட அதுக்கு சரியான ஒரு மனிதர் இல்லைன்னும் தீர்மானிச்சோம். சொல்லப் போனா உங்க பேரான பாஸ்கரன்கற பேர் இந்த கல்வெட்டுல இருந்ததும் ஒரு காரணம்.



ஆனா, நீங்களோ பகுத்தறிவுவாதி. ஆகவே உங்களை இந்த விஷயத்துல இறக்க ரொம்ப சிரமப்பட்டோம். அதோட போக்குல கடைசியா செய்ததுதான் சரபேஸ்பரர் விக்கிரகத்துக்கு, யானை தானா வந்து மாலை போட்ட சம்பவம்.

யானை தானா வந்துல்லாம் போடலை. எல்லாம் எங்க முன்னேற்பாடு...

அந்த மலைல சமண முனிவர்கள் ஆவி இருக்குங்கறதை நீங்க நம்பணுமே... அதுக்காகவே ரயில்வே ஸ்டேஷன்ல, ஸ்டேஷன் மாஸ்டர் நரசிம்மன் மகளோட தற்கொலையைப் பயன்படுத்தி மிரட்டல்களை உருவாக்கினோம்.

ஆவிகள் இருப்பதை நீங்க நம்பினாதான், இந்த மலைல உலவற ஆவிகளையும் நீங்க நம்புவீங்கன்னு எதிர்பார்த்தோம். உங்களுக்கு விருது கிடைக்கும்படி செய்து, ஒரு பார்வையையும் உருவாக்கினோம்.

எல்லாமே பிசிறடிக்காத நூல் பிடிச்ச மாதிரியான திட்டங்கள்.

இதுல எங்களுக்கு பிடி கொடுக்காம தொந்தரவு பண்ணிக்கிட்டே இருந்தவர்தான் ஆர்க்கியாலஜி டிபார்ட் மெண்ட்டைச் சேர்ந்த சந்த்ரப்ரகாஷ்.

அவரையும் அவர் குடிச்ச டீயில விஷத்தைக் கொடுத்து கொல்ல முயற்சி செய்தார் என்னோட பாஸ் சாம்ராஜ். ஆனாலும் அவரை நீங்க காப்பாத்திட்டீங்க. இருந்தும் அவரோட இருந்து, அவருக்கு மருந்து கொடுக்கற சாக்குல அவரை நான் கன்வீன்ஸ் செய்தேன்.

அவரை மட்டுமில்ல, புரொபசர் மீனாட்சிசுந்தரம், ஒரு நாள் உங்களை சந்திச்சு சன்யாசினி சந்த்ர பிரபா தேவி எல்லாரையுமே நாங்க கன்வின்ஸ் பண்ணிட்டோம்.

அவங்க கன்வின்ஸ் ஆக பல்வேறு காரணங்கள் இருக்கு. குறிப்பா மீனாட்சி சுந்தரம் சார் கன்வீன்ஸ் ஆக காரணம், அவருக்கு இந்த சமணப்பட்டியைச் சுற்றி நூற்றுக்கணக்கான

ஏக்கர் நிலம் இருக்கறது தான். இந்தஇடம் பிரபலமானா நிலத்து மதிப்பு ஏறும். அப்ப நல்ல விலை கிடைக்கும். அப்படியே இந்த கண்டுபிடிப்புல அவர் பங்கும் பிரதானம்னு சொல்லி, அவருக்கு பல விருதுகள் கிடைக்க ஏற்பாடு செய்யறதா என் பாஸ் சாம்ராஜ் சொல்லி இருந்தார். 1008 லிங்கங்கள், தங்க மீனாட்சி விக்கிரகத்துல ஒரு சில விக்கிரகங்களை இங்க வெச்சிட்டு, மற்றதை வெளி நாட்டுக்குக் கடத்துவதுதான் பிளானோட உச்சக்கட்டம். இப்படி ஒவ்வொருவரும் தங்களோட லாப நட்டங்களை உத்தேசிச்சு, இதுல இறங்கினாங்க.

பெரிய அளவுல லாபம் என்னோட பாஸ் சாம்ராஜுக்குத்தான். அதற்கு அடுத்து எனக்கும், இந்த ஊரைச் சேர்ந்த கோனார் தாத்தாவுக்கும்.

எங்களுக்கெல்லாம் இங்க பல நூறு ஏக்கர் நிலம் இருக்கே?

ஒரு அதிர்ச்சியான உண்மை என்னன்னா, எதைப் பொய்யின்னு சொல்லி நாங்க இவ்வளவையும் செய்தோமோ அது உண்மை சார்.

அதோ அந்த ஈசான்ய பாத்துக்குக் கீழே இருக்கற அறையோ அதுக்குள்ள இருக்கற விக்கிரகங்களோ நாங்க வெச்சது இல்லை. எங்களுக்கு அது இருப்பதும் தெரியவே தெரியாது.

நான் பல தடவை இந்த குகைக்கு வந்திருக்கேன். அப்பகூட இது என் கண்ணுல பட்டதில்லை. சொல்லப்போனா அந்த சிம்மவாகினி சிலையை அசைக்கவே முடியாம தான் இருந்தது.

இன்னிக்கு உங்க கை பட்டு விலகினதும், கீழே எல்லாம் இருக்கறதையும் பார்த்தா, இங்க இருக்கற கல்வெட்டோ அதை ஒட்டிய எங்களோட யூகங்களோ துளி கூட பொய் இலலைன்னு தான் தோணுது...''

சக்திவேலின் நீண்ட விளக்கம் பாஸ்கரனுக்குக் கோபத்தைத் தான் தந்தது.



''என்ன சக்தி.. மாட்டிக்கிட்ட நிலையில் கடைசியா இப்படி எதையாவது பேசி, இந்த அனுபவத்தை எல்லாம் நிஜமான அனுபவம்னு காட்ட முயற்சிக்கிறீங்களா?

எல்லாமே உங்க ஏற்பாடுகள் தான். கபடில்லாத ஒரு கிராமத்து இளைஞன்னு உன்னை நான் நினைச்சது பெரிய தப்பு சக்தி. எழுத்தாளன்கறவன் சாதாரணமானவன் இல்லை. தாயம்சம் மிக உள்ளவன் அவன். தினம் தினம் கருக்களை மனசுங்கற கர்ப்பத்துல சுமந்து பிரசவிக்கிறவன்.

தெய்வத்துல பிரம்மாவையும், மனிதப் பிறப்புல தாயையும் படைக்கற விஷயத்துக்கு உதாரணமா சொல்வாங்க. எழுத்தாளன் இவங்களையும் விட உயர்ந்தவன். அவன் தன் எழுத்தால சமூகத்தை நெறிப்படுத்தற பொறுப்புல இருக்கற ஒருத்தன்.

அவனோட புகழையும், பெயரையும் இப்படி ஒரு மோசடிக்கு நீங்க பயன்படுத்திக்க முன் வந்தது மன்னிக்க முடியாத குற்றம்.

கண்ணைத் திறந்துவிட வேண்டிய எழுத்தாளனையே ஒரு குருடனா சித்தரிக்கச் செய்த உங்களை நானும் சரி, சட்டமும் சரி சும்மா விடாது!''

பாஸ்கரன் ஏதோ மேடை கிடைத்துவிட்ட மாதிரி பேசினான். அருள்மொழி கூனிக் குறுகிவிட்டிருந்தாள். சக்திவேல் வாடிய முகத்தோடு குகைத் துவாரம் வழியே வெளியே பார்த்தபோது மழை கொட்டிக் கொண்டிருந்தது.

கச்சிதமாக செல்ஃபோனிலும் சிக்னல் ஒர்க் செய்து, மீனாட்சி சுந்தரம் பேசினார்.

''என்ன எல்லாம் முடிஞ்சிடிச்சா?''

''எல்லாம் முடிஞ்சிடுச்சி சார். திட்டமிட்டது மட்டுமல்ல, திட்டமிடாததும்...''

''என்ன சொல்றே...?''

''எத்தனை பெரிய புத்திசாலியும் ஒரு சின்ன தப்புல மாட்டுவான்னு சொல்வாங்க. நாம அப்படி என்ன தப்பு

பண்ணினோம்னு தெரியல. பாஸ்கரன் நாம யார், நம்ம நோக்கம் என்னன்னு ஒவ்வொண்ணையும் தெரிஞ்சுதான் வெச்சிருந்திருக்கார்.

இன்ஃபாக்ட் நாம அவரை பயன் படுத்திக்கல. அவர் தான் நம்மை பயன்படுத்திக்கிட்டிருக்கார். அவர் கதை மட்டும் திடுக்கிடும் திருப்பங்களோட கூடினது இல்ல சார். அவரும் தான்!''

- அந்த மழை இரவில் சக்திவேல் சொன்னது மீனாட்சிசுந்தரம் காதில் விழும்போது அவர் அடிவாரத்தில் சாம்ராஜோடு நின்று கொண்டிருந்தார்.

''சாம்ராஜ்...இடியும், மழையும் ஊருக்கு மட்டுமல்ல, நமக்கும் தான். நம்ம தலைமேலயும்தான்...'' - என்றவர் மேல் கச்சிதமாக சங்க்கியும், அஜித்குமாரும் வந்த ஜீப் காரின் ஹெட் லைட் வெளிச்சம் வளைத்துப் பிடித்தது.

சங்க்கி, பாஸ்கரனிடம் பேசி முடித்த நிலையில் செல்ஃபோனை பாக்கெட்டில் நெருக்கிக் கொண்டு கீழே இறங்கினான்.

மீனாட்சிசுந்தரமோ, சாம்ராஜோ எந்த எதிர்ப்பையும் காட்ட வில்லை.

அந்தக் காலை வேளையில் ஓயாத தொலைபேசி சப்தம் எதிர் ஃப்ளாட்டின் உள்வரை கேட்டது. துர்காவுக்கு ஆர்வத்தை அடக்க முடியவில்லை. அப்பாவைப் பார்த்தாள்.

''யாரோ விடாம ட்ரை பண்றாங்க.. போய்ப் பார்...'' என்றார். சாவியை பாஸ்கரன் கொடுத்துவிட்டுப் போயிருந்தது வசதியாகப் போய்விட்டது.

போய் கதவைத் திறந்தாள்.

கிட்டே நெருங்குவதற்குள் தொலைபேசியில் சப்தம் நின்றுவிட்டது.

துர்காவுக்கு சலிப்பாக இருந்தத, 'சரி, சில நிமிடங்கள் உட்கார்ந்து பார்ப்போம்' என்று அருகில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். பக்கமாய் மேஜைமேல் அடுக்களையூர் அப்பாசாமி என்பர் எழுதி, பாஸ்கரனும் பாதி வரை மட்டுமே படித்துவிட்டு வைத்திருந்த 'பெருமான் கரடு' எனும் கையெழுத்து கதைப் பிரதி...



ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் பாஸ்கரன் சிட்டை ஒன்றை செருகி வைத்திருந்தான். அந்தப் பக்கத்தை விரித்துப் பார்த்தாள்.

'சிகாமணி மித்ரனாகிய எனது ஆத்மா சொல்லும் இந்த சேதிகள் சத்தியமானதாம். பெருமான் கரட்டு மலைக்குள் பாஸ்கரனும் அருள்மொழியும் தேவதாசன் உள்ளிட்டோரும் ஒளித்த திருமேனிகள் மங்காப் புகழ்வாய்ந்தவை. ஆயினும் அழிந்து சாபம்பட்டவை. அது வெளிப்பட விரும்பும் சமயமெல்லாம் துஷ்ட சக்திகள் குறுக்கிட்டு அதன் பெயரையும், புகழையும் மட்டுப்படுத்தும்.

நிஜம் பொய்யாயும், பொய் நிஜமாயும் மாறி, மாறி காட்சி தரும் ஒரு வினோத சிகரம் பெருமான் கரடு.

இதில் பாஸ்கரன், பாஸ்கரன் எனும் நாமமுடனேயே எப்பவும் பிறப்பான். அவனது ஒரு பிறப்பு நம்பிக்கை சார்ந்ததும், ஒரு பிறப்பு அறிவு சார்ந்துமே இருக்கும். அதாவது ஒரு பிறப்பில் கோவில் காப்போனாக இருந்தால் மறுபிறப்பில் கோயிலை எதிர்ப்பவனாகத் திகழ்வான். ஒரு பிறப்பில் எழுதத் தெரியாதவனாகத் திகழ்ந்தால், மறுபிறப்பில் எழுதி புகழ் பெறுபவனாகவே இருப்பான். அருள்மொழி நல்லாள் இவனை எங்கும் தொடர்ந்தபடி இருப்பாள். பெயரில் மட்டும் தான் மாற்றமிருக்கும். ஒரு பிறப்பில் பானுவாக, மறுபிறப்பில் ரேணுவாக, இன்னொன்றில் துர்காவாய் பிறந்து பாஸ்கரனோடு இணக்கத்தைத் தொடர்ந்து கொண்டே இருப்பாள்.

இவை யாவும் சத்யங்கள்.''

படித்து முடித்த துர்கா ஒரு க்ஷணம் ஒன்றும் புரியாமல் நோட் புக்கை மூடினாள்.

யார் எதற்காக இப்படி எல்லாம் எழுதியிருக்கிறார்கள் என்பது புரியாத குழப்பம் அவளை ஆக்ரமிக்கும்போது தொலைபேசி சிணுங்கியது.

காதைக் கொடுத்தாள்.

பாஸ்கரன்தான் பேசினான்.

''யார் துர்காவா?''

''ஆமாம்... நீங்க?''

''உன் பாஸ்கர்...''

''என் பாஸ்கரா?''

''ஆமாம் துர்கா. அங்க டேபிள் மேல இருக்கற ஒரு கையெழுத்துப் பிரதி நோட்டோட எஸ்.பி. அஜித்குமார் சாரோட வீட்டுக்கு வரியா?''

''நிச்சயமா.. ஆமா பூட்டியிருக்கிற வீட்டுக்குள்ற நான் இருப்பேன்னு எப்படி எதிர்பார்த்தீங்க?''

''உன்னை எனக்குத் தெரியுமே - அதை வெச்சுத்தான்!''

- அந்த பதில் அவளைப் பன்னீரில் விழுந்த கற்கண்டைப் போல ஆக்கிவிட்டிருந்தது. நோட்டை எடுத்துக் கொண்டாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். ஞாபகமாக 'அருள்மொழி என்ன ஆனாள் என்றுகேட்க வேண்டும்' என்கிற முடிவோடு ஒரு ரேஸ் குதிரையாட்டம் துள்ளிக் கொண்டு ஓடினாள்.

பாஸ்கரன் அறையில் ப்ளோ அப் ஒன்றில் 'வாழ்க்கையில் எல்லா புதிர்களுக்கும் விடை கிடைத்து விடுவதில்லை!'' என்கிற வாசகம். அதுதான் உண்மையோ?

முற்றும்


திருமகள்
நிலையம்
Cover Design: nanavr@eth.net